
பெண்மணி
ஜனவரி 2013
ரூ.23
பொங்கல்
மலர்
காஞ்சனா ஜெயதிலகர்
என் உயிரின் உறவே...!
முழு நாவல்

# தடை கடந்து வா காவிரி!

இனிய சகோதரி!

நலம்தானே!

இன்னொரு ஜனவரி. அடுத்ததொரு புது வருடம். காலம் தன் வரையில் சீராக தன் கடமையில் அச்சுமாறாமல் சுற்றிக் கொண்டுதான் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு 2013 பிறந்திருக்கிறது.

கீழ்வேளூர் ராஜாங்கம்–

மகிழி செல்வராஜ்–

அபிவிருத்தீஸ்வரம் ஸ்ரீதரன்–

மயிலாடுதுறை பூமிநாதன்–

ஆண்டாங்கரை அப்துல் ரகுமான்–

இவர்களை நமக்குத் தெரியுமா? இந்தப் பெயர்களையாவது நாம் கேள்விப்பட்டிருப்போமா?

இல்லை. நமக்குத் தெரியாது. தமிழ்நாட்டின் எத்தனையெத்தனையோ கிராமங்களில் இருந்து கொண்டு, உலகின் அதியற்புத சேவைத்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு, நம்மை வாழவைத்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற விவசாய தெய்வங்களில் ஒரு சிலர்தான் இவர்கள். ஆனால், இந்த எளிய மனிதர்கள் இன்று உயிருடன் இல்லை. நோய் வந்தோ, சாலை விபத்துக்களைச் சந்தித்தோ, சுனாமி தாக்கியோ இவர்கள் மரிக்கவில்லை. தங்கள் உயிரை தாங்களே மாய்த்துக் கொண்டார்கள். தங்கள் வயலில் தூக்கு போட்டுக் கொண்டும், உரமருந்தைக் குடித்தும், நெஞ்சு வெடித்தும் மரணத்தைத் தேடிப் போய் விட்டார்கள்.

அத்தனைபேரும் டெல்டாப் பகுதி உழவர்கள். தங்கள் நிலத்தில் அரும்பாடுபட்டு உழைத்து வாழ்வை விவசாயத்திற்காக அர்ப்பணித்தவர்கள். காவிரிப்படுகையின் நெல், கரும்பு உற்பத்தியாளர்கள். காவிரி நதிநீர்ப் பிரச்சினை பயிர்களைக் கருக்கியதில் ஆரம்பித்து இப்போது உயிர்களைப் பறிப்பதில் வந்து நிற்கிறது.

காவிரி!

இது உற்பத்தி ஆகிற குடகுமலை, முதலில் தமிழ்நாட்டை ஒட்டியிருந்த பகுதி என்பது வரலாற்று உண்மை. இரண்டாயிரம் வருடங்களாக காவிரியை வைத்து சாகுபடி செய்பவர்கள் நாம்.



தமிழ்நாட்டின் நெல் உற்பத்தியில், மூன்றில் ஒரு பகுதியை காவிரி டெல்டாதான் வழங்குகிறது. தவிர, தமிழ்நாட்டின் ஐந்து கோடி மக்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இருக்கிறது இந்தக் காவிரி. சென்னையிலிருந்து ராமநாதபுரம் வரையில், கூட்டுக் குடிநீர் திட்டம் மூலமாக நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நம்மையறியாமல் கலந்து நிற்கிறது காவிரியாறு. சர்வதேச நடைமுறையின்படி பார்த்தாலும், பாரம்பரியமாக நீரைப் பயன்படுத்துபவர்களுக்குத்தான் முதல் உரிமை என்பது எழுதப்படாத விதி.

ஆனால் கர்நாடக அரசு ஏன் இப்படி பிடிவாதமாக தண்ணீரைப் பூட்டி வைத்திருக்கிறது?

அப்பட்டமான சுயநலம். அருவருப்பான அரசியல்.

தெளிவாகத் திட்டம் போட்டு, தமிழ்நாட்டிற்கு நீர் தரக்கூடாது என்ற ஒரே நோக்கில், கர்நாடகம் தங்கள் தேவையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். வெறும் 1.11 லட்சம் ஏக்கர் சாகுபடிப் பரப்பாக இருந்ததை இன்று 27.28 லட்சம் ஏக்கராக விரிவுபடுத்தி அந்த பரப்பளவுக்கு நீரை மடக்குகிறார்கள். காவிரிநீர் நடுவர் மன்றமே 1991–ல் சாகுபடி நீர்ப்பரப்பு 11.2 என்று இருப்பதை அதிகரிக்கக் கூடாது. நீர்ப்பற்றாக்குறை அதிகரிக்கும் என்று கட்டுப்பாடு விதித்தது. ஆனால் அதே நடுவர் மன்றம் அதே கர்நாடகாவுக்கு 18.85 லட்சம் ஏக்கருக்கு நீர் ஒதுக்கியது. ஆனால் தமிழ்நாட்டிற்கு வருடத்திற்கு 378 டி.எம்.சி. வந்து கொண்டிருந்தது. காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு அதை 205 டி.எம்.சி. ஆக்கி, இறுதித்தீர்ப்பில் 192 டி.எம்.சி. ஆக்கிவிட்டது. எப்பேர்ப்பட்ட இழப்பு?

காவிரி இப்படி அநீதியான சூழலில் சிக்கித் தவிப்பதற்கு

கண்மணி ஜோடி

## இந்த இதழில்...

**மலர் - 14** **இதழ் - 9**


**வாழ்வே ஒரு வழிபாடு**
- தமிழருவி மணியன் - பக்கம் 8

லட்சுமி ராஜரத்னத்தின்
**சூரிய நாராயணா போற்றி** - பக்கம் 10

சுற்றுலா:
**சத்யசாய்பாபாவின் புண்ணியபூமி**
**அனந்தப்பூர்** - பக்கம் 18

**இசைக்கு வானமே எல்லை**-ஆதிரா - பக்கம் 32

**அழகை குறைக்கும் அழுகை** - பக்கம் 37

ரூ.1000 பரிசு
**அறிவுத்திறன் போட்டி** - பக்கம் 55

காஞ்சனா ஜெயதிலகர்
**என் உயிரின் உறவே...!**
முழு நாவல் - பக்கம் 66

திருமணத் திருக்கோவில்கள்:
**காருகுடி கைலாசநாதர்**
**திருவாசி மாற்றுரை வரதீஸ்வரர்** - பக்கம் 117

**விதவிதமான பொங்கல்** - பக்கம் 122

**புத்தாண்டு செய்திகள்** - பக்கம் 130



## 'பெண்மணி'

பெண்மணி தபாலில் பெற ஓராண்டு சந்தா (உள்நாடு) ரூ.275. வெளிநாடு ஓர் ஆண்டு சந்தா ரூ.1150. சந்தா தொகையை மணியார்டர் அல்லது காசோலையாக அனுப்பித் தரலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

நிர்வாகி
**'பெண்மணி'**
'மாலைமுரசு' பில்டிங்,
246, அண்ணா சாலை,
ஆயிரம் விளக்கு,
சென்னை - 600 006.
போன்: 28297219
email: penmanimonthly@gmail.com

# பெண்மணி

ஜனவரி - 2013 விலை ரூ.23


பெரும்பாலும் கர்நாடக அரசும், மற்றொரு மத்திய அரசும்தான் காரணம். மாநில அரசாங்கம் குறுகிய நோக்கத்தோடு செயல்படலாம். ஆனால் நடுவண் அரசு, இந்த எல்லைகளுக்கு அப்பாற்பட்டு நடுநிலைமையுடன் நடந்து கொள்ள வேண்டாமா? கர்நாடகத்தை ஆளுகிற அரசாக காங்கிரஸ் வந்தாலும், பி.ஜே.பி. வந்தாலும், மத்தியில் ஆளுகிற அரசு கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கைதான் பார்க்கிறது.

அன்னிய முதலீட்டைக் கொண்டு வருவதற்காக, பகிரதப் பிரயத்தனத்துடன் இரவும் பகலும் போராடி ஜெயித்த மத்திய அரசால், ஒரு பிரதிநிதியை காவிரிப் பிரச்சினைக்காக அனுப்பி வைக்க முடியாதா? தமிழக, கர்நாடக முதல்வர்களின் பேச்சுவார்த்தையின் பொழுது மத்திய அரசும் வந்து உட்கார்ந்து நடுநிலைமையுடன் அணுக முடியாதா? இரு மாநிலங்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்கிற அளவிற்கு காவிரி நீர்ப்பங்கீடு மாறிவிட்ட பிறகும், பிரதமர் டெல்லியிலேயே உட்கார்ந்து கொண்டு, தலையிடாமல் ஒதுங்கியிருப்பதுதான் நியாயமா?

பல லட்சம் விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினையைத் தீர்க்கத்தான் காவிரி ஆணையம் என்ற ஒரு அமைப்பே உருவாக்கப்பட்டது. ஆனால் ஒன்பது வருடங்களாக அது கூடவேயில்லை என்பதுதான் அதிர்ச்சிகரமான உண்மை. அதேபோலத்தான் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பும். நர்மதை நடுவர் மன்றத் தீர்ப்பு, கிருஷ்ணா நதிநீர் நடுவர் மன்றத் தீர்ப்பு என்று மற்ற நதிகளுக்கு உயிர் இருப்பதைப் போல காவிரி நடுவர் மன்றத்திற்கு இல்லையே, ஏன்? எங்கே தவறு? நாம் சரியாகத்தானே கேட்கிறோம்? காவிரியை நம்பித்தான் மேட்டூரிலிருந்து பூம்புகார் வரை மிக நீண்ட சமவெளிப்பரப்பில் விவசாயம் செய்கிறோம். பாதி நீர் கொடு என்கிறோம். மழை குறைவாக இருக்கும் காலத்தில், சதவிகிதக் கணக்கில் கொடு என்று கேட்கிறோம். ஆனால் கர்நாடகம் நம் நியாயங்களைக் காது கொடுத்துக் கேட்பதாகவே இல்லை.

ஜூன் மாதம் நேர்மையாக தண்ணீர் திறக்கப்பட்டிருந்தால், இந்நேரம் சாகுபடி முடிந்திருக்கும். ஆனால் போராடி போராடி செப்டம்பரில்தான் விட்டார்கள். அதுவும் அரைகுறையாக. சரி, நீதிமன்றத் தீர்ப்பு மூலம் நீர் பெற்று விடலாம் என்று காத்திருந்தார்கள் விவசாயிகள்.



உச்சநீதிமன்றத்தின் உத்தரவை மதிக்காததோடு, காவிரி ஆணையத்திலிருந்து வெளியேறி, இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் செயல்படுகிற கர்நாடக முதல்வருக்கு, காவிரிநீர்ப் பிரச்சினையை தேர்தல் பிரச்சினையாக மட்டும்தான் பார்க்க முடிகிறது என்பது தெரிகிறது.

சில ஆண்டுகளாகவே திட்டம் போட்டு 3000 ஏரிகளை உருவாக்கி, நீரை சேமித்து, உபரித் தண்ணீரைக் கூட தமிழகத்திற்கு வழங்கக் கூடாது என்று குறிக்கோள் வைத்து செயல்பட்டு வருகிறார்கள். உச்சநீதிமன்ற உத்தரவை மீறுவது, ரகசியக்காப்பு உறுதிமொழியைக் காற்றில் பறக்க விடுவது, இந்திய இறையாண்மைக்கு எதிராக இருப்பது என்று தன்போக்கில் இருக்கிற கர்நாடக முதல்வரை உச்சநீதிமன்றம்தான் கண்டித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம் அரசுக்கும் நிறைய கடமைகளும் பொறுப்புகளும் இருக்கின்றன.

இருப்பதை விட்டுவிட்டு பறப்பதைப் பிடிக்கிற வேலைக்குப் பதிலாக, இருப்பது என்ன என்று ஆழ்ந்து பார்க்க வேண்டும். சிக்கன விவசாயம் பற்றி சிந்திக்கலாம். நீர் மேலாண்மை தொடர்பாக கருத்துரையாடல்கள், விழிப்புணர்வுகளை உண்டாக்கலாம். தொலைநோக்குத் திட்டங்களை உருவாக்கலாம். காவிரிப் படுகையில் ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், குட்டைகளை தேடிப்பிடித்து மீட்டெடுக்கலாம். நீராதாரத்தை அழிக்க நினைக்கிற தீயசக்திகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளைப் புகுத்தலாம். ஒவ்வொரு பத்து ஏக்கர் விவசாய நிலத்திலும் ஒரு ஏக்கருக்கு குளம் அமைக்க வேண்டும், அதில் வரும் மண்ணை மேடாக்கி மரங்கள் நடப்பட வேண்டும் என்று முயற்சிகளை முன்னெடுக்கலாம்.

விவசாய தேசம் என்று சொல்லிக் கொண்டு மத்திய, மாநில அரசுகள் வேளாண்மைத்துறைக்காக ஒதுக்கும் நிதி, வெறும் இரண்டே இரண்டு சதவிகிதம்தான் என்பது எப்பேர்ப்பட்ட அதிர்ச்சி? குறைந்தது பத்து சதவிகிதமாவது உழவுத்துறைக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பதுதான் நெடுநாட்களாக விவசாயிகளின் கோரிக்கை.

ஏன், விவசாயத்திற்கு என்றே தனி பட்ஜெட் போடப்பட வேண்டும். விவசாயக்கடன் என்பது குறைந்த வட்டிவிகிதத்தில் தரப்பட வேண்டும். சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலங்களை உருவாக்கி, விளைகிற பொருட்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றும் நுட்பமும் கற்றுத் தரப்பட வேண்டும்.

இவ்வளவு ஏன்?

மக்கள் பிரதிநிதிகளுக்கு தங்கள் தொகுதி விவசாயத்தின் மேல் அக்கவுண்டபிலிடி வர வேண்டும். தூர் வார ஒதுக்கப்படும் நிதி, நீராதாரங்களைக் காக்க வழங்கப்படும் நிதி என்று அதிமுக்கிய தேவைகள், மக்கள் பிரதிநிதிகளுக்கு அரசு வழங்குகிற இரண்டு கோடி ரூபாயிலிருந்து நிறைவேற்றப்பட வேண்டும். தங்கள் தொகுதி விவசாயிகளின் குறைந்தபட்ச அமைதியான வாழ்க்கைக்கு எம்.பி.க்களும் எம்.எல்.ஏ.க்களும் உறுதி தர வேண்டும்.

நதிநீர் விவசாயத்தைப் பொறுத்தவரையில், நதிகளை தேசியமயமாக்க வேண்டும் என்பது தொலைநோக்குப் பார்வை மட்டுமே. நதிநீர் ஒதுக்கீடு என்கிற அத்தியாவசியமான தேவை, தன்னாட்சி அதிகாரம் மிக்க அமைப்பு ஒன்றிடம் விடப்பட வேண்டும். உரிய காலத்தில், உரியவர்களுக்கு நீர்ப்பங்கீடு கிடைக்க வேண்டும் என்பதே சமத்துவ உலகிற்கான உண்மையான நீதி.

மீண்டும் சந்திக்கலாம்.

அன்புடன்,

வி. உஷா

கௌரவ ஆசிரியர்.

## வெளிநாட்டில் பொங்கல்

நம்நாட்டில் பொங்கல் விழா கொண்டாடுவது போல் ஜப்பானிலும் கொண்டாடப்படுகிறது. நாம் பொங்கலோ பொங்கல் என்று பால் பொங்கும் போது குரல் கொடுப்பது போல், ஜப்பானியர்கள் 'ஹங்கரோ... ஹங்கரோ...' என்று குரல் கொடுப்பது வழக்கம். பொங்கல் மறுநாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடுவது போல் ஜப்பானில் குதிரைப் பொங்கல் கொண்டாடுவர். அன்று குதிரைகளுக்கு மாலீஸ் போட்டு (நன்கு தேய்த்து விட்டு) அலங்காரம் செய்து மலர் மாலைகள் சூடி, இனிப்பு கொடுப்பார்கள்.

மியான்மரில் (பர்மா) பொங்கல் திருநாள் அன்று புத்தாடை அணிந்து சூரிய வழிபாடு செய்வதுடன் கால்நடைகளுக்கும் பூஜை செய்து போற்றுவர்.

## சூரியனின் ஒளியின் வண்ணம்

கிரிஷ்மா எனப்படும் வெயில் காலத்தில் செண்பகப்பூ நிறத்திலும், வசந்த ருது என்று சொல்லப்படும் வசந்த காலத்தில் பொன் வண்ணத்திலும், வர்ஷருது என்று சொல்லப்படும் மழைக்காலத்தில் வெண்மை நிறத்திலும், ஹேமந்த ருது எனப்படும் முன்பனிக் காலத்தில் தாமரை நிறத்திலும், சிசிர ருது எனப்படும் பின்பனிக் காலத்தில் சூரியன் சிவப்பு நிறத்திலும் இருப்பார். இப்படி ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு நிறத்தில் காட்சிதரும் சூரியன் ஒளிக்கதிர்கள் தட்சிணாயன காலமான ஆடி முதல் மார்கழி வரை குறைந்த ஒளிக்கதிர்கள் வீசியும், உத்தராயணப் புண்ணிய காலமான தை முதல் ஆனி வரை ஒளிக்கதிர்களின் வேகம் அதிகமாக இருக்கும் என்று சூரிய புராணம் கூறுகிறது.

## மண்டப தூண்களில் சூரிய ஒளி

கர்நாடக மாநிலம் துங்கா நதிக்கரையில் அமைந்துள்ள ஸ்ரீசாரதா பீடத்திற்கு அருகில், ஆற்றின் கரையோரம் வித்யாசங்கர் கோவிலில் கிழக்குப் பார்த்த கல் மண்டபம் உள்ளது. இம்மண்டபம் பன்னிரெண்டு தூண்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் தூண்களின் காலடியில் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியிலிருந்து அந்த மாதம் முடியும் வரை கிழக்கு வாசல் வழியாக காலையில் வெளிவரும் சூரியனின் கிரணங்கள் முறையாக விழுகின்றன.

ஒவ்வொரு தமிழ் மாதமும் ஒவ்வொரு தூணாக பன்னிரு மாதங்களிலும், பன்னிரு தூண்களின் காலடியில் காலைச் சூரியனின் ஒளிக்கீற்றுகள் விழுவது ஓர் அதிசயமாகக் கருதப்படுகிறது. இந்த மண்டபத்தை அக்காலத்தில் நிர்மாணித்த வல்லுநர் வானியல் தெரிந்த அறிஞராக இருக்க வேண்டும் என்றும் இந்நாளில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் போற்றுகிறார்கள்.

-ராதா பரிமளம், திருச்சி.

## கல்வெட்டில் பொங்கல்

பழங்கால தமிழகத்தில் குலோத்துங்க சோழ மன்னன் தனது ஆட்சி காலத்தில், பொங்கல் சிறப்பாக கொண்டாட நிலங்களை நன்கொடையாக வழங்கினார் என்பதை திருவள்ளூர் வீரராகவ கோவில் கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

-உத்ரா ஆனந்த், நாகர்கோவில்.

ஜப்பானிலும், சீனாவிலும் சூரியன் பெண் கடவுளாக வணங்கப்படுகிறார். ஜப்பான் நாட்டின் ஷிண்டோ மதத்தினருக்கு சூரிய வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்களது கொடியிலும் சூரியன் இடம் பிடித்துள்ளது.

-என். ஜரினாபானு, திருப்பட்டினம்.

ப்ளூ டூத்துடன் கூடிய

# டூத் பிரஷ்



ப்ளூ டூத் உதவியுடன் செயல்படும் டூத் பிரஷ்சை அமெரிக்க நிறுவனம் உருவாக்கியுள்ளது. குழந்தைகளை ஒழுங்காக பல்தேய்க்க வைப்பது தாய்மார்கள் அன்றாடம் அனுபவிக்கும் கொடுமைகளில் ஒன்று. சில சோம்பேறி பெரியவர்களும் இந்த ரகத்தில்தான் இருக்கிறார்கள். ஒப்புக்கு பல் தேய்த்து விட்டு வந்து விடுவார்கள். இதுபோன்ற அவதிகளை தடுக்கும் வகையில் அமெரிக்காவைச் சேர்ந்த பீம் டெக்னாலஜிஸ் நிறுவனம் டிஜிட்டல் பிரஷ்சை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஸ்மார்ட் போனின் ப்ளூ டூத் உதவியுடன் இது செயல்படும். ஸ்மார்ட் போனில் அலாரம் செட் செய்தால் பல் துலக்க தினமும் இது நினைவூட்டும். அதுமட்டுமின்றி பயோ எலக்ட்ரிக் முறையில் பற்களுடன் பிரஷ் நன்றாக, போதிய அளவில் உராய்ந்ததா, நீங்கள் ஒழுங்காக பல் தேய்த்தீர்களா என்பது கண்காணிக்கப்பட்டு அந்த தகவலும் ஸ்மார்ட் போனுக்கு அனுப்பப்படும். ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் அளவுடன் இது ஒத்துப்போனால் 'வெல்டன் பாஸ்' என்று மெசேஜ் வரும். இந்த பிரஷ் விரைவில் சந்தைக்கு வர இருக்கிறது.

மனிதனை எப்படி சோம்பேறியாக்கலாம் என்பதற்கு இந்த ப்ளூ டூத்துடன் கூடிய டூத் பிரஷ்சும் ஒரு காரணமாகிறதே என்பதை நினைக்கும் போதுதான் கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது. இருந்தாலும் பல் துலக்க சோம்பல் படும் சோம்பேறிகளுக்கு இந்த டூத் பிரஷ் ஒரு நல்ல சாதனம்தான் என்றால் அதில் மிகையிருக்க முடியாது.




ஜெயசத்குரு ஸ்ரீசாய் பக்தி குருகுலம்



சீரடி பாபா புட்டபர்த்திபாபா ஆத்மார்த்த ஆசிர்வாதம் பெற்றவர் உங்கள் வாழ்க்கை உயர ஒரு வழிகாட்டி

சித்தர் அருள் பாபாஜி

வாழ்வு வளம் பெற சகல அதிர்ஷ்டம் பெற ஆன்மீகத்தாலும் மூலிகைகளாலும், சகலப்பிரச்சனைகளையும் தீர்த்து வைக்கிறார். நினைத்த காரியம் வெற்றிபெற, திருமணம் தடை நீங்க, குழந்தை பாக்கியம் பெற, தொழில் வியாபாரம் பெருக, எதிரிகளால் வரும் செய்வினை கோளாறு நீங்க, தீராத நோய் விடுபட செவ்வாய் தோஷம், நாகதோஷம், வாஸ்து தோஷம் விடுபட மாந்திரிக பிரச்சனை விலக கல்வி, சினிமாதுறை, அரசியல், தொழில் அதிபர்கள் இவரை சந்தித்து வெற்றி பெற்று உள்ளனர்.

சித்தர் அருள் பாபாஜி

புதிய எண்:48,சாரங்கபாணி தெரு, (காமராஜர் நினைவு இல்லம் அருகில்) தி.நகர், சென்னை-17.

செல்: 9551924628, 7299163628

முன்பதிவு பெற்று வரவும் (1.00 pm - 6.00 pm பார்வை நேரம்) வெள்ளி, ஞாயிறு விடுமுறை

வெளியூர், வெளிநாடு வசிப்பவர்கள் ஜாதக நகலுடன் 300க்கான D.D/M.O வுடன் தொடர்பு கொள்ளவும்.

Email:join@srisaibakthi.org. Web:www.srisaibakthi.org

# வாழ்வே ஒரு வழிபாடு...





தமிழருவி மணியன்

நன்றியுணர்வே நற்பண்புகளின் தாய். நன்றிமிக்கவர் நெஞ்சமே இறைவனின் இருப்பிடம். 'பசுவின் மடிக்காம்பை அறுத்தவனுக்கும், தாய்மையுற்ற பெண்ணின் கருவைச் சிதைத்தவனுக்கும் கூட மன்னிப்பு உண்டு. ஆனால், நன்றி மறந்தவர்க்கு மன்னிப்பே இல்லை' என்கிறது புறநானூறு.

தமிழினத்தின் நன்றி மறவாத பண்புக்கு நல்லடையாளம்தான் பொங்கல் விழா. மண்ணின் வளம் காக்கும் மழைக்கும், மாந்தரின் நலன் காக்கும் கதிரவனுக்கும், உயர்வை மனிதகுலம் பெறுவதற்கு உழைப்பைத் தருகின்ற மாட்டுக்கும் மனம் நெகிழ்ந்த நிலையில் நன்றியை வெளிப்படுத்தும் நோக்கில் நம் முன்னோர் கண்டெடுத்துக் கொண்டாடி மகிழ்ந்ததுதான் பொங்கல் திருவிழா.

'பசி இல்லாகே! பிணி சேண் நீங்குக! அறம் நனி சிறக்க! அல்லது கெடுக!' என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரியதோர் வாழ்த்துக்கீதம் வழங்கிய இனம் நம் தமிழினம். 'சாவும் நோவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிரெல்லாம் வாழ்க' என்று இறையருளைப் பிரார்த்தித்த கவிஞர்களைப் பெற்றெடுத்த பெருமைக் குரியவர்கள் நாம்.

போரும், பூசலும், பகையும் பிணக்கும் கொண்டு இந்த மண்ணுலக வாழ்வைத் துன்பமயமாக்குவதைத் தவிர்த்து, அன்பு சார்ந்த அகவாழ்வும், அறம் சார்ந்த புறவாழ்வும் மேற்கொள்வதன் மூலமே மனித இனம் மேன்மையுறும் என்ற பேருண்மை புரிந்த மண் இது. ஆண்டவன் அளித்த வாழ்க்கை அழுவதற்காக அமைந்தது அன்று. நொடி நொடியாய் நம் கண்முன் காலம் கழிகின்றது. அது யாருக்காகவும், எதற்காகவும் காத்திருப்பதில்லை. வாய்த்த பிறவியில் ஒவ்வொரு நொடியையும் அர்த்தமுள்ளதாய் நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

மனிதர்களில் மூன்று வகை உண்டு. நிகழ்காலத்தை முழுவதுமாக நிராகரித்துவிட்டு, இறந்த காலத்திலேயே இறுதிவரை நின்று விடுபவர்கள் ஒரு வகை. இவர்கள் கடந்த காலத்துக் கசந்த அனுபவங்களின் பிடியிலிருந்து விடுபட விரும்பாத மனநோயாளிகள். இதயத்தை அழுத்தும் சுமைகளை இறக்கி வைக்கத் தெரியாத இவர்கள் 'நேற்றைய மனிதர்கள்'.

இரண்டாம் வகை மனிதர்கள் எதிர்காலக் கனவுகளில் நிகழ்கால நிஜங்களைப் பறிகொடுத்தவர்கள். நாளைய பொழுதைத் திட்டமிடுவதிலேயே இன்றைய

பொழுதை இழந்து நிற்கும் இவர்கள் வயோதிகத்தில் வளமாக வாழ்வதற்குக் கணக்குப் போட்டபடியே வாலிபத்தின் வசந்தங்களைத் தொலைத்து விடுபவர்கள். இவர்கள் 'நாளைய மனிதர்கள்'.

மூன்றாம் வகை மனிதர்கள்தான் வாழ்க்கையை அனுபவித்து வாழும் ரகசியம் அறிந்தவர்கள். 'நேற்று' போய்விட்டது. 'நாளை' நிச்சயமில்லை. 'இன்று' நம்முன் இருக்கிறது. அதை உரியமுறையில் பயன்படுத்துவோம் என்ற உணர்வுடன் ஒவ்வொரு நொடியையும் சுகானுபவத்துடன் சுவைத்து மகிழும் இவர்களே 'இன்றைய மனிதர்கள்'. இந்த இன்றைய மனிதர்களுக்கு ஒவ்வொரு நாளும் பொங்கல் திருநாள்தான். ஒவ்வொரு நொடியும் விழா கோலம்தான்.

ஒவ்வொரு நொடியாக வாழ்வதுதான் உண்மையான வாழ்க்கை. ஒவ்வொரு நொடியிலும் முழுமையாக வாழ்வதுதான் உயர்ந்த வாழ்க்கை. உயிருள்ள, உயிரற்ற அனைத்தையும் நேசிக்க வேண்டும். வாழ்க்கைப் பயணத்தில் வந்து சேர்ந்தவற்றை நெஞ்சார வாழ்த்த வேண்டும். நம்பிக்கையோடு வளர்ச்சியை எதிர்கொள்ள வேண்டும். நன்றியுணர்வோடு வாழ்க்கை நேசிப்பை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இருக்கும் இடத்தில், இந்த நொடியில் இன்புற்றிருப்பதுதான் வாழ்வின் சூத்திரம். வாழ்வே ஒரு வழிபாடுதான். இந்த ரகசியம் உணர்ந்த நம் மூதாதையர் ஓராண்டில் ஓராயிரம் விழாக்களுக்கு வியூகம் அமைத்தனர்.

தமிழரில் வெவ்வேறு மதத்தவர் உண்டு. ஒவ்வொரு மதத்திலும் வெவ்வேறு விழாக்களும் உண்டு. ஆனால், அனைத்து மதத்தவரும் வேற்றுமையின்றிக் கொண்டாடும் விழா ஒன்றே ஒன்றுதான். அதுதான் பொங்கல் திருவிழா. மழை பேதம் பார்த்துப் பொழிவதில்லை. சூரியன் இடம் பார்த்துச் சுடர் பரப்புவதில்லை. மாடு மதம் பார்த்து உழைப்பதில்லை. இயற்கைக்கும், இறைமைக்கும் பேதமற்ற போதம் பொது. போதம் என்றால் ஞானம் என்று பொருள். "அனைத்தையும் ஒன்றாக பாவிப்பதற்குப் பெயர்தான் ஞானம். இந்த ஞானம் வந்தால் நமக்கு வேறென்ன வேண்டும்?" என்றார் மகாகவி பாரதி. 'இருப்பது ஒரு சாதி. அது தமிழ்ச் சாதி' என்ற உணர்வுடன் அனைவரும் பொங்கல் திருநாளை ஒன்றாகக் கூடிக் கொண்டாடுவோம்.

'வாழ்வே ஒரு வழிபாடு' என்று பரவசத்துடன் பாடிக் கொண்டாடுவோம்!

பொங்கல் நல் வாழ்த்துக்கள்




கோபால் பல்பொடி
வேல் கெமிக்கல் ஒர்க்ஸ், மதுரை.

அஞ்சால்
ANJOL
REGD.T.M. OF S.P.S. JAYAM & CO.,
VEL CHEMICAL WORKS .......MADURAI.(S.INDIA)




70 ஆண்டுகளுக்கு மேல் பாரம்பரிய சேவை



# சூரிய நாராயணா போற்றி

**– லட்சுமி ராஜரத்னம்**

"பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்" என்ற பாரதி, விடியலை வரவேற்கிறான். விடியல் என்பது இருட்டை விலக்கி உலகெல்லாம் ஒளிமயமாக்கும் ஒளிப்பேழை. இருட்டாகவே இருந்தால் எப்படி இருக்கும். நினைத்துப் பாருங்கள்.

ஆதவனின் ஒளி சகல ஜீவராசிகளுக்கும், தாவரங்களுக்கும் ஜீவ சக்தியைத் தரும் சஞ்சீவியாகும். அதாவது அருமருந்து என்றே கொண்டாட வேண்டும்.

கவிமணி அழகான பாடலில் இயற்கையைக் கேட்பதன் மூலம் நம்மை நன்கு சிந்திக்க வைக்கிறார்.

"சூரியன் வருவது யாராலே? சந்திரன் திரிவது எவராலே – காரிருள் வானில் கனமழை பொழிவது எவராலே? யார் இதற்கெல்லாம் அதிகாரி. அதை நாம் எண்ணிட வேண்டாமோ?'' என்று கேட்கிறார்.

விழித்தெழ அதிகாலையில் பையன் அலாரம் தேவைப்படுகிறது. ஆறு மணிக்கு எழுவதற்கே அலாரம் வைத்து எழுபவர்களும் உண்டு.

இங்கே இயற்கையின் நியதியை கவிமணி சுட்டிக் காட்டுகிறார். பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் என்கிறானே அந்த சூரியனை யார் தினமும் எழுப்புவார்கள்? மாலை மலைவாயிலில் ஆரஞ்சு பந்தாக மறைகிறானே! அவனைச் சொல்லி அனுப்புபவர் யார்?

அமாவாசையன்று சந்திரன் வருவதில்லை. பவுர்ணமியன்று முழுநிலவாக ஜொலிக்கிறதே... சூரியனிடமிருந்து இதன் ஒளி அமிர்த துளியாகப் பெறப்படுகிறதே... அந்த ஒளியில்தான் மூலிகைகள் வளருவதாகச் சொல்லப்படுகிறது.

இப்படி எல்லாம் இயக்குபவர் யார்? சூரியன் வராவிட்டால் மழை தினம். இரண்டு தினம் மழை கொட்டினால் மூன்றாவது தினம் சூரியன் வரவை எதிர்பார்க்கிறோம். சூரியனின் கிரணங்கள்தான் மழையையும் தருவதாகப் புராணங்கள் கூறுகின்றன.

மனிதனாகப் பிறந்தவன் ஒரு தரமாவது திருச்செந்தூர் சென்று வர வேண்டும். அதிகாலை விசுவரூப தரிசனம் பார்க்க வேண்டும். பலபலவென பொழுது விடியும் சமயம் கடல் விளிம்பில் சூரியோதயம் காணும் பொழுது பக்தர்கள் வரிசை வரிசையாக நின்று சூரிய நமஸ்காரம் செய்யும் அழகு இருக்கிறதே... கண் கொள்ளாத காட்சியாகும்.

அருகில் உள்ள கன்னியாகுமரி முனையில் சூரியோதயமும், சூரிய அஸ்தமனமும் காண கூட்டம் கடற்கரையில் அலை மோதுவதை காணலாம். சூரிய நமஸ்காரம், சூரிய பூஜை என்பது மிகவும் உயர்ந்த ஒரு விஷயம். பல வீடுகளில் ஞாயிற்றுக்கிழமை தோறும் சூரிய நமஸ்காரம் செய்வது வழக்கம்.

முற்றத்தில் கோலமிட்டு சர்க்கரைப் பொங்கலும், வடையும் செய்து–சூரிய நமஸ்காரம் செய்து நைவேத்தியம் வைப்பது

## பொங்கல் வாழ்த்து

'பெண்மணி' வாசகர்கள்,
அவர்தம் குடும்பத்தினர்,
விற்பனையாளர்கள் மற்றும்
விளம்பரதாரர்கள்
அனைவருக்கும்
பொங்கல்
நல்வாழ்த்துகளை
தெரிவித்துக்
கொள்கிறோம்.



–ஆசிரியர்.


கணினி வலையில்
இனி
பெண்மணி
www.magzter.com/IN/
Malai-Murasu/Penmani/
Women's-Interest/
என்ற
கணினி வலையிலும்
படிக்கலாம்

வழக்கம். ஆதிகாலத்தில் மனிதன் இயற்கை உதயமான சூரியனையே தெய்வமாக வழிபட்டு வந்தார்கள்.

இதை சிலப்பதிகாரம் குறிப்பிட்டுச் சொல்கிறது. 'ஞாயிறு போற்றுதும்; ஞாயிறு போற்றுதும்' – 'திங்கள் போற்றுதும்; திங்கள் போற்றுதும்' என்று கண்ணகி விளிப்பதைப் படித்தால் மக்கள் இயற்கை தெய்வ வழிபாட்டில் எத்தனை ஈடுபாடாக இருந்திருக்கிறார்கள் என்பது புரியும்.

ஏதாவது தீர்ப்புச் சொல்ல வேண்டுமானால் சூரிய–சந்திரன் சாட்சியாக என்று கேட்பது வழக்கமாக இருந்தது.

முற்றத்தில் கோலமிட்டு என்றதும் தை மாத "பொங்கலோ, பொங்கல்" நினைவுக்கு வருகிறதல்லவா? ஆனி முதல் மார்கழி வரை தட்சிணாயன புண்ணிய காலம். தை முதல் ஆனி வரை உத்தராயண புண்ணிய காலம். சூரிய மூர்த்தி உத்தராயண புண்ணிய காலத்திற்கு சஞ்சாரம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது நம் ஆன்றோர்கள் வாக்கு. இதை மகர சங்கராந்தி என்று கூறுவார்கள். புது நெல் விளைந்து வீட்டிற்கு வந்து புதுப்பானையில் பொங்கல் இடுவார்கள். இந்த பொங்கல் திருநாள் சூரியனார்க்கு உகந்த வழிபாடாகும். புது நெல் விளைந்து காண்பதால் இதை உழவர் திருநாள் என்பார்கள்.

இப்பொழுதெல்லாம் தமிழர் திருநாள் என்று அழைக்கிறார்கள்.

பொங்கலுக்கு முதல் நாள் போகிப் பண்டிகை கொண்டாடுவார்கள். பொங்கல் திருநாளுக்கு முன்பு வீட்டை வெள்ளையடித்துச் சுத்தம் செய்வார்கள்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் போகியின் தத்துவமாகும். பழைய தேவையில்லாத பொருளை தீயிட்டு சொக்கப்பனை கொளுத்துவது வழக்கம். மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்கால நேரமாகும். பாவை நோன்பை முடித்து தை வரவிற்காக கன்னிப் பெண்கள் காத்திருப்பது வழக்கம்.

அதிகாலை எழுந்து நீராடிப் புத்தாடை உடுத்தி வீடு பூராவும் கோலங்கள் தோரணங்கள், மாவிலை தொங்க விட்டு அலங்கரிப்பார்கள். திறந்தவெளி முற்றத்தில் பெரிய கோலம், முக்கியமாக ரதக் கோலம் இடுவார்கள். இந்த ரதம் சூரியனார்க்கு உரிய ரதமாகும்.

பிறகு பொங்கல் பானையின் கழுத்தில் மஞ்சள் கொத்தை கட்டி அடுப்பில் வைப்பார்கள்.

பால் பொங்கி வந்ததும் புத்தரிசியைப் போட்டு பொங்கல் இடுவார்கள். பால் பொங்குவதைச் சுற்றி நின்ற அனைவரும் கை தட்டி "பொங்கலோ பொங்கல்" என்று முழங்குவார்கள். அரிசி பதம் வந்ததும் வெல்லம், ஏலக்காய், முந்திரி என்று போட்டு பொங்கல் தயாராக – அதை சூரியனார்க்கு நைவேத்தியம் செய்வார்கள்.

பொங்கலுக்கு மஞ்சள் கொத்துடன் கரும்பு மிக முக்கியமான நைவேத்தியம் ஆகும். பழங்கள், கரும்பும் வைத்து வடை செய்து வழிபாடு செய்வார்கள். மஞ்சள் கொத்து பசுமஞ்சளைப் பூசிக் குளிக்க உபயோகிப்பார்கள். கரும்பு கேட்கவே வேண்டாம். இனிப்பு சுவை.

மனிதர்கள் மட்டும் பொங்கல் சாப்பிட்டால் போதுமா! அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். மாடுகளும் பொங்கல் சாப்பிட்டு மகிழ கிராமங்களில் மாட்டுப் பொங்கல் வைப்பார்கள். மாட்டை நன்கு குளிப்பாட்டி கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, முதுகில் துணி போர்த்தி பொங்கல் சாப்பிட வைப்பார்கள்.

நகரங்களில் காணும் பொங்கல் மிக விசேஷம். சமுத்திரக் கரைகளிலும், ஆற்றங்கரைகளிலும் உற்றார் உறவினர் சூழ ஜனங்கள் கூடுவார்கள். கட்டுச்சோறு உண்டு களிப்பது மிகவும் மகிழ்ச்சிகரமான வேலையாகும்.

தொடர்ச்சியாகத் திருவள்ளுவர் திருநாள் கொண்டாட்டம். திருக்குறள் பொது மறை அல்லவா? அதற்கு ஒரு விழா எடுப்பது சாலப் பொருத்தமாகும்.

மகர சங்கராந்தி திருநாளில் இன்னும் ஒரு விசேஷத்தைக் காணலாம்.

## சூரிய பூஜை

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேதநாராயணபுரம் என்ற திருப்பெயரை பெற்ற நாகலாபுரம் என்ற தலத்தில் மச்சவதாரத் திருக்கோலத்தில் காட்சி தரும் மூர்த்தியினை வருடத்தில் மூன்று நாட்கள் சூரியன் பூஜை செய்கின்றனர். முதல் நாள் பாதங்களிலும், இரண்டாம் நாள் நாபிக் கமலத்திலும், மூன்றாம் நாள் திருமுகத்திலும் சூரியஒளி படுகின்றது. இது ஒரு அபூர்வ நிகழ்வாகும்.

–டி.ஜோதிபாய், காஞ்சிபுரம்.


தமிழ்

கார்த்திகை முதல் தேதி கருப்பாடை அணிந்து ஐயப்பனுக்கு மாலை போட்டு சரணம் விளிக்கும் சப்தம் கேட்கும். அது மகர சங்கராந்தி வரை தொடரும். சபரிமலை ஐயன் ஐயப்பன் சந்நிதியில் அனைவரும் பதினெட்டு படி ஏறி தரிசனம் செய்வதுடன் மகரஜோதியை தரிசிக்க அங்கேயே முகாமிட எள்ளிட இடமின்றி கூட்டம்.

மகர ஜோதி தரிசனம் கிட்டும்.

குருஸ்வாமிக்கும் குருஸ்வாமி - சாஸ்தா ஸ்வாமி பரப்ரம்மம். 'சபரிமலையில் வாழுந்து - ஐயப்ப தெய்வம் வாழுந்து' என்ற பாடல் ஜேசுதாஸ் பாடுவதைக் கேட்டுக் கொண்டு மகரஜோதி தரிசனம் செய்யும் ஐயப்ப பக்தர்கள் எத்தனை பேறு பெற்றவர்கள்.

தை மாதம் சூரிய வழிபாடு அத்தனை சிறப்பானது. புராணங்களில் சூரியனாரின் மேன்மையை நிறையவே காணலாம்.

சூரியன் தேவர்களில் உயர்ந்தவர். தேவசிரேஷ்டர். அவரின் உதயத்தில் மூவுலகின் இருள் அகலும். அவரின் அஸ்தமனத்தில் இருள் சூழும். அவரின் ராஜ்யத்தில் தேய்வே கிடையாது. அவரே எல்லா செயல்களுக்கும் சாட்சி. எல்லா தேவதைகளுக்கும் யஜமானன். ஜகத்துக்கே ஆதாரம். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் மூன்றும் அவர் தொழில்கள்.

பிரம்மாவாகச் சிருஷ்டியையும், விஷ்ணுவாக உலகைக் காப்பவராகவும், பரமசிவராக உலக ஒழுக்கத்தையும் செய்பவர் அவரே என்று பவிஷ்ய புராணம் கூறுகிறது. சகல சித்த கணங்களும், ரிஷிகளும், ஜனகர், வியாசர், சுகதேவர், வாங்கியர் போன்ற யோகிகளும் அவரை சதா தியானித்துக் கொண்டிருக்கின்றனர்.

சூரியனின் வலது பக்கம் விஷ்ணுவும், இடது பக்கம் பிரம்மாவும், நெற்றியில் சிவனும் இருக்கிறார்கள். தேவர்கள், கந்தர்வர்கள், நாகர்கள், யக்ஷர்கள், அப்ஸரஸ்கள், ராக்ஷசர்கள், கின்னர்கள் காவல் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். கந்தர்வர்கள், அப்ஸரஸ்கள் ஆடல் பாடலில் ஈடுபட்டுள்ளனர்.

ரிக், யஜுர், சாம வேதங்கள் சுயரூபம் எடுத்துத் துதி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதித்யன், வசு, ருத்ரன், மருத், அஸ்வினி குமாரர்கள் சூரியனைத் தொழுது கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் மூன்று வேளைகளிலும் சூரியபகவானின் புகழைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

கருடனின் மூத்த சகோதரனான

## வெளிநாடுகளில் சூரிய வழிபாடு

பாரசீகர்களின் பார்ஸி மதத்தின் புனித வேதமான அவெஸ்தியில் சூரிய வழிபாடு பற்றி ஏராளமான பாடல்கள் உள்ளன.



- கிரேக்க புராணத்தில் சூரியனுக்கு ஹீலியஸ் என்றும், அப்பலோ என்றும் பெயர்கள்.
- பத்தாயிரம் ஆண்டுகள் பழமையான சுமேரிய, அஸிரிய, அகேடிய, பாபிலோனியா நகரங்களின் முக்கிய வழிபாட்டுக் கடவுள் சூரியன்தான். அவரை 'ஷாமேஷ்' என்று அழைத்து வணங்கி வந்துள்ளனர்.
- எகிப்தில் புகழ் பெற்று விளங்கியவர் சூரியக் கடவுள்தான். 'அமான்' என்றும், 'ஹோரஸ்' என்றும் அவர் வணங்கப்படுகிறார். இங்கே பிரமிடுகளில் சூரிய வழிபாடு நடத்தப்படுகிறது. அந்நாட்டில் சூரியனை புத்தி, ஆரோக்கியத்தை வளர்க்கும் கடவுளாக வழிபடுகின்றனர்.
- பெரு, மெக்சிகோ நாட்டுக்காரர்கள் சூரியனை வீரம் தரும் கடவுளாக வழிபடுகின்றனர்.
- வியட்நாமில் பொங்கல் அறுவடைத் திருநாள் 'டட்டர்ங்தூ' என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.
- ஆப்பிரிக்காவில் 'யாம்' எனும் பெயரில் பொங்கல் திருவிழா கொண்டாடப்படுகிறது. அன்று இரட்டையராகப் பிறந்தவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.
- தென் அமெரிக்காவின் பெரு நாட்டில் 'இன்கா' என்ற பழங்குடியினர், தாங்கள் சூரியனிலிருந்து வந்தவர்கள் என்று கூறுகின்றனர்.

-வத்சலா சதாசிவன், சென்னை.

அருணன் சாரதியாக அமர்ந்திருக்கிறார். இரண்டு மனைவிகளான சாயா, சம்க்ஞா சகிதம் சூரியன் அருள்பாலிக்கிறார். வேள்வியில் செய்யப்படும் சகல ஆஹுதிகளும் சூரியனையே அடைகின்றன. அவரால்தான் மழை பொழிகிறது. பூமி தளிர்க்கிறது.

அவரால்தான் க்ஷணம், முகூர்த்தம், பக்ஷம், தினம், மாசம், ருது, அயனம், வருஷம், யுகம் ஆகிய அனைத்தும் ஏற்படுகின்றன. பாமரர்கள் அவரை ஆதித்யன், சவிதா, சூரியன், மிஹிரன், அர்க்கன், பிரதாபன், மார்த்தாண்டன், பாஸ்கரன், பானு, சித்ரபானு, திவாகரன், ரவி என்றெல்லாம் அழைப்பார்கள். வாயு எப்படி உலகமெல்லாம் வியாபித்துள்ளாரோ அதேபோல் சூரியனும் வியாபித்துள்ளார்.

சூரிய பகவானே 12 மூர்த்திகளாக 12 மாதங்களில் போற்றப்படுகிறார்.

முதலில் இந்திரன் என்ற மூர்த்தியாக தேவராஜனாக வணங்கப்படுகிறார்.

இரண்டாவதாக தாதா என்ற பிரஜாபதியாக சிருஷ்டியைச் செய்கிறார். மூன்றாவதாக பர்ஜன்யன் என்ற உருவம் அமிர்தவர்ஷிணியாக இருக்கிறார். பூஷா என்கிற நான்காமவர் மந்திரங்களில் ஆவிர்த்தியாகி மனிதர்களைப் போஷிக்கிறார். ஐந்தாவதான திவிஷ்டா வனஸ்பதி காடுகளுக்கு அதிபதியாகி மூலிகைகளை அளித்து உலகங்களைக் காப்பாற்றுகிறார்.

ஆறாவதான அர்யமா மக்களைக் காப்பாற்ற நகரங்களில் இருந்து அருள் புரிகிறார். ஏழாவதான பகன் பர்வதங்களில் இருந்து அருள்புரிகிறார். எட்டாவதான விவஸ்வான் அக்கினியிலிருந்து அருள்புரிகிறார். ஒன்பதாவதான சந்த்ரமா ஜகத்துக்கு குளிர்படுத்தி அருள்புரிகிறார். பத்தாவதான விஷ்ணு ஜகத்தைக் காக்கிறார். பதினோராவதான வருணன் விருஷ்டி(மழை) மூலம் உலகை உய்விக்கிறார். பன்னிரெண்டாவதான மித்ரன் உலக க்ஷேமத்துக்காக கஷ்டங்களைத் தீர்க்க சந்திரபாகா நதிக்கரையில் வீற்றிருக்கிறார். அதனால் அந்த இடம் மித்ரவனம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த மித்ர வனத்தில் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்ட கிருஷ்ணனின் மகன் சாம்பன் சூரியனாரை பூஜித்து நோய் நீங்கப் பெற்றான். இங்கு சூரியனுக்குக் கோவில் கட்டினான். தஞ்சையின் அருகில் சூரியனார் கோவில் இருக்கிறது. அங்கு

## நாற்று நடும் திருவிழா!

கோவைக்கு அருகில் உள்ள பேரூர் மேலைச்சிதம்பரம் எனப்படும். இறைவன் பட்டீசுவரர். இறைவி பச்சை நாயகி. இக்கோவிலில் ஆனி திருமஞ்சனம் நடைபெறும் நாளில் நாற்று நடவு உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. சுந்தரமூர்த்தி நாயனாருக்கு பட்டீசுவரரும், பச்சை நாயகியும் நாற்று நடும் பாவனையில் திருக்கோலம் தரிசனம் அளிப்பர்.

-ராஜம்.

சென்று வழிபாடு செய்து சூரியனாரின் அருளைப் பெறலாம்.

சூரியனுக்கு மிகவும் பிடித்தமானது ஆதித்ய ஹ்ருதய விரதம் என்று பெயர்.

ராம–ராவண யுத்தம் பயங்கரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ராவணனின் படைத் தலைவர்கள், கும்பகர்ணன், இந்திரஜித் என்று அனைவரும் இறந்து விட்டார்கள். ராவணன் சீதை தன்னைப் பார்த்து சிரிப்பாளே என்றும், ராஜ்யம் தன்னை விட்டுப் போகிறதே என்ற வெறியுடன் இருக்கிறான். உக்கிரமாகப் போர் புரிகிறான். அவனுடைய பலம் தவத்தால் பெற்றதாயிற்றே!

ராமனுக்கு மிகவும் ஆயாசமாக இருந்தது. பதினான்கு ஆண்டுகள் முடியப் போகின்றன. சீதை அனுமனிடம் கொடுத்த ஒரு மாத கெடுவும் முடியப் போகிறது. எப்படி இவனைக் கொல்லப் போகிறோம் என்று உடலும், உள்ளமும் தளர்ந்து தவித்துப் போனார். அச்சமயம் அகஸ்திய மாமுனிவர் ராமபிரானிடம் வந்தார்.

அவர் ராமனைக் கவலை வேண்டாம் என்று சமாதானப்படுத்துகிறார். "ஆதித்ய ஹ்ருதயம் என்னும் ஸ்தோத்திரம் புண்ணியமானது. எல்லாச் சத்ருக்களையும் அழிக்க வல்லது" என்று கூறி அம்மந்திர ஸ்தோத்திரத்தை உபதேசித்தார். அதை ஆசமனம் செய்து மூன்று முறை சொல்லி ராவணனை அழிக்கும்படி ஆசீர்வாதம் செய்தார்.

இந்த ஆதித்ய ஹ்ருதயம் அனைவரும் தினமும் பாராயணம் செய்தால் சூரியனின் அருளை பெறலாம். பொங்கல் பண்டிகை, ஆதித்ய ஹ்ருதயம் எல்லாம் நாம் சூரியனின் அருளை மிக நெருங்கிப் பெறும் வழியாகும். "பொங்கலோ பொங்கல்!" அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துகள்.

# தலைக்கு 'டை' அடிப்பவரா நீங்கள்...?

இக்காலத்தில் வயது முதிர்ந்து நரையை மறைக்கவும், இளையோர் நாகரீகத்துக்காகவும் விதவிதமாக டை அடிப்பது எல்லோருக்கும் சகஜமாகி விட்டது. ''டை' பயன்படுத்துவதால், அலர்ஜியில் ஆரம்பித்து ஹார்மோன் சமச்சீரின்மை, புற்றுநோய் வரை ஆபத்து நேரலாம்'' என்கின்றனர் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

''தொடர்ந்து உபயோகிக்கும்போது, நம் தலைமுடியுடன் மட்டும் அது வினைபுரிவதில்லை. உடலிலும் சென்று ரத்தத்திலும் கலக்கிறது. இரண்டு நாட்கள் வரை தங்கும் செமி டெம்பரரி டை; 15 நாட்கள் முதல் ஒரு மாதம் வரை நீடித்திருக்கும் பெர்மனன்ட் டை; ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரை நீடிக்கும் பெர்மனன்ட் டை என எல்லா டைகளுமே ரசாயனத் தயாரிப்பு என்பதுதான் பிரச்சினையே!

'டை'களில் இருக்கும் பினலின்டயமின், அமோனியா, ஹைட்ரஜன் பெராக்ஸைடு போன்ற பல ரசாயனப் பொருட்கள், நம் ஹார்மோன்களைச் சரியாக செயல்பட விடாமல் தடுக்கின்றன. இதன் காரணமாக வளர்சிதை மாற்றம் பாதிக்கப்பட்டு, ஒவ்வொருவரின் உடல்நிலையைப் பொருத்து ஒவ்வொரு விதமான பாதிப்பு ஏற்படும். அலர்ஜி, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவது, சிறுநீர்ப்பை



புற்றுநோய் என்று பல பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

மீசைக்கு 'டை' அடிப்பதும் அதிகமாகவே இருக்கிறது. அப்படி அடிக்கும்போது சுவாசத்தின் வழியாக உள்ளே சென்று நுரையீரலை பாதிக்கக் கூடும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால், அதற்கு வாய்ப்பில்லை. அதேசமயம், மீசைக்கு கீழே இருக்கும் தோல் வழியாகவும் அது உடலில் ஊடுருவும் என்பதை மறக்க வேண்டாம்'' என்று எச்சரிக்கின்றனர்.

''செம்பருத்தி, மருதாணி போன்ற இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி, நரையிலிருந்து தப்பிக்க முயற்சிக்கலாம். எல்லாவற்றையும்விட, நரைமுடியை அதன் அழகோடு ஏற்றுக் கொள்வது மிகமிகச் சிறந்தது!'' என்றும் அவர்கள் எளிமையான வழிகாட்டுகின்றனர்.

அழகுக்கலை நிபுணர்கள் தெரிவிக்கையில், ''டை என்ற வார்த்தையே இப்போது உபயோகத்தில் இல்லை. 'டை'

---

வேப்பம்பூவுடன் மிளகு, சீரகம் சேர்த்து உண்டு வந்தால் பித்தப்பை நோய் குணமாகும். செம்பருத்தி மலரை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் வெட்டை சூடு தணிந்து ரத்தம் விருத்தியாகும். அகத்திக் கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டுவர ரத்தக்கொதிப்பு நோய் குணமாகும்.

சுரைக்காயை பச்சடி செய்து சாப்பிட்டால் கண்கள் குளிர்ச்சியடையும். மஞ்சள் காமாலை நோய் குணமாகும்.

*—சிவசுப்பிரமணியன், சிதம்பரம்.*

பெண்மணி

என்ற வார்த்தையின் உச்சரிப்பு, இறப்பு என்பதையும் குறிப்பதால், 'கலரிங்' என்கிற சொல்லுக்கு உலகம் மாறிவிட்டது.

பொதுவாக 'டை'யில் மூன்று வகை உண்டு. மெட்டாலிக் டை, ஹெர்பல் டை, அனிலைன் டை. இதில் சின்னச் சின்ன பாக்கெட்டுகளில் மலிவுவிலையில் கிடைக்கும் டை மெட்டாலிக் வகையைச் சார்ந்தது. இதில் ஏகப்பட்ட கெமிக்கல்கள் சேர்ந்திருக்கும். இதை உபயோகித்தால், அப்படியே முடியில் தங்கி விடும். 'ப்ளீச்' செய்ய முடியாது. இது உடலுக்கு தீங்கையே ஏற்படுத்தும்.

இதற்கு மாற்றாக வந்த ஹெர்பல் டை, அவுரி விதை மற்றும் ஹென்னா கலந்து வந்தாலும், கூடவே கெமிக்கலும் கலக்கப்பட்டே வருவதால் இதுவும் உடலுக்கு கேடு ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட டைகள் எல்லாம் முடியில் மட்டும் இல்லாமல் உடலுக்குள்ளும் ஊடுருவி சென்று விடுவதுதான் ஆபத்துகளுக்கு அழைப்பு வைத்து விடுகிறது.

மூன்றாவது வகையான 'அனிலைன் கலர்' எனப்படும் டை, அமோனியா கலக்காமல் வந்துள்ளது. இதையும்கூட எல்லோருக்குமே உடனே நாங்கள் போட்டு விடுவதில்லை. பேட்ச் டெஸ்ட் என்கிற டெஸ்ட் செய்வோம். அதாவது, காதுக்கு பின்புறம் இதை அடித்துவிட்டு, வீட்டுக்கு போகச் சொல்லி விடுவோம். 24 மணி நேரத்துக்குக்குள் அரிப்பு, தடிப்பு என்று எந்த பிரச்சினைகளும் வராமல் இருந்தால் மட்டுமே அதை அவர்களுக்கு கலரிங் செய்ய பயன்படுத்துவோம்'' என்று தெரிவிக்கின்றனர்.

''அலர்ஜி உள்ளவர்களுக்கு, சிம்பிளாக மருதாணியை தலையில் தடவ சொல்லி விடுவோம். இயற்கையான கலரிங் பொருளான மருதாணியில் எந்தத் தீங்கும் இல்லையே'' என்றும் கூறுகின்றனர்.

இருந்தாலும் 'டை' அடிக்கும் முன் யோசியுங்கள்.

# நகம் கடிப்பதும்

## ஒரு மனநிலை பாதிப்பே!



நகம் கடிப்பதும் ஒருவிதமான மனநிலை பாதிப்பு தான் என அமெரிக்க மனோதத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். உலகம் முழுவதும் பல லட்சம் பேர் நகம் கடிக்கும் பழக்கம் கொண்டவர்களாக உள்ளனர்.

நகம் கடிப்பது மட்டுமல்ல, கையை அடிக்கடி கழுவுவது, முடியை பிடித்து இழுத்து கொண்டே இருப்பது ஆகியவையும் மனநல பாதிப்பின் வெளிப்பாடுதான்.

காரணமில்லாத அச்சம், தவறான எண்ணங்கள் மனதில் எழுவதால் சிலர் இதுபோல செய்கின்றனர். இதை மனநல பாதிப்பில் சேர்க்கலாம் என அமெரிக்க மனநல சங்கத்தை சேர்ந்த நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

''எப்போதாவது நகம் கடிப்பவர்கள் கூட மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என கூறிவிட முடியாது. இந்த பழக்கத்தால் வலி ஏற்படும் அளவுக்கு ஒருவர் நடந்து கொண்டால் அவரை மனநலம் பாதிக்கப்பட்டவர் என கருதலாம்'' என்று கலிபோர்னியா பல்கலைக்கழக மனோ தத்துவவியல் வல்லுநர் கரோல் மேத்யூஸ் தெரிவிக்கிறார்.

இதுமட்டுமல்லாமல் நகம் கடிப்பதால் நோய் தொற்று ஏற்பட்டு அடிக்கடி சளி பிடித்தல், உடல்நிலை பாதிக்கப்படுதல் போன்றவையும் ஏற்படுகிறது.




# சத்யசாயிபாபாவின் புண்ணியபூமி அனந்தப்பூர்

முனைவர் பேராசிரியர் ந.க.மங்களமுருகேசன்

ஆந்திர மாநிலத்தில் அற்புதமான திருக்கோவில்களும், கோட்டைகளும் கொண்ட அனந்தப்பூர் மாவட்டம் சுற்றுலாச் சிறப்பு வாய்ந்த மாவட்டமாக விளங்குவதால் ஆந்திர மாநிலத்தில் சுற்றுலா செல்ல ஏற்ற இடமாகவும், சிறப்பு வாய்ந்த இடமாகவும் விளங்குகிறது.

அனந்தப்பூர் மாவட்டம் தான் ஆந்திர மாநிலத்தின் மாவட்டங்களில் எல்லாம் பெரிய மாவட்டமாக விளங்குகிறது. இதில் 64 மண்டலங்கள் எனும் பஞ்சாயத்து அமைப்புகள் உள்ளன. இந்தியாவிலே ராஜஸ்தானின் ஜெய்சல்மருக்கு அடுத்தபடியாக மிக குறைந்த மழை வளம் அனந்தப்பூர் பெற்றிருப்பது இயற்கையின் குறைபாடு. ஹைதராபாத்திலிருந்து 356 கிலோ மீட்டர் தெற்கில் ஏறக்குறையச் சென்னையிலிருந்து மதுரை உள்ள தொலைவு உடையது.

ராயலசீமா, பெல்லாரி மாவட்டத் தலைநகர் எனலாம். இன்றல்ல 1799-ல் ஆங்கிலேயர் காலத்தில் சென்னை நகரத்தில் சிலையாக நிற்கிறாரே அந்த மன்றோ- தாமஸ் மன்றோதான் இதன் முதல் மாவட்ட ஆட்சியாளர் என்பது வரலாறு கூறும் செய்தி.

இரண்டாம் உலகப் போரின் போது ஆங்கிலேயரின் படை தங்கிய பகுதியும் கூட. கடல் மட்டத்திலிருந்து 1,099 அடி உயரத்தில் உள்ளது. பிப்ரவரி மாதத்திலேயே கோடைக்காலம் தொடங்கி மண்டையைப் பிளக்கும் வெயில் மே மாதத்தில் இருக்கும். மழைக்காலம் செப்டம்பரில் தொடங்கி நவம்பர் வரைதான். நவம்பர் மாதத்தில் இருந்து பிப்ரவரி வரை அனந்தப்பூர் சுற்றுலாவிற்கு ஏற்ற காலமாகும்.

ஆந்திர முதலமைச்சராகவும், இந்தியக் குடியரசுத் தலைவராகவும் விளங்கிய நீலம் சஞ்சீவி ரெட்டி அனந்தப்பூர்க்காரர் என்பது இவ்வூருக்குக் கிடைத்த பெருமைகளுள் ஒன்று.





அனந்தப்பூரில் வரலாற்றுச் சின்னங்களான பெனுகொண்டாவும், ராயதுர்க்காவும் காணக் கிடைப்பதுடன் லேபாக்ஷி, தர்மாவரம் ஆகிய இரண்டும் கலைச் சிறப்புடன் திகழ்கின்றன.

அனந்தப்பூர் என்றவுடன் ஆலமரம் ஒன்று பலரின் நினைவிற்கும் வரும். அடையாறு ஆலமரம் என்று சென்னையில் உள்ளவர்கள் அறிவார்களே அதுபோல் 'திம்மம்மா மர்ரிமனு' எனும் ஆலமரத்தை அனைவரும் அறிவர். இந்த ஆலமரத்தின் பெருமைக்குக் காரணமே அதன் வயதுதான். வயது பத்து, நூறு ஆண்டுகள் அல்ல. அதற்கும் மேலே, மேலே. அதாவது 550 ஆண்டுகள்.

பழமை வாய்ந்த இந்த ஆலமரம் இன்றும் பரவிப் படர்ந்து இருப்பது பெருமை மட்டுமல்ல, அதிசயமும் கூட. அதனாலேதான் அதன் பரந்து, விரிந்த அளவு கண்டு அதனை கின்னஸ் புத்தகத்திலேயே குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்பது ஒரு தனிச் சிறப்புப் பெற்றிருப்பதன் அடையாளம் மட்டுமல்லாது சுற்றுலா பயணிகளை அனந்தப்பூருக்கு வாவென்று அழைக்கும் இயற்கைச் செல்வம் அது.

சுற்றுலா தலங்களைப் புகழ்மிக்க கோவில்கள், கோட்டைகள், குளங்கள், நினைவுச் சின்னங்கள், பிற இடங்கள் என்று வகுத்துக் கொண்டு காணலாம்.

அனந்தப்பூர் மாவட்டம் தான் அகோபிலம் எனும் வைணவர்களால் கொண்டாடப்படும் நவநரசிம்மர்கள் எனும் ஒன்பது நரசிம்மர்களும் ஒரே திருத்தலத்தில் காட்சி தரும் புகழ் பெற்ற திவ்யதேசத்தின் இருப்பிடமாகும். அதனுடைய அபிமானத் தலம்தான் பென்னா அகோபிலம்.

உத்தரப் பிணாகினி என அழைக்கப்படும் வடபெண்ணையாறு அனந்தப்பூர் – உரவக்கொண்டா அருகில் ஓர் அழகிய அருவியாக இறங்கி வருகிறது. அதன் கரையில் எழுந்தருளியுள்ள நரசிம்மர் அகோபிலத்தில் இருந்து வந்து எழுந்தருளியிருக்கிறார் என்று கூறுவர்.

இங்கு வந்த நரசிம்மமூர்த்தி மிகப் பெரிய உருவில் வந்தார் எனவும், அவருடைய திருப்பாதத் திருவடி பதிந்த அடையாளம் 5 அடி 3 அங்குலம் எனவும், அதன் மேல்தான் இங்குச் சந்நிதி அமைந்துள்ளது எனவும் நம்புகின்றனர். பெருமாளுடன் ஆதிலட்சுமித் தாயாரும், செஞ்சுலட்சுமித் தாயாரும் எழுந்தருளியுள்ளனர். உக்கிர நரசிம்மரும் உடன் எழுந்தருளியுள்ளார்.

இத்திருக்கோவில் நரசிம்மர் திருமணத் தடைகளை உடனுக்குடன், வழிபட்டு வேண்டி நிற்பவருக்கு அளிப்பவர் என்று நம்புகின்றனர். ஆதலால் திருமணத் தடை நீக்கும் திருக்கோவிலும் ஆகும். ஆகவேதான் இங்குத் திருமணங்களும் நிகழ்கின்றன.

இக்கோவில் தோஷங்கள் அகற்றும் கோவில் எனவும் நம்பப்படுகிறது. களத்திரதோஷம், தன, வாக்கு, குடும்ப





தோஷம், சுகஸ்தான தோஷம், பூர்வ புண்ணிய தோஷம் என எத்தோஷமும் இந்த நரசிம்மரை வழிபட்டால் தீரும். பங்குனி – சித்திரையில் திருத்தேர் திருவிழா காணத்தக்கது.

பென்னா நரசிம்மரே பென்னா அகோபிலத் திருத்தல அதிபதி. பெரிய திருமந்திரம் என திரு வைணவர் போற்றும் 'ஓம் நமோ நாராயணாயா' எனும் திருமந்திரத்தின் திருஉருவமாகவே பென்னா அகோபிலத்தில் லட்சுமி நரசிம்மர் எழுந்தருளியுள்ளார் என்பர். அனந்தப்பூரிலிருந்து 40 கி.மீ. தொலைவு. அடிக்கடி பேருந்துகள் செல்கின்றன. அனந்தப்பூரில் தங்கும் வசதி உள்ளது.

## பொங்கல் விழா

'கிராந்தி' என்பது மாறுதலைக் குறிக்கும். 'சங்கராந்தி' என்றால் நல்ல முறையில் மாறுதல் நடைபெறுவதை குறிக்கும். தைமாதம் பிறக்கும் போது சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கிறார். தட்பமும், வெட்பமும் மிதமாக உள்ள சூழ்நிலையில் பயிர்கள் பொன்னாக விளைந்து அறுவடையாகும் தருணத்தில் இது நேருகிறது.

இந்த நல்லவேளையில் சூரிய பகவானின் அருளால் கிடைத்த நல்ல விளைச்சலை, அவருக்கே பொங்கலிட்டு நைவேத்தியம் செய்து கொண்டாடி மகிழ்கிறோம். எளியவர், செல்வந்தர் என்ற வித்தியாசம் இன்றி அனைவருக்கும் கருணை காட்டும் கதிரவனைப் போற்றி வழிபடுவதே பொங்கல் விழா.

- டி.ஜோதிபாய், காஞ்சிபுரம்.

அனந்தப்பூரிலிருந்து 100 கி.மீ. தொலைவில் அடிக்கடி பேருந்து வசதியுள்ள திருத்தலம் கதிரி லட்சுமி நாராயணர் கோவில். இங்குதான் பெருமாள் முதல் முதலில் காலடி எடுத்து வைத்து பிருகு மகரிஷி என்ற முனிவர் தினமும் வழிபட உற்சவ மூர்த்தி அளித்தாராம். தசராவின் போதும் மகர சங்கராந்தியின் போதும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. இங்கு வந்து வழிபட்டால் அடியவர் துன்பம், துயரம், பாவங்கள் விலகுமாம். அப்படி ஓர் ஆழ்ந்த நம்பிக்கை. கோவிலுடன் பல்வேறு தீர்த்தங்கள் உள்ளன. அவை காணத்தக்கவை.

அனந்தப்பூருக்குக் கிழக்கே 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள லேபாக்ஷி பெங்களூருக்கும் அருகில் உள்ளது. உலகம் முழுமையிலும் வியந்து போற்றும் சிவன் திருக்கோவில்களில் லேபாக்ஷி வீரபத்திர சுவாமி கோவிலும் ஒன்று. விஜயநகரக் கலைச் சிறப்பை நாளெல்லாம் இங்கு பார்த்துக் கொண்டே இருக்கலாம். நூறு தூண்களுடைய நாட்டிய மண்டபம் நுணுக்கமான சிற்பங்கள், உருவங்கள் கொண்டது.

இந்தக் கூடத்தின் மையத்தில் இருந்து 21 அடி உயர மேல்பரப்பு ஒன்று எழுந்து மலர்ந்த தாமரை விண்ணைத் தொட எத்தனிப்பது போல் இருக்கிறது. வீரபத்திரரின் ஆள் உயரத் திருஉரு கருங்கல்லில் நாகலிங்கம், பெரிய நந்தி, கணேசமூர்த்தி முதலியவற்றுடன் விளங்குகிறது. மண்டபத்தில் உள்ள நடன உருவங்களும், ஆள் உயர நந்தியும் ஒரே கல்லில் ஆனது. மண்டப மேற் கூரையில் வண்ண ஓவியங்கள் அழகு சேர்க்கின்றன.

அனந்தப்பூரிலிருந்து 52 கி.மீ. தொலைவில் உள்ள தாடிபத்ரி பல, சமய நினைவுச் சின்னங்களைக் கொண்டுள்ளது. தாடிபத்ரி நகரின் மையத்திலேயே உள்ளது சித்தாலா வெங்கடரமணர் கோவில். எடுப்பான உயர கோபுரம் உடைய கோவிலின் விமானம், மண்டபங்கள், தூண்கள் எல்லாவற்றிலும் கலையழகு கொஞ்சி விளையாடுகிறது. தாடிபத்ரி என்றால் தாடிபத்ரியின் இசைத்தூண்கள் பற்றியும் குறிப்பிட வேண்டும்.

இங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் புக்கா ராமலிங்கேஸ்வரர் கோவில் காண வேண்டிய ஒன்றாக விளங்குகிறது. இங்குள்ள லிங்கத் திருமேனிக்கு ஒரு சிறப்பும் உள்ளது. இதன் அடிப்பகுதியில் உள்ள நீரூற்றிலிருந்து நீர் சுரந்து அதனை நிறைத்துக் கொண்டே இருக்கிறது. இது ஒரு அதிசய அனுபவமாகும்.

இது நமக்குப் புதுச்சேரியில் மணக்குள விநாயகர் திருப்பாதத்தில் நீர் சுரப்பதை நினைவூட்டுகிறது.



அனந்தப்பூரிலிருந்து சற்றுத் தொலைவில் 140 கி.மீ. தொலைவில் உள்ள ஹேமாவதிக்கு பேருந்து வசதி உள்ளது. ஹிந்துப்பூர் ரெயில் நிலையம் அருகில் உள்ளது. பல்லவ மன்னர்கள் ஆந்திர மண்ணில் கட்டிய தொட்டேசுவரர் சுவாமி கோவில் குறிப்பிடத்தக்கது. இந்தக் கோவில் கற்சிற்பங்கள் செய்யப்பட்டுள்ள கற்கள் உலோகம் போல் ஒலி எழுப்பக் கூடியவை. அதுமட்டுமல்லாது பளபளப்பும் உடையவை. கருங்கல்லில் செய்யப்பட்ட நந்தி 8 அடி உயரம், 4 அடி அகலம். நுழைவு வாயிலில் கம்பீரமாகப் படுத்திருக்கிறது. கருவறையில் உள்ள லிங்கத்தின் உயரம் 6 அடி.

இக்கோவில் வளாகத்திலேயே சித்தேசுவரசுவாமி, மல்லிகார்ஜுன சுவாமி கோவில்கள் உள்ளன. கோவிலினுள் உள்ள அருங்காட்சியகத்தில் அழகிய உருவங்களை காணலாம். அருகில் உள்ள கோரண்ட்லா கோவில்களும் காணத்தக்கன.

அனந்தப்பூரிலிருந்து 70 கி.மீ. தொலைவில் பெங்களூரு நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது பெனுகொண்டா. அடிக்கடி பேருந்துகள் வசதியும் உள்ளது. விஜயநகர அரசர்களின் தலைநகரமாக விளங்கிய பெருமை பெற்றது இது. பெனுகொண்டா கோட்டையை வலிமை மிக்கக் கோட்டையாக அமைத்துள்ளனர். இந்தக் கோட்டையில் உள்ள குறிப்பிடத்தக்க காண வேண்டிய கட்டிடம் ககன் மகால் என்பது. இது கோடையில் தங்கிட, குளிர்ச்சி தரும் கோடைகாலத் தங்குமிடமாகும்.

பெனுகொண்டாவில் கட்டாயமாகக் காண வேண்டியது கும்பகர்ணனின் நித்திரைக்காட்சி. சுமார் 5 ஏக்கரில் அமைந்துள்ள பூங்காவில் 142 அடி நீளமும், 32 அடி உயரமும் உள்ள கும்பகர்ணனின் உறங்கும் நிலையிலான சுதை வடிவத்தை வடித்து வைத்திருக்கிறார்கள். இந்தக் கும்பகர்ணனுடைய வயிற்றினுள்ளே புகுந்து நடந்து சென்றால் இந்தத் தூங்கும் கும்பகர்ணனை எழுப்பும் வடிவத்தில் இருப்பதையும் காண முடிகிறது. கும்பகர்ணனுக்கு என்று சிலா வடிவத்தை ஏன் படைத்தார்கள் என்பது தெரியவில்லை.



அனந்தப்பூரிலிருந்து 130 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ராயதுர்க்கா கோட்டையைச் சென்று காண பேருந்து வசதிகள் உள்ளன. இக்கோட்டையை அமைத்தவர்கள் விஜயநகரப் பேரரசர்கள்தாம். இக்கோட்டைச் சுவர்களில் உள்ள கல்வெட்டுக்கள் இச்செய்தியை வழங்குகின்றன. இக்கோட்டையினுள் ராசசித்துல்லா கோவில் எனும் கோவில் உள்ளது. இக்கோவில் ஒரே கற்பாறையில்

பெனுகொண்டா அமைந்த கோட்டை. சாலையில் 'கூட்டிக் கோட்டை' உயரத்தில் கோட்டை 300 மீட்டர் உயரத்தில் எழுப்பப்பட்டுள்ள இக்கோட்டை மலையில் ஆந்திராவில் உள்ள கோட்டைகளில் அமைந்துள்ள கோட்டைகளில் ஒன்றாகும். விஜயநகர அரசர்களால் கட்டப்பட்டது. இது 15 வாயில்களுடன் சங்கு வடிவத்தில் எழுப்பப்பட்டுள்ளது. இக்கோட்டையில் அவ்வளவு உயரத்தில் நீர் ஆதாரம் இருப்பது ஒரு தனிச்சிறப்பு.



செதுக்கப்பட்டது என்பதோடு அழகிய நுட்பமான சிற்பவடிவங்களும் கொண்டது. சமணக் குருமார்களும் அவர்களின் சீடர்களும் இங்கே சிலை வடிவில் காணக் கிடைக்கிறார்கள்.

இங்கு அருகில் ராமர் கோவில், நரசிம்மசுவாமி கோவில், நீலகண்டேசுவர சுவாமி கோவில், தும்புரேஸ்வரர் கோவில் ஆகியவை உள்ளன.

அனந்தப்பூரிலிருந்து 52 கி.மீ. தொலைவில்

பசுமையான மரங்கள், உயரமான குன்றுகள், அற்புதமான அருவிகள் ஆகியவற்றுடன் அழகும் எழிலும் உள்ள அஹூர், அனந்தப்பூரிலிருந்து 65 கி.மீ. தொலைவில் உள்ள பொழுதுபோக்கு மையமாகும்.

இங்குள்ள மலை மீது பள்ளிகொண்ட பெருமான் அரங்கநாதர் பள்ளிகொண்டு இருக்கிறார். இக்குன்றின் மீது ஏறி நின்று

## ஸாகர ஸங்கமம்

தைப் பொங்கலான மகர சங்கராந்தி நாளன்று மேற்கு வங்காளத்தில் உள்ள சாகர் தீவு ஸ்நான கட்டத்தில் புனித நீராடி பித்ரு கடன்கள் செய்தால் புண்ணியம் கிட்டும் என்ற நம்பிக்கை புராண காலம் தொட்டே இருந்து வருகிறது. அந்த சமயத்தில் மிகவும் பிரமாண்டமான "மேளா" ஒன்றும் அங்கு நடைபெறுகிறது.

அந்த சாகர சங்கம மேளாவின் போது சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடுவது அதன் சிறப்பு. ஒரு காலத்தில் அங்கு பிராயச்சித்த புனித நீராடுதற்கு வருகின்ற பக்தர்கள் முத்து, வைரம், வைடூரியம், கோமேதகம், பவளம் ஆகிய பஞ்ச ரத்தினங்களை தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், புஷ்பம் ஆகியவற்றுடன் சங்கமத்தில் இடும் வழக்கம் இருந்தது. தற்போது பூ, பழங்கள் மட்டுமே இடப்படுகின்றன.



பகீரதி என்ற பெயரில் கங்கை புவியில் இறங்கி கடைசியாக மேற்கு வங்கத்தில் கலக்கிறாள். அங்கு கங்கை கடலுடன் கலக்கும் இடத்தில் 'சாகர்' என்ற ஒரு தீவு உள்ளது. அந்த சாகர சங்கமம் கொல்கத்தாவிலிருந்து 64 கி.மீ. தொலைவில் உள்ள மிகப் பிரசித்தி பெற்ற டயமண்ட் ஹார்பரிலிருந்து 120 கி.மீ. தொலைவில் உள்ளது.

16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரதாப ஆதித்த மன்னனின் தலைநகரமாகவும் இந்த சாகர் ஒரு காலத்தில் இருந்திருக்கிறது. சங்கராந்தி எனப்படும் தைமாதப் பிறப்பன்று அந்த சாகர் தீவு ஸ்நான கட்டத்தில் புனித நீராடி பித்ரு கடன்கள் செய்வது மிகவும் சிறப்பு என்ற நம்பிக்கை புராண காலம் தொட்டே மேற்கு வங்கத்தில் நிலவுகிறது.

அந்த இடத்தில் கபில முனிவருக்கும் ஒரு ஆலயம் உள்ளது. புனித நீராடிய பின் மக்கள் கபில முனிவரையும் தரிசிக்கின்றனர். ஒரு பெரிய பாறையையே கபில முனிவராக பாவித்து அபிஷேக ஆராதனைகள் நடக்கின்றன. அங்கு கடல், கங்காதேவி, பகீரதன் ஆகியோரைக் குறிக்கும் அடையாளச் சின்னங்களும் உள்ளன.

-வத்சலா [illegible]

பார்த்தால் சுற்றிலும் உள்ள அழகிய நிலப்பகுதியையும், இனிமையான காற்றையும் கண்டு, உணர்ந்து திரும்பலாம். இங்கு ஆண்டுத் தேர்த்திருவிழா மார்ச் – ஏப்ரலில் முழு நிலவு நாளில் நடைபெறும் போது ஏராளமான மக்கள் வெள்ளம் கூடும். சந்தைகளுடன் கலகலப்பான விழா அது.

அனந்தப்பூர் என்றவுடன் அனைவர் மனதில் பதியும் அற்புத மந்திரம் சத்யம், சிவம், சுந்தரம். இதனை வழங்கிய புட்டபர்த்தி சாயிபாபாவும் பிரசாந்தி நிலையமும் கோடிக்கணக்கான மக்கள் உலகின் பல பகுதிகளிலும் இருந்து வந்து தரிசித்த புண்ணிய பூமி. சமயப் பணியோடு அருட்பணியோடு அறப்பணியும் மேற்கொண்ட சித்த புருஷராக விளங்கியவர் பகவான் என்று பக்தர்கள் போற்றி வழிபட்ட பகவான் சத்யபாபா வாசம் செய்த இடம்.

சென்னை மக்களின் தாகம் தீர்க்கக் கிருஷ்ணா நீர் சென்னைக்கு கிட்ட அவர் அளித்த பொருட்குடையை அவர் சமயக் கொள்கையில் ஈடுபாடு இல்லாதவர்களும் கூட மனமுவந்து பாராட்டத் தவறியதேயில்லை.

அனந்தப்பூரிலிருந்து 75 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பிரசாந்தி நிலையம் எனும் அமைதியின் இருப்பிடம் பேருந்துகள் வாயிலாகவும், ரெயில் மூலமாகவும், கார் வாயிலாகவும் சென்று காணத்தக்கது. பிரசாந்தி நிலையத்தின் தனிப் பெரும் சிறப்பே சர்வசமய ஏற்புத்தான். இங்கு அனைத்துச் சமயங்களும் மதிப்பளிக்கப்பட்டன. ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 23 அன்று சத்ய சாயிபாபாவின் பிறந்தநாளின் போது ஆயிரக்கணக்கானவர்கள் அவரைத் தரிசிக்க, அவருக்கு வாழ்த்துக் கூற, அவருடைய அருளினைப் பெற வந்து கூடினர்.

புட்டபர்த்தியில் இன்று வெறுமை



மேலைநாடுகளில் ஜல்லிக்கட்டை காளைப்போர் என்று அழைப்பார்கள். நமது ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கும், மேலைநாட்டு காளைப்போருக்கும் முக்கிய வேறுபாடு என்னவெனில், அந்நாடுகளில் காளைப்போர் முடிந்தவுடன் காளைகளை கொன்று விடுவர். ஸ்பெயின் நாட்டில் ஏப்ரல், நவம்பர் மாதங்களில் நடைபெறும் காளைப்போர் பிரசித்தம். பண்டைய கிரேக்கம், போர்ச்சுக்கல், மெக்ஸிகோ நாடுகளிலும் காளைப்போர் நடைபெற்றிருக்கிறது.

–என்.ஜரீனாபானு, திருப்பட்டினம்.

குடிகொண்டாலும், சத்யசாயிபாபாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவருக்கு மரியாதை செலுத்த, மறைந்தும் மறையாமல் வழிகாட்டுகிறார் என்று நம்பும் அவருடைய பக்தர்கள் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இங்கு காணத்தக்க பிற இடங்கள் சுப்பிரமணியர் கோவில், காயத்ரி மந்திர், சாய் குல்வந்த் கூடம், சர்வ தர்ம ஸ்தூபா எனும் 50 அடி உயரத் தூண், பூர்ண சந்திர கலைமன்றம், சைன்ய ஜோதி அருங்காட்சியகம் ஆகியனவாகும்.

பெண்களுக்கு தர்மாவரம் என்றவுடன் தர்மாவரம் பட்டுப்புடவைகள்தான் உடனே நினைவிற்கு வரும். ஆனால் 'தர்மாவரம்' சென்று காணவேண்டிய இடங்கள் பட்டியலில் உள்ள இடம்தான். சிற்பக்கலைக்கு புகழ் பெற்ற சென்ன கேசவராயர் எனும் கண்ணன் கோவில் குறிப்பிடத்தக்கது. இங்கே உள்ள கற்தூண்கள் இசைத்தூண்கள். சரிகமபதநி எனும் ஏழு ஸ்வரங்களும் கல்லில் இருந்து எழும் அற்புதத்தைக் கண்டு சிற்பி பேசும் தூண்களை கலையழகுடன் படைத்து இருக்கிறார். இங்கே வற்றாத நீர்வளம் உள்ளது.

கோட்டா சவுடேசுவர சுவாமி கோவில், காசி விசுவநாதர் கோவில், அருள்மிகு பச்சு நாகம்பள்ளி காசி விசுவநாதர் கோவில், ஆஞ்சநேயர் கோவில், கணபதி கோவில் ஆகியன உள்ளன.

தர்மாவரம் பட்டு, பருத்தி ஆடைகள் உலகம் முழுவதிலும் பேசப்படுபவை. தர்மாவரம் தோல் பொம்மைகளும் புகழ் பெற்றவை. அனந்தப்பூர் சுற்றுலா சென்று வருவோருக்கு அது ஆனந்தப்பூர்தான் என்று உணரச் செய்யும்.

# மயிலார் நோன்பு!



தமிழகத்தில் சில இனத்தவரால் தை மாதத்தில் கொண்டாடப்படுவது மயிலார் நோன்பு. செங்குந்தர் இனத்தவரும், சலவைத் தொழிலாளர்களும் இந்த நோன்பை சிறப்புறக் கொண்டாடுகின்றனர்.

காணும் பொங்கல் விழா முடிந்த ஆறாம் நாள் அல்லது எட்டாம் நாளில் மயிலார் நோன்பு கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் விட்டின் மையப்பகுதியில் திருவிளக்கேற்றி, பூஜை மாடத்தின் சுவரில் பச்சிலைகளைத் தேய்த்து அதில் விரித்த தோகையுடன் கொண்ட அழகிய மயிலை ஓவியமாக வரைவர். அந்த மயிலுக்கு மஞ்சள், குங்குமமிட்டு அலங்கரிப்பர். மயில் வரையும் போது அதன் மீது குறுக்குவாட்டில் வேலாயுதம் வரைவோரும் உண்டு.

உச்சி (மதியம்) வேளையில் வடை, கொழுக்கட்டை, சுண்டல் முதலானவற்றை படையலிடுவர். அப்போது சாதத்தை ஆறு அல்லது பன்னிரெண்டு சிறுசிறு உருண்டைகளாகப் பிடித்து, மூன்று மயிலிறகுகளை அதில் வைத்து உருட்டி வைப்பர்.

இதையடுத்து தூப தீபம் காட்டி, பிரார்த்தனை செய்ததும் சாத உருண்டைகளை எடுத்து அப்படியே விழுங்குவர். தீராதநோய் மற்றும் உடல் தளர்ச்சி கொண்டவர்கள், இந்த சாத உருண்டைகளைச் சாப்பிட்டால் உடனே சிக்கல்கள் யாவும் நீங்கி வளம் பெறுவர் என்பது நம்பிக்கை. இதனை 'மயில்புடி' என்கிறார்கள்.

தைப் பொங்கல் திருநாளில் நெசவாளர்கள் தங்களது நெசவுத் தொழிலுக்கு விடுமுறை கொடுக்கிறார்கள். மயிலார் நோன்பு விழாவிற்கு பிறகே தொழிலைத் துவங்குகின்றனர். சலவைத் தொழிலாளர்கள் துணி வெளுக்கும் சாலையும், அடுப்பையும் வணங்குவர். சிலர் சாலிலேயே மயிலின் படத்தை வரைந்து வணங்குவதும் உண்டு. அவர்களும் பொங்கல் துவங்கி மயிலார் நோன்பு வரை தொழிலைச் செய்ய மாட்டார்கள்.

இந்த நாளில் மொச்சைப் பயறைச் சுண்டல் செய்து படைத்துச் சாப்பிடுவது வழக்கம். இது குறித்த நாட்டுப்புறப்பாடல் ஒன்றும் உள்ளது. மயிலார் நோன்பை 'மயில் பண்டிகை' என்றும் அழைக்கின்றனர்.

*- ஜெயலட்சுமி கோபாலன்,*
*சிட்லபாக்கம்*

# குளிர்காலத்தில்

# பாதங்களை பராமரிக்க...



குளிர்காலம் என்றாலே வறட்சி காலம் என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் இந்த காலத்தில் சருமம் வறட்சியடைந்து, வெடிப்புகளை ஏற்படுத்தும். அவ்வாறு வறட்சி ஏற்படும் இடங்களிலேயே பாதங்கள் தான் அதிகம் இந்த காலத்தில் பாதிக்கப்படும். அதில் பாதத்தில் ஏற்படும் பிரச்சினைகள் என்றால் பாத வெடிப்புகள், வறட்சியான பாதம் மற்றும் பாதங்கள் மென்மையிழந்து கடினமாக இருப்பது போன்றவைகள்.

எனவே எப்போதும் வீட்டில் இருக்கும் போது, குளிர்ச்சியில் இருந்து விடுபட ஷூக்களை அணிந்து கொண்டால் குளிராமல் இருக்கும். இதை செய்தால் மட்டும் பாதத்திற்கு எந்த பிரச்சினையும் வராமல் இருக்காது. மேலும் ஒருசில செயல்களையும் செய்தால் தான், எந்த ஒரு பிரச்சினையும் பாதங்களில் ஏற்படாமல் மென்மையோடு வைத்துக் கொள்ள முடியும்.

குதிக்கால்களில் அழுக்கில்லாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதனால் எந்த ஒரு கிருமிகளும் பாதங்களை தாக்காமல் இருக்கும். இதற்கு தினமும் பாதங்களை வெதுவெதுப்பான நீரில் சிறிது நேரம் ஊற வைத்து, பின் அழுக்கை நீக்கும் பூட் கிளீனரால் தேய்த்து சுத்தம் செய்ய வேண்டும். இதனால் பாதங்களில் உள்ள அழுக்குகள் நீங்கி விடும்.

பாதங்களில் உள்ள துளைகளில் இருக்கும் அழுக்குகளை தினமும் ஒரு முறையாவது ஸ்கரப் செய்ய வேண்டும். இதனால் பாதத் துளைகளில் உள்ள இறந்த செல்கள் நீங்குவதோடு, ரத்த ஓட்டம் அதிகரித்து பாதம் மென்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும். மேலும் ஸ்கரப் செய்தால், குதிக்கால்களில் இருக்கும் புண்கள் சரியாகும்.



பாதங்களில் எண்ணெய் சுரப்பிகள் இல்லாததால் விரைவில் வறட்சியடைந்து விடும். இதனால் வெடிப்புகள் வரும். ஆகவே ஒரு நாளைக்கு இரண்டு முறை மாய்ஸ்சுரைசரை தடவ வேண்டும். குளித்த பின்னும், இரவில் தூங்கும் முன்பும் தடவி வர வேண்டும். அதிலும் பேபி ஆயில் அல்லது ஏதாவது பாடி ஆயிலை தடவ வேண்டும். இவற்றால் பாதங்கள் மென்மையாகவும் சுத்தமாகவும், வெடிப்புகளின்றியும் இருக்கும்.

பாதங்களை சுத்தம் செய்யும் போது மறக்காமல் கால் விரல் நகங்களையும் சுத்தம் செய்ய வேண்டும். இது எந்த காலத்திற்கும் முக்கியமான ஒன்று. ஏனெனில் பொதுவாக கிருமிகள் கால் விரல் நகங்களில் அதிகம் தங்கும். ஆகவே மறக்காமல் பெடிக்யூர் செய்ய வேண்டும்.

அழகு நிலையம் செல்வதற்கு நேரமில்லையென்றால், வீட்டிலேயே வெதுவெதுப்பான நீரில் சிறிது உப்பு சேர்த்து, அந்த கலவையில் கால்களை ஊற வைத்து ஸ்கரப் செய்ய வேண்டும். ஸ்கரப் செய்த பின்னர் சுத்தமான நீரில் கழுவி, பின் ஏதேனும் மாய்ஸ்சுரைசரை தடவ வேண்டும். இதனால் அங்குள்ள இறந்த செல்கள் வெளியேறி, பாதங்கள் வறட்சியின்றி அழகாக காணப்படும்.

குளிர்காலத்தில் எப்போதும் பாதங்களை மென்மையாக வைத்துக் கொள்ள சிறந்த வழியென்றால், அது கால்களில் எப்போதும் சாக்ஸ் அணிவது தான். அதிலும் மாய்ஸ்சுரைசரை பாதங்களில் தடவி, பிறகு சாக்ஸை முழு நாளும் அணிய வேண்டும். இதனால் குளிர்ச்சியில்லாமல் இருப்பதோடு, வறட்சியான வெடிப்புகள் ஏற்படாமலும் இருக்கும்.

மேற்கூறியவாறு பாதங்களை பராமரித்து வந்தால் குளிர்காலத்தில் பாதங்கள் வறட்சியின்றி, மென்மையோடு சுத்தமாகவும் இருக்கும்.

# குழந்தைகளின் அகமனதை அறிவோம்!



இந்தப் பூவுலகில் பிறந்ததில் இருந்தே குழந்தையின் மனம் வளரத் தொடங்கி விடுகிறது. கொஞ்சம் கொஞ்சமாக உடலும், மனமும் புற உலகத்தைக் கண்டு உணர்கின்றன. தனக்கும், புறஉலகத்துக்கும் இடையில் அழகிய ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறது. எல்லாவற்றையும் அறிந்து கொள்ள, புரிந்து கொள்ள, மனதில் இருத்திக் கொள்ள ஒவ்வொரு சிறு சிறு முயற்சியாகச் செய்து பார்க்கிறது. அதன் முயற்சிகளே அதற்கு ஆனந்தத்தை தருவதாக அமைகிறது. இந்த ஆனந்தம்தான் குழந்தையின் வெற்றி.

இப்படி ஒரு வெற்றியில் இருந்து மற்றொரு வெற்றிக்கு குழந்தை பயணிக்கிறது. இதனால் ஏற்படும் அனுபவப் பதிவுகளை மனதில் இருத்திக் கொள்கிறது. தன்னிடம் தன் மீது அதிக அன்பு செலுத்துவோரிடம் கொஞ்சி மகிழ்கிறது. அவர்களைப் பார்த்து புன்னகைக்கிறது. தாயின் தாலாட்டில் தன்னை மறந்து உறங்குகிறது. திரும்பத் திரும்ப ஒலிக்கும் இசைக்கோர்வை குழந்தையின் ஆழ்மனதில் ஓர் அமைதியை உருவாக்கி அதனிடம் முழுமையான மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.



குழந்தைகளின் உளப்பதிவுகள் ஆரம்பத்தில் பார்வை மூலமே உருவாகிறது. எனவே காட்சி பிம்பங்களை பலமுறை உற்றுப் பார்த்த பின்னரே குழந்தை அதை புரிந்து கொள்கிறது. அதற்கு எதிர்வினைவையும் புரிந்து கொள்ளவும் தொடங்குகிறது. இதனால் குழந்தைக்கு ஒழுங்கின் மீது மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டு விடுகிறது. ஒரு இடத்தில் ஒரு பொருளை வைத்து விட்டால் அந்த இடத்தில் அந்தப் பொருள் இருப்பதையே குழந்தையின் மனம் பதிவு செய்து கொள்கிறது.

அந்தப் பொருள் இடம் மாறும்போது குழந்தையின் மனப்பதிவில் குழப்பம் ஏற்படுகிறது. அதனால் உணர்ச்சிகளில் மாறுதல் நிகழ்கிறது. குழந்தை அந்தப் பொருளை அதே இடத்தில் வைக்கும் வரை அமைதி இழந்து அழுகிறது. பல்வேறு அறிவியல் சோதனைகள் மூலம் இந்த உண்மை கண்டறியப்பட்டுள்ளது. இந்த உண்மை நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.

பொதுவாகக் குழந்தைகள் ஒழுங்கற்றவர்கள் என்றும், அவர்களால் பொருட்களைச் சிதறடிக்கத்தான் முடியும் என்றும் பெரும்பாலான பெற்றோர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், குழந்தையின் ஒழுங்கமைவான



அகஉலகத்தில் நாம் நம் விருப்பத்திற்கேற்ப குழந்தையின் அனுமதியின்றி, அத்துமீறி அதனுள்ளே நுழைந்து விடுகிறோம். அதை அறியும்போது குழந்தைகள் தங்கள் ஒழுங்கு சீர்குலைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அழத் தொடங்குகின்றன. அல்லது அடம்பிடிக்கத் தொடங்குகின்றன. இதை நாம் உணர்வது இல்லை.

நம் குழந்தையின் அகமனதைப் பற்றி நாம் அறியாததால் "என்ன அட்டகாசம் செய்கிறது. என்ன சேட்டை செய்கிறது. பிள்ளையா இது" என்று அங்கலாய்த்துக் கொள்கிறோம். மொழி அறிவு இல்லாத பருவத்தில் குழந்தை தன் அதிருப்தியை அழுகையின் மூலமே வெளிப்படுத்துகிறது. அந்த அதிருப்தியின் காரணத்தை அறிய முடியாத அவசரத்திலோ, அகங்காரத்திலோ அல்லது பலவீனத்திலோ நாம் இருக்கிறோம்.

ஒழுங்கின் மீதான கவன ஈர்ப்பு குழந்தையின் மனதை உருவாக்குவதற்கான இயல்பான, அடிப்படைத் தேவையாக இருக்கிறது. இதையே தானே உருவாக்கிக் கொள்ளும் விளையாட்டுகளிலும், தன்னுடன் மற்றவர்கள் விளையாடும் விளையாட்டுகளிலும் எதிர்பார்க்கிறது. கையால் முகத்தை மூடிக் கொண்டு பிறகு திடீரென திறந்து உற்சாக ஒலி எழுப்பி கண்ணாமூச்சி விளையாடுகிறது.

ஒழுங்கு பற்றிய கூர்மையான உணர்ச்சியை இயற்கையிலேயே குழந்தை பெற்றிருக்கிறது. புறஉலகில் உள்ள ஒழுங்கு என்பது மட்டுமல்ல, அகவயமான தன் உலகிலும் இந்த ஒழுங்கை குழந்தை பாதுகாத்து வைத்திருக்கிறது. அதேநேரம் ஒழுங்கை நாம் உணர்வதுபோல் குழந்தைகள் உணர்வது இல்லை. ஏற்கனவே உருவாக்கிவிட்ட உலக ஒழுங்கு பற்றியே நம்முடைய கவனம் இருக்கிறது. ஆனால், குழந்தைகள் தங்கள் மனதில் படைப்பூக்கமான ஒரு ஒழுங்கைப் புதிதாக உருவாக்கிக் கொள்கிறது.

குழந்தைகளை பொருத்தமட்டில்





இது ஒன்றுமில்லாததில் இருந்து புதிதாக ஒன்றைப் பிரகாசிக்கச் செய்வதுமாக குழந்தை படைப்பின் உச்சத்தில் இருக்கிறது. நுண்ணறிவின் வளர்ச்சியினால்தான் குழந்தை நம் கண்ணுக்கு புலனாகாத அசையும் உயிரினங்களையும் அதாவது எறும்பு, பூச்சி, புழு ஆகியவற்றையும், அசையாத பொருட்களான தூசி, துரும்பு ஆகியவற்றையும் கண்டு ஆனந்தம் கொள்கிறது.

இவற்றை எல்லாம் உணராத பெரியவர்கள் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட கற்பனைகளில் மூழ்கி குழந்தையின் கவனிப்பை அலட்சியம் செய்கிறார்கள். குழந்தையின் நுண்ணறிவு வளர்ச்சியைப் பற்றி தெரியாததனால் இடையூறு செய்கிறார்கள். இதன் மூலம் குழந்தையின் அகஉலக வளர்ச்சியில் பெரும் பாதகத்தை ஏற்படுத்துகிறார்கள். இதனால் பிற்காலத்தில் குழந்தைகளின் ஆளுமைத்திறன்கள் பாதிக்கப்படுகின்றன.

குழந்தையின் மனமானது பெரியவர்களுக்குத் தெரியாத ஒரு ரகசியமாக இருக்கிறது. அவர்களுக்கு அதுவொரு மாயம் போலத் தெரிகிறது. குழந்தையின் ஒவ்வொரு நடத்தைக்கும் பின்னால் ஒரு காரணம் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தையின் ஒவ்வொரு எதிர்வினையையும் கண்டறிந்து கொள்ளும் போது குழந்தையின் மன உலகம் பற்றிய ஒரு புதிய புரிதல் ஏற்படுகிறது. அத்தகைய புரிதல் ஏற்படும்போது குழந்தையிடம் ஒரு ஆசிரியரைப் போல அதிகாரம் செலுத்திய நாம் குழந்தையின் மாணவர்களாகி விடுகிறோம்.

குழந்தைகள் தங்களுடைய கவனிப்பால் ஒவ்வொரு பொருளின் நுட்பமானப் பகுதியையும் உற்று நோக்குகின்றனர். தொட்டுப் பார்க்கின்றனர். முகர்ந்து உணர்கின்றனர். ருசித்துப் பார்க்கின்றனர். இதன் மூலம் அந்தப் பொருளின் எல்லாவித சூட்சுமங்களையும் அறிந்து கொள்ள முயற்சிக்கின்றன. அப்படி அறிந்து கொண்ட அனுபவங்களின் மூலம் தங்கள் மன உலகின் அடிக்கட்டுமானத்தைக் கட்டுகின்றனர்.

அற்பம் என்றோ, அற்புதம் என்றோ குழந்தைகள் உலகில் எதுவும் இல்லை. எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் தீராத

## குழந்தைகளை ஓடியாடி விளையாட வைப்போம்!

இந்தியாவில் உணவுப் பழக்கம் மாறி வருவதாலும், ஓடியாடி விளையாடுவது குறைந்து வருவதாலும் 20 சதவீத குழந்தைகள் குண்டாக இருப்பதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. எதிர்காலத்தில் இவர்களுக்கு சர்க்கரை நோய் மற்றும் இருதய நோய்கள் ஏற்பட்டு வாழ்நாள் குறையும் அபாயம் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கிறார்கள்.

உணவுப் பழக்கம், உடற்பயிற்சி உள்ளிட்ட அன்றாட செயல்பாடுகளில் இருக்கும் குறைபாடுகள்தான் சர்க்கரை நோய்க்கு முக்கிய காரணம். இது பெரியவர்களை



மட்டுமின்றி தற்போது சிறுவர்களையும் அதிகம் பாதிக்கிறது. இந்தியாவில் சராசரியாக 15 முதல் 21 சதவீத குழந்தைகள் குண்டாக இருக்கிறார்கள். துரித உணவு, ஜங்க்புட் அயிட்டங்களை குழந்தைகள் விரும்பி சாப்பிடுவதாலும், உடலுக்கு பயிற்சி அளிக்காமல் அதிக நேரம் உட்கார்ந்தே இருப்பதாலும் இந்த எண்ணிக்கை



பயணத்தில் குழந்தை பயணித்துக் கொண்டே இருக்கிறது. எவரிடத்தில் உற்சாகமின்மை இல்லையோ, விரக்தி இல்லையோ அவர்கள் முன்னேறிக் கொண்டே இருக்கிறார்கள். திரும்பிப் பார்ப்பதற்கு அவர்களுக்கு எந்த வருத்தங்களோ, துயரங்களோ இல்லை. படைப்பின் முழுசக்தியோடு அவர்கள் இயங்குகிறார்கள். அவர்கள்தான் குழந்தைகள்.

சோர்ந்து, வருந்தி, விரக்தியுற்று, கவலையின் வலையில் சிக்கி நம்முடைய எல்லா சக்தியையும் இழந்த நாம் குழந்தைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்கிறோம். குழந்தைகள் நம்மைப் பார்த்து சிரிக்கிறார்கள்.

ஆகவே குழந்தைகளின் அகமனதைப் புரிந்து கொண்டு அதன்படி நம்மை தயார்படுத்திக் கொள்ள நாம் தயாராவோம். அப்போதுதான் குழந்தையின் அழுகையையும், சிரிப்பையும் நம்மால் புரிந்து கொள்ள முடியும். குழந்தையின் அக உலகில் புகுந்து நாமும் குழந்தையாவோம். குழந்தையோடு குழந்தையாக கொஞ்சி மகிழ்வோம்.

-சுகன்யா.

## உள்ளத்தை உயர்வாக்கும் பொன்மொழிகள்!

துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்து விடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே.

உங்கள் நம்பிக்கையை பணத்தின் மீது வைக்காதீர்கள். பணத்தை நம்பிக்கையான இடத்தில் வையுங்கள்.

செய்து முடிக்கப்பட்ட மாபெரும் சாதனைகள் அனைத்தும் செய்ய முடியாதவைகள் என்று முதலில் பலரால் நிராகரிக்கப்பட்டவைகள் தான்.

நீங்கள் உங்களைச் சாதாரண மானவர்களாகக் கருத வேண்டாம். ஏனென்றால் இந்த உலகமே உங்களுடைய தேவைக்காக அல்லவா விரிந்து கிடக்கிறது.

செல்வத்தை வைத்துச் சென்ற தகப்பனைவிட, தொழில் கற்பித்துச் சென்ற தகப்பனே குழந்தைகளுக்கு அதிக பாதுகாப்பு அளித்தவன் ஆகின்றான்.

- லலிதாபாரதி ராமன், சென்னை.

---

தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

9 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 9 சதவீதத்தினர் தொப்பையுடன் இருக்கின்றனர். இளம் வயதில் தொப்பை விழுவது இன்சுலின் சுரப்பை நேரடியாக பாதித்து சர்க்கரை நோய்க்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. நகர்ப்புறங்களில் வசிக்கும் குழந்தைகளில் 68 சதவீதம் பேர் ஓடியாடி விளையாடுவது இல்லை. வெளியே விளையாடும் வாய்ப்பு கிடைக்காமல் கம்ப்யூட்டர் கேம், வீடியோ கேம் என்று அதிக நேரம் உட்கார்ந்தே இருக்கின்றனர்.

நமது பாரம்பரிய உணவுகள் குறைந்த கொழுப்பு உள்ளவை. உடலுக்கு ஆரோக்கியமானவை. நார்ச்சத்து அதிகம் உள்ளவை. ஊட்டச்சத்து நிறைந்தவை. இதிலிருந்து விலகிப் போகும் நகர்ப்புற குழந்தைகள் கொழுப்புச்சத்து, இனிப்பு அதிகம் உள்ள உணவுப் பொருட்கள், பாஸ்ட்புட், ஜங்க்புட் நிறைய சாப்பிடுகின்றனர். இதனால் குண்டாகி விடுகின்றனர். இவர்களுக்கு சர்க்கரை நோய், அதிக ரத்த அழுத்தம், இருதய நோய்கள் வரும் வாய்ப்பு அதிகம்.

இதன் காரணமாக இன்னும் 20 ஆண்டுகளில் சராசரி ஆயுள்காலம் குறையும் அபாயமும் இருக்கிறது என்று உணவு கட்டுப்பாட்டு மையத்தின் தலைவர் அனூப் மிஸ்ரா கூறுகிறார்.

ஆகவே குழந்தைகளை ஓடியாட விளையாட வைப்போம். நார்ச்சத்து நிறைந்த உடலுக்கு ஆரோக்கியமான, ஊட்டச்சத்து மிகுந்த, குறைந்த கொழுப்புடைய உணவுகளையே உண்ண வைப்போம். இதன் மூலம் குழந்தைகளின் ஆரோக்கியம் காப்போம்.

# வெற்றி ரகசியம்!



வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலையில் பல வெற்றி பெற்று சாதனைகள் புரிந்தவர்களிடம் "இந்த உயர்ந்த கவுரவமிக்க வெற்றியை எவ்வாறு அடைந்தீர்கள்? இதன் ரகசியம் என்ன'' என்று கேட்டால், "லட்சியத்தை அடையும் வரை தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருங்கள். இதுதான் வெற்றிக்கான ரகசியம்" என்பார்கள்.

இவ்வளவுதானா? இந்த எளிமையான வார்த்தைகளை ஏற்கனவே புத்தகங்களில் பலமுறை படித்த விஷயம்தான், புதிதாக ஒன்றுமில்லையே என நினைக்காதீர்கள்.

தொடர்ந்து பொறுமையாக படியுங்கள்...

ஒரு முறை முயற்சி செய்து தோல்வி அடைந்தீர்கள் எனில் மீண்டும் என்ன செய்தீர்கள்?

''மீண்டும் அதே முயற்சியை தொடர்ந்தேன். மீண்டும் தோல்விதான் கிடைத்தது."

இங்குதான் அனைவரும் தவறு செய்கின்றனர். நீங்கள் ஒரு முறை அல்லது இரு முறை முயன்று தோல்வி அடைந்தீர்களென்றால் நீங்கள் செய்யும் முயற்சி முறை அல்லது நீங்கள் செல்லும் பாதையில் தவறு இருக்கின்றது.

நீங்கள் ஒவ்வொரு முறை முயற்சி செய்யும் போது தோல்வி அடைந்த முறையையோ அல்லது முன்பு சென்ற பாதையிலேயே முயற்சி செய்து கொண்டே இருந்தால் நிச்சயம் நீங்கள் உங்கள் வாழ்க்கை முடியும் வரை தோல்வியைத்தான் தழுவுவீர்கள். வெற்றி கிடைப்பது அரிதுதான்.

உதாரணமாக தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார விளக்கை கண்டுபிடிக்க ஒரே இழையை வைத்து ஆராய்ச்சியை தொடர்ந்து செய்து கொண்டே வந்திருந்தால் நிச்சயம் நமக்கு மின்சார விளக்கு கிடைத்திருக்காது. அவர் கிட்டத்தட்ட 1000 வகையான இழைகளைக் கொண்டு தொடர்ந்து புதுப் புது முறையில் முயற்சி செய்ததினால் தான் இந்த மகத்தான வெற்றி அவருக்கு கிடைத்திருக்கின்றது.

இந்திய சுதந்திரம் பல வழிகளில் முயன்று அதாவது உண்ணாவிரதம், ஒத்துழையாமை, பல போராட்டங்கள், சத்யாகிரகம், சுதேசி இயக்கம் போன்றவையெல்லாம் கையாண்டு கடைசியில் 'அஹிம்சை' வழியில் தான் நாம் சுதந்திரம் அடைந்துள்ளோம். அதாவது நீங்கள் ஒவ்வொரு முறை முயற்சி செய்யும்போது நீங்கள் செய்த முயற்சியில் ஏதேனும் தவறுதல் இருக்கின்றனவா? என்று ஆராய வேண்டும். அப்படி எதிர்பார்த்தது நடக்கவில்லையென்றால் வேறு என்ன வழி? என்று சிந்திக்க வேண்டும்.

பிறகு அந்த வழியை எவ்வாறு தேர்வு செய்வது? எப்படி திட்டமிடுவது? யாரைக் கொண்டு அடைவது? என்பதை தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அதை பலமுறை படிக்க வேண்டும். அப்படி படிக்கும் போதே நீங்கள் செய்த தவறுகளும், அதை எப்படி திருத்தி செய்ய வேண்டும் என்ற முறையினையும் உங்களுக்கு தெளிவாக தெரியும்.

மீண்டும் முயற்சி! மீண்டும் ஒருவேளை தோல்வி அடைந்தால் மீண்டும் நீங்கள் செய்த முறை அல்லது பாதையினை சற்று மாற்றி அமைத்து இடைவிடாது முயற்சி செய்யும்போது உங்கள் தோல்வி இருள் மறைந்து வெற்றி ஒளி படர ஆரம்பிக்கும். இந்த முயற்சியின் தோல்வி தான் பல துறைகளில் வெற்றி பெற உதவிடும் படிக்கட்டு.

மேலும் விளையாட்டில், அரசியலில், கல்வியில், தொழிலில், ஆன்மிகத்தில், அன்றாட வேலைகளில் பலர் இந்த வகையில் தான் முயற்சி செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். நீங்களும் முயற்சியின் பல முறைகளை பின்பற்றி வெற்றி பல அடையுங்கள்.

# முத்துச் சிதறல்

## உள்ளத்தை நடுங்க வைத்தது!

கண்களினால் தூண்டில் போடும் பெண்கள் உண்டு என்பார்கள். அதனை உண்மையாக்கியது பெண்மணி மாருதி கை வண்ண அட்டைப்படம்.

**- ஆர்.அமிர்தரூபன். குஞ்சன்விளை.**

தலையங்கத்தைப் படித்தபோதும் சரி, தர்மபுரியில் நடைபெற்ற கோர நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் பார்த்தபோதும் சரி... நாம், 21–ம் நூற்றாண்டில்தான் வாழ்கிறோமா? என எண்ணி உள்ளத்தை நடுங்க வைத்தது.

**- செல்வமணி தியாகராசன். கொரநாட்டுக்கருப்பூர்.**

மருத்துவர்கள் கொசு உற்பத்தி செய்து உலவவிட்டு நோயாளிகளை அதிகரிக்கச் செய்வதன் மூலம் வருமானப் பெருக்கம் ஏற்படும். சாதிகளை வைத்து கட்சி நடத்துவதன் மூலம் அக்கட்சிகளுக்கு வாக்கு வங்கி விரிவடையும். ஷூரவ ஆசிரியரின் இவ்வுணர்வுகளை 'பெண்மணி' வாசகர்கள் பகிர்ந்து கொள்வது திண்ணம்.

**- அ. சம்பத். திருச்சி.**

'வாழ்க்கையைக் கொண்டாடுவோம்' என்று டயோஜினஸ், அலெக்சாண்டர் உரையாடல்களின் வாழ்வுத் தத்துவங்களைத் தொகுத்தளித்த விதம் வாழ்நாள் முழுதும் வழிகாட்டுவதாக அமைந்தது.

**-ஆர்.ஜி.பிரேமா பாலன். மணவிளை.**

வைகுண்ட ஏகாதசி தருணத்தில் சூடிக்கொடுத்த சுடர்கொடி ஆண்டாளின் பாக்களை நினைவுபடுத்தி அரங்கமா நகர் உளான் பெருமையையும் நினைவு கூறும் லட்சுமி ராஜரத்னத்தின் 'கண்ணனின் காதலி' கட்டுரை அற்புதம்.

**-ஜி.சவுந்தர். வடபழனி.**

ஆலயங்களின் நகரமாக விளங்குகின்ற அற்புதமான சுற்றுலா தலமான 'அல்மோரா'வுக்கு எங்களை அழைத்துச் சென்று அரியதோர் ஆலயங்களை தரிசிக்க வைத்த கட்டுரை பனிக்காலத்தில் ஒரு பரவச யாத்திரை அனுபவமாக இருந்தது.

**-த.சத்தியநாராயணன். அயன்புரம்.**

## குடியின் கொடுமை

மகேஷ்வரனின் 'பசி' சிறுகதையை வாசித்ததும் மனம் கஷ்டத்துக்குள்ளாகி கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. குடியின் கொடுமையை தாங்க முடியாத பூச்செண்டும், அவளது குழந்தைகளும் பட்டினியாய் கிடப்பதுபோல இன்னும் எத்தனை குடும்பங்களோ? ஜெயராஜின் ஓவியமும் தத்ரூபம்.

**-ம.வசந்தா. கச்சிராயபாளையம்.**

இசை உலக மேதை அனுராதா கிருஷ்ணமூர்த்தியின் நேர்காணல், சங்கீத உலகில் சாதிக்கத் துடிக்கும் சிறுவர், சிறுமிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

**-பி.கம்பர் ஒப்பிலான். கோவிலம்பாக்கம்.**

இசையரசி அனுராதா கிருஷ்ணமூர்த்தி தியாகராஜசுவாமிகளின் பரம்பரையில் வந்தவரா? சிறப்பு நேர்காணல் அவரது இசை போலவே சுகமான ராகமாய் இருந்தது.

**-மயிலை கோபி. சென்னை.**

மின்னஞ்சல் என்ற தகவல் தொழில்நுட்பத்தின் கொடையினால், வாழ்த்து அட்டைகளின் மூலம் வாழ்த்துகளை பரிமாறி வந்த காலம் மலையேறி, வாழ்த்துமடல்களின் முழு வளர்ச்சியையும் ஓரங்கட்டிவிட்டு, மின்னஞ்சல் வாழ்த்துமுறை கலாசாரம் வெகு விரைவாகப் பரவி வருவதன் காரணமாக, வாழ்த்து அட்டைகளுக்கு விடைகொடுத்து அனுப்பிக் கொண்டிருக்கும் கொடுமைதனையை 'பெண்மணி' படம்பிடித்துக் காட்டியிருந்தது.

**-கலைச்செல்வி வளையாபதி. தோட்டக்குறிச்சி.**

'திருமணத் திருக்கோவில்' பகுதியில் அவனி நரசிம்மர் குறித்தத் தகவல்கள் அறிந்தோம்.

**-எஸ்.வளர்மதி. கொட்டாரம்.**

இந்த நூற்றாண்டிலுமா ஆதிவாசிகள்? வியப்புடன் படித்து பிரமித்துப் போனேன்!

**-மஞ்சுளா பாய். வியாசர் காலனி.**

மலாலாக்கள் போல பல நல்ல மனதிடமுடைய பெண்கள் தோன்ற வேண்டும், கல்வி கற்க வேண்டும்.

**-ஆர்.ஜெயலட்சுமி. முகலிவாக்கம்.**

உடலைப் பார்த்து நோயை அறிய கொடுத்திருந்த வழிகள் அத்தனையும் சுலபமாக எல்லோரும் கடைப்பிடிக்கும் விதத்திலும் அமைந்துள்ளது. அதை பின்பற்றி நாம் அதன்படி நடந்தால் வந்த வியாதி கூட தானாக போய்விடும்.

**-ரா.ராஜேஸ்வரி. மேற்கு மாம்பலம்.**

## காதல் நேசம்

காதலின் பரிணாம வளர்ச்சி, மனதில் புழுங்கடித்து அன்பும், பாசமும் வீற்றிருக்கிற காதல் நேசங்கள் இணைந்த போராட்டத்தை விஜயாலயன் நாவல் உணர்த்தியது.

**-கோ.சகுந்தலா. கீழ்வேளூர்.**

இளம் விதவையான தன் அக்காவின் நல்வாழ்வுக்காகத் தன் காதலனையே விட்டுக் கொடுக்க வந்த வினோஜிதாவின் தியாகம் பாராட்டத்தக்கது.

**-கிரிஜா நரசிம்மன். சென்னை.**

காதல் என்பது அழகிய வலை. அந்த வலையில் சிக்கியவர்கள் தப்பிப்பதில்லை என்பதை 'கண்கள் மெல்ல காதல் சொல்லும்' நாவல் மூலம் நிரூபித்து விட்டார் விஜயாலயன்.

**-எஸ்.விஜயலட்சுமி. ஆதம்பாக்கம்.**

"நீ சந்தோஷமா இருந்தால்... நானும் சந்தோஷமாக இருப்பேன்" என வினோஜிதாவிடம் பிரனேஷ் கூறுவதான அந்த ஒரு வார்த்தை மூலம் உண்மையான காதலனின் உணர்வுகளை கதாசிரியர் தெளிவாகவே எடுத்துக் காட்டியிருந்தார். பாராட்டுகள்!

**- போடி எஸ்.சையது முகம்மது. சென்னை.**



# இசைக்கு வானமே எல்லை

## —ஆதிரா

'வயலின் இளவரசி' என்று போற்றப்படுபவர் ஆதிரா. இளவயதிலேயே கின்னஸ் சாதனை உட்பட பல சாதனைகளையும் பல விருதுகளையும் பெற்றவர். நான்கு பரம்பரையாக இசையை மூச்சாகக் கொண்டு வாழ்ந்து வரும் குடும்பம் இவரது குடும்பம். இவரது தாத்தா ஸ்ரீகோபாலப்பிள்ளை, பிரபல சங்கீத வித்வான். இவரது தந்தை கிருஷ்ணப்பிள்ளை வாய்ப்பாட்டிலே தேர்ச்சி பெற்றவர். இந்த குரு சிஷ்ய பரம்பரை, மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சதர் காலத்திலிருந்து துவங்குகிறது. வயலினை கர்நாடக இசைக்கு முதலில் பயன்படுத்திய பாலு தீட்சதரும் இவர்களது பரம்பரை குருதான்.

தனது இசைப் பயணம் குறித்து ஆதிரா சொல்கிறார்:

"என்னுடைய இரண்டு மூன்று வயதிலிருந்தே என் அப்பா தனது மாணவர்களுக்கு சங்கீதம் கற்றுக் கொடுக்கும்போது கவனித்து பின்னர் நான் அப்படியே பாடுவேன். சங்கீதத் துறைக்கு அப்பா என்னை வற்புறுத்த விரும்பவில்லை. ஆனாலும் என் சங்கீத ஆர்வத்தைப் பார்த்து என் ஆர்வப்படியே நடக்க இசைந்தார். அப்போதிலிருந்தே ஸ்வரங்களைப் பற்றிய ஞானம் இயற்கையாகவே அமைந்திருந்தது.

ராகங்களில் ஸ்வரப் பிழை இருந்தால் நான் சொல்லுவேன். ராகங்களை அடையாளம் காண்பேன். அதனால் அதுவரை வாய்ப்பாட்டிலேயே இருந்த எனக்கு வாத்தியங்களை இசைத்தால் நன்றாக பிரகாசிக்க முடியும் என அவர் நம்பினார். நான் பாடிக் கொண்டே வயலின் வாசித்துப் பழகுவேன். வீணை, புல்லாங்குழல் இவற்றைவிட வயலின் வாசிப்பதற்குக் கடினமான வாத்தியம். ஆனாலும் அது ஏனோ எனக்கு நன்றாக வந்தது.

எட்டாவது வயதில்தான் முறையாக வயலின் பயிற்சி பெற ஆரம்பித்தேன். எனது குரு ஆரம்பப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போதே நான் கீர்த்தனைகள் வாசிக்க ஆரம்பித்து விட்டேன்.

எனது முதல் கச்சேரி கேரளாவில் திருமலையில் உள்ள ஒரு கிருஷ்ணன் கோவிலில் நடந்தது. அப்போது எனக்கு ஒன்பது வயது. இரண்டரை மணி நேரம் முழுக் கச்சேரி. பின்னர் என் பெற்றோர்களுக்கு நான் இசையில் சாதனை படைப்பேன் என்ற நம்பிக்கை வந்தது.

பின்னர் கேரளா கோவில்களில் நடக்கும் உற்சவ நிகழ்ச்சிகளின்போது பல இடங்களில் எனது கச்சேரியும் இருக்கும். வெளி இடங்களிலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் பல பிரபல பாடகர்கள் வருவார்கள். அவர்களோடு பாடும் பெருமை கிடைத்தது. அவர்கள் இசையைக் கேட்கும் சந்தர்ப்பமும் அமைந்தது.

கேரளாவில் கோவில் உற்சவ சமயங்களில் மட்டுமே கச்சேரிகள்



நடக்கும். தனியாக சபாக்கள் கிடையாது. சபாக்களும் டிசம்பர் இசைவிழாவும் தமிழ்நாட்டுக்கே உள்ள தனிப் பெருமை. கேரளாவில் நன்கு பாடும் பாடகர்கள் கூட அதனால்தான் 'சென்னையிலேயே தங்கி விடுகிறார்கள்.

அதன் பிறகு நிறையக் கச்சேரிகள். நான் ஒன்பதாவது படிக்கும்போது தேசிய பாலஸ்ரீ விருது கிடைத்தது. ராஷ்டிரபதி பவனில் அப்போது முதல்பெண்மணியாக இருந்த உஷா நாராயணன் கொடுத்தார்கள். நாடு முழுவதிலுமிருந்து தேர்வு நடத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்குத் தரப்படும் விருது இது. அங்கேயே ஒரு கச்சேரியும் செய்தேன். அப்போது எனக்கும் 'இந்தியாவின் இசை ரத்தினம்' என்ற பட்டம் கொடுத்தார்கள்.

அதனால் அயல்நாடுகளில் ரஷ்யா, கசகிஸ்தான், கிர்கிஸ்தான் என்று ரஷ்ய நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது இந்திய-ரஷ்ய கலாசார உறவுகள் அதிகமாக இருந்தது. ரஷ்யாவில் இருப்பவர்கள் வயலின் வாசிப்பிற்குப் பெயர் போனவர்கள். அவர்கள் ஸ்வரப் புத்தகங்கள் முன்னேயிருக்க அதைப் பார்த்து நின்று கொண்டே வாசிப்பார்கள். அவர்களுக்கு நான் உட்கார்ந்து கொண்டு வயலின் வாசிப்பதைப் பார்ப்பதே அதிசயமாக இருந்தது.

அங்கு ஒரு இந்தியர் கூட கிடையாது. மொழியும் தெரியாது. ஆனால் இசைக்கு மொழி தேவையில்லையே. கேமராக்கள் நாலைந்து கோணங்களில் என்னையே பார்த்துக் கொண்டிருந்தன. நமது இசையை மிகவும் ரசித்தார்கள். இந்தியாவைப் பற்றி, கோலிவுட் பற்றி பல கேள்விகள் கேட்டார்கள். இந்திய கலாசாரத்திற்கு அவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள். எப்படி 'நோட்ஸ்' பார்க்காமல் உட்கார்ந்து கொண்டே இரண்டரை மணி நேரம் வாசிக்கிறீர்கள் என்றார்கள்.

கர்நாடக இசையையும் அவர்கள் முதல் முறை கேட்கிறார்கள். 28 நாடுகளிலிருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருந்தார்கள். அதில் நான் ஒரே இந்தியன். பெரிய பெரிய மேதைகள் வந்திருந்தார்கள். அவர்கள் பேசுவது புரியாது. இந்தியா என்று



சொல்வது மட்டும் தெரியும். உடனே பலத்த கைதட்டல்கள் இருக்கும். இந்தியாவின் மேல் அவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள்.

பிறகு நான் வாசித்த வயலின் வாசிப்பு பற்றி விவரித்துப் பேசச் சொன்னார்கள். நமது இசையில் ஒரு கட்டுப்பாடு இருக்கும். ஒரு ராகம் என்றால் அதற்குள்ள ஸ்வரங்களிலிருந்து விலகாமல் ஒரு சுவற்றுக்குள் விளையாடுவதுபோல ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்கள் சங்கீதத்தில் அந்தக் கட்டுப்பாடு இல்லை.

இளவயதில் நமது இசை பற்றிய ஒரு செயல்முறை விளக்கம் கொடுத்தது நானாகத்தான் இருக்கும். எனக்கு அந்த அனுபவம் புதிதாக இருந்ததுதான்.

கர்நாடக சங்கீதத்தில் வயலின் என்பது பற்றிப் பேச வேண்டும். கச்சேரிகளின் ஆரம்பத்தில் பாடப்போவது என்ன ராகம்,

என்ன தாளம் என்பது பற்றி சொல்ல வேண்டும். ஒரு ராகம் எடுத்துக் கொண்டால் அதில் ஸ்வரங்கள், நுணுக்கங்கள் பற்றிக் கேட்பார்கள். பக்கவாத்தியத்திற்கு தபலா ஏற்பாடு செய்திருந்தார்கள். சிலநேரங்களில் தனியாகவே பக்கவாத்தியம் இல்லாமல் வாசிக்க வேண்டும். ஒவ்வொரு ராகம் பற்றியும் விளக்கங்கள் கேட்பார்கள்.



பத்தாவது வகுப்பிற்குப் பிறகு சென்னை வந்து விட்டோம். இங்கு புல்லாங்குழல் மேதை என்.ரமணியிடம் கர்நாடக இசையும், வி.எஸ்.நரசிம்மனிடம் (இளையராஜா குழுவில் இருப்பவர்) மேற்கத்திய இசையும் பயின்றேன். இசைப் பேராசிரியர் ஜானகிராமன் மற்றும் டி.ஆர். சுப்பிரமணியம் ஆகியவர்களிடமும் சேர்ந்து இசைப் பயிற்சி தொடர்ந்தது. நான் 11–வது வகுப்பு படிக்கும் போதுதான் அப்துல்கலாம் ஜனாதிபதியாக இருந்த சமயம் இரண்டாவது முறையாக ராஷ்டிரபதி பவனில் நிகழ்ச்சி நடத்த அழைப்பு வந்தது.

அதற்கு முன்னால் திருவனந்தபுரத்தில் நடந்த சூர்யா நாட்டிய இசை விழாவில் நான் கலந்து கொண்டேன். அது ஆசியா முழுவதிலும் 365 நாட்களும் நடக்கும். மிகப் பெரிய விழா. வருஷா வருஷம் விழா நடக்கும்போதும் நான் அங்கு வயலின் வாசிக்க வாய்ப்புத் தருவார்கள். அந்த விழாவில் ஜேசுதாஸ் போன்ற பிரபல இசை மேதைகளெல்லாம் பாட வருவார்கள். அங்குதான் நானும் வயலின் வாசிக்க வாய்ப்புக் கிடைத்தது. அப்போது நீண்ட நேரம் வாசிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அந்தமுறை எனது தாத்தாவுக்கு ஒரு காணிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும் என்பது என் எண்ணம்.

கொஞ்சநேரம் கூட வாசிப்போம். முதலில் 24 மணி நேரம். பிறகு 32 மணி நேரம் என்று தொடர்ந்து வாசித்தேன்.

கின்னஸ் சாதனை பண்ணுவதென்றால் முன்னமே அதன் நிறுவனத்திடம் ஒப்புதல் வாங்க வேண்டும். இந்த விழாவின் டைரக்டராக இருந்த கிருஷ்ணமூர்த்தியிடம் கேட்டபோது, 'இதுமாதிரியான சாதனை புதிதாக இருக்கிறது. எங்களுக்கு ஒரு வாரம் அவகாசம் கொடுங்கள்' என்று சொன்னார்கள்.

கின்னஸ் சாதனைக்கென்று தனி விதிமுறைகள் உண்டு. தொடர்ந்து வாசிக்க வேண்டும். பார்வையாளர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு எட்டு மணிநேரத்திற்குப் பிறகு 15 நிமிஷம் ஓய்வு. ஆனால் அந்த ஓய்வு நேரத்தைக் கடைசியில் சேர்த்து முழுதுமாக வாசித்துத்தான் சாதனை அடைய முடியும். அப்போது சாதனை நிகழ்த்துவோம் என்ற முழு நம்பிக்கையெல்லாம் கிடையாது. கின்னஸ் விதிமுறைப்படி செய்து பார்க்கலாம் என்றுதான் முயற்சி செய்தேன். அதற்குச் சான்றாக நிகழ்ச்சியின் முழு வீடியோ அனுப்ப வேண்டும். பத்திரிகைச் செய்திகள் ஆதாரமாக இருக்க வேண்டும். சாட்சியாக இருந்தவர்களின் அறிக்கை வேண்டும். பல மந்திரிகள் நிகழ்ச்சிக்கு சாட்சியாக இருந்தார்கள். பிறகு பார்வையாளர்கள் குறிப்பேடு. கிட்டத்தட்ட 20,000 ஆயிரம் பேர்கள் அந்தக் குறிப்பேட்டில் பதிவு செய்திருந்தார்கள்.

கின்னஸ் சாதனை நிகழ்ச்சிகளில் இந்த மாதிரி தனி இசை நிகழ்ச்சியில் சாதனை நிகழ்த்துவது என்பது இதுவே முதல் முறை. இதுவரை குழுவாகப் பாடி சாதனைகள் நடந்திருக்கின்றன. இதுதான் முதல்முறையாக தனி வயலின் இசைக் கச்சேரி. நான் இந்த சாதனையைச் செய்து முடித்தது கடவுளின் அனுக்கிரகம்தான்.

வயலினில் சிறு நரம்பு அறுந்திருந்தாலும் அல்லது கையில் வாசிக்கும் போது

'சங்கராந்தி' என்று வழங்கப்படும் பொங்கல் தினம் ஒரு புண்ணிய தினம். அன்றுதான் ஆதிசங்கரர் சன்னியாசம் மேற்கொண்டார். அன்றைய தினம் எள்ளையும் வெல்லத்தையும் சேர்த்து இனிப்புப் பண்டம் தயாரித்து வழங்குகிறோம். 'அன்பு' என்ற இனிப்பும், 'எள்' என்ற சிநேக உணர்வும் அன்று ஒன்றுபடுகிறது. இனிய நட்புணர்வை எல்லோருடனும் வளர்த்துக் கொள்வதே பொங்கல் பண்டிகையின் சிறப்பாகும்.

– டி.ஜோதிபாய், காஞ்சிபுரம்.



சின்ன வெட்டு ஏற்பட்டாலும் இது நிகழ்ந்திருக்க முடியாது. அதிலும் நேரம் போகப் போக எனது வயலின் வாசிப்பின் கதியும் அதிகமாயிற்று. பக்கவாத்தியக்காரர் கூட இவ்வளவு துரித கதி வேண்டாம் என்று சொன்னாலும், என்னுள் ஒரு சக்தி, ஏதோ ஒரு வேகம், அது நிகழ வேண்டும் என்றிருந்தது. நிகழ்ந்து விட்டது.

கின்னஸ் சாதனைக்கு பணமுடிப்பு எதுவும் இல்லை. ஆனாலும் வயலின் இசையில் உலகிலேயே சாதனை படைத்த ஒருவர் என்ற பெருமை, அதன் மதிப்பு பிறகு நான் பல இடங்களுக்குச் செல்லும்போதுதான் புரிந்தது.

அதற்குப் பிறகுதான் அப்துல் கலாமின் 74–வது பிறந்த நாளுக்காக வந்த அழைப்பு. நான் நினைத்தே பார்க்கவில்லை. அவர் எவ்வளவு பெரிய மனிதர்! அவருக்கு முன்னால் வாசிக்க வாய்ப்பா? என்று பிரமிப்பாக இருந்தது. அப்துல் கலாமுக்கு கர்நாடக சங்கீதம் நன்றாகத் தெரியும். இந்து கலாசாரத்தை மிகவும் மதிப்பவர். பகவத் கீதை படிக்கிறார். ஆனாலும் அவ்வளவு எளிமையானவர். அவர் முன்னால் அவரது பிறந்த நாளுக்கு வாசிக்க வாய்ப்பு கிடைத்தது மிகப் பெரிய பாக்கியம்.

அதிலும் பல இசைத்துறையைச் சேர்ந்த பிரபலமானவர்கள் வந்திருந்தார்கள். என்னைத்தான் முதலில் வயலின் வாசிக்கச் சொன்னார். அவருக்குப் பிடித்த ஸ்ரீ ராகமும் இன்னும் சில ராகங்களும் வாசித்தேன். பிறகு அவர் என்னை பக்கத்தில் கூப்பிட்டு சொன்ன வார்த்தைகளை நான் என் உயிருள்ளவரை மறக்க மாட்டேன். 'இதுதான் எனது பிறந்தநாளுக்கு கிடைத்த மிகப் பெரிய பரிசு' என்று அந்த மகாமேதை சொன்னபோது, மெய்சிலிர்த்தது.

அங்கு எங்களுக்கு என்று தங்க ஒரு பெரிய வசதியான கூடம், தனி சமையற்காரர், கேட்டதைச் செய்ய ஒரு பணியாளர் என்று எல்லாமே அதிசயமாக இருந்தது. கலாம் எங்களுக்கு அவரே தட்டுக்களைக் கொடுத்து பரிமாறச் செய்வார். தான் ஒரு ஜனாதிபதி என்ற எண்ணமே இல்லாததை அவரிடம் பார்த்தோம்.

அதற்குப் பிறகு கல்லூரியில் படிக்கும்போது பண்டிட் ஜெஸ்ராஜ் நடத்தும் இந்திய இசைக் குழுவின் (இந்தியன் மியூசிகல் அசோசியேஷன்) போட்டியில் வென்றபோது மறுபடியும் அப்துல் கலாம் தான் பரிசளிக்க வந்தார். அவ்வளவு பெரிய மனிதர் என்னை நினைவு வைத்துக் கொண்டு 'ஆதிராவா, வா வா' என்று மேடையில் கூப்பிட்டதை என்னால் மறக்க முடியாது.

நான் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை, திருவனந்தபுரம் மனநலம் குன்றியவர்களுக்கான மருத்துவமனைகளில் சென்று அவர்களுக்காக வாசித்திருக்கிறேன். இந்த வாசிப்பினால் அவர்களுக்கு எந்த அளவு பயன் இருக்கிறது என்று அவர்கள் ரத்த அழுத்தத்தை சோதித்துப் பார்ப்பார்கள். புற்றுநோயின் இறுதிக் கட்டத்திற்குச் சென்று மீண்டுவந்த ஒரு பெண்மணி என்னை 'குறை ஒன்றுமில்லை' பாடலை வாசிக்கச் சொல்லிக் கேட்டார். அவர் புற்றுநோய்க்காக கீமோதெரபி எனும் மிகுந்த வலியைக் கொடுக்கும் சிகிச்சை பெறும்போது வாய்விட்டு அழுவாராம்.

நான் வாசித்தபிறகு அவர் கண்ணீர் விட ஆரம்பித்தார். மகிழ்ச்சியில்





வந்த ஆனந்தக் கண்ணீர் அது. இசை அதுவும் காபி, பகுதாரி போன்ற ராகங்கள் மனதிற்கு அமைதி அளிக்கின்றன. அந்த நேரத்தில் தங்கள் வலியை மறப்பதாகச் சொல்கிறார்கள். நாங்கள் அவர்களையும் பாடச் சொல்வோம். அவர்கள் பஜன் பாடுவார்கள்.

நோயினால் துன்புறுபவர்களுக்கு இசையினால் மகிழ்ச்சி தர முடியும் என்ற நம்பிக்கையை இது தருகிறது. தொடர்ந்து இந்தச் சேவையை முதியோர் இல்லம் போன்று பல சமூக சேவை நிறுவனங்களில் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்.

கர்நாடக இசைக் கச்சேரிகள் செய்வதோடு பரிசோதனை முறையாக உலக இசையைக் கலந்து இசை அமைத்து வருகிறேன். கித் பீட்டர் என்ற பேஸ் கிதார் மேதையோடு ஜாஸ் இசை செய்திருக்கிறேன். இது இந்திய இசையுடன் மற்ற நாட்டுக் கலாசார இசையைக் கலந்து தரும் சோதனை முயற்சி.

இசைக் கச்சேரிகளை தவிர பல பெரிய கம்பெனிகள் என்னை இசை நிகழ்ச்சிக்கு அழைக்கிறார்கள். அங்கே வெளிநாட்டுக்காரர்கள் வருகை தருவதால் கர்நாடக இசையுடன் கலந்த உலக இசைக்கு அவர்களிடம் வரவேற்பிருக்கிறது. இசைக்கு மொழி தேவையில்லை.

மற்ற மேற்கத்திய சங்கீதம், இந்துஸ்தானி சங்கீதம் எல்லாமே கர்நாடக இசை தெரிந்திருந்தால் கைவந்த கலையாகி விடும். நமது பாரம்பரிய கர்நாடக இசை ஒரு கடல். எத்தனை ராகங்கள் இதில் இருக்கின்றன? மனோதர்மத்திற்கு அதிக இடம் தருவது கர்நாடக இசைதான். மற்றவையெல்லாம் குறுகிய வட்டத்தில்தான் இருக்கும்.

கேரளாவில் நான் இருந்தபோது எப்போதாவதுதான் விழாக்களில் பாடுவதற்கு தமிழ்நாட்டிலிருந்து பெரிய வித்வான்கள் வருவார்கள். அதுவும் வருஷத்திற்கு ஒரு முறை. அப்போது விட்டுவிட்டால் அடுத்து எப்போது கேட்போம் என்று தெரியாது. ஒருமுறை டி.என்.சேஷகோபாலனின் கச்சேரி கேட்பதற்காக திருவனந்தபுரத்திலிருந்து திருச்சூருக்குப் போனேன்.

சென்னையைப் போல் இசைப் பயிற்சிக்கு வேறு இடம் கிடையாது. பல அனுபவம் பெற்ற வித்வான்கள் பாடுவதைக் கேட்டு நம்மை உயர்த்திக் கொள்ள முடியும். அதற்குச் சென்னைதான் சிறந்த இடம்.

சங்கீதத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டு விட்டோம் என்று சொல்லவே முடியாது. அதற்கு வானம்தான் எல்லை. சிலபேர் 'நான் பத்து வருஷம் சங்கீதம் கற்றுக் கொண்டு விட்டேன்' என்று சொல்லும்போது எனக்கு சிரிப்புத்தான் வரும். ஆயுள் முழுதும் கற்றுக் கொண்டாலும் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது" என்று சொல்கிறார் இசையே சுவாசமாகக் கொண்ட ஆதிரா.

சமீபகாலத்தில் அவர் வாங்கிய பட்டம் சி.என்.என்.ஐ.பி.என். கொடுத்த இளம் இந்தியத் தலைவர் என்ற பட்டம். இதுவரை அரசியல், விஞ்ஞானம் போன்ற துறைகளுக்கே கொடுக்கப்பட்ட இந்த விருது முதல் முதலாக இசைக்கு கிடைத்திருக்கிறது என்று சொன்ன ஆதிரா, காஞ்சி காமகோடி பீடத்திலும் பாடி நாதமணி விருதை பெற்றிருக்கிறார்.

"ஆதிரா ஒரு பிறவி வயலின் மேதை" என்று டாக்டர் எம்.பாலமுரளி கிருஷ்ணா பாராட்டி புகழ்ந்திருப்பது ஆதிராவுக்கு சாலப் பொருத்தமே.

-டி.எஸ்.பத்மநாபன்.

**பொங்கல் காதரிசி!**

பொங்கல் அன்று காதரிசி எனப்படும் வெல்லம் கலந்த பச்சரிசியை திருவிளக்கின் முன் படைப்பது வழக்கம். பச்சரிசியை ஊறவைத்து, அதில் பொடித்த வெல்லம், ஏலக்காய், பிசைந்த வாழைப்பழம் ஆகியவற்றை கலந்து செய்வதே இந்த காதரிசி.

குழந்தைகளுக்கு முதன் முதலாக காது குத்தும் சமயத்தில் இந்த அரிசியை உறவினர்களுக்கு கொடுப்பார்கள். இதனால் இதற்கு 'காதரிசி' என்று பெயர். 'காப்பரிசி' என்றும் இதை அழைப்பார்கள்.

– ஜெயலட்சுமி கோபாலன்,
சிட்லபாக்கம்.

# அழுகைக் குறைக்கும் அழுகை!





பேராசிரியை ப.பானுமதி

பெண்கள் தாங்கள் நினைத்ததைச் சாதித்துக் கொள்ள பயன்படுத்தும் ஒரே ஆயுதம் இதுதான். உப்பு கரிக்கும் என்றாலும் பெண்கள் இந்த அஸ்திரத்தைப் பயன்படுத்தி விட்டார்கள் என்றால் எப்பேர்ப்பட்ட கொம்பனாக இருந்தாலும் தப்பிக்கவே முடியாது. கணவன் தும்மலில் தொடங்கி வாங்கும் கம்மல் வரை அழுது அழுது சாதிக்கும் அருங்குணம் அவள் குணம். ஆம்.

உண்ணும் வேளையில் கணவன் தும்முகிறான். மனைவி தலையில் தட்டி வாழ்த்திய அதே வேகத்தில் அழத் தொடங்கி விடுகிறாள். (தும்மியவரை 'நூறு' என்றோ 'சிரஞ்சிவீ என்றோ 'தீர்க்க ஆயுள்' என்றோ வாழ்த்துவது தமிழர் மரபு. ஆகையால் வாழ்த்தி விட்டு, "உம்மை நினைக்க வேண்டிய நான் இங்கிருக்க, யார் உம்மை நினைக்கிறார்கள், தும்மல் வருகிறதே?" என்று அழத் தொடங்கி விடுகிறாள்.) அவளை சமாதானப்படுத்தி இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறது, அவனுக்கு.

மறுநாள் அதே உண்ணும் வேளையில் மீண்டும் வந்து விடுகிறது அதே தும்மல். கூடவே அவனுக்கு, நேற்றைய நிலை வந்து விட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் வந்து விடுகின்றது. அதனால் அவன் பெரும்பாடு பட்டு தும்மலை அடக்கிக் கொள்கிறான். அன்றும் அழத் தொடங்கி விடுகிறாள் தலைவி. "ஏன் அழுகிறாய்?" என்று அவன் கேட்க, "நிச்சயமாக உங்களுக்கு யாரோ ஒருத்தி உள்ளாள். அது எனக்குத் தெரியக் கூடாது என்றுதான் வந்த தும்மலை அடக்கிக் கொண்டீர்கள்" என்று கூறி தொடர்கிறாள் அழுகையை. அன்றும் முந்தைய நாள் நிலை. அதுமட்டுமா?

மறுநாள் அவன் எல்லா கடவுளையும் வேண்டிக் கொண்டு உணவு உண்ண வந்து அமர்கிறான். நல்லவேளையாக அன்று அவனுக்குத் தும்மல் வரவில்லை. ஆனால் அன்று அவளுக்குத் தும்மல் வருவது போல இருக்கிறது. வராது நின்று விடுகிறது. அன்றும் அழுகை. அவன் இன்று என்ன பாடுபட வேண்டுமோ என்று அஞ்சிக் கொண்டே, "இன்று என்னம்மா ஆச்சு?" என்று கேட்கிறான். அவளோ "என்னை நினைப்பது போல நினைத்து நினைக்காது விட்டீர்களோ" என்று அழுதாளாம்.

இது ஏதோ கதை அல்ல. இதை நானும் சொல்லவில்லை. திருவள்ளுவர் கூறுகிறார். திருவள்ளுவரின் தலைவி இப்படிப்பட்டவள். இப்போது அவள் ஏன் அழுதாள்? எப்படி அழுதாள் என்பதில்லை ஆய்வு. இப்படி தும்மலுக்கும் இருமலுக்கும் அழும் பெண்களை ஆண்களுக்குப் பிடிக்குமா? என்பதே இன்றைய ஆய்வு.

கண்டிப்பாக பிடிக்காதுங்க.. இது நமக்குத் தெரிந்ததுதானே. ஆனாலும் ஆய்வு செய்து சொன்னாத்தானே நாம் நம்புவோம். அடக்கருமமே.... இதையும் ஆய்வு செய்து சொல்லி இருக்கிறார்களா என்று கேட்காதீர்கள். ஆம். இது ஆய்வறிக்கையே. எதற்கெடுத்தாலும் அழுது கொண்டிருக்கும் பெண்களை ஆண்களுக்கு பிடிக்காதாம். மேலும் அழுபவர்களின்

அழகும் குறையுமாம். இது சமீபத்திய ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ள முடிவு.



பெண்கள் எப்பொழுதுமே அதிக அளவு உணர்ச்சி வசப்படுவார்கள், ஏதாவது ஒரு சின்ன கஷ்டம் என்ற உடனே அழுது விடுவார்கள். தமது துயரம் மட்டுமல்லாமல் மற்றவர்களின் துன்பங்களைக் கேட்டாலும் அழுது விடுவர்.

இந்நிலையில் இஸ்ரேலை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இது தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டனர். இதில் ஆண்களும், பெண்களும் பங்கேற்றனர். அவர்களில் பெண்களை மட்டும் தனிக்குழுவாகப் பிரித்து பரிசோதனை செய்தனர். அந்த குழுவில் மொத்தம் 60 பெண்கள் இருந்தனர்.

பெண்கள் அமர்ந்திருந்த தனி அறையில் மிகவும் மோசமான அழுகைக் காட்சிகள் கொண்ட திரைப்படம் திரையிடப்பட்டது. சுமார் அரைமணி நேரம் படம் ஓடியது. இதனால் பெண்களுக்குக் கண்களில் கண்ணீர் வழியத் தொடங்கியது. அப்போது அறைக்குள் நுழைந்த ஆராய்ச்சியாளர்கள் படம் பார்த்து கண்ணீர் வடித்த பெண்களின் கண்ணீரைச் சோதனைக் குழாய்களில் சேகரித்தனர்.

## நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் வெண்டைக்காய்

நீரிழிவு நோய் வந்து விட்டால், அதனை முற்றிலும் சரிசெய்ய முடியாது. ஆனால் நோயை கட்டுப்படுத்தி ஆரோக்கியமாக வாழ முடியும். அதற்கு இன்சுலின் ஊசிதான் ஒரே வழி என்று நினைக்க வேண்டாம். அத்தகைய நீரிழிவை இயற்கை முறையிலும் கட்டுப்படுத்தலாம். அதிலும் காய்கறிகளில் வெண்டைக்காயை சாப்பிட்டால், நீரிழிவு கட்டுப்படும்.



இரவில் படுக்கும் முன்பு இரண்டு வெண்டைக்காய்களை எடுத்துக் கொள்ள வேண்டும். பின் அதன் இரு முனைகளையும் நீக்கி விட வேண்டும். முனைகளை நறுக்கியபின் அதிலிருந்து வெள்ளை நிறத்தில் ஒரு திரவம் வரும். அப்போது அதனை கழுவி விடாமல், ஒரு டம்ளர் நீரில் அந்த துண்டுகளை போட்டு ஊற வைத்து, மறக்காமல் மூடி விட வேண்டும். பின் காலையில் எழுந்ததும், அந்த துண்டுகளை நீக்கி விட்டு அந்த நீரை குடிக்க வேண்டும்.

இதுபோன்று தினமும் காலையில் குடித்து வந்தால், ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைந்து விடும். மேலும் வெண்டைக்காயை வேக வைத்து சாப்பிடுவதை விட, இவ்வாறு சாப்பிடுவது தான் சிறந்த பலனைத் தரும்.

ஆகவே வெண்டைக்காயை குழம்பு, பொரியல் என்று சாப்பிடுவதை தவிர்த்து, மேற்கூறியவாறு சாப்பிட்டால், நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம்.

வெண்டைக்காயில் கிளைசீமிக் இன்டெக்ஸ் குறைவாக உள்ளது. ஆகவே இதனை அதிகம் சாப்பிட்டால், ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு கட்டுப்படுவதோடு, வயிறும் நிறைந்து விடும். இதை ஸ்நாக்ஸ் போன்றும் சாப்பிடலாம்.

நீரிழிவில் டைப்-2 நீரிழிவு என்று ஒன்று உள்ளது. இது சிறுநீரகத்தில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் இந்த வகையான நீரிழிவு இருந்தால், ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு அதிகமாக இருப்பதோடு, சிறுநீரகத்திற்கும் பாதிப்பை உண்டாக்கும். ஆகவே வெண்டைக்காயை சாப்பிட்டால் சிறுநீரகத்தில் எந்த ஒரு நோயும் வராமல் தடுக்கலாம்.

எளிதில் கரையக் கூடிய நார்ச்சத்து உள்ள உணவுகள் நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. ஏனெனில் இந்தச் சத்து உடலில் இருக்கும் கார்போஹைட்ரேட்டின் செரிமான நேரத்தை குறைத்து, அவை ரத்தத்தில் கலக்காமல் தடுக்கிறது. இத்தகைய சத்து வெண்டைக்காயில் அதிகம் உள்ளது. எனவே வெண்டைக்காயை உணவில் அதிகம் சேர்த்து, நீரிழிவைக் கட்டுப்படுத்துங்கள்.

கண்ணீர் வராத பெண்களுக்காக மற்றொரு சோதனைக் குழாயில் உப்பு கலந்த நீரை தயார் செய்தனர்.

பின்னர் கண்ணீர் வடித்த பெண்களின் முகத்தில் உண்மையான கண்ணீரையும், கண்ணீர் வராத பெண்களின் முகத்தில் உப்புநீரையும் பேஷியல் செய்வது போல் பூசினர். இப்போது யாருக்கு உண்மையான கண்ணீர், யாருக்கு பொய்யான கண்ணீர் என்பது ஆய்வாளர்களைத் தவிர மற்றவர்களுக்குத் தெரியவில்லை.

இந்நிலையில் வெளியே இருந்த ஆண்கள் சிலரை உள்ளே அழைத்து அந்த பெண்களின் அருகில் சென்று பேசச் செய்தார்கள். அப்போது ஆண்களின் முகத்தில் ஏற்படும் மாறுதல்களை துல்லியமாகப் பதிவு செய்தனர்.

அதேவேளையில் ஆண்களுக்குக் காதல் உணர்வைத் தோற்றுவிக்கும் டெஸ்ட்ரோஜன் ஹார்மோன் அவர்களது உடலில் எந்த அளவு சுரக்கிறது என்பதையும் ஆய்வு செய்தனர்.

ஆய்வின் முடிவில் கண்ணீர் வடிக்கும் பெண்களை ஆண்களுக்கு பிடிக்காது என்று முடிவுக்கு வந்துள்ளனர். அதைவிட முக்கியமானது அழுவதால் பெண்களின் அழகு குறையும் என்றும் தெரிய வந்துள்ளதாக அறிவித்துள்ளனர்.



ஸ்ருதி ஹாசனின் அழகான அழுகை திரையுலகில் மிகப் பிரபலமாக உள்ளதாமே... அப்படின்னா வர இருக்கும் அவரது கணவருக்கு அவரைப் பிடிக்க வேண்டுமே... நாயகன் (கமல்) அழுகையை ரசித்த மக்கள் இந்த நாயகி அழுகையை ரசிக்க விரும்பவில்லையோ...

ஐயோடா சாமி... அழுதால் அழகும் குறையுமாமே... காட்சிகள் தோறும் அழும் இந்த சீரியல் நடிகைகளின் கதி என்னாவது?

"பொண்ணு சிரிச்ச முகமா அழகா இருக்கா" என்று பெயர் வாங்குவது எப்படி? "அவ சரியான அழுமூஞ்சி" என்று பெயர் வாங்குவது எப்படி? அழுதால் கணவனுக்குப் பிடிக்காது, அழுவதால் அழகு குறையும்.

இது ஒருபுறமிருக்கட்டும். இவற்றையும் தாண்டி சிந்தித்தோமானால், பெண்களின் கண்ணீரே அவர்களுக்கு எதிரி. எவரிடம் தன்னம்பிக்கை இல்லையோ அவரே கண்ணீரை நம்புவார். 'அவர்கள்' என்று ஒரு திரைப்படம் எண்பதுகளில் வந்தது. அதில் கதாநாயகி சுஜாதா, கதாநாயகன் ரஜினி கொடுக்கும் எல்லையில்லா துன்பங்களிலும் அழமாட்டேன் என்று மன உறுதியுடன் இருப்பார்.

எல்லா பெண்களும் திரைப்படத்தில் வரும் கதாநாயகி போல எந்தச் சூழலிலும் அழ மாட்டேன் என்று சபதம் எடுத்துக் கொள்வது தன்னம்பிக்கையை வளர்க்கும். அதுமட்டுமல்ல, அவர்கள் மீதே அவர்களுக்கு ஒரு நல்லெண்ணம் வளரத் துணையாக இருக்கும். எப்போதும் அழுது எந்தக் காரியத்தையும் சாதிக்க எண்ணக் கூடாது. அது பெண்களிடம் உள்ள அச்சத்தையும் தன்னம்பிக்கையின்மையையும் காட்டும்.

ஆகவே பெண்களே, கண்ணீர் சிந்துவது கண்களுக்கு நல்லது. சிந்துங்கள். ஆனால் அது ஆனந்தக் கண்ணீராக மட்டும் இருக்கட்டும். அழுகை கண்ணீராக இருக்க வேண்டாம். இனியொரு விதி செய்வோம். எந்த நாளிலும் அழுவதை விடுப்போம்...!

**பகவத்கீதை சொல்லும் வாழ்க்கை**

வாழ்க்கை ஒரு பரிசு - அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு சாகச பயணம் - அதனை மேற்கொள்ளுங்கள்.

வாழ்க்கை வினோதம் - அதனை கண்டறியுங்கள்.

வாழ்க்கை கடமை - அதனை நிறைவேற்றுங்கள்.

வாழ்க்கை ஒரு சவால் - அதனை சந்தியுங்கள்.

வாழ்க்கை ஒரு சோகம் - அதனை கடந்து வாருங்கள்.

வாழ்க்கை ஒரு துயரம் - அதனை தாங்கிக் கொள்ளுங்கள்.

வாழ்க்கை ஒரு காதல் - அதனை அனுபவியுங்கள்.

வாழ்க்கை ஒரு அழகு - அதனை ஆராதியுங்கள்.

*– கோமதி ராமலிங்கம், நெல்லை.*

# பூக்கூடை

**- உஷா நாராயணன்**

வனங்களின் மிகப் பிரமாண்டமான உயிரினம் எது என்று கேட்டால், குழந்தை கூட சொல்லும் காண்டாமிருகம் என்று. பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்துவிட்ட அந்த மிகப் பெரிய உயிரினம், இன்று மனிதன் முன் உயிர்ப்பிச்சை கேட்டு நிற்கிறது. இந்திய ஒற்றைக் கொம்பன்களுக்கு இது கெட்டகாலம்தான்.



காஸிரங்கா தேசிய உயிரியல் பூங்காவில், இந்தியாவிலேயே அதிக அளவில் காண்டாமிருகங்கள் வாழ்கின்றன. இங்கே மட்டும், ஜனவரியில் இருந்து அக்டோபருக்குள் நூற்றியோரு காண்டாமிருகங்கள் இறந்திருக்கின்றனவாம். ஒரு பக்கம் இயற்கையால், மறுபக்கம் செயற்கையால். மிக அதிக வெள்ளத்தாலும், வேட்டையாடிகளாலும் சராசரியாக மூன்று நாட்களுக்கு ஒரு ஒற்றைக் கொம்பன் மடிந்திருக்கிறது. இதன் கொம்பு ஒரு அடி நீளம்தான் வளரும்.



கெராட்டின் எனப்படும் புரதங்கள் இதில் இருப்பதாகவும், காய்ச்சலில் இருந்து புற்றுநோய் வரை எல்லா வியாதிகளுக்கும் இது சிறந்த நிவாரணி என்றும் நிலவும் மூடநம்பிக்கைகளால் பரிதாபமாக வேட்டையாடப்பட்டு வரும் இந்த உயிரினத்தை யார் காப்பாற்றப் போகிறார்கள்?



? காவிரி டெல்டா கிராமங்களின் தண்ணீர்ப் பஞ்சம் எப்படி தீரப் போகிறது? கருகிய பயிரை காப்பாற்ற முடியாத காரணத்தால், நாகை மாவட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். காவிரி நதிநீர் தீர்ப்பாணையம் சொன்னாலும் சரி, உச்சநீதிமன்றமே சொன்னாலும் சரி, கர்நாடகம் மிக கறாராக "ஒரு சொட்டு நீர் கூட கொடுக்க முடியாது" என்று சொல்லி விட்டது. மழை வேண்டி வானத்தை அண்ணாந்து பார்க்கும் விவசாயிகள், இன்று நீர் வேண்டி கோர்ட்டு ஆர்டருக்காகக் காத்து நிற்கிற அவலம் ஏற்பட்டு விட்டது.

தமிழக மக்கள், தமிழகக் கட்சிகள், தமிழகத் தலைவர்கள் என்று ஒன்று திரட்டி, ஜனநாயக வழியில் மத்திய அரசை தமிழக அரசு நிர்ப்பந்திக்க வேண்டும். அனைத்துக் கட்சித் தலைவர்களும், பயிர்களுக்காகவும் மனித உயிர்களுக்காகவும் இறங்கி வந்து, தமிழக அரசுடன் இணைந்து குரல் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மக்களிடம் இவர்கள் அனைவரும் அம்பலப்பட்டு மதிப்பிழந்து போவார்கள்.

? போலீஸ் பிடியிலிருந்து கைதிகள் தப்பியோடும் போது, சுடப்பட்டு அவர்கள் இறப்பது என்கவுன்டர் என்கிறார்கள். ஆனால் என்கவுன்டர் ஸ்பெஷலிஸ்ட் என்கிறார்கள், போலி என்கவுன்டர் என்கிறார்கள். என்னவென்று தெரியவில்லை. எஸ்.ஐ. ஆக இருந்த ஆல்வின் சுதனை பயங்கரமாகக் கொன்றார்கள், சில பல ரவுடிகள் என்றார்கள். பாரதி, பிரபு என்று இருவர் கோர்ட்டில் சரணடைந்தார்கள். அந்த இரண்டு பேரும்தான் டி.எஸ்.பி. வெள்ளைத்துரையால் என்கவுன்டர்

செய்யப்பட்டிருக்கிறார்கள். வீரப்பன், வீரமணி, மணல்மேடு சங்கர், கவியரசு, உருண்டை ராஜன் இப்போது பாரதி, பிரபு என்று 12 பேரை சுட்டுக் கொன்றிருக்கிறார் இவர்.

முழுமையாக விசாரிக்கப்பட்டு, தூக்கு



தண்டனை விதிக்கப்படுகிற முறையைக் கூட ஏகப்பட்ட நாடுகள் ஒழித்து விட்டன. மரணதண்டனை தேவையா இல்லையா என்கிற உரத்த சிந்தனையில் இருக்கிறோம். உடனடி நீதி என்கிற உணர்ச்சிப் போர்வை கொண்டு நடத்தப்படும் என்கவுன்டர்கள் சரிதானா? கோர்ட்டுகள் என்ன சொல்கின்றன?



? காதல் திருமணங்கள் கூடாது என்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான வன்முறைச் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்றும் தீர்மானம் போட்டிருக்கிறது ஒரு அரசியல் கட்சி. காதல் என்பது இயற்கையானது, இயல்பான மனநெகிழ்ச்சியில் வருவது. இது எப்படி செயற்கையாக உருவாக முடியும்? அறியாத பெண்களை வசியம் செய்து ஆண்கள் ஆசை காட்டி மோசம் செய்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்ட பெண்களுக்காகத்தானே சட்டங்கள் இருக்கின்றன? குடும்பக் கோர்ட்டிலும் செஷன்ஸ் கோர்ட்டிலும் இதைப் போன்ற வழக்குகள்தானே பதிவாகிக் கொண்டிருக்கின்றன?

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று சொன்ன பாரதியும், சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வைத்த பெரியாரும், உயர்த்தப்பட்ட சாதியில் பிறந்தார்களே தவிர, தாழ்த்தப்பட்டவர்களுக்காகத்தானே போராடினார்கள்? எங்கே போய்க் கொண்டிருக்கிறது தமிழ்நாடு?

? அதிர வைக்கிறது இந்தச் செய்தி. 'டெங்கு ஒரு கொள்ளை நோயாக உருவெடுக்கிறது'. உலகெங்கும் பருவநிலை மாறுபாட்டால் கொசுக்களால் பரவும் நோய்கள் அதிகரித்து வருகின்றன. உலகின் பாதிக்கும் மேற்பட்ட நாடுகளில் டெங்கு காய்ச்சல் பரவியிருக்கிறது. எதிர்காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஐந்து கோடிப் பேர் டெங்குவால் பாதிக்கப்படலாம் என்கிறது உலகச் சுகாதார நிறுவனம். அதிலும் நாட்டிலேயே தமிழகத்தில்தான் டெங்கு பாதிப்பு அதிகமாம். ஆனால் ஆளும் அரசுகள் நிலைமையை சரியாகக் கையாளவில்லை என்கிறார்கள்.

'டெங்குவைக் கொள்ளை நோயாக அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால், டெங்கு சிகிச்சைக்கு அரசு முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கும் இழப்பீடு தர வேண்டும். மின்சாரத்தை முழுமையாகக் கொடுக்க முடியாத அரசு மீது மக்களுக்கு இன்னும் கோபம் வரும். சுற்றுலாத்துறை அடிபடும். தேர்தல், வியாபாரம் அந்நியச் செலாவணி என்று எல்லாமே பிரச்சினையாகும். அதனால் அரசுகள் மவுனிக்கின்றன' என்கிறார்கள். தலை சுற்றுகிறது.



# நிஜம் நின்று வெல்லும்

-கே.பி.ஜனார்த்தனன்

“ஸோ, நீங்க ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கறீங்க. கல்யாணம் செய்து கொள்ள விரும்பறீங்க. அப்படித்தானே?” என்றார் மகாலிங்கம்.

எடுத்த எடுப்பிலேயே அப்பா அப்படிக் கேட்பார் என்று ரம்யா எதிர்பார்க்கவேயில்லை. “அப்பா, வந்து...” என்று இழுத்தாள்.

“நிறுத்தும்மா. தெரியும் எனக்கு. நேத்து வரைக்கும் எந்த ஆம்பிளையோடும் பழகினதில்லை நீ. இன்னிக்கு இவர் என் நண்பருப்பான்னு இந்தப் பையனை அழைச்சிட்டு வந்து எனக்கு அறிமுகப்படுத்தறேன்னா... நான் ப்ராக்டிகலா எதையும் பார்க்கிற ஆளு... புரியாதா எனக்கு?”

ரம்யா பதில் சொல்ல முடியாமல் நெளிந்தாள். திலீபன் முந்திக் கொண்டு பதில் சொன்னான்.

“ஆமா சார். நீங்க சொல்றது உண்மைதான். ரம்யாவும் நானும் ஆறு மாசமா பழகறோம். ஒருத்தரை ஒருத்தர் ஆத்மார்த்தமா நேசிக்கிறோம். ரம்யா என்னை உங்களிடம் அறிமுகப்படுத்தினது எங்கள் கல்யாணத்துக்கு உங்க சம்மதத்தைக் கேட்கிற எண்ணத்தோடுதான்.”

ரம்யா கண்ணை அகல விரித்து அவனைப் பார்த்தாள். கொஞ்சமும் தயங்காமல் நிதானமாகவும் அழுத்தமாகவும் அவன் பேசிக் கொண்டு போவதைப் பார்த்தாள். திலீபனை அவள் அறிவாள். உண்மையின் மீது அவனுக்குள்ள பிடிவாதமான பற்றுதலையும் அறிவாள்.

மகாலிங்கம் அவள் பக்கம் திரும்ப, “ஆமாம்பா” என்று தலை குனிந்தாள்.

“உங்கப்பா என்ன பண்றார் மிஸ்டர் திலீபன்?”

“பள்ளி ஆசிரியர். ரிடயராயிட்டார்.”

உதட்டைப் பிதுக்கினார். “நீங்க?”

“பி.இ. படிச்சிருக்கார்ப்பா. கெமிக்கல் என்ஜினீயர்.”

“வேலை?”

“தேடிட்டிருக்கார்.”

“ஓஹோ...” மீண்டும் உதட்டைப் பிதுக்கினார்.

ஒரு விநாடி கனத்த மவுனம் நிலவியது. பரீட்சை ரிசல்டைப் பேப்பரில் தேடும் மாணவனைப் போல பதிலை அவர் முகத்தில் தேடினாள் ரம்யா.

“இதப் பாருங்க மிஸ்டர் திலீபன், ரம்யா சந்தோஷமா வாழறதுதான் என் நோக்கம். அதுவேதான் உங்க நோக்கமும் என்கிற போது உங்க திருமணத்துக்கு எனக்கு எந்த அப்ஜக்‌ஷனும் இல்லை.”

“டாட்! யூ ஆர் க்ரேட்!” என்றாள் ரம்யா. அவளுக்கு விசிலடிக்க வேண்டும் போல இருந்தது. அதுவரை நம்பிக்கையே இல்லாமல் இருந்தது அவளுக்கு. அவர்கள் அந்தஸ்துக்கு திலீபனுடையது மிகக் குறைச்சல். மகாலிங்கமோ ரொம்பப் பிடிவாதமான ஆள்.

“பொறும்மா” என்றவர் திலீபனிடம், “ஆனா அப்படி சந்தோஷமா வெச்சுப் பார்க்கிறது உன்னால் முடியுமாங்கறதுதான் என் கேள்வி. உன்னால் அது முடியுமானால் உனக்குதான் அவள்.”

“நீங்க சொல்ல வர்றதை நேரடியாகவே சொல்லலாம் சார்.”

“ஒரு வருஷம் டயம் தர்றேன். ஒரு நல்ல வேலையோடு வா... ரம்யாவை உனக்கு கல்யாணம் செய்து வைக்கறேன்.”

மகாலிங்கம் எழுந்து கொண்டார்.

***

லைப்ரரி. வேப்ப மரத்தடியில் காத்திருந்தாள் ரம்யா.

மரத்தைச் சுற்றிப் படர்ந்திருந்த கொடிகளும், சற்று தள்ளி வளர்ந்திருந்த செடிகளும் அந்த இடத்தைப் பச்சை மயமாக்கி விட்டிருந்தன. அந்த பச்சை

பின்னணிக்கு அவள் உடுத்தியிருந்த ஊதாப் புடவை ஒரு 'ஸ்ட்ரைக்கிங் காண்ட்ராஸ்ட்' கொடுத்தது. லைப்ரரி மாடிக்குப் பின்புறமாக வளைந்து இறங்கிய படிகளும் உயர்ந்து நின்ற வேப்ப மரமுமாகச் சேர்ந்து ஒரு கேமராமேனுக்கு எளிதில் கிடைக்காத காம்போசிஷனை வழங்கிக் கொண்டிருந்தன.

தூரத்தில் திலீபன் வந்து கொண்டிருந்தான். கால்களைத் தூக்கி போட்டு கைகளைத் தொண்ணூறு டிகிரிக்கு வீசிப் போட்டு நடக்கும் அவனது கம்பீர நடை சற்று தளர்ந்திருந்தது. பொன் மஞ்சள் உடையும் பொருத்தமான டையும் அவன் ஏதோ இண்டர்வியூ முடித்து விட்டு நேராக இங்கே வருகிறான் என்று தெரிவித்தன.

“என்ன ஆச்சு?” ரம்யாவின் குரலில் கவலை. “இண்டர்வியூ நல்லா செய்தீங்களா?”

அவன் குரலில் சோர்வு தட்டிற்று. “எல்லாம் வெறும் ஐ வாஷ். வேறொரு ஆளை ஏற்கனவே பிக்ஸ் செய்து விட்டார்களாம்.”

''அப்ப இந்த வேலையும் அவ்வளவுதானா?''

தோள்களைக் குலுக்கினான்.

சோகத்தை விழுங்கிக் கொண்டாள் ரம்யா.

அப்பா சொன்ன கெடுவில் ஆறுமாதம் ஓடி விட்டது. ஆனால் திலீபன் ஆஜராகிய ஒவ்வொரு இண்டர்வியூவும் ரிக்ரட்டையே பெற்றுத் தந்தது.

## சூரியனுக்கு உகந்தவை!

சூரிய வழிபாடு அளவற்ற நன்மைகளைத் தரவல்லது. ஆதிமனிதர்கள் கூட சூரிய நமஸ்காரம் செய்திருப்பதை குகை சிற்பங்கள் தெரிவிக்கின்றன. உலகம் தடையில்லாமல் இயங்கவும், ருதுக்கள் கிரமப்படி தோன்றவும் தேரை இழுக்கும் ஏழு குதிரைகளின் பெயர்கள் காயத்ரி, உஷ்ணிக், அனுஷ்டப், பிரஹதி, பங்கதீ, திருஷ்டுப், ஜகதி என்பதாகும். நைல் நதிக்கரை பிரமிடுகளிலும் கூட எகிப்தியர் சூரிய வழிபாடு செய்த சான்றுகள் இருக்கின்றன.

தாமிர உலோகம், கோதுமைப் பண்டம், செந்தாமரை மலர், செம்பட்டு, கபிலைப்பசு, மாணிக்கம், எருக்கங்குச்சி, காரப் பொருட்கள் சூரியனுக்கு உகந்தவை.

*– மகாலட்சுமி சுப்பிரமணியன்,*
*புதுச்சேரி.*

''சுத்த அயோக்கியத்தனம்! பதினையாயிரம் வாங்கிக் கொண்டு அந்த ஆளைச் சிபாரிசு செய்திருக்கிறார் போர்டு டைரக்டர் ஒருத்தர்!''

ரம்யா தயங்கினாள். அதை எப்படிச் சொல்வது?

''ஏன் திலீப், அப்பாதான் நம் கல்யாணத்துக்கு பச்சைக் கொடி காட்டி விட்டாரே! உங்க கொள்கையைக் கொஞ்சம் தளர்த்திக்கக் கூடாதா? எப்படியாவது ஒரு வேலையில் சேருவது தானே இப்ப நமக்கு முக்கியம்?''

“புரியுது, நீ என்ன சொல்ல வர்றேன்னு. அந்த மாதிரி பணத்துக்கோ சிபாரிசுக்கோ ஏற்பாடு செய்ய வேண்டியதுதானேன்னு சொல்றே!”

“ஆமா...”

''ஆனா ரம்யா, உனக்கு நல்லாத் தெரியும்...அப்படி ஒரு வேலையில் சேருவதை விட நான் பட்டினி கிடப்பேன். என் படிப்பையும் திறமையையும் மதிச்சு வேலை தரவில்லையானால் அந்த வேலை எனக்கு வேண்டாம்.''

ரம்யா மவுனமாயிருந்தாள்.

“யோசிச்சுப் பார் ரம்யா, நம்ம நாட்டில் எத்தனை என்ஜினீயரிங் கிராஜுவேட்டுகள் வேலையில்லாமல் இருக்காங்க. அதில் எத்தனை பேரால் சிபாரிசையோ லஞ்சத்தையோ வைத்து வேலை வாங்க முடியும்? நான் மட்டும் அப்படி வாங்கினால் அப்புறம் படிப்பு என் தகுதியில்லை, சிபாரிசும் லஞ்சமும்தான் என் தகுதி என்றாகி விடும். அந்த தகுதியின் அடிப்படையில் ஒரு வேலை வாங்க நான் விரும்பலை. அதை வைத்து உன்னை கல்யாணம் செய்துக்க நிச்சயமா விரும்பலே.”

அவன் சொன்னால் சொன்னதுதா அவளுக்குத் தெரியும்.

''ஆனால், அப்பா நமக்கு கொடுத்திருப்பதோ இன்னும் ஆ மாசம்தான்.''

“எனக்கு நம்பிக்கை இருக்கு” என்றா திலீபன். ''பூமியில் இன்னும் ம பெய்கிறதென்றால் உண்மையும் நேர்மை இன்னும் அற்றுப் போய் விடலைன்னுதா அர்த்தம். இன்னும் நிறைய இடத்தி அப்ளிகேஷன் போட்டிருக்கே எங்கேயாவது ஒரு இடத்தில் எனக்கு வே கிடைத்தே தீரும். உண்மை ஜெயி தீரும்.''

அவனுடைய பிடிவாதமான நேர்மையைக் கண்டு மயங்கித்தான் தன் கரங்களை அவனுடையதோடு கோர்த்துக் கொண்டவள் ரம்யா. ஆனால் இன்று அதுவேதான் அவர்கள் கல்யாணத்துக்குக் குறுக்கே நிற்கிறது.

***

மறுநாளிலிருந்து திலீபனைச் சந்திப்பது இன்னும் அபூர்வமாகப் போயிற்று. எப்போது பார்த்தாலும் அப்ளிகேஷன், எழுத்துத் தேர்வு, இண்டர்வியூ என்று வேலை தேடும் உலகில் தன்னை முற்றாக ஆழ்த்திக் கொண்டு விட்டான்.

காலை ஒன்பது மணிக்குத் தொடங்கி ஒவ்வொரு கம்பெனியாக விடாமல் படியேறி இறங்கினான். சென்னையில் அவன் அப்ளிகேஷன் கிடைக்காத இண்டஸ்ட்ரியல் நிறுவனமே இல்லையென்று சொல்லி விடலாம். ஆனால் முயற்சிகள் முயற்சி அளவிலேயே நின்றன.

சும்மா வீட்டில் இருந்து கொண்டு, அதே ஞாபகத்தில் சதா உழல முடியாமல், ஏதாவது வேலை கிடைத்தாலாவது போய் வரலாம் என்று ரம்யாவும் அப்ளிகேஷன் போட ஆரம்பித்ததுதான் மிச்சம்.

கெடுவின் கடைசி மாதங்கள் நெருங்க நெருங்க அவனைச் சந்திக்கவே இயலாமல் போகிறது. ஒரு முறை எங்கிருந்தோ போனில் பேசினான்.

"ஹாய் ரம்யா, எப்படி இருக்கே? கண்ணனை ஞாபகம் வெச்சிருக்கியா? வானத்திலிருக்கிற சந்திரனைக் கேட்டிருக்கலாம் உங்கப்பா. இதைவிட ஈஸியாகக் கொண்டு வந்திருப்பேன்."

சோகத்தை மறைத்துச் சிரித்தாள்.

"கஷ்டப்பட்டுச் சிரிக்காதே. விரைவில் வருகிறேன் வேலையோடும் மாலையோடும்."

***

"கடல்நீரிலிருந்து ஆக்ஸிஜனைப் பிரித்தெடுக்க முடியுமா?"

"ஹீமோகுளோபினை உபயோகித்துப் பிரித்தெடுக்க முடியும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்."

"தாவர தண்டினூடே ஒளி ஊடுருவிச் செல்ல முடியாதது ஏன்?"

"யார் சொன்னது? முருங்கைத் தண்டின் திசுக்களை அடுக்கி லேசர் பீம் பாய்ச்சி இரண்டரை சென்டிமீட்டர் நீளத்திற்கு ஒளி அதன் தண்டினூடே ஊடுருவிச் செல்வதை நிரூபித்திருக்கிறார்கள். மண்ணின் உள்ளே இருக்கும் தண்டு கூட சூரிய ஒளிக்கேற்ப வளைவதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்."

"ரொம்ப பிரமாதமாக பதில் அளிக்கிறீர்கள்."

திலீபன் சிரித்தான். என்ன முயன்றும் மறைக்க முயலாத இளக்காரம் அதில் இழையோடிற்று.

"என்ன சிரிக்கறீங்க?"

"இண்டர்வியூவின் போது எல்லாரும் இப்படியேதான் சொல்றாங்க. அப்புறம்தான்..."

"புரியுது" என்று சிரித்தார் அவரும். மறுவினாடி முகத்தில் ஒரு சீரியஸ்னஸ் வந்து ஏறிக் கொண்டது. "பட் எல்லாரையும் மாதிரி என்னை நினைக்க வேண்டாம் நீங்க. தகுதிக்குத்தான் நான் முதலிடம்

## அஷ்டலட்சுமி கோபுர தரிசனம்

சென்னையின் தென்பாகமாக அமைந்துள்ள குன்றத்தூர் தேவி ஸ்ரீகாத்யாயனி அம்மன் கோவிலில் அஷ்டலட்சுமி கோபுர தரிசனம் சக்தி வாய்ந்தது.



பல்லவர் கால கட்டிடக்கலை அம்சத்தில் தேர் ஒன்று எழுந்து வருவது போல அமைந்த இந்த லட்சுமி கோபுரத்தின் கோஷ்டங்களில் எண்வகை லட்சுமி தேவிகள் நின்ற நிலையில் அருள் புரிகின்றனர். வெள்ளி, ஞாயிறு, செவ்வாய், பவுர்ணமி, அமாவாசை தினங்களில் கோபுரம் முன் தீபம் ஏற்றி 16 முறை சுற்றி வந்து வழிபட்டால் வியாபாரிகளுக்குத் தொழிலில் முன்னேற்றம், குடும்பங்களில் செல்வச் சேர்க்கை ஏற்படுவதாக பக்தர்களின் நம்பிக்கை. கல்யாண வரம் தரும் ஸ்ரீகாத்யாயனி சந்நிதி அருகில் இந்த கோபுரம் அமைந்துள்ளது.

ஒரு நாள் திரிசக்கர தரிசன சேவையில் திருவேற்காடு, மாங்காடு ஆலயத்திற்கு அடுத்ததாக உள்ள மூன்றாவது சக்தியின் திருக்கோவில் இதுவே.

*–கே.குமார சிவாச்சாரியார், சென்னை.*

தருவது. பணத்தாலோ, பொரிசாலோ என்னை விலைக்கு வாங்க முடியாது. யூ ஆர் செலக்டட். வீட்டுக்குப் போங்க. நாளைக்கே டெலிகிராமில் ஆர்டர் வரும்."

திலீபன் அசந்து போனான். மீள ஓரிரு செகண்டுகள் வேண்டியிருந்தது. நிஜம்தானா எல்லாம்?

வாட்ச்சில் தேதியைப் பார்த்தான். பதினொன்று. நாளையோடு கெடு முடிகிறது. தாங்க் காட். ரம்யா இனி அவனுடையவள்!

அந்த நிமிடமே அவளைப் பார்த்து அந்த சந்தோஷ அதிர்ச்சியை வழங்கிட நினைத்தான்.

டாக்ஸி பிடித்துக் கொண்டு அவள் வீட்டில் போய் இறங்கினான். கதவு சாத்தியிருந்தது. வேலையாள் மட்டும் வராந்தாவில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

"ரம்யா?"

"ரம்யாம்மாங்களா? அவங்க அப்பாவோடு ஒரு கல்யாண வரவேற்புக்குப் போயிருக்காங்க. ஏன் அவசரமாப் பாக்கணுமா?"

"ஆமா. எப்ப திரும்புவாங்க?"

"திரும்ப ராத்திரி ஆகுங்க. ரொம்ப நெருங்கின சொந்தம். அதான் ரெண்டு பேருமே போயிருக்காங்க. வந்தால் ஏதாவது சொல்லணுமா?"

"இந்தச் சீட்டை கொடுத்து விடு. போதும்."

மறுநாள் காலை லைப்ரரிக்கு வரச் சொல்லி சீட்டு எழுதிக் கொடுத்து விட்டு அகன்றான்.

***

லைப்ரரி வேப்ப மரம்.

"வேலை கிடைத்து விட்டது" என்று அவன் சொன்னதும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள் ரம்யா.

"நிஜமாகவா?"

"ஆமாம். நிஜமாகவே ஒரு இண்டர்வியூ நடந்தது. நிஜமாகவே அதில் ஒரு செலக்ஷன் நடந்தது. அதனால்தான் என்னை தேர்ந்தெடுத்தார் அந்த எம்.டி." விவரமாகச் சொன்னான். மகிழ்ந்தான்.

"ஆமா, கம்பெனியின் பெயரைச் சொல்லலையே?" என்று கேட்டாள்.

சொன்னான்.

ரம்யா அதிர்ந்தாள். பூமி காலிலிருந்து நழுவிப் போயிற்று. "அந்த கம்பெனியா?"

"ஆமாம். மெட்ராசில் மட்டும் ஏழு கிளைகள் வைத்திருக்கிற சத்யா கெம் க்ருப்பேதான்."

"சரி, ஆர்டர் தந்து விட்டார்களா?"

"இன்றைக்கே டெலிகிராம் வந்துவிடும்னு எம்.டி. சொன்னார். இண்டர்வியூ செய்ததே அவர்தான். இப்பவாவது நீயும் உன் அப்பாவும் புரிஞ்சுக்குங்க. நேர்மைக்கு உலகம் இன்னும் டாட்டா சொல்லி விடவில்லை."

அவள் ஒரு நிமிடம் மவுனமாக இருந்தாள். மனதுக்குள் ஆயிரம் போராட்டங்கள். மெதுவாகச் சொன்னாள். "எனக்கென்னமோ அப்படித் தோணலை திலீப். இந்த வேலையை வைத்து உங்க கொள்கையின் வெற்றியை நீங்க அளவிட வேண்டாம்."

"ஓஹோ" அவன் முகம் சிவந்தான். "அப்படியானால் இந்த வேலை கிடைப்பதை என் கொள்கைக்கு கிடைச்ச வெற்றியாக நீ ஏத்துக்க மாட்டியா?"

"அப்படி இல்லை. இந்த வேலை கிடைக்கா விட்டாலும் நீங்க தகுதியானவர்தான்னு சொல்றேன். உங்களுக்கு தகுதி இருக்கிறதா இல்லையாங்கறதுதான் நம்மைப் பொருத்தவரை முக்கியம்."

"எனக்கு தகுதி இருக்குங்கறதிலே எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனா அதை விட, வேலை கிடைக்கிறதைத் தானே பெரிசாய் நினைக்கிறார் உங்கப்பா!"

"அவர் பிராக்டிகல் ஆள். நடப்பு உலகில்

## சுவைகள் 6

இனிப்புச் சுவை உடல் தசையை வளரச் செய்யும்.

கசப்புச் சுவை கிருமிகளை அழிக்கும்.

புளிப்பு சுவை ரத்தக்குழாய் அழுக்கை நீக்கும்.

உறைப்பு சுவை உடல் உஷ்ணம், உணர்ச்சிகள் இவைகளை கூட்டவோ, குறைக்கவோ செய்யும்.

துவர்ப்பு சுவை ரத்தத்தை உறையச் செய்யும் (காயத்தின் போது ரத்தம் நிற்காவிட்டால்).

உவர்ப்பு சுவை ஞாபக சக்தியை வளர்க்கும்.

- வி.பத்மாவதி, கீழப்பலூர்.

அதுதான் முக்கியம். கஷ்டமானதும் கூட."

"அது ஒண்ணும் கஷ்டமில்லேன்னு இப்ப நான் நிரூபிச்சிட்டேனே? ஆர்டர் வந்ததும் உங்கப்பா முகத்திலே விசிறியடிக்கப் போறேன். உண்மையான தகுதியை அங்கீகாரம் செய்பவர்களும் இந்த உலகத்தில் இருக்கிறாங்கன்னு மிஸ்டர் மகாலிங்கத்துக்கு நிரூபிக்கப் போறேன். ஜெயிச்சே தீருவேன்."

"பொறுங்க திலீப், ஜெயிக்கிறது இல்லை முக்கியம். நம்ம வாழ்க்கைதான் முக்கியம்." எப்படி அதைச் சொல்வது என்று தயங்கினாள்.

"நோ நோ. என் கொள்கையில் ஜெயிக்காமல் அந்த வாழ்க்கையை ஏற்க மாட்டேன்."

பதறிப் போனாள் ரம்யா. விரைந்து அவன் வாயைப் பொத்தினாள். "போதும், அவசரப்பட்டு எதுவும் சொல்லி விடாதீங்க."

அந்தத் தளிர்க்கரங்களை விலக்கி விட்டுச் சொன்னான். "அவசரப்படலே, நிதானமாவே சொல்றேன். இந்த வேலை எனக்கு கிடைக்கப் போவது என் கொள்கைக்கு, உண்மைக்கு கிடைக்கப் போகிற வெற்றின்னு நான் நினைக்கிறேன். அப்படி வெற்றி கிடைக்கலேன்னா நான் திருமணமே செய்து கொள்ள மாட்டேன். இது சத்தியம்."

எழுந்து கொண்டான், மடியில் விழுந்திருந்த வேப்ப மர இலைகளை கையால் தட்டியபடி. "சாயந்திரம் ஆர்டரோடு வருவேன். அப்படி வராவிட்டால் இதுதான் நீ என்னை சந்திக்கிற கடைசித் தடவையாக இருக்கும்."

வலது கண்ணருகே சென்ற அவன் கை வழக்கம் போல குட்பை சொன்னது.

கண்ணீர் மல்க அந்தக் கடைசி குட்பையைப் பார்த்தாள் ரம்யா.

ஆம், அவளுக்குத் தெரியும். அதுதான் கடைசி குட்பை என்று. ஆனால் அதை அவளால் அவனிடம் சொல்ல முடியவில்லை. எப்படி சொல்வாள் அதை?

நேற்று சாயங்காலம் அந்தக் கல்யாண ரிசப்ஷனில் அந்த சத்யா கெம் எம்.டி.யைத் தற்செயலாக சந்தித்ததை, ஒரு தோழி இவளை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்ததை, இவளை வியப்புடன் வைத்த கண் வாங்காமல் அவர் பார்த்ததை,

அந்த கம்பெனியில் காலியாய் இருந்த வேலை ஒன்றுக்கு இவள் ஒரு அப்ளிகேஷன் போட்டிருந்ததைப் பற்றிச் சொன்னதை,

## ஆண்டாளுக்குச் சேலை

தைப் பொங்கல் மறுநாள் கனு அன்று சாலியர் நெய்து கொடுத்த சுருக்குச்சேலையை ஆண்டாள் கட்டிக் கொண்டு 'முத்துக்குறி' காண்கிறாள்.

ஆண்டாளுக்குப் புடவை சாற்றுவதற்கென்றே தறியில் சாலியர் நெய்து, அதை இயற்கைச் சாய மூலிகைகளால் சாயம் தோய்த்து, புடவையில் அலங்காரமாக கிளி, அன்னப்பறவை, படர்ந்த கொடி, செடி ஆகியவற்றை கையால் வரைந்து அச்சுக்குத்தி சுருக்குச் சேலை வழங்குகின்றனர்.

சாலியர் ஆண்டாளைத் தம் குலமகளாகக் கருதி அவளுக்குப் பிறந்த வீட்டுச் சீதனமாகச் சுருக்குச் சேலை கொடுப்பது பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது.

ஆடிப்பூரம் தேரோட்டத்தின் போது வெற்றிலை பாக்குத் தாம்பூலம் வைத்துச் சாலியர் சமூகத்திற்கு மரியாதை செய்கின்றனர்.

பங்குனித் திருவிழாவின் கொடியேற்றத்திற்கு கொடிமரக் கயிறும், கொடிப் பட்டமும் ஐந்து தெரு சாலியர் சமூகத்தினர் வழங்குகின்றனர். இதற்குக் கைமாறாக நாச்சியார்கோவிலில் இருந்து பசு நெய்த்தோசை இன்றும் சாலியர்களுக்கு வழங்கப்படுகிறது.

-மங்களம்.

இவள் தகுதி கொஞ்சம் குறைச்சல் என்று இண்டர்வியூவுக்கு இவளை அழைக்காததைப் பற்றி அவரிடம் குறைபட்டுக் கொண்டதை, "அப்படியா? இன்னிக்குத்தானே ஒரு ஆளை தேர்ந்தெடுத்தேன்... பரவாயில்லை, அதை கான்சல் பண்ணிடறேன்" என்று அவர் சொன்னதோடு காலையிலேயே டெலிகிராமில் இவளுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை அனுப்பி விட்டதை... எப்படி சொல்ல?

'சிபாரிசுக்கும் பணத்துக்கும் மயங்க மாட்டேன்' என்று சொன்ன அந்த எம்.டி. கடைசியில் அழகுக்கு மயங்கி விட்டதை என்னவென்று சொல்ல?

கையிலிருந்த ஆர்டர் மவுனமாகக் கிழிக்கப்பட்டு மடிந்தது.

அவன் காதலும்தான்.

(1991-ம் ஆண்டு 'தேவி' சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற கதை.)

# வேலைவாய்ப்புக்கு பஞ்சமில்லாத
# கடல்சார் கல்வி!

- பேராசிரியர் க.ம. ராஜேஷ்கந்தன்

கடல்சார் கல்வியில் பலவகையான படிப்புகள் இருக்கின்றன. இப்படிப்புப் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கும் பஞ்சமில்லை.

**பி.டெக். மரைன் என்ஜினீயரிங்**

பொறியியலில் சிவில், மெக்கானிக்கல், எலக்ட்ரானிக் என்பது மட்டும் தேடிக் கொண்டு இராமல் நான்காண்டு பி.டெக். 'மரைன் என்ஜினீயரிங்' படிப்பைப் படிப்பது பயனளிக்கும். இந்திய அரசில் கப்பல்துறை அமைச்சரகத்தில் ஆறு மாத கடல் பயிற்சிக்குப் பின்னர் மரைன் என்ஜினீயர் அதாவது கப்பல் பொறியாளர்களாகக் கப்பல்களில் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டும்.

இந்தப் படிப்புப் படிக்க, பிளஸ் டு படிப்பில் இயற்பியல், வேதியியல், கணிதம், ஆங்கிலம் ஆகியன படித்து இருக்க வேண்டும். இயற்பியல், வேதியியல், கணிதம் மூன்றும் சேர்த்து சராசரியாக 60 மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்றிருக்க வேண்டும்.

இந்த நான்காண்டுப் படிப்பில் இரண்டாம் ஆண்டில் சேரலாம். அவ்வாறு சேர்ந்தால் அதன்பின் மூன்றாண்டுகள் பயின்றால் போதும். அதற்கு அரசின் கப்பல்துறை ஏற்றுக் கொண்ட ஓராண்டுப் படிப்போ அல்லது பொறியியல் கல்லூரியில் முதலாண்டு மட்டும் ஏ.ஐ.சி.டி.ஈ. (AICTE) ஏற்றுக் கொண்ட மெக்கானிக்கல் அல்லது எலக்ட்ரிக்கல் மெக்கானிக்கல் படித்துச் சராசரியாக 60 வகுப்பில் படித்துச் சராசரியாக 60 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

பாலிடெக்னிக் எனப்படும் பல்தொழில் நுட்பப்பள்ளிகளில் மூன்றாண்டுகள் பயின்று மெக்கானிக்கல், மரைன், எலக்ட்ரிக்கல் மெக்கானிக்கல் படிப்பில் டிப்ளமோ அல்லது எலக்ட்ரானிக் படிப்பில் டிப்ளமோ பெற்றிருக்க வேண்டும். இப்படிப்பில் 55 சதவீதம் கடைசி ஆண்டில் பெற்றிருக்க வேண்டும். மூன்றாண்டு படித்துப் பெறும் பட்டம் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழுவோ மாநிலத் தொழில் நுட்ப வாரியமோ ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறு தகுதி பெற்றவர்கள் ஆங்கிலப்பாடத்தில் பத்தாம் வகுப்பில் அல்லது பன்னிரெண்டாம் வகுப்பில் குறைந்தது 50 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். குறைந்தது 17 வயது அடைந்திருக்க வேண்டும். 25 வயதுக்கு மேல் இருக்கக் கூடாது. கண்பார்வை கண்ணாடி அல்லது லென்ஸ் இல்லாமல் 6/6 என ஒவ்வொரு கண்ணும் இருக்க வேண்டும். இப்படிப்பிற்குச் சேரும் முன் கண் பரிசோதனை செய்தே தேர்வு செய்வர்.



**கடல்சார் கல்வியில் பட்டயப்படிப்பு**

பன்னிரெண்டாம் வகுப்புப் படித்து அதன்பின் 4 ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற விரும்பாதவர்கள் பத்தாம் வகுப்புப் படித்து முடித்ததும் மூன்றாண்டு பட்டயப்படிப்பில் சேர்ந்து பயின்ற பின் அதாவது மெக்கானிக்கல், மரைன், கப்பல் கட்டிடக்கலை, எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரிக்கல் ஆகிய பாடங்களை

மூன்றாண்டுகள் படித்துப் பட்டயம் அதாவது டிப்ளமோ பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு படித்தவர்கள் இரண்டு ஆண்டு கடல்சார் பட்டயப்படிப்பு அதாவது Pre-Sea Training Course என்பதில் சேர்ந்து பயின்று முடித்து விட்டால் கப்பல் பொறியாளர் வேலையில் ஆறு மாதப் பயிற்சிக்குப் பின் கப்பல் உலகில் சேர்ந்து பயிலலாம்.

இந்தக் கப்பல் பொறியாளர் பட்டமோ, பட்டயமோ வீட்டில் இருந்து கல்லூரிக்குச் சென்று படிக்க முடியாது. கல்வி கற்றுக் கொடுக்கும் இடங்களில் தங்கித்தான் படிக்க வேண்டும். அதாவது Day Scholar ஆக இருக்க இயலாது. விடுமுறையில்தான் வீட்டிற்கு வர வேண்டும். 28 வயது வரை அதாவது மார்ச் முதல் நாள் அல்லது செப்டம்பர் முதல் நாள் நிறைவு செய்து இருக்கக் கூடாது. இதற்கும் மேலே சொன்னவாறு பார்வைத்திறன் இருக்க வேண்டும். நிறக்குறைபாடு இருக்கக் கூடாது.

**மேல் பட்டப்படிப்பு**

பொறியியல் பட்டம் பெற்றவர்கள் அதற்கு மேல் ஓராண்டுப் படிப்புப் படித்தால் மேல் பட்டப்படிப்புச் சான்றிதழ் பெற்று நான்காம் நிலை கடல்சார் பொறியாளர் ஆகலாம். இதனை மைய அரசு கப்பல் துறை அமைச்சரகம், ஆறு மாத காலக் கடல் பயிற்சிக்குப் பின் அளிக்கும். பி.ஈ. அல்லது பி.டெக். அல்லது கடல்சார் கட்டிடக்கலைப்



பட்டம் பெற்று இறுதி ஆண்டில் 50 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். பத்து அல்லது பன்னிரெண்டாம் வகுப்பில் ஆங்கிலத்தில் 50 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். வயது 28 நிறைவு அடைந்து இருக்கக் கூடாது. கண்பார்வைத் தகுதி மேலே சொன்னவாறு இருக்க வேண்டும்.

**8 அடி மலை**

உலகிலேயே மிகவும் தட்டையாக அமைந்துள்ள நாடு மாலத்தீவுதான். இந்த நாட்டில் உள்ள அதிகபட்ச உயரமான மலையின் அளவு எவ்வளவு தெரியுமா? 2.4 மீட்டர். அதாவது எட்டு அடி!

- நெ.ராமன், சென்னை.

இந்த மேல் பட்டப்படிப்பு கடல்சார் கல்வியில் சேர்ந்து நான்காண்டுகள் படித்து பி.டெக். மரைன் என்ஜினீயரிங் பட்டம் பெறாமல், மெக்கானிக்கல் பட்டத்தை நான்காண்டுகள் படித்துப் பெற்றபின் அதற்கு மேல் ஓராண்டு மட்டுமே படித்து கப்பல் பொறியாளராகப் பணிபுரிய வாய்ப்பு அளிக்கிறது. ஆக ஏற்கனவே பட்டம் பெற நான்காண்டுகள் அதற்கு மேல் ஓராண்டு பயிற்சியினை மைய அரசு கப்பல்துறை அமைச்சரகம் வழங்கி இந்த வேலைவாய்ப்பினை அளிக்கிறது. ஆனால் இந்த இரண்டுப் படிப்பை முழு ஆண்டும் தங்கிப் படிக்க வேண்டும். இதில் ஆறுமாத காலம் கடல் பயணம் செய்து பயில வேண்டும்.

**பி.எஸ்சி. நாட்டிகல் சயின்ஸ் கோர்ஸ்**

கணினி படித்துப் பட்டம் பெறுபவர்கள் பொறியியல் கல்லூரியில் பி.ஈ. கம்ப்யூட்டர் சயின்ஸ் பட்டமோ அல்லது கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து மூன்றாண்டு பி.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் பட்டமோ பெறுவது போன்று இந்தக் கடல்சார் பட்டப்படிப்பில் மூன்றாண்டுப் படிப்பு உள்ளது. இதற்கு பி.எஸ்சி. நாட்டிக்கல் சயின்ஸ் பட்டம் என்று பெயர். இதனையும் மைய அரசு கப்பல் துறை இயக்குனரகம் ஏற்றுள்ளது. இதனைப் பயின்றவர்கள் கப்பல்களில் உலக அளவில் 'நேவிகேட்டிங் ஆபீசர்' எனும் வேலை பெற வாய்ப்பளிக்கிறது.

இதுவும் கண்டிப்பாக தங்கிப் பயிலும் படிப்புத்தான். பன்னிரெண்டாம் வகுப்பில் இயற்பியல், வேதியியல், கணிதத்தில் ஆங்கிலத்துடன் சராசரியாக 60 சதவீதம் பெற்றிருக்க வேண்டும். வயது 17 முதல் 25 வரை இருக்க வேண்டும். இந்தப் படிப்புச் சேரும் முன் உடல் தகுதி, கண்பார்வை, நிறக்குருடுக் குறைபாடு எல்லாம் கப்பல் பயிற்சித்துறை அளித்துள்ளவாறு இருக்க வேண்டும்.

இப்படிப்பில் சேரும் முன்பே இவற்றை எல்லாம் சோதித்த பின்னரே



இப்படிப்பிற்குச் சேர்க்கிறார்கள். இதுதான் மற்ற பி.எஸ்சி. வகுப்பில் சேருவதற்கும் இதற்கும் வித்தியாசம்.

**நாட்டிகல் சயின்ஸ் டிப்ளமோ**

இந்தப் பட்டயப்படிப்பு இயற்பியல், கணிதம், வேதியியல், மின்னணு ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்கள் 55 சதவீத மதிப்பெண்களுக்குக் குறைவில்லாமல் இறுதியாண்டு பட்ட வகுப்பில் பெற்றிருந்தால் சேர்ந்து பயிலலாம். பி.ஈ., பி.டெக். பட்டம் தகுதியுடைய கல்லூரியிலிருந்து பெற்றவர்களும் இந்தப் படிப்பில் சேரலாம். இந்தப் படிப்புக்காலம் ஓராண்டு. இந்தப் படிப்புப் படித்தால் மைய அரசு கப்பல் துறையில் கப்பல்களில் நேவிகேட்டிங் ஆபீசர் என்னும் பணியைப் பெற வழி செய்யும். மைய அரசில் மட்டுமல்ல உலகில் எந்த நாட்டிலும் பணியாற்றலாம்.

இதுவும் கட்டாயமாக தங்கிப் படிக்கும் படிப்பாகும். ஜனவரி முதல் நாள் அல்லது ஆகஸ்டு முதல் நாள் 25 வயது முடிந்திருக்கக் கூடாது. மற்ற கடல்சார் படிப்பிற்கு என்ன மருத்துவத் தகுதியோ அதே தகுதிதான் இதற்கும் உள்ளது.

### 18 படி தத்துவம்

பூதங்கள் 5, பொறிகள் 5, புலன்கள் 5 ஆகிய 15 ஆன்ம தத்துவங்களின் துணையோடு ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று பாவங்களைக் கடப்பது பக்தி சாதனத்தின் ஒரு நிலையாகும். 18 படிகளும் இந்த தத்துவத்தையே உணர்த்துகின்றன.

-நெ.ராமன், சென்னை.

**பத்தாவது படித்தவர்களுக்கு**

ஆறு மாத காலப் படிப்பு இது. பொறியியல் வல்லுநர் படிப்புப் படிக்க வசதி வாய்ப்பு இல்லாதவர்கள் ஆறு மாத காலம் படித்துப் பணியில் சேர வாய்ப்பளிக்கும் படிப்பு இது. இதில் சேர பத்தாம் வகுப்புப் படித்து இருக்க வேண்டும். சராசரி 40 மதிப்பெண் பெற்றிருப்பதோடு ஆங்கிலத்தில் மட்டும் 40 சதவீத மதிப்பெண் கட்டாயம்.

2012 முதல் கடற்பயணப் படிப்பு வாரியம் Board of Examination for Seafares (BES) என்பது இதில் சேர்ந்திட நுழைவுத் தேர்வினை நடத்துகிறது. இதில் ஆங்கிலம், கணிதம், அறிவியல் ஆகியவற்றில் எழுத்துத் தேர்வில் பங்கு பெற வேண்டும். இத்தேர்வில் 50 சதவீத மதிப்பெண்களும் ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தது 40 சதவீத மதிப்பெண் பெற வேண்டும். உடல்நிலை குறித்த சோதனையும் உண்டு. இதற்குப் பிறகு அவர்கள் சேர விரும்பும் நிறுவனத்தையும் கொடுப்பார்கள். 25 வயதுக்கு மேல் இருக்கக் கூடாது. மருத்துவத் தகுதியும் வேண்டும்.

இந்தப் படிப்புப் படித்தவர்கள் இந்தியாவில், அயல்நாடுகளில் உள்ள கப்பல் வணிகக் கப்பல்களில் டெக் அல்லது என்ஜின் 'குரு' என்னும் பதவிகளில் சேரலாம். இதில் பணியாற்றிப் பயிற்சி பெற்றபின் மோட்டார்மேன், ஆயில் மேன், டெக்சேரால், போசன் எனப்படும் பணிகளை எட்டலாம். சில கல்வித்தகுதிகள் பெற்றபின் அலுவலர் நிலைக்கு உயர்த்தப்படுவார்கள்.

'டெக்ரேட்டிங்' என்பது பாதுகாப்பான கடற்பயணம், சரக்குகளை நிர்வகித்துச் செய்வது. அவர்கள் கப்பல்களுக்குப் பழுதுகளைப் பாதுகாப்பது, வண்ணம் தீட்டுவது, கிரீஸ் எனப்படும் பசை தீட்டுவது ஆகியவற்றையும் செய்ய வேண்டும். கடலில் கப்பலைச் செலுத்துவதற்கு ஏணி முதலிய கருவிகளை இயக்கும் பணியும் செய்வதாகும். தகுதி வாய்ந்தவர் கப்பல் மாலுமியாகவும் ஆகக் கூடும்.

**என்ஜின் ரேட்டிங்**

தண்ணீரில் மிதக்கும் கப்பலின் பொறியியல், மின்சாரக் கருவிகளின் இயக்கம், நிர்வகிப்பு ஆகியவற்றை மேற்கொள்வது ஆகும். இவர்கள் கப்பலின் பொறிகள் அறையில் பணியாற்ற வேண்டும். அங்கு பொறியாளருக்கு உதவி செய்வது

ஆகும். பொறிகளின் இயக்கங்களை உற்றுக் கவனித்து அவற்றினை குறித்துப் பதிவு வைத்து இருக்க வேண்டும். இப்பதவியில் இருப்பவர்கள் பல்வேறு தேர்வுகள், பணியாண்டுகளை நிறைவு செய்தபின் தலைமைப் பொறியாளர் (Cheif Engineer) பதவி வரை உயரலாம்.

**கப்பல் பணிகள்**

கப்பல்களில் இரண்டு தூண்கள் உள்ளனர். ஒருவர் தலைமைப் பொறியாளர், மற்றையவர் கப்பல் தலைவர் – கேப்டன் எனும் பதவி வகிப்பவர். தலைமைப் பொறியாளரின் கீழ் அவருடைய கட்டளையை ஏற்றுச் செயல்படப் பல பொறியாளர்கள் உள்ளனர். அதுபோலவே கப்பலைத் தொல்லையின்றி கடலில் செலுத்திட பல கேடட்டுகள் அவருக்கு உதவியாக உள்ளனர்.

கப்பலின் என்ஜின் பகுதியில் வேலை செய்ய ஒருவர் என்ஜினீயரிங்கில் பட்டம் பெற வேண்டும். மெக்கானிக்கல் என்ஜினீயர் 50 சதவீத பொறியியல் பணிகளை மேற்கொள்கிறார். மரைன் என்ஜினீயரிங் பட்டம் பெறாமல் மெக்கானிக்கல் என்ஜினீயரிங் பட்டம் பெற்றவர்களுக்கும் என்ஜின் துறையில் சேர்ந்து மரைன் என்ஜினீயர் போல பணியாற்றலாம் என்றாலும் மரைன் என்ஜினீயரிங்கில் அதற்கெனப் பயிற்சி பெற வேண்டும்.

மெக்கானிக்கல் என்ஜினீயரிங் படித்தவர்களுக்கு, அரசு, அரசு உதவி பெற்ற கல்வி நிறுவனங்கள் ஜி.எம்.இ. (Graduate Mechanical Engineers) என அறியப் பெற்ற ஓராண்டு மரைன் என்ஜினீயரிங் பயிற்சிப் படிப்பினை அளிக்கின்றன. மெக்கானிக்கல் என்ஜினீயரிங் பட்டம்தான் இதில் சேர அடிப்படைத் தகுதி. வயது 24 ஆண்டுகள் வரை. தகுதியின் அடிப்படையில் இந்தப் பயிற்சிக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன் சேரத் தகுதி பெற்றோர்

ஒரு மேதையின் புத்திசாலித்தனம் ஒரு சதவிகிதம் திடீரென்று உதிக்கும் யோசனைகளிலும், 99 சதவிகிதம் வியர்வையிலும் அடங்கியிருக்கிறது.

-எடிசன்

உன்னுடைய எதிரிகளை எப்போதும் மன்னித்துக் கொண்டே இரு... அதைக் காட்டிலும் வேறெதுவும் அவர்களை அவமானப்படுத்துவதில்லை.

- அயர்லாந்து

தெரிந்து கொள்ளாமல் இருப்பது மன்னிக்கக் கூடியது. தெரிந்து கொள்ள விரும்பாதது மன்னிக்க முடியாதது.

-வால்டர் ஸ்டேபிள்ஸ்

மனிதன் எந்த அளவுக்கு சிந்திக்கும் ஆற்றல் உடையவனாக இருக்கிறானோ, அந்த அளவுக்கு சுதந்திரமாக இருக்க முடியும்.

- எமர்சன்

யாரொருவர் கற்பனைத் திறன் இல்லாதவராக இருக்கிறாரோ, அவர் நிலத்திலிருந்து எழ முடியாது. அவருக்கு சிறகுகள் இல்லை. அவரால் பறக்கவே முடியாது.

-முகமது அலி

*தொகுப்பு- சரலூர் ஜெகன்.*

பட்டியல் வெளியிடப்படும்.

இதற்கு உள்ள பட்டம் பயிற்சியை அளிப்பவை இவை.

Training Ship, Chanakya, Navi Mumbai.

Marine Engineering and Research Institute (MERI), Kolkata.

MERI, Mumbai.

Lal Bahadur Shastri College of Advanced Maritime Studies and Research, Mumbai.



**மரைன் என்ஜினீயரிங் கல்லூரிகள், நிறுவனங்கள்**

முதலில் மரைன் என்ஜினீயரிங்கில் உள்ள பல்வேறு படிப்புகளைக் காண்போம். நான்காண்டு காலப்படிப்பில் தியரி வகுப்புகள், பிராக்டிகல் வகுப்புகள், கப்பலுக்கு வெளியே உள்ளே பயிற்சிகள் எலக்ட்ரானிக், கணினி, தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றிலும் அளிக்கப்படுகின்றன. எட்டு செமஸ்டர்கள் பயில வேண்டும். பாடத்திட்டத்தில் கப்பல் இயக்கும்



தொழில் நுட்பம் தவிர, கடல் பயண வணிகம், கடல்சார் பொறியியல், சுற்றுச்சூழல் அறிவியல், கட்டுப்பாட்டுக் கருவிகள் இயக்கம் ஆகியவையும் அளிக்கப்படுவதால் படிப்பு முடிந்த உடனே பணியில் சேரப் போதிய அறிவுத்திறன் அளிக்கப்படுகிறது.

மரைன் என்ஜினீயரிங் கல்வியை அளிக்கும் நிறுவனங்கள் AMET University பி.ஈ. படிப்பு முதல் பி.எச்டி. படிப்பு வரை கொண்டுள்ளது. சென்னையில் உள்ளது. பி.டெக். படிப்பை National Maritime Academy வழங்குகிறது. தமிழ்நாட்டில் பல பொறியியல் கல்லூரிகளில் இப்பட்டப்படிப்பு அளிக்கப்படுகிறது. சிலவற்றில் 60 இடங்களும், சிலவற்றில் 30 இடங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் மரைன் என்ஜினீயரிங் பட்ட வகுப்பு நடத்துபவை:

Cape Institute of Technology

G.K.M. College of Engineering & Technology

Md Sathak Engineering College

Noorul Islam College of Engineering

P.S.N. College of Engineering

Park College of Engineering Technology

PET College of Engineering

Rajalakshmi Engineering College

SAMS College of Engineering and Technology

Sri Nandhana College of Engineering Technology

Sri Venkateswara College of Engineering

கடல்சார் படிப்புப் படித்தால் கடலில் பயணித்துக் கப்பலிலேயே பயணம் செய்து வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்றில்லை. கடலில் இல்லாமல் கரையில் நிலத்தில் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் வாய்ப்புகளும் உள்ளன. தகவல் தொழில்நுட்பத் துறையிலிருந்து கன்சல்டன்சி சர்வீஸ் வரை பணியாற்றும் வாய்ப்புகள் உள்ளன. இந்திய அரசுப் பணியிலும் சேர்ந்து பணியாற்றுவோர் உள்ளனர். இது தவிரப் பல தொழில்நுட்பப் பள்ளிகள், கல்லூரிகளில் வெளிநாடுகளிலும் பணியாற்றுகின்றனர்.

இந்தப் படிப்பிற்கு ஆகும் செலவு நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடுகிறது. இண்டியன் மாரிடைம் பல்கலைக்கழகத்தில் மொத்தப் படிப்பிற்கும் ரூ.2,20,000 தான். ஆனால் HIMSAR நிறுவனத்தில் ரூ.8,00,000 வரை ஆகும். Haldia Institute of Maritime Studies–ல் படிப்புக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.1,00,000 ஆகும். ஆனால் இண்டியன் மாரிடைம் பல்கலைக்கழகம் மொத்தப் படிப்பிற்கே ரூ.2,20,000 தான் கட்டணம் பெறுகிறது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை வழங்குகின்றன. இடஒதுக்கீடும் உள்ளது.

கடல்சார் படிப்பு என்பது பொறியியல் படிப்புகளிலேயே அதிகக் கட்டணம் செலுத்திப் படிக்க வேண்டிய படிப்பாக இருப்பது உண்மை. எனவே படிப்புக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் முதல் ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் வரை உள்ளது. ஆனால் பணியில் கிடைக்கும் ஊதியம் பின்னால் இச்செலவை ஈடுகட்டும்.

இளநிலைப் பொறியாளரிலிருந்து தலைமைப் பொறியாளர் வரை மாத சம்பளம் ரூ.50,000 முதல் ரூ.3 லட்சம் வரையிலும் அதற்கு மேலும் கிடைக்கிறது. எனவே படிப்புக் கட்டணம் குறித்து கவலைப்படாதவர்கள் இப்படிப்பில் படிக்கச் சேரலாம்.

## 'கடன்' பற்றிய பழமொழி

வாக்குறுதி என்பது கூட, ஒரு வகைக் கடன்தான்.

-ஆப்பிரிக்கா

கடன் கொடுப்பதன் மூலம் நீ பணத்தை இழக்கிறாய். அல்லது ஒரு எதிரியைச் சம்பாதித்துக் கொள்கிறாய்.

-அல்பேனியா

நீ கடன் கொடுக்கும் போது அவர்கள் உன்னை வணங்கினார்கள்; வசூலிக்கும் போது நீ அவர்களை வணங்க வேண்டும்.

-ரஷ்யா

தொகுப்பு:- பாலு, சென்னை.

# யானையும் முதலையும்

## (பாகவதம், அஷ்டம் ஸ்கந்தம்)

ஒரு காலத்தில் திரிகூட் என்ற பெயர் உடைய மலை அருகில் ஒரு யானை தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது. அங்கு சூழ்நிலை மிகவும் நன்றாக, அழகாக இருந்தது. நன்னீர் நதிகளால், வண்ண மலர்களினால் ஆன தோட்டங்கள் மிகவும் அழகாக இருந்தது. ஒரு நாள் யானை தனது குடும்பத்துடன் ஏரியில் குளிப்பதற்காகச் சென்றது. வரப்போகின்ற கஷ்டம் தெரியாமல் அந்த யானை ஏரியில் மிகவும் மகிழ்ச்சியுடனும் சுகமாகவும் குளித்துக் கொண்டிருந்தது.



அதே ஏரியில் ஒரு முதலையும் இருந்தது. முதலை தன் பசியைப் போக்க யானையின் காலை பிடித்து உள்ளே இழுக்க ஆரம்பித்தது. இரண்டும் அவரவரது சரீர சக்திகளை சோதித்துப் பார்த்தன. உடலமைப்பில் யானை விசாலமான, சக்திசாலியான மிருகமாக இருந்தது. ஆனால் அதனது சக்தி வெற்றியுடையதாக ஆகவில்லை. முதலை நீரினுள் இழுத்துக் கொண்டே சென்றது. யானை நீரில் மூழ்க ஆரம்பித்தது. யானையின் உயிர் குறுகியது. தூரத்தில் நின்று கொண்டிருந்த அந்த யானையின் குடும்பத்தினர்கள் பார்த்துக் கொண்டே இருந்தனவே தவிர அவைகளால் யானைக்கு உதவி செய்ய முடியவில்லை.

கடைசியில் இந்த கஷ்டத்திலிருந்து காப்பாற்றக் கூடியவர் ஒரே ஒரு பரமாத்மாதான் என்று யானை நினைத்தது. இந்த நம்பிக்கையுடன் அனைத்தையும் மறந்து தனது பாதுகாப்பிற்காக ஸ்ரீஹரியை (ஆதிமூலமே! அனாதை ரட்சகா) வேண்டிக் கொண்டது. கருணையுள்ளம் உடைய ஸ்ரீஹரி உடனே பிரத்தியட்சமாகி சுதரிசன சக்கரத்தினால் முதலையை அழித்து விட்டார்.

**ஆன்மீக விளக்கம்:** யானை மற்றும் முதலைக்கான யுத்தமானது மன்மனாபவ என்ற மந்திரத்தின் மூலம் வெற்றியடைவதையே நாடகம் தெளிவுபடுத்துகின்றது. யானை முழுமையாக மூழ்கி தும்பிக்கையின் சிறிது பாகம் மட்டும் பாக்கியிருக்கின்ற பொழுது அது தனது சக்தி, தனது சொந்தங்கள் மற்றும் தன்னையே மறந்து வேற்றுமைகளை நீக்கி ஒரு பரம்பிதா பரமாத்மாவை நினைவு செய்தது. அந்த கடைசி நேரத்தில் நினைவு செய்தவுடனேயே ஈஸ்வரனின் உதவி கிடைத்தது. இந்த நிலையே மன்மனாபவ நிலையாகும்.

ஞான தாரணை செய்யக் கூடிய மனித ஆத்மாக்கள் யானை அதாவது மகாரதிகளுக்கு சமமானவர்களாக இருக்கின்றார்கள். மாயை இந்த உலகம் என்ற கடலில் இருக்கக் கூடிய முதலையாக இருக்கின்றது. மாயை என்ற முதலை ஞானி குழந்தைகளை சாப்பிட்டு விடுகின்றது. முதலையைப் போன்றே மாயையும் குப்த ரூபத்தில் (மறைவாக) வந்து ஞானிகளைப் பிடித்துக் கொள்கின்றது. இப்படிப்பட்ட மாயையிடமிருந்து ஒரு பரமாத்மாவின் நினைவின் மூலமே முக்தியடைய முடியும்.

(தொகுப்பு:- பழமொழிக் கதைகள்)

# பொன்மொழிகள்!

துன்பம் அளவில்லாமல் வருகிறதே என்று வருந்த வேண்டாம்; இது முன்வினைப் பயன். சிரித்தபடியே வந்த துன்பங்களைத் தாங்கிக் கொள்ள பழகுங்கள்; இதனால் விடுதலை பெறலாம். துன்பத்தைத் தாங்க முடியாமல் உங்களைச் சார்ந்திருப்பவர்களை நிந்திக்காதீர்கள்; குறை சொல்லாதீர்கள். நீங்கள் இந்தப் பிறவியிலேயே விடுதலையாக இது வழி.

- பகவான் கிருஷ்ணர்

* அன்பற்ற வாழ்க்கை மரணத்திற்கு ஒப்பானது.

- காந்திஜி

* மரணம் நேர்வதை தடுப்பதற்கில்லை என்றால் கற்களைப் போலவும் கட்டைகளைப் போலவும் செத்து மடிவதை விட வீரர்களைப் போல இறப்பது மேலானதல்லவா? நிலையில்லாத இந்த உலகிலே இரண்டொரு நாள் அதிகமாகவே வாழ்ந்து விடுவதால் பெறப்போகிற பலன்தான் என்ன? இந்த உடல் தேய்ந்து அழிவதை விட மற்றவர்களுக்காகப் பயன்பட்டு அழிவது மேலானது.

- விவேகானந்தர்

* பிரச்சினைகள்தான் மிகப்பெரிய சாதனைகளையும் மிக உறுதியான மனப்பலத்தையும் வெற்றியையும் வழங்குகின்றன. ஆகையால் பிரச்சினைகள் வந்தபடி இருக்கட்டும்.

- கென்னடி

* மனப்பலம் உள்ளவனால் எதையும் சாதிக்க முடியும். மனப்பலம் இல்லாதவன் கோழைப்போல் முன்னேற இயலாமல் பயனின்றி இருப்பான்.

- பெர்னாட்ஷா

* முற்றும் துறவி உனக்கு உபதேசம் செய்தால் அதை அப்படியே ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்து நட. உலகப்பற்றுக் கொண்ட மக்கள் கூறும் யோசனைகளைக் கேட்காதே. அவன் பண்டிதனாக இருந்தாலும் அவன் பேச்சைக் கேட்டு நடவாதே.



- ராமகிருஷ்ணர்

தொகுப்பு:- ராதா.

## அறிவுத்திறன் போட்டி - 155
## விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 இ | ஸ் | 2 ரோ | ■ | 3 அ | ர | ண் |
| ணை | ல | ல் | 4 க | ■ | ■ | க |
| ■ | ■ | 5 மா | வி | லை | ■ | க் |
| 6 அ | ■ | 7 ட | ய | ர் | ■ | 8 மு |
| க் | ■ | ல் | ர | 9 உ | ■ | ■ |
| ப | லை | ■ | 10 சு | வா | 11 தீ | ■ |
| ர் | 12 வ | 13 சு | ■ | ■ | ரை | 14 சு |

## பரிசு பெற்றவர்கள் விவரம்:

அறிவுத்திறன் போட்டியில் பங்கு கொண்ட வாசக, வாசகியர் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. கட்டுக்கட்டாக கடிதங்கள் வந்து குவிந்தன. நூற்றுக்கணக்கானவர்கள் சரியான விடை எழுதி இருந்ததால் அவர்களில் 10 பேர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டனர். தலா ரூ.100 பரிசு பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள் பெயர் வருமாறு:

1. **எஸ்.கீதா,**
   சென்னை - 64.
2. **ஜி.ஐஸ்வர்யா,**
   செங்கல்பட்டு.
3. **வி.ஜெயப்பிரியா,**
   ஈரோடு-11.
4. **மாரி லட்சுமி,**
   தென்காசி, நெல்லை மாவட்டம்.
5. **எல்.ஸ்ரீமதி,**
   கோவை.
6. **வாசுதேவன்,**
   சென்னை-4.
7. **எம்.சாந்தா,**
   பெரம்பலூர்.
8. **ஆர்.மல்லிகா,**
   காஞ்சிபுரம்.
9. **மா.ரெ.நளினி,**
   கும்பகோணம், தஞ்சை மாவட்டம்.
10. **புவனா ஆதிசங்கர்,**
    செகந்திராபாத், ஆந்திரா.

## அறிவுத்திறன் போட்டி - 156

இது அதிர்ஷ்டப்போட்டி அல்ல. அறிவுத்திறனை எடை போடும் போட்டி. யார் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். இந்த பக்கத்தில் வெளியாகி உள்ள கட்டத்திலேயே விடைகளையும், கீழே முழு முகவரியையும் தெளிவாக எழுதி கத்தரித்து அனுப்ப வேண்டும்.

10 பேருக்கு தலா ரூ.100 பரிசு உண்டு. அதிகம் பேர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் 10 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத்தொகை அளிக்கப்படும்.

### ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 18.01.2013**

**இடமிருந்து வலம்:**

1. அதிகாலைப் பொழுது.
2. ஈரல் சம்பந்தமாக வரும் நோய்.
4. சபை.
5. மயிர் நீப்பின் உயிர் வாழாத ஜீவன்.
8. வண்டு எழுப்பும் ஒலி–பூர்த்தியாகவில்லை.
10. சாளரம் – சரித்திர கதைகளில் வருவது.
11. பொன்னி – எதிர்பால்.

**வலமிருந்து இடம்:**

12. சாலையில் ஓடுவது. மாடு, குதிரை பூட்டியது.
13. எழுத்தாளர் தேவனின் நாவல் ஒன்றின் பிற்பகுதி.

**மேலிருந்து கீழ்:**

1. உலகம்.
3. மழை.
4. கஷ்டம்.
6. ராமாயணத்தில் வரும் பொய்மான்.
7. உலக்கையோடு சம்பந்தப்பட்டது.
9. காடு.
11. தூள்.

-கே.வி.

## பரிசுத்தொகை ரூ.1000

அனுப்ப வேண்டிய முகவரி:

அறிவுத்திறன் போட்டி - 156
'பெண்மணி'
மாலைமுரசு பில்டிங்,
246, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு,
சென்னை - 600 006.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | 3 | |
| | 4 | | ■ | ■ | | ■ |
| 5 | | | 6 | | ■ | 7 |
| | | ■ | 8 | | 9 | |
| ■ | ■ | ■ | 10 | | | |
| 11 | | | | ■ | | ■ |
| | | 12 | ■ | | | 13 |

## அறிவுத்திறன் போட்டி - 156

முகவரி :------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

அஞ்சல் எண்: ------------------------------------

மாவட்டத்தின் பெயர்------------------------------

'மரம் நடுவிழா' என்ற பெயரில் 10 மரக்கன்றுகளை நட்டு விட்டு போட்டோவுக்கு மட்டும் 'போஸ்'



# காட்டை உருவாக்கிய சாதனை மனிதர்!

கொடுத்து விட்டு பிறகு அதைப் பற்றியே கவலைப்படாமல், பராமரிக்காமல் விட்டு விடும் மனிதர்களுக்கு மத்தியில் 'ஜாதவ் பயேங்' உலக சரித்திர வரலாற்றில் யாரும் செய்த முடியாத சரித்திர சாதனையை படைத்த ஒரு இந்தியர். தனி மனிதராக இருந்து 1,360 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு காட்டையே உருவாக்கியதுதான் இவர் செய்த மிகப்பெரிய சாதனை.

ஜாதவ் பயேங் அசாம் மாநிலத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவர். இவரின் செல்லப் பெயர் 'முலாய்'. பிரம்மபுத்திரா நதிக்கு அருகில்தான் இவரது கிராமம் இருந்தது. இவருக்கு 16 வயது இருக்கும் போது 1979-ம் ஆண்டு பிரம்மபுத்திரா நதியில் வெள்ளம் வந்தது. அதில் பல உயிரினங்கள் அடித்து வரப்பட்டன. வெள்ளம் வடிந்தபிறகு அந்த மணல் திட்டுகளின் வெப்பம் தாங்காமல் அனைத்து உயிரினங்களும் மடிந்தன.

உயிரினங்கள் மடிந்ததற்கு காரணம் அங்கே மரங்கள் இல்லாததால் நிலவும் வெப்பமான சூழலே என்பதை அறிந்து கொண்டார் ஜாதவ். இதனால் மரங்கள் வளர்க்க வனத்துறையை அணுகினார். ஆனால் அந்த மணல் படுகையில் மூங்கிலைத் தவிர வேறு மரங்களை வளர்க்க முடியாது என்று கூறி விட்டனர். பிறகு 1980-ம் ஆண்டு அங்கே உள்ள 'கோகிலமுக்' என்ற இடத்தில் 200 ஹெக்டேர் மணல் படுகையில் 'சமூக காடுகள் வளர்ப்பு' திட்டத்தின் கீழ் வனத்துறையினர், கிராம மக்கள் மூங்கில் கன்றுகளை நட்டு வைத்தனர். அவ்வளவுதான், பிறகு யாரும்

அதைப்பற்றி கண்டு

ஆனால் ஜாதவ் மட்டும் அங்கேயே தங்கி மரங்களைப் பராமரிக்கத் தொடங்கினார்.

200 ஹெக்டேர் முழுவதும் மூங்கில்கள்தான் வளர்ந்தன. அதனால் ஜாதவ் ஒரு யுக்தியைக் கையாண்டார். ஒரு வகையான சிவப்பு நிற எறும்புகளை சேகரித்து வந்து அந்த



மணல்களில் விட்டார். அந்த எறும்புகள் அந்த மணலை எல்லா மரமும் வளரும் சூழலுக்கு ஏற்றவாறு



மாற்றின. பிறகு அனைத்து வகையான மரங்களையும் வளர்த்து பராமரிக்க ஆரம்பித்தார். இப்படியே 30 வருடங்கள் ஓடின. அந்தப் பகுதி அடர்ந்த மரங்கள்



நிறைந்த காடாக மாறியது. 2008-ம் வருடம் வரை இந்த காடு யாருக்கும் வெளியுலகிற்கு தெரியாமல் இருந்தது. அதிலும் குறிப்பாக அந்த பகுதியிலிருந்த வனத்துறையினருக்கே தெரியாமல் இருந்தது.

2008-ம் ஆண்டு ஒரு யானைக்கூட்டம் இந்த காட்டிற்குள் புகுந்தது. யானைகளைத் துரத்தி வந்த வனத்துறையினர் இப்படி ஒரு காடு இருப்பதைக் கண்டு வியந்து போயினர்.

'இந்த இடத்தில் இவ்வளவு பெரிய காடா?' என்று ஆச்சர்யம் அடைந்த அவர்கள் ஜாதவ் பற்றி கேள்விப்பட்டு, பிறகு முழு விவரங்களையும் அறிந்தனர். மரங்களை பராமரிக்க வேண்டும் என்பதற்காக இந்த காட்டிற்குள்ளேயே இவர் ஒரு சிறிய வீட்டைக் கட்டி தனது மனைவி, மகள், இரு மகன்களுடன் வாழ்ந்து வருகிறார். வருமானத்திற்கு சில கறவை மாடுகளை வளர்த்து பால் வியாபாரமும் செய்து வருகிறார்.

தற்போது இந்த காட்டில் தேக்கு, அகில், சந்தனம், கருங்காலி போன்ற மரங்களும், 300 ஹெக்டேர் பரப்பளவுக்கு மூங்கில் காடுகளும் வளர்ந்துள்ளன. அங்கே நூற்றுக்கும் மேற்பட்ட யானைகளும், மேலும் சில மிருகங்களும், பறவை இனங்களும் வாழ்கின்றன.

தற்போது இந்த காட்டை 'முலாய்க் காடுகள்' என்று அழைக்கின்றனர். இந்த காட்டைப் பற்றி ஜாதவ் பயேங்கிடம் கேட்டபோது, "இது என் மண்ணுக்கு நான் செய்ய வேண்டிய கடமை" என்று ஒரே வரியில் பதிலளித்தார்.

ஒரு சிறு சாதனை செய்தாலே தம்பட்டம் அடிக்கும் மனிதர்களுக்கு மத்தியில் யாரும் செய்ய முடியாத ஒரு வரலாற்று சாதனையை நிகழ்த்திவிட்டு சர்வ சாதாரணமாக வாழ்ந்து வரும் ஜாதவ் பயேங் உண்மையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மனிதர்தான் என்பதில் ஐயமில்லை.

## கொழுப்பின் அளவை குறைக்கும் நெல்லிக்கனி

அனைவருக்குமே நெல்லிக்கனியைப் பற்றி நன்கு தெரியும். நெல்லிக்கனியில் வைட்டமின் 'சி' அதிக அளவில் நிறைந்துள்ளது. இந்த நெல்லிக்கனியில் அதிகமான அளவில் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்திருப்பதால், இதனை ஆயுர்வேத மருந்துகளில் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர்.



நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நெல்லிக்கனியை சாப்பிட்டால் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தும். உடலில் இருக்கும் கொழுப்பின் அளவைக் குறைக்கும்.

இது ஒரு இயற்கையான ஆன்டி ஏஜிங் பொருள். ஆகவே இதனை உட்கொண்டால் சருமத்திற்கு மிகவும் சிறந்தது. மேலும் கூந்தல் வளர்ச்சியை அதிகரிக்கும். செரிமான மண்டலத்தை சரியாக இயங்கச் செய்து, மலச்சிக்கலை சரிசெய்யும். உடலில் ரத்த ஓட்டத்தை சீராக்கும். கல்லீரலின் செயல்பாட்டை முறையாக நடத்துகிறது.

இதனை தினமும் சாப்பிட்டு வந்தால், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, எந்த நோயும் உடலை தாக்காமல் பாதுகாக்கும். நெல்லிக்கனி உடலில் உள்ள ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கும்.

# சமையல் மேஜை



சரோஜா சீனிவாசன். மும்பை வாசி. சிறுவயதிலிருந்தே கோலம் போடுவது, புத்தகம் படிப்பது, இசை கேட்பது இதிலெல்லாம் மிகவும் ஆர்வம் உடையவர். வீட்டில் அன்றாடம் சமையல், பட்சணங்கள் செய்வது இவரது வாடிக்கை. வீட்டிலுள்ளவர்களும், விருந்தாளிகளும் விரும்பி ஆசையாக சாப்பிடுவார்கள், பாராட்டவும் செய்வார்கள். இவருடைய கோலம், டிப்ஸ், பெண்மணி போன்ற இதழ்களில் பிரசுரமாகி இருக்கிறது.



இவருக்கு ஒரே மகன். மும்பையில் பணிபுரிகிறார். இசையில் மிகவும் ஆர்வமுள்ளவர் சரோஜா சீனிவாசன். மாதம் இரண்டு மூன்று கச்சேரிகளுக்கும் சென்று வந்து விடுவார்.



இவரது சமையல் குறிப்பை தெரிந்து வைத்துக் கொண்டு நாமும் ருசியாக சமைக்க கற்றுக் கொள்வோமா!

## ரவா லட்டு

**தேவையான பொருட்கள்:**

ரவை – ½ கிலோ, சர்க்கரைப் பவுடர் – ½ கிலோ, நெய் – 200 கிராம், ஏலக்காய் பொடி – ½ ஸ்பூன், முந்திரிப்பருப்பு – 50 கிராம், திராட்சை – 50 கிராம்.

**செய்முறை:**

வெறும் வாணலியில் ரவையை பொன்னிறமாக வறுத்து எடுத்து ஆறியதும் மிக்ஸியில் நைசாக பொடித்துக் கொள்ளவும். சிறிது நெய்யில் முந்திரி, திராட்சையை வறுத்து மாவில் கொட்டவும். பின்பு



ஏலப்பொடி, சர்க்கரைப் பொடியை போட்டு, நெய்யை உருக்கி ஊற்றி நன்றாக கலந்து சூடாக இருக்கும் போதே லட்டு பிடிக்கவும். உருட்டின லட்டுகளை தட்டில் அழகாக அடுக்கி வைக்கவும். ஆறியதும் எடுத்து டப்பாவில் அடுக்கவும்.

புதிதாக செய்பவர்கள் உருண்டை பிடிக்க வராவிட்டால் நெய் கொஞ்சம் கூடுதலாக சேர்த்தால் பிடிக்க வரும். இது செய்வது சுலபம். ருசியாகவும் இருக்கும். பண்டிகை நாளில் முதல்நாளே செய்து வைத்துக் கொள்ளலாம்.

## மாலாடு

**தேவையான பொருட்கள்:**

பொட்டுக்கடலை மாவு – 2 கப், சர்க்கரைப் பவுடர் – 2 கப், முந்திரிப் பருப்பு – 20 கிராம், ஏலக்காய் பொடி – ¼ ஸ்பூன், நெய் – 1 கப்.

**செய்முறை:**

வாணலியில் பொட்டுக்கடலையை போட்டு மிதமான தீயில் வறுத்துக் கொள்ளவும் (5 நிமிடம் போதும்). குழிவான



தட்டில் மாவு, சர்க்கரை, ஏலம், முந்திரி சேர்த்து நன்றாக கலக்கிக் கொள்ளவும். அடுப்பில் நெய்யை உருக்கி மாவில் ஊற்றி நன்றாக கிளறி சூடாக இருக்கும் போதே உருண்டைகளாக பிடித்து வைக்கவும். ஆறியதும் டப்பாவில் அடுக்கவும்.

உருண்டை பிடிக்கும்போது அழுத்தி பிடித்து உருட்ட வேண்டும். இல்லாவிட்டால் உதிர்ந்து விடும். இந்த லாடு செய்வதற்கு ரொம்ப எளிது.

## ஸ்ரீகண்ட்

**தேவையான பொருட்கள்:**

தயிர் – 2 லிட்டர், சர்க்கரை – 500 கிராம், குங்குமப்பூ – சிறிது, ஏலப்பொடி – 1 ஸ்பூன், முந்திரிப்பருப்பு – 10, கிஸ்மிஸ் – 10.

**செய்முறை:**

இரண்டு லிட்டர் பாலை காய்ச்சி ஆறவைத்து தயிராக உறைய வைக்கவும். தயிர் கெட்டியானதும் மாவு சலிக்கும்



சல்லடையில் விட்டு அடியில் ஒரு பாத்திரம் வைத்து தண்ணீர் முழுவதையும் வடிய வைக்கவும். வடிகட்டிய தயிரில் சர்க்கரையை போட்டு கரண்டியால் நன்றாக தேய்த்து கலக்கவும். பிறகு ஏலப்பொடி, குங்குமப்பூ சேர்த்து வட்டமான பவுலில் எடுத்து வைக்கவும். மேலே முந்திரி, திராட்சையை அழகாக தூவி பிரிட்ஜில் வைக்கவும். பரிமாறும் போது எடுக்க வேண்டும். இல்லையென்றால் புளித்து விடும்.

இனிப்பு அதிகம் விரும்புபவர்கள் சர்க்கரையை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். பாதாம், பிஸ்தாவையும் சீவி மேலே தூவலாம். இந்த ஸ்ரீகண்ட் சப்பாத்தி, பூரியுடன் சாப்பிட நன்றாக இருக்கும். விருந்தினர்கள் வருவதற்கு முன்பே தயார் செய்து வைத்துக் கொள்ளலாம். வருபவர்களுக்கும் புது அயிட்டமாக

திசுழும். விரும்பி சாப்பிடுவார்கள்.

இது மும்பாய் வாசிகளுக்கு பிரபலமான அயிட்டம். அநேகமாக எல்லா விசேஷங்களிலும் பூரி, ஸ்ரீகண்ட் செய்து விடுவார்கள்.

## ரவா பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

ரவை – 1 கப், பாசிப்பருப்பு – 4 ஸ்பூன், நெய் – 4 ஸ்பூன், பெருங்காயம் – சிறிதளவு, முந்திரிப்பருப்பு – 10, மிளகு – 8, சீரகம் – 1 ஸ்பூன், கருவேப்பிலை – சிறிது, இஞ்சி துண்டு – 4, உப்பு – 2 ஸ்பூன்.

**செய்முறை:**

வாணலியில் ஒரு ஸ்பூன் நெய் விட்டு ரவையை பொன்னிறமாக வறுத்து ஒரு பாத்திரத்தில் போடவும். அதனுடன் பாசிப்பருப்பை சேர்த்து இரண்டு கப் நீர் விட்டு குக்கரில் வைத்து வேகவிடவும். இரண்டு விசில் வந்ததும் இறக்கி ஆறியதும் பொங்கலை எடுத்து பெருங்காயம், உப்பு போட்டு கலக்கவும். வாணலியில் இரண்டு ஸ்பூன் நெய்யை விட்டு முந்திரியை வறுத்து, ஒன்றிரண்டாக பொடித்த மிளகு, சீரகப்பொடி, கருவேப்பிலை, இஞ்சி ஆகியவற்றை போட்டு வதக்கி பொங்கலில் சேர்த்து கலக்கவும்.

பரிமாறும் முன் ஒரு ஸ்பூன் நெய்யை



விட்டால் மணமாக இருக்கும். இதற்கு கத்தரிக்காய் மசியல், தக்காளி மசியல் சிறந்த காம்பினேஷன்.

### கொள்ளு பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

கொள்ளு, அரிசி - தலா 1 டம்ளர், நெய் - 50 கிராம், மிளகு, சீரகம் - தலா 1 ஸ்பூன், கருவேப்பிலை - சிறிதளவு, முந்திரிப்பருப்பு - 5, உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**

கொள்ளை வாசம் வரும்வரை நன்கு வறுத்து மிக்ஸியில் ஒன்றிரண்டாக உடைத்துக் கொள்ளவும். முடிந்த அளவு தோலை அகற்றி, அரிசியுடன் சேர்த்து குக்கரில் வேக வைக்கவும். வாணலியில் நெய்விட்டு முந்திரி, கருவேப்பிலை, மிளகு, சீரகம் வறுத்து, பொங்கலில் சேர்த்து உப்புப் போட்டு நன்கு கிளறவும்.

இந்த பொங்கல் குளிர்காலத்துக்கு ஏற்றது. உடலுக்கு சத்து கொடுக்கும். அத்துடன் ஊளைச்சதையையும் குறைக்கும்.

*– உ.சுல்தானா, கீழக்கரை.*

## மைசூர் போண்டா

**தேவையான பொருட்கள்:**

உளுத்தம்பருப்பு – 1 கப், அரிசி – ¼ கப், பச்சை மிளகாய் – 3, இஞ்சி – சிறு துண்டு, கருவேப்பிலை – 1 கொத்து, பெருங்காயத்தூள் – சிறிது, தேங்காய் (பல் பல்லாக சிறிய துண்டு) –10, முந்திரிப்பருப்பு – 5, மிளகு – 6, எண்ணெய் – 3 கப்.

**செய்முறை:**

உளுத்தம் பருப்பு, அரிசியை இரண்டு மணி நேரம் ஊற வைத்து வடித்து உப்பு, மிளகாய் சேர்த்து தண்ணீர் அதிகம் விடாமல் மிக்ஸியில் நைசாக அரைக்கவும். (மாவு உருட்டி போடும் பதத்தில் இருக்க வேண்டும்.) அரைத்த விழுதில் கருவேப்பிலை, தேங்காய் துண்டு, முந்திரி துண்டு, மிளகு, நறுக்கிய இஞ்சி, பெருங்காயத்தூள் அனைத்தையும் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் மாவை உருண்டைகளாக போட்டு பொன்னிறமாக பொரித்தெடுக்கவும். தேங்காய்ச் சட்னியுடன் சாப்பிட நன்றாக சுவையாக இருக்கும். விடுமுறை நாட்களில் மாலை டிபனுக்கு இதை செய்தால் குழந்தைகள், பெரியவர்கள் விரும்பி சாப்பிடுவார்கள்.

## வெங்காய பக்கோடா

**தேவையான பொருட்கள்:**

கடலை மாவு – 1 கப், அரிசி மாவு – ¼ கப், பெரிய வெங்காயம் – 3, நெய் – 2 ஸ்பூன், பெருங்காயத்தூள் – சிறிதளவு, மிளகாய் தூள் – ½ ஸ்பூன், கருவேப்பிலை – சிறிது, இஞ்சி துண்டு – 5, மிளகாய் வற்றல் –2, முந்திரிப்பருப்பு – 6, எண்ணெய் – 4



கப், உப்பு - 1 ஸ்பூன்.

**செய்முறை:**

ஒரு அகலமான பாத்திரத்தில் கடலைமாவு, அரிசி மாவுடன் நெய்யை விட்டு நன்றாக கலக்கி உப்பு, பெருங்காயம், மிளகாய் தூள், உடைத்த முந்திரி, கருவேப்பிலை, கிள்ளிய மிளகாய், இஞ்சி, வெங்காயத் துண்டுகள் ஆகியவற்றையும் சேர்த்து கொஞ்சம் நீர் விட்டு கெட்டியாக பிசையவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் மாவை சின்னச் சின்ன துண்டங்களாக லேசாக கிள்ளினாற்போல் போடவும். (உருட்டக் கூடாது.) கொஞ்சம் வெந்ததும் திருப்பிப் போட்டு பொன்னிறமாக எடுத்து வடிதட்டில் போடவும். கொத்தமல்லியையும் சேர்க்கலாம். இதற்கு காரச் சட்னி, டொமேட்டோ சாஸ் நன்றாக இருக்கும்.

குடமிளகாய், கேரட், பீன்ஸை பொடியாக அரிந்து கலவையில் சேர்த்தும் வெஜிடபிள் பக்கோடா செய்யலாம்.

## காஞ்சிபுரம் இட்லி

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி - 1 கப், உளுத்தம்பருப்பு - 1 கப், மிளகு - 10, சீரகம் - 1 ஸ்பூன், பெருங்காயத்தூள் - 1 சிட்டிகை,



கருவேப்பிலை - 1 ஆர்க்கு, பச்சை மிளகாய்-1, இஞ்சி - சிறு துண்டுகள், எண்ணெய் - 2 ஸ்பூன், நெய் - 2 ஸ்பூன், உப்பு - 1 ஸ்பூன்.

**செய்முறை:**

அரிசி, பருப்பை இரண்டு மணி நேரம் ஊற வைத்து வடிகட்டி மிக்ஸியில் போட்டு கரகரப்பாக ரவை பக்குவத்தில் அரைக்கவும். நான்கு மணி நேரத்திற்கு பிறகு செய்தால் மாவு சிறிது புளித்திருக்கும். அப்பொழுதுதான் இட்லி மிருதுவாகவும் ருசியாகவும் இருக்கும்.

வாணலியில் எண்ணெய், நெய் விட்டு மிளகு, சீரகம், பெருங்காயம் தாளித்து நறுக்கிய மிளகாய், இஞ்சி துண்டுகள் போட்டு வதக்கி மாவில் கொட்டவும். குக்கரில் நான்கு டம்ளர் நீர் விட்டு அதில் இட்லி ஸ்டாண்டு அல்லது தட்டை போட்டுவிட்டு அதற்கு மேல் குக்கரில் வைக்கும் பாத்திரத்தில் நெய், எண்ணெய் சேர்த்து அடியிலும், நான்கு பக்கமும் தடவிவிட்டு மாவை அதில் கொட்டி குக்கரை மூடி விடவும். வெயிட் போடாமல் 25 நிமிடம் கழித்து குக்கரை திறந்தால் இட்லி ரெடி.

மாவில் 5, 6 முந்திரிப்பருப்புகளையும் வறுத்துப் போடலாம். இட்லி வெந்ததும் பார்க்க அழகாகவும், சுவையாகவும் இருக்கும். குக்கரை திறந்து பாத்திரத்தை

## கருப்பட்டி பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

அரிசி -1 ஆழாக்கு, கருப்பட்டி - ½ கிலோ, பால் - 3 கப், பயத்தம்பருப்பு - 1 கப், நெய் - 50 கிராம், முந்திரிப்பருப்பு -5, ஏலக்காய் தூள் - ½ ஸ்பூன்.

**செய்முறை:**

கருப்பட்டியை தட்டி பாகு வைத்து வடிகட்டவும். அரிசி, பருப்பை களைந்து அத்துடன் பாலை சேர்த்து நன்கு குழைய வேக வைக்கவும். வெந்த பொங்கலில் பாகை சேர்த்து கலக்கவும்.

சிறிது நெய்யில் முந்திரியை வறுத்துப் போட்டு ஏலக்காய் தூளையும் சேர்க்கவும். மீதமுள்ள நெய்யை விட்டு சூடாக பரிமாறவும். வாசம் நிறைந்த சுவையான பொங்கலை அனைவரும் விரும்பி சாப்பிடுவர்.

*- வே.சித்ரா, திருவண்ணாமலை.*



திராட்சை – 10, ஏலக்காய் தூள் –1 ஸ்பூன், காய்ச்சிய பால் – 50 மி.லி.

**செய்முறை:**

வாணலியில் நெய் ஊற்றி உருகியதும் முந்திரி, திராட்சையை வறுத்து எடுத்துக் கொள்ளவும். அதே நெய்யில் ஓட்ஸை போட்டு மீதமான தீயில் வறுத்து எடுக்கவும். சூடு ஆறிய பின்பு, ஓட்ஸை மிக்ஸியில் இட்டு பொடித்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் பொடித்த ஓட்ஸ், பொடித்த சர்க்கரை, தேங்காய்த்துருவல், ஏலக்காய் தூள் மற்றும் வறுத்த முந்திரி, திராட்சையுடன் சூடான பால் தெளித்து உருண்டை பிடிக்கவும். இது மிக எளிதாக செய்யக்கூடிய சத்து மிக்க லட்டு.

## சுரைக்காய் அல்வா

**தேவையான பொருட்கள்:**

சுரைக்காய் – 1 கப், பால் – ½ கப், சர்க்கரை – 1¼ கப், நெய் – 3 டேபிள் ஸ்பூன், முந்திரிப்பருப்பு – 10, கிஸ்மிஸ் (திராட்சை) – 10, ஏலக்காய் – 2, அல்வா கலர் பொடி – சிட்டிகையளவு.

**செய்முறை:**

சுரைக்காயை தோல்சீவி பொடியாக நறுக்கி அதனுடன் பாலை சேர்த்து குக்கரில் வேகவைக்கவும். பின்பு இதனை மிக்ஸியில் நன்கு மசிய அரைத்துக் கொள்ளவும்.

வாணலியில் நெய்விட்டு முந்திரி, கிஸ்மிசை வறுத்து எடுக்கவும். அதே நெய்யில் அரைத்த சுரைக்காய் விழுது, சர்க்கரை, கலர் பொடி சேர்த்து கிளறவும். அல்வா பதம் வந்தவுடன் வறுத்த முந்திரி, திராட்சையையும் ஏலக்காய் பொடியையும் சேர்த்து கிளறி இறக்கி பரிமாறவும்.

மீதமான இட்லிகளை உதிர்த்து நீர் விட்டு நைசாக அரைக்கவும். இத்துடன் ஒரு ஸ்பூன் மைதா மாவு, நறுக்கிய பச்சை மிளகாய், கொஞ்சம் உப்பு சேர்த்து மெல்லிய தோசையாக வார்த்தால் பேப்பர் ரோஸ்ட் போல் சுவையாக இருக்கும்.

மோரில் ஊற வைத்த வாழைப்பூவை சிறிது நெய்யில் வதக்கி துவையல் செய்தால் சுவையில் அசத்தும்.

– உஷா நடராஜன், சென்னை.

## கடலைப்பருப்பு பாயசம்

**தேவையான பொருட்கள்:**

கடலைப்பருப்பு – 100 கிராம், வெல்லம் – 300 கிராம், தேங்காய் – 1, பச்சரிசி மாவு – 1 ஸ்பூன், ஏலக்காய்– 5, முந்திரிப்பருப்பு – 10, கிஸ்மிஸ்–10, நெய் – 1 டேபிள் ஸ்பூன்.

**செய்முறை:**

கடலைப்பருப்பை சிறிது நெய் விட்டு வாசனை வரும் வரை வறுக்கவும். பின்பு நீர்விட்டு குழையாமல் வேகவைக்கவும். தேங்காயை துருவி அரைத்து கெட்டியான முதல் பால் ஒரு டம்ளர் எடுத்து வைத்த பின், இரண்டாம் பால் எடுக்கவும். இரண்டாம் பாலில் வேக வைத்த கடலைப்பருப்பு, பொடித்த வெல்லம் சேர்த்து கிளறவும்.

வெல்லம் கரைந்ததும் தண்ணீரில் கரைத்த பச்சரிசி மாவையும் சேர்த்து கொதிக்க விடவும். இத்துடன் முதல் தேங்காய்ப்பாலை சேர்த்து இளஞ்சூட்டில் கொதிக்க ஆரம்பித்தவுடன் இறக்கி விடவும். இதில் நெய்யில் வறுத்த முந்திரி, கிஸ்மிஸ் மற்றும் ஏலக்காய் தூள் சேர்க்கவும்.

கேரளத்தில் அனைவராலும் விரும்பி உண்ணும் சுவையான கடலைப்பருப்பு பாயசம், நம் நாவிற்கு இனிமையூட்டும்.

## அரிசி உருண்டை

**தேவையான பொருட்கள்:**

இட்லி அரிசி – 1 கப், சர்க்கரை – ¾

# இதயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் பழக்கவழக்கங்கள்!



இன்றைய காலத்தில் இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு வருடமும் இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இவ்வாறு இதய நோயால் அதிகம் பாதிக்கப்படுவதற்கு பெரும் காரணம் வாழ்க்கை முறைதான்.

ஒரு சில செயல்களால் இதயம் அதிக அளவில் பாதிக்கப்பட்டு, நாளடைவில் மரணத்தை எதிர்கொள்கிறோம். ஆகவே இத்தகைய கொடுமையான செயல் நடைபெறாமல் இருப்பதற்கு நாம் அன்றாடம் செய்யும் ஒரு சில பழக்கவழக்கங்களை மாற்றிக் கொண்டால் உடல் ஆரோக்கியத்துடன் இதயமும் ஆரோக்கியத்துடன் இருக்கும்.

டி.வி.யின் முன்பு அதிக நேரம் இருந்தால் இதயம் பெரிதும் பாதிக்கப்படும் என்று அமெரிக்கன் கல்லூரியில் நடந்த ஒரு ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிலும் ஒரு நாளைக்கு 4 மணி நேரத்திற்கு மேல் டி.வி.யைப் பார்த்தால், பக்கவாதம் அல்லது இதயத்தில் அடைப்பு போன்றவை ஏற்படும் வாய்ப்பு அதிகரிப்பதோடு, விரைவில் மரணத்தையும் ஏற்படுத்தும் என்றும் கூறுகிறது.

ஒருவருக்கு தூக்கம் ஐந்து மணிநேரத்திற்கு குறைவாகவும், ஒன்பது மணிநேரத்திற்கு அதிகமாகவும் இருந்தால் உடலில் ரத்த அழுத்தம் மற்றும் மன அழுத்தம் அதிகரிக்கும். மேலும் இது கரோனரி நோயை அதிக அளவில் ஏற்படுத்தும் வாய்ப்பும் உள்ளது.

இன்றைய காலத்தில் அனைவருமே ஒரு சில காரணங்களால் மன அழுத்தம், மன தளர்ச்சி, மன இறுக்கம் போன்றவற்றிற்கு ஆளாகின்றோம். இத்தகையவற்றில் இருந்து வெளிவருவது என்பது எளிதானது அல்ல. ஆனால் இவ்வாறு இருந்தால் இதயம் பெரிதும் பாதிக்கப்பட்டு அதன் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

தற்போது குறட்டை இல்லாமல் தூங்குபவர்களை காண முடியாது. அவ்வாறு தூங்கும் போது குறட்டை விடுபவர்களுக்கு, இதயத்தில் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. ஏனெனில் தூங்கும் போது குறட்டை விடுவதால், உடலில் ரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. ஆகவே அந்த ரத்த அழுத்தத்தால் இதயம் பாதிக்கப்படுகிறது.

உடற்பயிற்சி இதயத்திற்கு ஆரோக்கியத்தை தான் தரும். ஆனால் அந்த உடற்பயிற்சியே அளவுக்கு அதிகமானால், இதயத்திற்கு அதிக அழுத்தம் ஏற்பட்டு மயக்கம் அல்லது சோர்வு போன்றவற்றை ஏற்படுத்தும். ஆகவே உடற்பயிற்சியை அளவோடு செய்தால், இதய ஆரோக்கியத்தை நீட்டிக்க முடியும்.

பற்கள் ஆரோக்கியமற்று இருந்தால், சுவாசிக்கும் போது அசுத்தக் காற்றையே சுவாசிக்க முடியும். இதனால் அந்த அசுத்தக் காற்று இதயத்தில் ஒருவித அடைப்பை ஏற்படுத்தும். எப்படியென்று கேட்கிறீர்களா? ஏனெனில் ஈறுகளில் உள்ள பாக்டீரியாக்கள் ரத்தக்குழாய்களின் வழியே சென்று, சீரான ரத்த ஓட்டத்தை தடை செய்கிறது. இதனால் இதய ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

உடல் பருமன் இதயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். உடல் பருமன் அடைவதற்கு அதிகமான அளவில் சர்க்கரை உள்ள உணவுகள், கலோரிகள் நிறைந்த உணவுகளை உண்பது மற்றும் உடற்பயிற்சி இல்லாதது பெரும் காரணமாகும். ஆகவே குறைவான அளவில் உணவை உண்டால், இதயத்தை ஆரோக்கியத்துடன் வைக்கலாம்.



# சீனாவின் பனித் திருவிழா!

சீனாவின் ஹெலாங் ஜிஜாங் மாகாணத்தின் தலைநகரம் ஹார்பின். இங்கு ஜனவரியில் கடும் குளிர். வெப்பம் 18 டிகிரி சென்டிகிரேட்டைத் தொடும். இந்த சமயத்தில் சீனாவில் பள்ளிகளுக்கு இரண்டு மாதங்கள் விடுமுறை. அப்போது ஹார்பின் நகரில் பிரமாண்ட ஐஸ் அண்ட் ஸ்நோ போட்டி நடக்கிறது. இது வருடாவருடம் ஜனவரி 5-ந் தேதியிலிருந்து ஒரு மாத காலம் மிகச் சிறப்பாக நடக்கும்.

ஆரம்பத்தில் வாணவேடிக்கையுடன் சிறப்பாக துவங்கி, ஒரு மாத காலமும் சுற்றுலா பயணிகளின் வருகையால், அலங்கார மின்விளக்குகளால் இந்த பகுதியே ஜொலிக்கும். இச்சமயம் சீனத்தலைநகர் பீஜிங்கிலிருந்து சிறப்பு சுற்றுலா மூன்று நாட்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. சீனா முழுவதிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் இதனை காண வருகின்றனர்.

இந்த காட்சியின் போது கோட்டைகள், பழைய கதைகளில் வரும் அரண்மனைகள், பல அடுக்கு கொண்ட கோபுர வழிபாட்டுத் தலங்கள், ஓட்டல்கள், உலகின் ஏழு அதிசயங்கள் என அனைத்தும் ஐஸ் கட்டிகளால் செய்யப்பட்டு திறக்கப்படுகின்றன. ஐஸ்கட்டிகளில் வண்ணங்களை ஏற்றி, அதன் மூலம் ஜொலிக்கும் கட்டிடங்களை உருவாக்கி, அவை மேலும் ஜொலிக்க மின் அலங்கார விளக்குகளையும் பொருத்தி அசத்துகிறார்கள்.



1963-ம் ஆண்டு முதல் நடந்து வரும் இந்த விழாவுக்கு இந்த ஆண்டு வயது 29.

ஆமாம், நடுவில் சீனாவில் வேளாண்மைப் புரட்சி நடந்த போது, சில வருடங்கள் இந்த விழா நடத்தப்படவில்லை. 1985-ல் இருந்து மீண்டும்



துவங்கியுள்ளது.

உலகின் நான்கு ஐஸ் அண்ட் ஸ்நோ விழாக்களில் இதுவும் ஒன்று. மற்றவை ஜப்பானின் சப்ரோ ஸ்நோ விழா, கனடாவின் கியூபெக் சிட்டி வின்டர் கார்னிவல், நார்வேயின் ஸ்கை விழா.

வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க, இந்த ஐஸ் அண்ட் ஸ்நோ விழாவுடன் ஸ்கையிங், ஸ்கேட்டிங், கால்பந்து போட்டி, உறைய வைக்கும் தண்ணீரில் நீச்சல் போட்டிகள், நாடகங்கள், கைவினைப் பொருட்களின் கண்காட்சிகள் ஆகியவையும் கூடுதலாக உண்டு.

மாத முடிவில் சிறந்த ஐஸ் அண்ட் ஸ்நோ கட்டிடங்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒரு மாதத்திற்கு பிறகும், குளிர்காலம் முடியும் வரை தொடர்ந்து இவை காட்சிக்கு இருக்கும்.

–ராஜிராதா, பெங்களூரு.

## கணினித் திரையில் இருந்து கண்களை பாதுகாப்போம்!

இன்றைய தொழில்நுட்ப உலகில் எந்த வேலையாக இருப்பினும் கணினி முன்பு அதிக நேரம் செலவிட வேண்டி இருக்கிறது. இதனால் கணினியின் பயன்பாடுகள் அதிகம் கொண்டவர்கள், உடல்நலத்திலும் அக்கறை எடுத்து கொள்வது மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது.



முதலில் அதிக நேரம் கணினியை பார்ப்பவர்கள் கண்கள் மேல் கவனம் செலுத்த வேண்டும். மிக பக்கத்தில் இருந்து கணினித் திரையில் வெளிச்சத்தினை பார்ப்பதால், கண்கள் பாதிப்படைய நிறைய வாய்ப்பிருக்கிறது. இதனால் 15 நிமிடத்திற்கு ஒருமுறை கண்களுக்கு ஓய்வு கொடுப்பது நல்லது. அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு இது சாத்தியப்படாது.

இதற்கும் வழி இருக்கிறது. உள்ளங்கையை கண்கள் மேல் வைத்து ஒரு இரண்டு நிமிடம் ஓய்வு கொடுக்கலாம். இது ஓரளவு கண்களை பாதிப்பில் இருந்து காப்பாற்றும். தொடர்ந்து கணினி முன்பு வேலை செய்யும் நபர்கள், பத்து நிமிடத்திற்கொரு முறை கைகளையும், உடலையும் நீட்டி மடக்கி சிறிய உடற்பயிற்சி செய்து கொள்வது மிக நல்லது.

கணினியின் முன் அமர்ந்து டைப் செய்கையில் உடலை நேர்கோட்டில் வைத்திருப்பது மிக அவசியமான ஒன்று. இதனால் முதுகுத்தண்டு நேராக இருக்கும். இதுபோன்று செய்வதால் உடல் வலி அதிகம் வருவதை குறைக்கலாம்.

பாதங்களை தரை மீது சமமாக வைத்திருப்பது இன்னும் சிறந்தது. உடலின் அனைத்து பலமும் பாதத்தின் மேல் இருப்பதால், பாதத்தினை சமநிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

டைப் செய்யும் போது முழங்கைகள், இடையின் பக்கத்தில் வைத்திருப்பது கைகளுக்கு சிறப்பாக சப்போர்ட் கொடுக்கும். இதனால் சரியான முறையில் அமர்ந்து டைப் செய்ய முடியும். அதோடு தோள்பட்டை வலியினையும் எளிதாக குறைக்க முடியும்.

கணினித் திரையின் வெளிச்சத்தினை குறைத்து வைத்து கொள்வது மிக அவசியமான ஒன்றாகும். இதனால் கண்களை எளிதாக பாதுகாக்கலாம்.



ரெயில் விரைந்து கொண்டிருந்தது.

ஆனால் அந்த வேகம் தெரியாத அளவிற்கு உள்ளே சுக அலுங்கல்தான் - ஏ.சி.யின் இதமான அணைப்பு வேறு.

முதன் முதலாய் ரெயிலில் ஏறியபோது நிமலாவிற்கு ஒன்பது வயது.

நெல்லையில் நடந்த ஒரு பாட்டு போட்டிக்காக, பள்ளியின் சக மாணவிகளோடு நேர்ந்த பயணம்.

அது முன்பதிவு செய்யப்படாத பகுதி. ஆக ஏக நெரிசல்.

மாணவிகள் முதலிலேயே ஜன்னலோர இருக்கைகளைப் பிடித்து விட்டதால், ஐந்து நிமிடங்களுக்கு ஒரு முறை தங்களில் ஒருவருக்கு அந்த இடங்களை விட்டுக் கொடுத்து கொண்டார்கள்.

மரம், குளம், வீடுகள், வயல்வெளி, சாலைகளை அசுரத்தனமாய் பின்னுக்கு தள்ளியபடி சிறிப் போன அந்த ரெயில் பயணம், முகத்தில் மோதிய குளிர்காற்று உள்பட நிமலாவை வெகுநாள்

# என் உயிரின் உறவே...!

## -காஞ்சனா ஜெயதிலகர்

வரை பரவசப்படுத்தியிருந்தது.

இப்போது அதை விட வெகு சவுகர்யமான பயணம். இரண்டாம் வகுப்பு ஏசி. பெட்டி. குளிருக்கு அடக்கமாய் கம்பளி போர்வையோடு கச்சிதமான தலையணை தந்திருந்தார்கள். இடிபிடி இல்லாமல் நீட்டி படுத்துக் கொள்ளலாம். அல்லது தலைமாட்டிலிருந்த விளக்கை திறந்து வைத்தபடி வாசிக்கலாம். சகபயணிகள் யாரும் பேசவில்லை. மொபைல் போனில் பேசியவர்களும் அமர்த்தலான குரலையே பயன்படுத்தினார்கள்.

ஆக அனுபவித்து உறங்கலாம்.

ஆனால் நிமலாவிற்கு உறங்கும் எண்ணம் கூட இல்லை! இப்படி ஒரு பொருளைப் போல தன்னை ஏற்றி அனுப்பி விட்டார்களே என்ற ஆற்றாமை

வார்டன் தங்கமணி!

"நா... நான் இங்கயே இருந்திடறேன் அக்கா. சென்னையில் நான் எங்கே தங்கறது? அங்கே எனக்கு யாரையும் தெரியாது..."



அழுத்தியது.

காலையில் நடந்ததை நினைத்துப் பார்க்கவும் அச்சமாயிருந்தது. தான் அநாதைதான்– ஏழையும் கூட.

அதற்காக தன் சம்மதத்தை எதிர்பார்க்காமல்,

"உனக்கு மாசச் சம்பளமாய் பத்தாயிரம் தர்றேன்னு சொல்றார், நிமலா. அதிர்ஷ்டம் உனக்கு மட்டுமில்லை... நம்ப விடுதிக்கும் அடிச்சிருக்கு பாரேன். ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையாய் தர்றாராம். 'ஆதரவற்ற பெண்களுக்கான மையமா? நல்ல சேவை'ன்னு நம்மைப் பாராட்டறவங்க பத்து காசை எடுத்துத் தர்றதில்லையே? ஆர்டருக்கு வந்த கைவேலை துணிகளை எல்லாம் உன் மூலம் நேரே சென்னைக்கு கொடுத்து அனுப்பியது எவ்வளவு நல்லதாய் போனது, பாரேன். உனக்கு கைநிரம்ப சம்பளம், நம்ப விடுதிக்கு பெரிய நன்கொடை."

தன் வாய் நிரம்ப இருந்த பெரிய பற்கள் அத்தனையும் காட்டினாள்

''அதெல்லாம் சிதம்பரம் சார் பொறுப்பாய் பார்த்துக்குவார். நீ போய் அவர் சொல்ற வேலையைப் பார்த்துட்டு சுகமாய் இருக்க வேண்டியதுதான்.''

தங்கமணியின் கண்சிமிட்டலில் இளையவளின் உடம்பு எரிந்தது.

'பெண்ணை ஒரு பொருள் போல நடத்துவதால்தான் அத்தனை இன்னல்களும் வருகின்றன' என்று பேரறிஞர் பெர்னாட் ஷா சொன்னதை தங்கமணி அறிய மாட்டாள். அப்படியே தெரிந்தாலும் இப்போது காசு, பணம் அவள் கண்களை கட்டி விட்டது.

"நம் சென்டருக்கு மேலும் நாலு தையல் மெஷின் வாங்கிப் போடுவேன். படுக்கற அறைகளுக்கெல்லாம் பேன் மாட்டிடலாம். குளியலுக்கு பெரிய சிமெண்ட் தொட்டி, ரெண்டு டாய்லெட். இங்கேருக்கற நாப்பது பொண்டுகளும் உன் தயவில கொஞ்சம் சவுகர்யமாய் இருப்பாங்க. அந்தப் புண்ணியத்தை மறுக்கவா போற நீ?"

இன்னும் தன் பற்களை மூடாமல் தங்கமணி கொட்டிய வார்த்தை ஜாலத்தில் இவள் தடுமாறி நின்றாள்.

நிர்வாகிகளின் பேச்சிற்கு எதிர்பேச்சு கூடாது என்ற கண்டிப்புடன் இந்த ஆதரவற்ற பெண்களுக்கான விடுதியில் வளர்ந்திருந்த நிமலாவிற்கு மறுக்க நா புரளவில்லை.

தன்னை ஒரு பொருள் போல எண்ணி விலை பேசுபவன் ஒரு கயவன் என்றாலும் இந்தப் பெண் ஏன் அதற்கு உடந்தையாய் நிற்க வேண்டும்?

பொறுப்பாளர் தங்கமணியிடம் எதிர்த்து பேச முடியாதவள், உடன் வேலை பார்த்த தோழியிடம் குமுறினாள்.

"போன வாரம் நான் நம்ப பூவேலை செய்த துணிகளை எல்லாம் கொண்டு போய் தந்த அந்த சென்னை ஆளின் பார்வை சரியில்லைன்னு சொன்னேனில்ல பானு? தப்பிச்சு வந்துட்டேன்னு நினைத்தால், அவன் விடாமல் துரத்தி என்னைப் பிடிச்சிடுவான் போல. எனக்கு பத்தாயிரம் சம்பளத்தில் வேலையாம்... நம்ப விடுதிக்கு லட்ச ரூபாய் நன்கொடையாம்... என்ன பண்றதுன்னு தெரியலை."

"நமக்கு வேற போக்கிடம் கிடையாதே நிமி? ஆக பந்து போல இவங்க உருட்டி விடற இடத்துக்கு போக வேண்டியதுதான்."

"படுகுழியில் தள்ளிடறாங்களே? இதில் விழுந்தால் நா மீள முடியாது பானு."

''அந்த ஆள் கல்யாணமானவன்னு சொன்னியே?''

"பணக்காரப் பொண்ணாம். 'பார்க்க சகிக்க மாட்டாள். ஆனால் கண்ணுக்கு அழகான புருஷன் வேணும்'னு என்னை வாங்கிட்டா'ன்னு புலம்பினான். அவன் நடத்தும் பிரத்தியேக 'பொட்டீக்'கில் விற்பனை செய்யத்தான் நம்மிடம் ஆடைகள், விரிப்புகள்னு ஆர்டர் தந்திருந்தாங்க"

''அதையெல்லாம் தங்கமணியே எடுத்துட்டுப் போயிருக்கலாம். அந்த ஜொள்ளு பார்ட்டி திரும்பியே பார்க்காமல் நம்ப வார்டனை பத்திரமாய் அனுப்பி வச்சிருப்பான்'' அங்கலாய்த்தாள் சிநேகிதி.

"பார்க்க அம்சமாய் ஒருத்தி கொண்டு போனால்தான் பேரம் பேசாமல் வாங்கிக் கொள்வாங்கன்னு தங்கமணி சொல்லி என்னை அனுப்பினாங்க. தவிர வேறு சில கடைகளுக்கும் பேசி ஆர்டர் வாங்கினேன்."

"இப்போ உன்னையே பார்சல் பண்ணச் சொல்லி ஆர்டர் பண்ணிட்டானே பயல்! என்ன பண்ணப் போற?"

நிமலாவின் மனதுள் ஒரு திட்டம் பொறி தட்டியிருந்தது. ஆனால் அதை யாரிடமும் அவள் பகிருவதாயில்லை.

இப்போது விலை பேசப்படுவது அவளது மானம்.

அதைத் தெளிவாகவே தங்கமணி சொல்லி விட்டாள்.

''அங்கே போய் நீ இப்படி முதுகு ஒடிய கிடந்து தைக்க வேணாம் நிமலா... மேம்போக்கான வேலைதான். குஷியான வாழ்வு. தயங்காம ஒத்துக்கோ. பிறகு நீயே எனக்கு நன்றி சொல்லுவே பாரு.''

''எனக்கு அப்படி... அங்க போகணும்னு தோணலைக்கா.''

''அப்ப எங்க போகறதுன்னு முடிவு பண்ணிக்கோ. எங்க முடிவை ஏற்க முடியாதுன்னா நீ தொடர்ந்து இங்கே தங்கவும் முடியாது.''

பதில் கறாராய் வந்தது.

இவள் முகத்தின் அதிர்ச்சியை நோட்டமிட்டவள், ''பிளைட் டிக்கெட் எடுத்து அனுப்பவான்னு பறக்கறாரு சிதம்பரம் சார். அவ்வளவு அவசரம்'' என்று குழைய, நிமலா அருவருப்பில் குறுகினாள்.

''இங்கே என் வேலைகளை எல்லாம் பிரிச்சு தந்துடணுமே. பிறகு ரெயில் டிக்கெட்டிற்கு பதிவு பண்ணிடறேன்.''

''சமத்தாய்...

இனி பிழைச்சுக்குவே" என்று மறுபடி மொத்த பற்களையும் காட்டிய தங்கமணியிடமிருந்து அப்போதைக்கு தப்பின திருப்தியுடன், தான் முழுதாக தப்பிக்கும் திட்டத்திற்குள் இறங்கினாள் நிமலா.

**2**

பத்து நாட்களுக்கு முன்பு இவள் சென்னைக்குப் போக நேர்ந்தது பஸ்ஸில்தான். பிரமாண்டமான டிரங்க் பெட்டிகள் இரண்டு நிரம்ப, பூவேலை செய்யப்பட்ட ஆடை, துணிவகைகளை நீவி மடித்து நிரப்பிய பின் அவற்றை அவளால் அசைக்கக்கூட முடியவில்லை!

கைக்கு ஒன்றாய் இவற்றைத் தூக்கியபடி எப்படி பட்டணம் போய் சேர என்று திகைத்தவளிடம் வார்டன் தங்கமணி,

"இங்க உன்னை ஏற்றி விட்டுடுவோம். சென்னையில் போர்ட்டருங்க தாராளமாய் உண்டு. ஒரு ஆட்டோவில போட்டு நான் தர்ர விடுதி விலாசத்தைத் தேடி போய் சேரு. பதினோரு மணிக்கு சிதம்பரம் சார் கடைக்கு வேறு ஒரு ஆட்டோவில போய் சேரு. அவ்ளவுதான?" என்றிருந்தாள்.

ஆனால் அதற்கு ஆன செலவில் நிமலா மிரண்டே போனாள்! இந்தப் பெரிய பெட்டிகளை எந்த ஆட்டோவும் சுமக்க முன்வரவில்லை. டாக்ஸி கட்டணம் அசாத்தியமாய் பட்டாலும், நேரத்திற்குப் போய் சேர வேண்டியிருந்ததால் வேறு வழியுமில்லை.

ஆனால் 'பொட்டீக்' எனப்படும் அச்சிறு நவீன கடையின் முன் போய் இவள் இறங்கிய பதினைந்து நொடிகளில் கடையிலிருந்தவர், டாக்ஸிக்கான பணத்தைத் தந்து அனுப்பி விட்டதோடு, பெட்டிகளையும் கடைக்குள் எடுத்துப் போக ஏற்பாடு செய்ததில் நிமலாவிற்கு பெரும் நிம்மதி!

"ஒரு நிமிஷம் உட்காருங்க" என்றவர் இவளுக்கு குளிர்ந்த பழச்சாறையும் அனுப்ப, வயிறும் குளிர்ந்தது!

வேறு சில பிரத்தியேக கடைகளுக்கும் போய் ஆர்டர்களைப் பெற்றுக் கொண்டு நாளை மறுநாள் இவள் ஊர் திரும்ப வேண்டியதுதான்.

பெட்டியிலுள்ள துணி மொத்தத்தையும் இவர்களே முன்பு சொன்னபடி வாங்கிக் கொண்டால் பிரச்சினையில்லை. அல்லது மறுபடி அவற்றோடு ஊர்கோலம் போக நேரும்.

## நாய்க்கு தாய்ப்பால் ஊட்டும் பெண்!

அமெரிக்காவில் ஒரு விசித்திரமான சம்பவம். இதை நினைத்துப் பார்க்கும்போதே நமக்கு வியப்பாக இருக்கிறது. ரெடி கிரகாம் (வயது 44)



என்ற பெண்ணுக்கு 2 குழந்தைகள். இவரது மார்பில் ஏற்பட்ட ஒரு பாதிப்பு காரணமாக அவரால் தன்னுடைய குழந்தைகளுக்கு பாலூட்ட முடியாமல் போனது. இவரது 9 வயது மகள் ஸ்டைடர் என்ற நாய்க்குட்டியை வளர்க்கிறார். இந்த நாய்க்குட்டிக்கு ரெடி கிரகாம் தனது தாய்ப்பாலை ஊட்டுகிறார். நாய்க்குட்டிக்கு தாய்ப்பால் ஊட்டும்போது தான் ஒரு நிறைவான தாயாகவே உணர்வதாக அவர் கூறுகிறார்.

2010-ம் ஆண்டு தனக்கு பிறந்த மகனுக்கு தாய்ப்பாலை நேரடியாக ஊட்ட முடியாததால் புட்டிப்பாலில் புகட்டினார். அப்போது அருகில் இருந்த ஸ்டைடர் நாய்க்குட்டி அந்த புட்டிப்பாலை தனது நாக்கால் நக்கியது. இதைத் தொடர்ந்து அது தாய்ப்பால் குடிப்பதில் ஆர்வம் காட்டவே ரெடி கிரகாமும் அந்த நாய்க்குட்டிக்கு கடந்த 2 வருடமாக தாய்ப்பால் புகட்டி வருகிறார். இதை நினைக்கும்போது நாம் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்று விடுகிறோம்.

அந்தச் சிரமம் அவளுக்கு நேரவில்லை.

அத்தனையையும் மறுபேச்சின்றி எடுத்துக் கொண்டார்கள். பாதிப் பணத்திற்கான 'செக்' இவளுக்குத் தரப்பட்டது. மற்றவை விற்க விற்க, அவற்றிற்கான பணம் தரப்படும் என்பதை விவரமாய் பேசி,

அதை எழுத்திலும் குறித்து முடித்தபோது மணி இரண்டு.

கதர் வேட்டி, சட்டையில் மிகப் பாந்தமாய் அனைத்திலும் அருகேயிருந்து உதவிய முதலாளி சிதம்பரம்,

''காலி டிரங்க் பெட்டிகள் இருக்கட்டும்மா. இங்கும், எனக்குத் தெரிஞ்ச சில கடைகளிலும் விற்காமல் ரெண்டு வருஷங்களுக்கு மேல் தேங்கி விட்ட துணிகளை அவற்றுள் இட்டு 'டிராவல்ஸ்' மூலம் பத்து நாட்களுக்குள் உங்க ஊருக்கு அனுப்பிடறேன்'' என, தன்னையும் மீறி அவரை கைக்கூப்பி வணங்கினாள்.

விடுதியிலுள்ள பெண்களுக்கு வருஷத்துக்கு இருமுறை புதிய உடை கிடைக்கும்.

இருந்தும் கல்லூரியில் படிப்பவர்களுக்கும், வேலைக்கு போய் வருபவர்களுக்கும் அது போதாது. தினுசு தினுசாய் உடுத்தும் மற்றவர்களிடையே துவைத்து துவைத்து நைந்து வெளிறிய ஆடையில் நிற்பது இவர்களை ஒதுக்கியே நிறுத்தும்.

இம்மாதிரியான பிரத்தியேக ஆடையகத்தில் உள்ளவை எல்லாமே உயர்ரகம். இங்கிருந்து கழிக்கப்படுபவை கூட தரமாகவே இருக்கும். இந்த மனக்கணக்கு பெருக்கிய நன்றியில்,

"நான் சாப்பிடப் போறேன்.. நீயும் எங்கூட வந்தால் சந்தோஷம்'' என்று சிதம்பரம் தந்த அழைப்பை இவளுக்கு மறுக்கத் தோன்றவில்லை.

சிதம்பரத்தின் வயது நாற்பதுகளில் - நல்ல உயரமும் வெளுப்புமான உடல். அதற்குக் கண்ணியம் கூட்டிய கதர் உடை. ஆக தயக்கமின்றி அவருடன் காரில் ஏறிப் போனாள்.

"ஊர் திரும்ப, டிக்கெட் வாங்கியாச் சாம்மா?"

''இல்லைங்க. சாப்பிட்டதும் பஸ் டிக்கெட் பதிவு பண்ணிடனும். பெட்டிகள் இல்லைங்கறதால் பிரச்சினையே இல்லை."

''நாளை எந்தம்பி கன்னியாகுமரி போறதாய் இருந்தது. ஆனா முடியாம வேறு வேலையாயிடுச்சு. அந்த ரெயில் டிக்கெட் இருக்குது. பேரை மாத்திட சொல்றேன். வசதியாய் போயேன்மா."

இவளது உற்சாகம் கூடியது.

ஆறு, ரெயில், யானை இவையெல்லாம் பார்க்கப் பார்க்க சலிக்காதவை அல்லவா?

ஆக ரெயில் பயணத்திற்கும் தலையாட்டி வைத்தாள்.

அவர் அழைத்துச் சென்ற மேல்தட்டின் உணவகம், அம்மதிய வேளையிலும் மங்கலான குளுமையில் இருந்தது. அதன் ஆடம்பரத்தில் மிரண்டவள், தன்னிடம் உள்ளதிலேயே நல்ல புடவையில் இன்று இருந்ததிற்காக திருப்திப்பட்டுக் கொண்டாள்.

மெனு அட்டையிலிருந்த பெரும்பாலான பதார்த்தங்கள் இவள் கேள்விப்படாதவை.

அதில் குறிப்பிட்டிருந்த தண்டூர் பிரியாணியின் விலை இவள் கட்டியிருந்த புடவையின் விலையை விட அதிகம்!

"எனக்கு நீங்களே ஏதேனும் சிம்பிளாய் ஆர்டர் பண்ணிடுங்க சார்'' என்று விட்டாள்.

விடுதியின் மலிவு உடைகளில் வளர்ந்தவள், தையல் கலையில் தேறி சம்பாதிக்க ஆரம்பிக்கவும்தான் ஓரளவு நேர்த்தியாய் உடுத்தியது. இருந்த மூன்று செட் நல்ல உடைகளுடன்தான் பயணப்பட்டிருந்தாள்.

இங்கு முன்புள்ள நைந்த உடையில் வர நேர்ந்திருந்தால்.. இவளுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கக் கூடும்.

ஆடை மனிதருக்குத் தரும் தெம்பும் தெளிவும் தனிதானே? இதோ சிதம்பரம் சார் அனுப்பப் போகும் உடைகள் தன் விடுதியின் பெண்களுக்கு எவ்வளவோ பயனுள்ளதாய்...

ஓடிய நிமலாவின் நன்றி நினைவுகள் 'சட்'டென அறுபட்டது.

'தன் பாதத்தை வருடி.... நிமிண்டுவது எது... யார்?' பதறி குனிந்தவளுக்கு எதுவும் புலப்படவில்லை!

'இத்தனை நாகரீக சூழலில் எலியும் பாச்சையும் ஓடித் திரியுமா என்ன?' காலை பின்னுக்கு இழுத்தபடி குழப்பமாய் நிமிர்ந்தவளுக்கு, அதுவரை பாந்தமான புன்னகையுடனிருந்த சிதம்பரத்தின் முகம் அசட்டுத்தனமும் கபடமுமாய் தெரிந்தது!

அவர் கண்கள் இவளுடையதைக் கவனமாய் தவிர்த்தன! பரிமாறப்பட்ட உணவின் சுவை அசாத்தியமாய் இருந்தும் இவளுக்கு அது இறங்கவில்லை.

சிதம்பரம் பேசியதற்கும் காது கொடுக்கவில்லை. அக்குளுமையிலும் உடம்பு வெந்து வியர்த்தது.

இவளது பதற்றம் புரிய, அவள் சொன்ன இடத்தில் இறக்கி விட்டவர், "நாளை உன் ரெயில் டிக்கெட்டுகளை இந்த விடுதியின் ரிசப்ஷனில் தந்துடுவாங்க" என,

"இல்ல சார்... நான் பார்த்துக்கறேன்" என்று மறுத்தாள்.

"மறுக்கக் கூடாதும்மா. பிறகு உன் ரெண்டு டிரங்க் பெட்டிகளையும் நீ கொண்டு வந்தது போலவே எடுத்துட்டு போக நேரும். எப்படி வசதி?" செல்லக் கண்டிப்புடன் சிதம்பரம் கிளம்ப, இவள் வாயடைத்து நின்றாள்!

## 3

இனி அந்த சிதம்பரத்தைத் தான் பார்க்க நேராது என்ற ஒரே நிம்மதிதான் அவளுக்கு.

ரெயிலில் ஏ.சி. பகுதிக்குள் ஏறும் போதும் கூட நெருடியது. ஒரு வேளை, கதர் வேட்டியும் கபட்டு சிரிப்புமாய் சிதம்பரம் தன்னோடு பயணிக்க திட்டமிடுகிறாரோ என்ற பதற்றம்..!

ஆனால் பயந்தது போல ஏதுமில்லை.

இவளது பகுதியின் எதிர் இருக்கையில் இருந்தது ஒரு பண்பான முதியவள். இவளுக்கு உடம்பெங்கும் பால் வார்க்கப்பட்ட உணர்வு.

நிம்மதியில் இவள் தந்த புன்னகைக்கு, பதிலாய் பரிவான முறுவல் வந்து நிமலாவை மேலும் ஆறுதல் படுத்தியது.

ஆனால் ஏதும் பேச மனமற்று, ஒரு பத்திரிகையை பிரித்து வைத்துக் கொண்டாள்.

உள்ளே மனம் விம்மியது. தனக்கு பெரும் உறவுக் கூட்டமெல்லாம் வேண்டாம்; ஒரு தாயை மட்டும் கடவுள் விட்டு வைத்திருந்தால் இப்பொல்லாத உலகத்தை சமாளித்து விடலாம். தன் அச்சத்தை எல்லாம் பெற்றவளிடம் கொட்டிவிட, அவளது பாசக் கைகள் அத்தனை பயத்தையும் வருடியே வழித்துப் போட்டிருக்கும்.

தன் தாயுடன் ஒரு வருஷம் வாழ்ந்ததிலேயே அலுத்து விட்டது போல தகப்பன் ஓடி விட, நோய்வாய்ப்பட்ட தாயால் சமாளிக்க முடியாததால் விடுதி ஒன்றில் சேர்க்கப்பட்டவள் நிமலா. சில வருடங்களில் தாய் இறந்த சேதி வர, இனி தனக்கு போக்கிடம் வேறு இல்லை என்பது புரிந்து அங்கேயே ஒடுங்கிக் கொண்டாள். பள்ளியில் கற்றுத் தரப்பட்ட ஆரம்ப தையலில் நிமலா காட்டிய திறமையை கவனித்த ஆசிரியை இவளுக்கு மேலும் நுணுக்கங்களை கற்றுத் தர, கல்லூரி பருவத்தின் போது மாறிய புது விடுதியில தையலும், துணிகளில் செய்யப்படும் பூ வேலையையும் ஒரு தொழிலாகவே கற்றுத் தந்தார்கள். செய்நேர்த்தியை விட நிமலாவின் கற்பனை அவள் தைப்பதை உடனுக்குடன் விற்றுத் தர, அங்கேயே சிறு சம்பளத்துடன் வேலையும் அமைந்தது.

"இருக்கற அழகு போதாதுன்னு இப்ப இவ கையில் காசுமில்ல புழங்குது?" என்று சக மாணவிகளின் பொறாமை இவளை நெட்டினாலும், எல்லாரிடமும் சமுகமாகவே பழகினாள். தன் அழகு தனக்கு ஆனந்தத்தை விட ஆபத்தையே தரும் என்பது புரிந்து, தன்னைச் சுற்றி ஒரு அமைதி சுவரை எழுப்பி அதற்குள் சுருண்டு கொண்டாள்.

ஆனால் அதற்கும் விமர்சனம்தான்!

"பெரிய இடத்துப் பெண்ணாட்டம் 'பளிச்'சுனு இருக்கறதோட, கைவேலையும் தெரியுங்கற திமிரு... அதான் ஒதுங்கிப் போறா."

இந்த குதர்க்க குற்றச்சாட்டையும் அவள் பொருட்படுத்தவில்லை.

இவர்களின் தயாரிப்பை 'ஸ்டால்' போட்டு விற்கப் போகும் இடங்களில் ஆண்களின் கூட்டம் இவளது கடையில்தான் அதிகம். பார்வைகள் முழுக்க இவளை மொய்த்தெடுக்கும்!

பெண்ணைப் போகப்பொருளாய் கருதும் இந்த உலகில், தேவைக்கு மீறிய அழகுடன் தன்னைப் படைத்ததற்காய் கடவுளை பலமுறை குற்றம்சாட்டியவள்,

'படைத்தவர் எதையும் காரணமின்றி உருவாக்குவதில்லை' என்ற ஒரு பேச்சைக் கேட்டபின் பிறகு புலம்புவதில்லை.

'நண்டிற்கு ஏன் அத்தனை கால்கள் என்று நீங்கள் யோசித்ததுண்டா? நீர்வாழ உயிரினத்தில் இதற்குத்தான் எதிரிகள் அதிகம். எதிரி, அதன் ஒரு காலைக் கவ்வ, நண்டு அதை உரித்து விட்டு தப்பி விடும். மற்ற ஏழு கால்களின் உதவியால் அதனால் வேகமாகவே நகரவும் முடியும். அதிசயமான விஷயம் என்னவென்றால் சில நாட்களுக்குள்ளாகவே நண்டின் இழந்த கால் மறுபடி வளர்ந்து விடுவதுதான்!'

இப்போது எதிரியாய் மிரட்டிய சிதம்பரத்திடமிருந்து தான் எதையும் இழக்காமல் தப்பியது கடவுளின் அருள்...

அச்சத்தில் உதறிய உடலைக் குறுக்கியவள் படுக்க எண்ணி ரெயிலில் தரப்பட்ட போர்வையை விரித்தாள். அதேசமயம் எழுந்த எதிர் இருக்கையின்

## 5 கிராம் கொண்ட உலகின் மிகச் சிறிய முட்டை!

வட ஹாம்ப்லேண்ட், ஹாம்சாக் பகுதியைச் சேர்ந்தவர் போல்ரே. இவருக்கு 52 வயதாகி விட்டது. கோழிப்பண்ணை வைத்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல் ஓட்டலையும் நடத்தி வருகிறார். இவர் வளர்த்து வந்த கோழி உலகிலேயே மிகச்சிறிய முட்டை எனக் கருதப்படும் முட்டையிட்டுள்ளது. இந்த முட்டை 5 கிராம் எடை கொண்டதாக



காணப்படுகிறது. 2 செ.மீ. அகலமும், 2.5 செ.மீ. நீளமும் கொண்ட இந்த முட்டை உலகின் மிகச்சிறிய முட்டை என்ற கின்னஸ் சாதனையை படைக்க இருக்கிறது.

தனது கோழிப்பண்ணையில் இவ்வாறு முட்டையிடப்பட்டுள்ளதை கவனித்த போல்ரே ஆச்சரியமடைந்ததுடன் அதனை மிகவும் பாதுகாப்பாக தனது நண்பர்களிடம் எடுத்துச் சென்று காண்பித்தார். அவர்கள் கின்னஸ் உலக சாதனை நிலையத்தை தொடர்பு கொள்ளுமாறு யோசனை தெரிவித்துள்ளனர்.

இதுவரை 7.3 கிராம் எடையுள்ள முட்டையே உலகின் மிகச் சிறிய முட்டை என்ற கின்னஸ் சாதனையை படைத்துள்ளது. அந்த சாதனையை இந்த முட்டை முறியடித்து விடும் என்பது உறுதி.

முதியவர், தளைந்த அவரது புடவையில் தடுமாறி விழ இருக்க, அவசரமாய் எழுந்து தாங்கிக் கொண்டாள். முதுமையில் இறுகிய மூட்டுகள் அவரை நேரே நிற்க விடவில்லை.

“நாலு அடி வச்சால் சரியாயிடும்” என்றவர் சொன்னாலும் ரெயிலின் குலுங்கலில் சமாளித்து நடப்பது அத்தனை எளிதாயில்லை. அவரது நெகிழ்ந்த புடவையை இழுத்து செருகி விட்ட நிமலா, அவர் தயக்கத்தைப் பொருட்படுத்தாமல் அவர் தோள்களைப் பற்றியபடி கழிப்பறைக்கு நடத்தினாள்.

“தூங்கினபின் எழுந்தால் மேலும் சிரமம்... அதான் இப்பவே...”

“எப்போ வேணுமானாலும் என்னை எழுப்புங்கம்மா. இப்ப டாய்லெட் கதவைத் தாழிடாதீங்க. நா வெளியதான் நிற்கறேன்.”

மறுபடி பெரியவளை இருக்கைக்கு கூட்டி வந்து, படுக்க வைத்து போர்த்திவிட, முதிய கைகள் இவளை வருடி நன்றி தெரிவித்தன.

“கரிசனையாய் உதவினேம்மா. ‘காலம் கெட்டுக் கிடக்குது. போய் உதவினாலும் ஏதேனும் பழி வருது’ன்னு மனுஷர் ஒதுங்கிக்கற காலம் இது. பிரியமாய் கைக் கொடுத்தே” என்றவர் சொல்ல, நிமலாவின் மனதினுள் சிதம்பரம் வந்து கபடமாய் கண்சிமிட்டினார்.

இவர்கள் சொல்வதும் முழுக்க பொய்யில்லையே...? உதவும் உத்தமர் போல நாடகமாடிய சிதம்பரம் இவளது பாதங்களை நிமிண்டி, இவளது பதற்றத்தைப் பார்த்ததும் தன் அணுகுமுறையை மாற்றிக் கொண்டார்!

“என் மனைவி உன் அழகில், குணத்தில் கால்வாசி கூட இல்லை நிமலா. ஆனா நிறைய காசு... அது இல்லாமல் சிரமப்பட்டுட்டிருந்த நான், என் மாமனார் காட்டின ஆசை வலைக்குள் விழுந்திட்டேன். எனக்கு சொந்தமான வியாபாரம். என்னைப் போல பார்வைக்கு அம்சமான பேரப் பிள்ளைகள் பிறக்கும்ன்றது அவரது கணக்கு... ஆனா அதில் என் வாழ்வு அம்சமாய் அமையலை. எனக்கு நிம்மதி மிச்சமாகலை” என்று பேசி வீசிய தூண்டிலிலும் இவள் சிக்காமல் கிளம்பி விட்டாள்.

வெளிப்பார்வைக்கு வனப்பாயிருந்து என்ன... இவரது உள்ளம் அத்திப்பழத்தினது போல புழு வைத்துப் போயிருக்கிறதே!

இதில் தன்னையும் சேர்த்து அழுகச் சொல்வதா? என்ற ஆத்திரம் இவள் முகத்தில் பொரிய, சிதம்பரம் பம்மி விட்டார்.

கோழியின் மீது பஞ்சாரத்தைக் கவிழ்ப்பது போல பரிவு காட்டி பெண்களை ஆண்கள் மடக்கும் ரக கதைகளையும் இவள் விடுதியில் கேட்டதுண்டு.

தன் தொழில் திறமைக்கு வெளியே நல்ல வரவேற்பு கிடைக்கும் என்பது நிமலாவிற்குத்

தெரியும். ஆடம்பர தையலகங்களில் விலைக்கூடிய புடவைகளுக்கான ரவிக்கைகள் அதற்குச் சளைக்காத விலையில் தயாராவதைப் பார்த்திருந்தாள்.

வெளியே வேண்டிய பணம் கிடைக்கும்... ஆனால் பாதுகாப்பு? அதற்கு அஞ்சிதான் இவள் விடுதியிலேயே ஒண்டியிருந்தது.

"உம் பேர் என்னம்மா?"

"நிமலா."

"நன்றி நிமலா. வயசான எனக்கு உடம்பில வேதனை. பெண்ணான உனக்கு மனவேதனை. ம்ம்?" முதியவர் பரிவுடன் கேட்க, அவளையும் மீறி இளம் கண்கள் நீரால் நிரம்பி விட்டன.

## 4

ரெயில் சிநேகம் சுலபமானது.

தங்கள் முன்னே நீண்டு கிடக்கும் பயணம்...

செய்வதற்கு வேறு வேலையேதுமற்ற நிர்விசாரம்...

வெகு அண்மையிலிருக்கும் இருக்கைகள்...

முக்கியமாய் இனி இந்த சகபயணியை நான் சந்திக்கப் போவதில்லை என்ற நிச்சயம்...

இவை அத்தனையும் சேர்ந்து ஒரு பிணைப்பை சில நிமிடங்களில் ஏற்படுத்தி விடுகின்றன.

வழக்கமாய் பிறரிடம் பேசுவதைத் தவிர்க்கும் நிமலா, அந்த வித்தியாசமான இரவில் தன் வாழ்வை ஓரளவு சொல்ல, மூத்தவரும் தன் கதையை இயல்பாய் பகிர்ந்து கொண்டார்.

"நான் அஞ்சுகம். அதிகாலை நாலரைக்கெல்லாம் வரும் திண்டுக்கல் ஸ்டேஷனில் நா இறங்கணும். என்னைக் கூட்டிப் போக எம் பேரன் வருவான். ஊரை விட்டு ஒதுங்கிய பண்ணை வீட்டில்தான் என் மொத்த வாழ்வும்... அதாவது என் கல்யாணத்திற்குப் பிறகு..."

அவரின் சுவாரஸ்ய பேச்சு, நிமலா மனதிற்கு இதமாயிருக்க அதில் அமிழ்ந்தாள்.

"மலையடிவாரத்துல ரொம்ப அருமையான வீடு எங்களது. வீட்டின் பின்னேயிருந்த மலையின் ஒரு பகுதியை விஸ்தீரிப்புக்காய் வெட்டின போது, கிடைத்த கல் அபூர்வமான தந்த பழுப்பில் இருந்ததாம்."

"ம்ம்... அழகாய் இருந்திருக்கும்."

"அதைக் கொண்டு என் மாமனார் கட்டிய வீட்டை, பலர் 'கல் வீடு'ன்ன, மாமா அதற்கு வைத்த பேர் 'தந்த பவனம்'. விதவிதமான மரங்களின் நடுவே இருக்கும் அப்பெரிய வீட்டில் இப்போ இருப்பது நானும் எம்பேரனும் மட்டுந்தான்டா. இது டவுனை விட்டு ஒதுங்கிய கிராமத்து பகுதி. ஆக என் பிள்ளைகளே முதலில் படிப்பிற்காகவும் பிறகு வேலைக்காகவும் பட்டிணம் நோக்கிக் கிளம்பிட்டாங்க. அதற்கும் அடுத்தத் தலைமுறை பண்ணை வீடுன்னாலே மூக்கைச் சுளிக்குதுங்க. ஆனா அதிலிருந்து வரும் வருமானம் யாருக்கும் கசக்கலை."

"வருமானம் வருமளவில் அதை யார் பராமரிக்கறது?"

"எம் பெரிய பேரன். பொறுப்பான பிள்ளை. நான் சொல்றதையெல்லாம் பொறுமையாய் கேட்கிறவனும் அவன்தான். 'குளம் போனால் கிணறு தோண்டலாம்; நிலம் போனால் என்ன பண்றது'ன்னு நான் சொன்னது அவனைப் பாதிச்சது. இப்ப கூட குடும்பத்தாரே பாதி நிலத்தை கூறு போட்டு பிளாட்டாய் விற்கலாம், ஷாப்பிங் மால் எழுப்பலாம்னு சொல்றதை எல்லாம் அவன் காதில் ஏற்றிக்கறதில்ல. விவசாயத்தில் பெரும் லாபம் இல்லைன்னாலும் உலகின் பசி போக்கும் தொழில் இது. முப்பது நாற்பது குடும்பங்கள் நம்மோடு சேர்ந்து உழைத்துப் பிழைக்கின்றன. நம் பரம்பரை நிலத்தில் பாடுபட்டு, அதில் வெற்றியும் பெறுவது தனித் திருப்தி என்பவன்."

"ஆக உங்களுக்கு நல்ல துணை. இல்லையாம்மா?"

"அவன், அவனோட வேலையில் மும்முரமாய் இருப்பான். வீட்டு வேலைகளுக்கு ஆட்கள் உண்டென்றாலும் அதை நிர்வகிக்க, பேச்சுத் துணைக்குன்னு எனக்கு ஒரு நல்ல பெண்... உன்னைப் போலன்னு வையேன், வந்துட்டால் குறை இல்லைதான். வேலை இல்லைன்னு பலர் குறைபட்டுக்கறாங்க. ஆனா உண்மையும் திறமையுமாய் உழைக்கத் தயார் என்றால் ஆளுக்கு நூறு வேலைங்க காத்திருக்குதே."

பெரியவரின் பேச்சைக் கேட்டதிலேயே இளையவளுக்குத் தெம்பு ஊறியது.

"எம் மருமகளுக்குத் தையலில் ஈடுபாடு. எம்மகன் வெளிநாட்டிற்கு வேலைக்கு போன சமயம் இவளுக்கு விசா கிடைக்கலை. மாசமாயும் இருந்ததால் ரெண்டு வருஷங்கள் என்னோடு இருந்த சமயம் எட்டு தையல் மெஷின்கள் வாங்கிப் போட்டு நம்ப

தெரியும். ஆடம்பர தையலகங்களில் விலைக்கூடிய புடவைகளுக்கான ரவிக்கைகள் அதற்குச் சளைக்காத விலையில் தயாராவதைப் பார்த்திருந்தாள்.

வெளியே வேண்டிய பணம் கிடைக்கும்... ஆனால் பாதுகாப்பு? அதற்கு அஞ்சிதான் இவள் விடுதியிலேயே ஒண்டியிருந்தது.

"உம் பேர் என்னம்மா?"

"நிமலா."

"நன்றி நிமலா. வயசான எனக்கு உடம்பில வேதனை. ஆனா பாவம் இளம் பெண்ணான உனக்கு மனவேதனை. ம்ம்?" முதியவர் பரிவுடன் கேட்க, அவளையும் மீறி இளம் கண்கள் நீரால் நிரம்பி விட்டன.

## 4

ரெயில் சிநேகம் சுலபமானது.

தங்கள் முன்னே நீண்டு கிடக்கும் பயணம்...

செய்வதற்கு வேறு வேலையேதுமற்ற நிர்விசாரம்...

வெகு அண்மையிலிருக்கும் இருக்கைகள்...

முக்கியமாய் இனி இந்த சகபயணியை நான் சந்திக்கப் போவதில்லை என்ற நிச்சயம்...

இவை அத்தனையும் சேர்ந்து ஒரு பிணைப்பை சில நிமிடங்களில் ஏற்படுத்தி விடுகின்றன.

வழக்கமாய் பிறரிடம் பேசுவதைத் தவிர்க்கும் நிமலா, அந்த வித்தியாசமான இரவில் தன் வாழ்வை ஓரளவு சொல்ல, மூத்தவரும் தன் கதையை இயல்பாய் பகிர்ந்து கொண்டார்.

"நான் அஞ்சுகம். அதிகாலை நாலரைக்கெல்லாம் வரும் திண்டுக்கல் ஸ்டேஷனில் நா இறங்கணும். என்னைக் கூட்டிப் போக எம் பேரன் வருவான். ஊரை விட்டு ஒதுங்கிய பண்ணை வீட்டில்தான் என் மொத்த வாழ்வும்... அதாவது என் கல்யாணத்திற்குப் பிறகு..."

அவரின் சுவாரஸ்ய பேச்சு, நிமலா மனதிற்கு இதமாயிருக்க அதில் அமிழ்ந்தாள்.

"மலையடிவாரத்துல ரொம்ப அருமையான வீடு எங்களது. வீட்டின் பின்னேயிருந்த மலையின் ஒரு பகுதியை விஸ்தீரிப்புக்காய் வெட்டின போது, கிடைத்த கல் அபூர்வமான தந்த பழுப்பில் இருந்ததாம்."

"ம்ம்... அழகாய் இருந்திருக்கும்."

"அதைக் கொண்டு என் மாமனார் கட்டிய வீட்டை, பலர் 'கல் வீடு'ன்ன, மாமா அதற்கு வைத்த பேர் 'தந்த பவனம்'. விதவிதமான மரங்களின் நடுவே இருக்கும் அப்பெரிய வீட்டில் இப்போ இருப்பது நானும் எம்பேரனும் மட்டுந்தான்டா. இது டவுனை விட்டு ஒதுங்கிய கிராமத்து பகுதி. ஆக என் பிள்ளைகளே முதலில் படிப்பிற்காகவும் பிறகு வேலைக்காகவும் பட்டிணம் நோக்கிக் கிளம்பிட்டாங்க. அதற்கும் அடுத்தத் தலைமுறை பண்ணை வீடுன்னாலே மூக்கைச் சுளிக்குதுங்க. ஆனா அதிலிருந்து வரும் வருமானம் யாருக்கும் கசக்கலை."

"வருமானம் வருமளவில் அதை யார் பராமரிக்கறது?"

"எம் பெரிய பேரன். பொறுப்பான பிள்ளை. நான் சொல்றதையெல்லாம் பொறுமையாய் கேட்கிறவனும் அவன்தான். 'குளம் போனால் கிணறு தோண்டலாம்; நிலம் போனால் என்ன பண்றது'ன்னு நான் சொன்னது அவனைப் பாதிச்சது. இப்ப கூட குடும்பத்தாரே பாதி நிலத்தை கூறு போட்டு பிளாட்டாய் விற்கலாம், ஷாப்பிங் மால் எழுப்பலாம்னு சொல்றதை எல்லாம் அவன் காதில் ஏற்றிக்கறதில்ல. விவசாயத்தில் பெரும் லாபம் இல்லைன்னாலும் உலகின் பசி போக்கும் தொழில் இது. முப்பது நாற்பது குடும்பங்கள் நம்மோடு சேர்ந்து உழைத்துப் பிழைக்கின்றன. நம் பரம்பரை நிலத்தில் பாடுபட்டு, அதில் வெற்றியும் பெறுவது தனித் திருப்தி என்பவன்."

"ஆக உங்களுக்கு நல்ல துணை. இல்லையாம்மா?"

"அவன், அவனோட வேலையில் மும்முரமாய் இருப்பான். வீட்டு வேலைகளுக்கு ஆட்கள் உண்டென்றாலும் அதை நிர்வகிக்க, பேச்சுத் துணைக்குன்னு எனக்கு ஒரு நல்ல பெண்... உன்னைப் போலன்னு வையேன், வந்துட்டால் குறை இல்லைதான். வேலை இல்லைன்னு பலர் குறைபட்டுக்கறாங்க. ஆனா உண்மையும் திறமையுமாய் உழைக்கத் தயார் என்றால் ஆளுக்கு நூறு வேலைங்க காத்திருக்குதே."

பெரியவரின் பேச்சைக் கேட்டதிலேயே இளையவளுக்குத் தெம்பு ஊறியது.

"எம் மருமகளுக்குத் தையலில் ஈடுபாடு. எம்மகன் வெளிநாட்டிற்கு வேலைக்கு போன சமயம் இவளுக்கு விசா கிடைக்கலை. மாசமாயும் இருந்ததால் ரெண்டு வருஷங்கள் என்னோடு இருந்த சமயம் எட்டு தையல் மெஷின்கள் வாங்கிப் போட்டு நம்ப

பெண்களுக்குத் தைக்க கற்றுக் கொடுத்தா."

"அது இருக்குமே இருபத்தைந்து வருஷங்களுக்கு மேல்?"

"சரிதான். அது அவ ரெண்டாவது பையன் பிறந்த சமயம். குழந்தையோடு வெளிநாடு போனவ, அங்கேயே செட்டிலாயாச்சு. மூத்த பேரன்தான் அப்பவே 'நான் பாட்டியோடுதான்'னு இங்கேயே படிப்பைத் தொடர்ந்தான். விடுமுறை சமயம் பறந்து போய் பெத்தவங்களைப் பார்த்துட்டு வர்ரது."

"ஆச்சரியம்தான்... அங்குள்ள வாழ்வு முறையை பார்த்த பின்பும் இங்க வந்து விவசாயத்தை கவனிக்கறது. அவர்.. உங்க பேரன் கல்லூரிப் படிப்பு... எங்கே படிச்சார்?"

கலகலவென சிரித்த முதியவள் எழுந்து, சற்று சாய்ந்தது போல உட்கார்ந்து கொண்டார்.

"ஒருவேளை அவனுக்குப் படிப்பு ஏறலையோன்னு ஒரு சந்தேகம் உனக்கு. அதுதானே? அவன் புத்திசாலிப் பிள்ளை. படிப்பாளியுந்தான். ஆனா நிலத்தின் மேலும், இந்தப் பாட்டியின் மேலும் பாசமுள்ளப் பிள்ளை."

பெருமிதத்துடன் சொன்னார் அஞ்சுகம்.

அவரது கேலியில், சிரிப்பில் நிமலாவும் புன்னகைத்தாள்.

"அடடா... சின்னதாய் முறுவலிக்கும் போதே உன் அழகு அள்ளுது நிமலா. கலகலன்னு நீ பேசி சிரித்தால் அற்புதமாயிருக்கும்."

"இந்தக் கொடுமையான உலகத்துல அது சாத்தியமில்லை... சரியுமில்லம்மா..."

"உலக மக்கள் அத்தனை மோசம்னா சொல்ற? அந்தப் பத்திரிகையை எடுடா. அரை மணி நேரத்துக்கு முன்னே ஒரு அர்த்தமுள்ள கவிதையை அதில் வாசித்தேன்..." என்றபடி பக்கங்களை புரட்டியவர் நிதானமாய் உரக்க வாசித்தார்.

"எல்லோரும் எல்லோருக்கும்
நல்லவரில்லை

கொலைகாரனுக்கும் கொல்லப்பட்டவனுக்கும்

இருவேறு நியாயங்கள்

எடுக்கப்பட்டதற்கும் கொடுக்கப்பட்டதற்கும்

ஏதோ ஒரு காரணம்!

எல்லா தீர்ப்புகளிலும்

ஒருவர் சிரிக்கிறார்

ஒருவர் அழுகிறார்.

நீங்கள்

மழையை ரசித்த தருணங்களில்

குடிசை இல்லாதவர்கள் குளிரில் நடுங்குகிறார்கள்

உடம்பை விற்ற பணத்தில்

உடைகளும் வாங்கப்படுகின்றன.

எல்லோரும் எல்லோருக்கும்
நல்லவரில்லை."

"நிஜந்தாம்மா... எழுதினவர் யார்?"

"தஞ்சை சூர்யானு ஒரு பேரன். இப்ப இந்த பேத்தியின் மனசு கொஞ்சம் சமாதானமாயிருக்கா? நல்லதும் கெட்டதும் கலந்ததுதான் உலகம், நாம, நம்ப வாழ்க்கை. ஒரேடியாய் சலிச்சுக்கக் கூடாதும்மா... அதுவும் உன் வயசில்."

"நல்லதும்மா" நிமலாவின் புன்னகை விரிந்தது.

"நல்லவங்களுக்கு வாழ்வு நல்லதாகவே

## உலக சாதனையாளருக்கு வந்த சோதனை!

உலகில் மிகப்பெரிய இருதலைத்தசை (பைசெப்ஸ்) கொண்ட மனிதரென 2013 கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றிருப்பவர் முஸ்தபா இஸ்மாயில். எகிப்தைச் சேர்ந்த இவருக்கு 24 வயதாகிறது. இவரின் கைகளில் உள்ள இருதலைத்தசைகள் 31 அங்குல சுற்றளவு உடையதாகும். கின்னஸ் சாதனை புத்தகத்தில் இவரது பெயர் இடம்பெற்றதன் மூலம் உலகெங்கும் பிரபலமடைந்தார். இதனால் இவருக்கு 'பிக்மோ' என்ற பட்டப்பெயரும் கிடைத்தது.

இவர் மீது யாருடைய கண் திருஷ்டி பட்டதோ தெரியவில்லை. இப்போது சோதனைக்கு ஆளாகியுள்ளார். இவரது கைகளில் உள்ள இருதலைத்தசைகளும் உண்மையான தசைகள் அல்ல. சத்திர சிகிச்சை மூலம் பெரிதாக்கப்பட்டிருக்கலாம் என்று இவருக்கு எதிராக பிரசாரங்கள் கிளப்பப்பட்டன.

தனது தசைகள் உண்மையானவை என்பதை நிரூபிக்க இவர் ஜப்பானில் பல தொடர் மருத்துவ பரிசோதனைக்கு தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கிறார். இவரது கைகளின் இருதலைத் தசைகளுக்குள்ளும்

போகும். என் துணைக்கு கடவுள் ஒரு பேரனை வைத்தது போல, உனக்கும் ஒரு ஏற்ற வாழ்வு அமைப்பார் ஆண்டவன்."

"இப்போ என் சஞ்சலத்திற்கு மருந்தாய் உங்களை அனுப்பினது போல? ஒரு வேளை சிதம்பரம் என்னோடு பயணப்படுவாரோன்னு கூட நினைச்சுட்டேன்."

"கற்பனை செய்து வேறு கலங்கணுமா? இது என் விலாச அட்டை. போன் நம்பரும் இருக்குது. தேவையின் போது என்னை நினைச்சு கூப்பிடு. என்னடா?"

மறுநாள் இவள் எழுந்த போதுதான், அதிகாலை அஞ்சுகம்மா இறங்கும் போது கூட தான் விழிக்கவில்லை, அவரிடம் முறையாய் விடைபெறவில்லை என்பதை உணர்ந்தாள். ஆனாலும் சில நாட்களுக்குள் அவர் குறிப்பிட்டது போல ஒரு தேவை ஏற்படும் என்று நினைக்கவேயில்லை.

விசித்திரமாய் எழுதிச் செல்லும் விதியின் கைகள் தன்னை அவரிடமே கூட்டிப் போகும் என்று கற்பனையும் கூட செய்யவில்லை.

ஆனால் விடுதிக்கு போய் சேர்ந்த ஒரே வாரத்தில் வார்டன் தங்கமணி, தன்னை மறுபடி சென்னைக்கு, அதிலும் சிதம்பரத்திடம் அனுப்ப இருந்ததில், அவளது தவித்த புத்திக்கு பற்றுக்கோடாய் கிடைத்தது அச்சிறு விலாச அட்டைதான்!

நல்லூர் எனும் சிற்றூர். அழகிய பண்ணையின் நடுவே நிற்கும் 'தந்த பவனம்'. அங்கு பாசமும் புத்திசாலித்தனமுமான பெரியம்மா. அவரது பாதுகாப்பில் இருந்தபடி தான் அங்கிருக்கும் பெண்களுக்கு தையல் கற்றுத் தந்து... கடவுள் தனக்கென்றே உருவாக்கிய இடமாய் அல்லவா தோன்றுகின்றது...?

இவர்களுக்கு 'செல்'பேசி வைத்திருக்க அனுமதி இல்லை. ஆக வெளியே தெரிந்த அண்ணாச்சி கடைக்குப் போய் அங்கிருந்து 'தந்த பவனத்'தின் எண்களை அழுத்தினாள் நிமலா.

## 5

மறுமுனையில் 'பேசி' ஒலிக்க, இவள் மூச்சும் விடாமல் அது எடுக்கப்படுவதற்காய் காத்திருந்தாள்.

அஞ்சுகம்மாவே எடுத்து விட்டால் நல்லது. தான் அவரிடம் வேலைக்கு வருவதாய் சொல்லி விட்டு, நாளை மறுநாள் நள்ளிரவு தன்னை திண்டுக்கல் சந்திப்பில் வந்து அழைத்துப் போகவும் கேட்டுக் கொள்ளலாம்.

ஆனால் எடுத்து "ஹலோ" என்றது ஒரு ஆணின் குரல்!

ஏமாற்றத்தை விழுங்கிவிட்டு,

"அஞ்சுகம்மா இருக்காங்களா?" சிறு குரலில் கேட்டாள்.

"வெளிநாடு போகணும்னு சொல்லிட்டு இருந்தாங்க!" கேலியாய் பதில் வந்தது.

"நான் நிமலா..."

"நிர்மலா?"



சிலிக்கன் பை போன்ற உள்ளடக்கம் எதுவும் புகுத்தப்படவில்லை என்றும், ஊக்கமருந்துகள் எதையும் இவர் பயன்படுத்தவில்லை என்றும் மருத்துவ சோதனையில் தெரிய வந்தது.

இதனால் இவருக்கு போன உயிர் திரும்பி வந்துள்ளது. தினமும் 2 முறை தலா 3 மணி நேரம் உடற்பயிற்சி செய்யும் முஸ்தபா இஸ்மாயிலின் தினசரி உணவு 3 இறாத்தல் கோழிக்கறி, ஒரு இறாத்தல் மாட்டு இறைச்சி அல்லது மீன், 4 கப் பாதாம், 3 லிட்டர் புரதக்கலவை பானம், 2 கலன் தண்ணீர். இதுதான் இவரது உணவு. இப்படி சாப்பிட்டால் 31 அங்குல சுற்றளவுடைய இருதலைத்தசைகள் கைகளில் வராதா என்ன?

யாரோ கிளப்பிவிட்ட புரளிக்கு பாவம் இவர் ஜப்பானுக்கு சென்று மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டியதாயிற்று. நினைத்தாலே நமக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

"இல்லீங்க நிமலா. பெரியம்மாவோடு பத்து நாட்களுக்கு முன்னே ரெயிலில் வந்தேன். எனக்கு வேலை தர்ரதாய் சொன்னாங்க."

"ஓ? வாக்-இன், போன் இண்டர்வியூ போல ட்ரெயின் இண்டர்வியூ நடந்ததாக்கும்?" கேலியாய் கேட்டான்.

''நான் நாளை மறுநாள் அங்கே வர்றேன்னு சொல்லத்தான் கூப்பிட்டேன்."

"உங்க வயசென்ன?"

"இருபத்து நாலு" வேறு வழியின்றி பதிலளித்தாள்.

''ரைட். முப்பது வயசுக்குட்பட்ட யாருன்னாலும் இங்க வரலாம். மோஸ்ட் வெல்கம்."

மறுபடி வந்த சிரிப்பு இவளைக் கலக்கியது.

பெரியவர் சொன்ன, பொறுப்பும் படிப்பும் பிரியமுமுள்ள பேரனா இப்படி பேசுவது?

"நீங்க பெரியவங்களின் பேரன்தான?"

"யெஸ். நீங்க வர்ரது திங்களன்றுதான?"

தான் வரும் ரெயிலின் நேரத்தை ஒன்றுக்கு இருமுறை சொன்னவள், "அது நடுராத்திரி நேரங்கறதாலதான் உங்களுக்குச் சிரமம் தர நேர்ந்திடுச்சு... மன்னிக்கணும்."

"நோ ப்ராப்ளம்."

"உங்க பேர்?"

"பெரியவர்களின் பேரன். ஸீ யு!"

கலவையான உணர்வுடன் தொடர்பைத் துண்டித்தாள்.

பாசம், அஞ்சுகம்மாவின் கண்களை கட்டிவிட்டது போலவே? பிரமாதமாய் அவர் சித்தரித்த அவரது பேரன் அத்தனை பெருமைக்கு உரியவனாய் தோன்றவில்லையே?

மறக்காமல் தன்னை வந்து கூட்டிப் போவாரா?

பாட்டியிடம் தகவலைச் சொல்லி இருப்பாரா?

ஒரு ரெயில் தொடர்பை நம்பி இங்கிருந்து தான் கிளம்பலாமா?

புத்தி யோசனையில் அல்லாடியது...

ஆனால் இங்கிருப்பது தன் மானத்திற்கு ஆபத்து என முடிவெடுத்து கிளம்பி விட்டாள்.

கிளம்பும் வரை இல்லத்தில் இவளுக்கு ராஜ உபசாரம்!

"உனக்காய் கொத்து பரோட்டா வாங்கி வச்சிருக்கேன் நிமலா. சூடாய் இருக்கும் போதே ருசிச்சு சாப்பிடு. படுக்கும் முன்னே சமையல்காரம்மாட்ட உனக்குப் பாலும் தரச் சொல்லியிருக்கேன்."

ஆனால் கவலையால் நிரம்பி இருந்தவளுக்கு வேறேதும் இறங்கவில்லை.

'ஒரு பிரச்சினைக்குத் தீர்வு உண்டெனில் கவலைப்பட தேவையில்லை; ஆனால் அதற்குத் தீர்வு இல்லையெனில் கவலைப்படுவதில் அர்த்தமில்லை' என்பார்களே.

'திடும்'மென முளைத்த பிரச்சினைக்கான தீர்வை இவள் கண்டு அதைத் தன்னளவில் தீர்க்க முயற்சியும் எடுத்தாயிற்று.

இனி எதற்கு தவிப்பது?

சென்னைக்குப் போகும் ரெயிலில் கிளம்பியிருந்தாலும் நடுவழியில்... அதாவது திண்டுக்கல்லில் இறங்கி அங்கிருந்து 'தந்த பவனம்' இருந்த சிறு கிராமத்திற்குப் போய் அடைக்கலம் புக போகிறாள். இறங்குவது நள்ளிரவு நேரம் என்பதால் கூட்டிப்போக யாரேனும் வரவேணும். வேடிக்கையும் விநோதமாயும் பேசிய அந்த பேரன் வராவிட்டாலும், தானே விலாசத்தை தேடி, போய் சேர வேண்டியதுதான்...

திட்டம் தீட்டும் போதிருந்த துணிச்சல், நள்ளிரவு ஒரு புது நகரில் இறங்கி நின்ற போது காணாமல் போயிருந்தது!

இவள் இறங்கிய இடத்தில் அதிக வெளிச்சம் இல்லாததால், ஓட்டமும் நடையுமாய் தன் சொற்ப உடைமையுடன் ஸ்டேஷனின் மையப்பகுதியை அடைந்தவளின் கண்கள் பதற்றமாய் சுற்றின... யாரைத் தேடுகிறோம் என்பதில் தெளிவில்லாத ஒரு அலசல்!

மலைவாழைப்பழம், கற்கண்டு பாலின் விற்பனை மும்முரமாயிருந்தது.

ஓரளவு நாகரீக தோற்றத்திலிருந்த ஓரிரு இளைஞர்கள், யாருக்காகவும் காத்து நிற்பது போலில்லை.

தங்களது வேலைகளில் முனைந்திருந்தனர்.

தயங்கி நின்று, நகர்ந்த இவளைப் பல கண்கள் அளவிட்டதில், நத்தையாய் ஒடுங்கினாள்.

குளிர்காற்றில் உள்ளமும் நடுங்கியது.

நேரம் நகர நகர தன்னை தடவிய பார்வைகளின் தகிப்பு கூடியதை உணர்ந்தவள், அடுத்து செய்ய வேண்டியதை யோசித்தாள்.

இந்த

எதிர்பார்க்கவில்லை.

சரியான உயரமும் அளவுகளுமான நிலா பொன்னிறம். திருத்தமான அடர்ந்த கூந்தலுமான முகமும், அழகி.

ஆனால் பொலிவில்லாத பெண்ணாய் இருந்தாலும் இப்படி தனியே நின்று கலங்க விழிப்பது ஆபத்தை வரவேற்பது போலத்தானே? சித்த சுவாதீனமற்ற பெண்களையும் விடாமல் சின்னாபின்னப்படுத்தும் உலகமல்லவா இது?



தன்னைப் போல அநாதரவான பெண்கள் எல்லாம் அவ்வையாரைப் போல முதுமை வரம் கேட்டுப் பிழைக்க வேண்டியதுதானா?

விழிகள் சிவந்த ஒருவன் இவளை நெருங்க, இவள் அங்கிருந்த காவல் துறை அலுவலகம் நோக்கி நகர்ந்தாள். அங்கிருந்த நாற்காலியில் அரைத் தூக்கத்தில் இருந்தவரை இவளது குரல் உலுக்கியது.

"ம்ம்...?"

''நல்லூர் போகணும் ஸர். ஆனா என்னைக் கூட்டிட்டு போறதாய் சொன்னவங்க வரலை...'' என்றவளை மேலும் கீழுமாய் பார்த்தவர்,

"செல்போன் இருக்குமில்ல. கூப்பிட்டுப் பாரும்மா" என்றார்.

''இல்லீங்க ஸர். ஊர்லேருந்து அவங்களுக்குத் தகவல் தெரிவிச்சுட்டுத்தான் கிளம்பினேன்."

"விலாசம் இருக்கா?"

இவள் நீட்டிய அட்டையை வெளிச்சம் படுமாறு தூக்கிப் பிடித்து வாசித்தவர் முக பாவனை மாறியது.

''நிரஞ்சன் சாரு வீட்டுக்கா?'' மலர்ச்சியாய் விசாரித்தார்.

"என்னை வேலைக்கு வரச் சொன்னது அஞ்சுகம்மா..."

''இந்நேரம் அவுங்களை எல்லாம் தொந்தரவு செய்ய முடியாதும்மா. சற்று நேரமானதும் பார்ப்போம். நீ இங்கேயே இரு."

விடிந்ததும் போன் போட, மறுமுனையில் அது அழைத்து ஓய்ந்தது. எடுப்பாரில்லை.

"ஸர், எப்படியாச்சும் என்னை அங்க கொண்டு சேர்த்திட்டீங்கன்னா..."

"பத்து, பன்னெண்டு கிலோ மீட்டரம்மா. நானென்ன அனுமாரா? உன்னைய தூக்கிக் கொண்டு போய் விட? ஆட்டோவைக் கேட்டு பார்க்கலாம். எனக்குத் தெரிஞ்ச வரை நிரஞ்சன் சார் பொறுப்பானவரு. எங்க இன்ஸ்பெக்டருக்கு ரொம்பப் பழக்கம்..." பாதி தனக்குள் பேசியபடி தன் வேலைகளில் இருந்தார் அவர்.

"பொட்டப் பிள்ளைய வரச் சொல்லிட்டு கூட்டிப் போக வராமல் இருக்க மாட்டாரு..."

"அவர் என்னை வரச் சொல்லலைங்க... அவங்க பாட்டிதான்..."

'பேச்செல்லாம் தெளிவுதான்' என்பது போல ஒரு முறைப்பு விட்டவர் நகர, இவள் அங்கிருந்த இரும்பு நாற்காலியில் சரிந்தாள்.

## உணவை எடுக்க குச்சிகளைப் பயன்படுத்தும் பறவை!

வியன்னா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி என்பவரது தலைமையில் அண்மையில் ஒரு குழு வியன்னாவில் வெள்ளை நிற கிளி ஒன்றை பிடித்தது. அழகான இந்த கிளிக்கு 'பிகாரோ' என்று பெயர் சூட்டினர். பார்ப்பதற்கு விசித்திரமான இந்த பறவையை ஆராய்ச்சிக்குட்படுத்தினர். அப்போது இந்த பறவை தனது கூண்டுக்கு வெளியே உள்ள உணவை எடுக்க மதிநுட்பத்துடன் குச்சி ஒன்றை பயன்படுத்தியது. இதைப் பார்த்து விஞ்ஞானிகள் வியப்பில் மூழ்கினர்.

இந்த பறவை இனம் இந்தோனேசியாவில் அதிகளவில் வாழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மனிதர்களைப் போலவே இந்த வெள்ளை நிற கிளிக்கும் மூளை வேலை செய்வதைப் பார்க்கும்போது இதற்கு பல்வேறு பயிற்சிகள் கொடுத்தால் மனிதர்களைப் போலவே பல வேலைகளையும் கற்றுக் கொள்ளும் என்று விஞ்ஞானிகள் ஆச்சரியத்துடன் தெரிவித்தனர்.

# 6

'ஆசை இல்லாத முயற்சி அசட்டுத்தனமானது.

முயற்சி இல்லாத ஆசை ஆபத்தானது!'

தனது இக்கட்டிலிருந்து தப்ப இவள் செய்த முயற்சி சரிதான். ஒரு கவுரவமான வாழ்வுக்கு ஆசைப்பட்டது தப்பில்லையே... ஆனால் இப்போது சிக்கியிருந்த நிலைமை ஆபத்தும் அசட்டுத்தனமுமாய் போனது.

ஆனால் இவள் உதவி கேட்ட போலீஸ்காரரின் கருணை இவளுக்கு உதவியது. தன் மேலதிகாரியுடன் தொடர்பு கொண்டு நிரஞ்சனின் 'செல்' எண்ணை வாங்கியவர், ஒரு பெண் அவனுக்காய் காத்திருப்பதை தெரிவித்து விட்டார்!

''முகம் கழுவிட்டு, ஏதேனும் சாப்பிட்டுக்கம்மா. சார் வர்றேன்னுருக்கார்'' என்றவர் தன் ட்யூட்டி முடித்துக் கிளம்ப, வந்த மற்றொரு பெண் அதிகாரியைக் கண்டு சற்று தெம்பாகி காத்திருந்தாள் இவள்.

இரவு உறங்காத அசதி அவளை அழுத்தி விட்டது.

"இதோ... இந்தப் பொண்ணுதான்" என்ற பேச்சில் 'திடுக்'கிட்டு விழித்தாள். தன் முன் நின்றவனை தூக்கம் மிச்சமிருந்த விழிகளால் ஏறிட்டபோது மேலும் நிம்மதியானது.

சம்பிரமாய் நின்றவனின் கண்களில் கனிவு இருந்ததுதான் காரணம்!

''நீங்கதான் நிரஞ்சன் சாரா...? வணக்கம்.''

"ம்ம்... நீங்க யார்ன்னு தெரியலை."

அவசரமாய் தன் விளக்கத்தைச் சொன்னாள்.

"ரஜ்வினுக்கு விளையாட்டுப் புத்தி. அது வினையாகி இருக்குது" என்றான் பதிலுக்கு.

"அவர் யார்?"

"பெரியவங்களின் மற்றொரு பேரன்... ஆனா இப்ப முக்கியமான விஷயம் என்னன்னா..."

அவனது தயக்கம் இவளை மிரட்டியது!

"சொல்லுங்க ஸர்."

"பாட்டிம்மா இப்ப இங்க... அதாவது நல்லூரில் இல்லை."

வெலவெலத்துப் போனாள்.

"ஐயோ... என்ன... சொல்றீங்க?"

''வெளிநாட்டிலுள்ள அவங்க மருமகளுக்கு, அதாவது என் அம்மாக்கு கணுக்காலில் ப்ராக்ச்சர். ஆக உதவிக்குப் போயிருக்காங்க."

"பத்து நாளுக்கு முன்னேதான ஸர் பார்த்தேன்?"

பரிதாபமாய் சொன்னாள்.

"அதற்குப் பிறகுதான் விபத்து நேர்ந்த தகவல் வந்தது. பாட்டிம்மாவிற்கு மல்ட்டிபிள் விஸா இருப்பதால், உடனே ஆஸ்ட்ரியா கிளம்பிட்டாங்க."

கேட்டவளுக்கு கண்களை இருட்டியது. தனக்கு இப்படி ஓடி உதவ யாருமில்லாத திகைப்பு!

''இங்க எனக்குத் தெரிஞ்சவங்க உண்டு. அங்கே இருங்க. நான் முடிஞ்சளவு சீக்கிரமாய் உங்களுக்கான டிக்கெட் வாங்கி... நீங்க வந்திருப்பது நாகர்கோவில் பக்கமிருந்துதானே? அங்கே அனுப்பி வைக்கிறேன்."

அறிமுகமற்ற தனக்கு இவன் இவ்வளவு செய்வதே அதிகம் என்பது புரிந்தாலும், அதுவரை போர்த்தியிருந்த தைரியம் 'சட்'டென நழுவி விட.. நடுங்கும் தன் உதடுகளைக் கடித்து, பொங்கிய அழுகையை அடக்க முயன்றாள்.

"நா... நான் மறுபடி அங்கே போக முடியாது ஸர்."

நிரஞ்சனின் புருவங்கள் கூடி முடிச்சிட்டன.

'அது என் பிரச்சினை இல்லை' என்று விடுவானோ? போக்கிடமற்ற தெரு நாய்க்குட்டி கடும் மழையில் யார் வீட்டுத் திண்ணையிலோ ஒண்டியபடி அந்த வீட்டுக்காரரை கெஞ்சலாய் ஒரு பார்வை பார்க்குமே அதேபோல அவனை ஏறிட்டாள் நிமலா.

"சரி. முதல்ல கிளம்புங்க" என்றவன் இவளது பையை எடுத்தபடி நகர, பெருகிய நன்றியுடன் அவனைத் தொடர்ந்தாள்.

★★★

இவர்களின் கார் சத்தம் கேட்டு, வெளியே எட்டிப் பார்த்த பெண்ணின் வயது முப்பதுகளில் இருக்கும். மிடுக்கான தோற்றம்; சிநேகமான முகம்.

"வாங்க நிரஞ்சன். நேற்றே இங்குள்ள வேலைகளை முடிச்சிட்டதாய் சொன்னீங்களே?" வரவேற்றவளின் கண்கள் காரின் உள்ளே பரிதாபமாய் அமர்ந்திருந்த புதுப் பெண்ணை பார்த்து விட்டன.

நிரஞ்சன் சொன்ன விவரத்தை முழுக்க

கேட்கும் முன்னே பிரியமாய் வந்து காரின் கதவைத் திறந்தாள்.

''உள்ளே வாம்மா. நான் ரஞ்சிதா. அதோ அந்த ரூமில் குளியலறையும் இருக்குது. குளிச்சுட்டு வா... சாப்பிடலாம்."

அந்த வரவேற்பே நிமலாவிற்கு தெம்பு தந்தது.

குளித்து, தலை வாரி சீராய் வந்த நிமலாவிற்கு மிருதுவான தோசைகளோடு மணக்கும் மீன் குழம்பைப் பரிமாறியபடி,

''நிரஞ்சனுடைய பாட்டிம்மாட்ட பேசியாச்சு. அவங்களுக்கு உன் நிலைமையெல்லாம் தெரிஞ்சிருக்கே... ஆக உன்னை பத்திரமாய் பார்த்துக்க சொல்லியிருக்காங்க'' அறிவித்தாள் ரஞ்சிதா.

நன்றி மிக, நிமிர்ந்த நிமலாவிற்கு நிரஞ்சனின் முகத்தின் இறுக்கமும் தெரிந்தது.

ஆக அவனுக்கு இதில் ஒப்புதலில்லை!

''ஒரு பெண்ணிற்கு எத்தனையோ சிக்கல். மானமும் மரியாதையுமாய் இவ இருக்கணும்னால், யோசிக்காமல் இவளை தந்த பவனத்திலே இருக்க விடுங்க."

"அங்க யார் பொறுப்பில் இவங்களை விடறது?" சற்று அலுப்பாய் ரஞ்சிதாவை அதட்டினான் நிரஞ்சன்.

"நிமலாவின் பொறுப்பில் உங்க வீடு இருக்கட்டுங்கறேன்."

''அங்குள்ள நிலைமை... உனக்குத் தெரிஞ்சும்..."

"பாட்டிம்மா ஒரு மாசத்தில் நல்லூர் வந்திடுவாங்க... அதற்கு இடைப்பட்ட சமயம் பட்டு வருவாளே. பிறகென்ன?"

"ஓ..." ஞாபகம் வந்தது போல நெற்றியை நீவினான்.

"மறந்தாச்சுல்ல? உங்க வேலையைத் தவிர மற்றதெல்லாம் மறந்திடுது... இந்நிலையில் அந்தச் சின்னப் பொண்ணு எப்படி பண்ணை வீட்டில் இருப்பா? நிமலாவும் இருந்தால் பிரச்சினையில்லை. சேர்ந்து தையல், சமையல்னு இருவருக்கும் பொழுது போகுமே?"

"பட்டுவை இங்க கூட்டிட்டு வரலாம்னு இருந்தேன். மூணு நாளில் வந்திடுவா."

"தந்த பவனத்தின் இளவரசி அவ. இங்கே வந்து தள்ளினால்... அதை ஒத்துக்குவாளா?"

கண்ணைக் கட்டி, காட்டில் திரிய விட்ட நிலையிலிருந்தாள் நிமலா!

இந்தப் பட்டு யார்?

அப்பெண்ணைத் தன்னிடம் ஒப்படைக்கப் போகிறார்களா?

அஞ்சுகம்மா தன்னைப் பற்றி போனில் இவர்களிடம் என்ன சொன்னார்கள்?

சற்றைக்கெல்லாம் ரஞ்சிதாவோடு வாய்த்த தனிமையில் தன் சந்தேகங்களைக் கேட்டு விட்டாள்.

"நிரஞ்சனோட பாட்டிம்மாவுக்கு நீ அவங்களைத் தேடி வந்ததில் ரொம்ப திருப்தி, சந்தோஷம். மருமகளுக்கு உதவும் அவசரத்தில் இங்கே வீட்டை அப்படியே போட்டுட்டுக் கிளம்பிட்டேன். எல்லாம் அள்ளி இறைபடும். நிமலா பொறுப்பாய் வீட்டைப் பார்த்துக்குவா... முக்கியமாய் பட்டுக்குன்னாங்க..."

"மன்னிக்கணும். அவங்க யாரு?"

''நீ அவளை ஒருமையிலேயே கூப்பிட்டுக்கலாம். பத்மாவுக்கு பதினெட்டு கூட முடியலை. அஞ்சுகம்மாவின் மகள் வயிற்றுப் பேத்தி. அதாவது நிரஞ்சனின் அத்தை மகள்."

"என்ன பண்றாங்க?"

''வடஇந்தியாவில் பள்ளிப் படிப்பை முடிச்சிட்டா. கல்லூரிப் படிப்பு சென்னையிலதான்னு முடிவு பண்ணி அட்மிஷனும் ஆச்சு. அவளும் ஒரு விதத்தில் உன்னைப் போலத்தான் நிமலா. பட்டுவின் மூன்று வயசிலேயே அவங்கம்மா இறந்துட்டாங்க ஒரு விபத்தில். வட இந்தியாவிற்கு வேலைக்காக போன அவ அப்பாக்கு ஒரு குஜராத்திப் பெண்ணோடு பழக்கமாகி, அவங்களைக் கல்யாணம் செய்ததோடு அவங்க குடும்ப வியாபாரத்திலும் பங்கெடுத்ததில், அவர் தெற்கே வரதில்லை. பொறுப்பான தகப்பனாய் மகளைப் படிக்க வைத்தாலும், பட்டு விவரம் தெரியும் வரை அவ பாட்டி கைக்குள்ள வளர்ந்தா. விடுமுறை சமயமெல்லாம் இங்கேதான். அப்போதுதான் அவளது பாஷை, பழக்க வழக்கமெல்லாம் மறக்காதுன்னு அவங்க அப்பாவும் அதற்குத் தடை போட்டதில்லை..."

"அவங்களுக்கு வேற குழந்தைங்க...?"

"பிறந்ததால்தான் பட்டு தன் இஷ்டத்திற்கு இருக்க முடியுது."

சிரித்தாள் ரஞ்சிதா. ''சுமுகமான பழக்கம்னாலும், இங்கே பத்மா ஒரு இளவரசி... ஏகச் செல்லம். தான் இல்லாமல் பேத்தி எப்படி சமாளிப்பான்னு பெரியவங்க வருந்த, அதற்கு விடிவாய் நீ வந்து சேர்ந்துட்ட நிமலா. அவங்களுக்கும் திருப்தி, உனக்கும் இது பாதுகாப்பான

### 15 வயதில் பாட்டியான சிறுமி!

ஜரா ஹார்ட் ஷார்ன். இந்த சிறுமிக்கு 15 வயதுதான் ஆகிறது. விநோத நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ள இவர் வயதான பாட்டியைப் போல ஆகி விட்டார். இதுபோன்ற நோயாளிகள் இங்கிலாந்தில்



30 பேர் வரை இருக்கிறார்கள். 15 வயதிலேயே பாட்டியானதால் இந்த சிறுமி மிகுந்த சோகத்தில் மூழ்கிப் போனார். இதிலிருந்து தனக்கு விடிவு கிடைக்காதா என்று மருத்துவமனைகளின் படிகளை ஏறி இறங்கினார். இவரது நம்பிக்கைக்கு பலன் கிடைத்தது.

பிளாஸ்டிக் சிகிச்சை நிபுணர்கள் தற்போது இந்த சிறுமிக்கு சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்த சிகிச்சை மூலம் இவரை 15 வயது சிறுமியைப்போல மாற்றி விடலாம் என்று நம்பிக்கைத் தெரிவித்திருக்கிறார்கள்.

டாக்டர்கள் தெரிவித்த அந்த நம்பிக்கையிலேயே இந்த சிறுமி 15 வயது சிறுமியாக மாறிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இடம்."

மறுக்க திராணியோ தகுதியோ இன்றி நின்றிருந்தாள் இவள்.

'அங்குள்ள நிலைமை...' என்று நிரஞ்சன் ஏதோ சொன்னாரே... அது என்ன? என்ற கேள்வி மனதுக்குள் குடைந்தது.

இவளது தயக்கத்தைப் போக்கும் விதமாய் ரஞ்சிதா பேச, அதற்கான பதிலும் கிடைத்தது.

"பெரியவங்க இல்லாமல் நீ தனியே... அதாவது நிரஞ்சனின் வீட்டில் இருக்க நேருமேன்னு யோசிக்கவும் வேண்டாம் நிமலா. அவர் வேலையில் மும்முரம்... தவிர, மனைவியை இழந்த மூணு, மூணரை வருஷமாய் தன் பெயரைக் கெடுத்துக்காதவர். ஆக போய் நிம்மதியாய் இரு. நான் முடிஞ்சப்ப வர்ரேன்."

இவளுக்குள் 'நறுக்'கென ஒரு குத்தல்.

நிரஞ்சன் மனைவியை இழந்து வாழ்பவரா?

தன் மகள் இளவயதில் விபத்தில் பலியானதையோ, மிஞ்சி தன்னோடு தங்கிய பேரனின் வாழ்வும் கருகிப் போனதையோ அஞ்சுகம்மா தன்னிடம் மூச்சு விடவில்லையே?

தன் புலம்பல்களை வெகு பொறுமையாய் கேட்டவரின் வாழ்விலும்தான் பல பொத்தல்கள்...

ஒவ்வொரு வாழ்வு புத்தகத்திலும் பல பக்கங்கள் தாறுமாறாய் கிறுக்கப்பட்டவைதான் போல...

பெருமூச்சுடன் 'தந்த பவனம்' போக, தன் சம்மதத்தைச் சொன்னாள் நிமலா.

## 7

பிரதான சாலையிலிருந்து உள்ளடங்கிய 'நல்லூர்' இவள் நினைத்ததை விட சிறிய கிராமம் என்றால், 'தந்த பவனம்' இவளது எதிர்பார்ப்பை விட பிரமாண்டமும் பிரமாதமுமாய் நின்றது!

அவர்கள் வந்து சேர்ந்தபின் மதியப் பொழுதின் சாய்ந்த சூரிய ஒளியில் அப்பெரிய வீட்டின் சதுர கற்கள் தந்தம் போன்ற வழுவழுப்பில் மின்னின.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன் எழும்பிய வீடு, வெயில், மழையின் தாக்கங்களை மீறி தங்கம் போல ஜொலிப்பதை ஆச்சரியமாய் பார்த்தாள்.

அதைப் புரிந்து விளக்கமும் தந்தான் நிரஞ்சன்.

"எதையும் சரியாய் பராமரிக்கணும்னு நினைப்பேன். ஆக ஆஸிட்வாஷ் தந்து கற்களைப் புதுப்பித்தேன். இதன் பழைய அழகைப் பார்த்த பாட்டிம்மாக்கு அத்தனை சந்தோஷம்."

"மற்றபடி கற்கள் பாசமேறி கறுத்து கிடந்திருக்கும்" என்றவள் கண்கள் மிரண்டன, மிக பலக்கக் கேட்ட நாயின் குரைப்பில்.

"நாய்ங்க இருக்கு போல?"

"இப்ப கட்டியிருக்கும். ஆறு மணிக்கு மேல் ரெண்டையும் அவிழ்த்து விடுவோம்

காவலுக்கு."

"கடிக்கும் ரக நாய் போல?"

"புத்திசாலி ரகம். யாரைக் கடிக்கணும், விடணும்ங்கறது அதுகளுக்குத் தெரியும்" சற்று பெருமிதத்துடனேயே சொன்னான்.

இவளுக்காய் தரப்பட்ட அறையைப் பார்த்தவள் திகைத்து விட்டாள்.

இதுவரை அந்த வரம் அவளுக்கு வாய்த்ததில்லை. அதிலும் வெங்காய நிற சுவர்களும், பாலைத் தேக்கியது போல பளபளத்த வெள்ளைத் தளமும்... அந்த அலங்காரம் அவளைக் கூச வைத்தது.

வசதியான மெத்தைக் கட்டில், இருக்கைகள், மெல்லிய திரைச்சீலைகள், கண்களை உறுத்தாத விளக்கு அமைப்பு, ஓவியங்கள் என்றிருந்த அறையை பரவசத்துடன் சுற்றி வந்தாள். இணைக்கப்பட்டிருந்த குளியல் அறை, இவளுக்கு இறக்கைகளை உருவாக்கியது... பறந்து விடுமளவிலான பரவசம்!

விடுதியிலிருந்த சொற்ப குளியலறைகளில் ஆளுக்கு மூன்று நிமிடங்கள்தான் குளிக்க. அதற்குள் உடை களைந்து, குளித்து, துடைத்து, வேறு சுற்றியபடி வெளியேறி விட வேண்டும். அல்லது தகரக் கதவு அறையப் படும். அல்லது காதுகளைக் குடையும் ஏச்சுக்களை கேட்க நேரும்.

சற்று முன்பு வரை போக்கிடமற்று தவித்தவளுக்கு இது ராஜ வாழ்க்கை! கண்கள் கசிய கடவுளுக்கு நன்றி சொன்னாள். இவளது சிறு பையோடு ரஞ்சிதா தந்துவிட்ட பெரிய துணி பண்டல்களும் இவள் அறையில் வைக்கப்பட்டிருந்தன.

ரெயிலில் தான் சந்தித்த அஞ்சுகம்மா இந்தியாவிலேயே இல்லை என்றதும் இவளுக்கு மூச்சும் பேச்சும் அற்றுதான் போயின.

இரண்டும் சீரானது பெரியவரின் குரலை போனில் கேட்ட பிறகுதான். இவளது நிலை புரிந்து ரஞ்சிதாதான் இணைப்பை ஏற்படுத்தித் தந்தது.

"சந்தோஷம் நிமலா. நல்ல முடிவாய் எடுத்திருக்கே. இனி நிம்மதியாய் இருக்கப் போறேம்மா" என்று பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து அஞ்சுகம்மா ஆறுதல் கூற, நிமலாவிற்கு விம்மத்தான் முடிந்தது. வார்த்தைகள் அத்தனையும் மறந்து போயின!

"உன் உடைமைகளை எல்லாம் எடுத்துட்டு வந்துட்டல்ல? இனி அந்த விடுதிக்குப் போக நேராதே?"

"உருப்படியாய் இருந்தது மூணு செட் புடவைம்மா. எங்கம்மாவின் போட்டோ. அவ்வளவுதான்" என்றவள் மற்ற விவரங்களையும் சொல்லி முடித்தபின் மனம் ஆசுவாசப்பட்டிருந்தது.

படுத்தவள் தூங்கியிருக்க வேண்டும்.

முகம் கழுவி வந்தவளை சாப்பிட வைத்த ரஞ்சிதா, இந்த துணி பண்டல்களைக் காட்டினாள்.

"இதெல்லாம் பெரியம்மா சொன்னது போல வாங்கிட்டு வந்திருக்கேன் நிமலா. இது முழுக்க பருத்தி துணி... கைக்குட்டை, உள்பாவாடைக்கானது. கம்மி விலையில் எடுத்தேன். முதலில் அங்குள்ள பெண்களுக்கு..."

"யாருக்கு?"

"பண்ணையில் வேலை பார்க்கும் பெண்கள் முன்பு தையல் கற்றுக்க ஆர்வமாய் இருந்து, ஏதோ பழகவும் செய்தாங்க போல..."

"பெரியவங்க மருமகள் தையல் மெஷின் வாங்கிப் போட்டு, கற்றுத் தந்ததாய் சொன்னாங்க."

"அந்த வேலையைத் தொடரணுமாம் நீ. இதில் ரவிக்கைத் துண்டுகள். ஓரளவு தையல் பிடிபட்ட பிறகு ரவிக்கை வெட்டித் தைக்க சொல்லிக் கொடு."

"நல்லதுங்க."

"இந்தப் பையில் நாலு புடவையும், அதற்குப் பொருத்தமான உள்ளாடைகளும் இருக்குது. இது நான் வாங்கி கட்டாமலேயே வைத்திருக்கும் க்ரேப் சில்க். அஞ்சு கிலோ குறைஞ்ச பிறகு கட்டலாம்னு நினைச்சு வைத்தது..." வருத்தமாய் உதடு பிதுக்கினாள் ரஞ்சிதா. "உனக்குப் பொருந்தும்..."

"ஐயோ... எதுக்குங்க?"

"உஷ்... மறுத்துப் பேசக் கூடாது. உன்னையும் கூட்டிட்டுப் போய் வாங்கியிருக்கலாம். அசந்து படுத்திருந்தே. இன்னொரு தரம் நாம சேர்ந்து ஷாப்பிங் போகலாம். அநாவசிய கேள்வி, பேச்சுக்களைத் தவிர்க்க உன்னை தன் தூரத்து சொந்தம்னு பெரியம்மா அறிமுகப்படுத்தச் சொல்லியிருக்காங்க. அதற்கேற்றது போல உடுத்தி, 'பளிச்'சுனு நீ இருக்க வேண்டாமா? அங்கே போய் வீட்டைச் சீர்படுத்தி, அன்றாடம் நடத்தி, தையல் கிளாசையும் ஆரம்பிச்சுட்டியானால் பிறகு உனக்கு எதைப் பற்றியும் யோசிக்க நேரமிருக்காது. பவுடர், சோப், க்ரீம் கூட வச்சிருக்கேன்."

"ஐய்யோ... இத்தனைக்கும் காசு?"

"நிரஞ்சனின் கார்ட்தான்! பாட்டியின் சொல் அவருக்கு வேதமாச்சே. அவங்களும் சீக்கிரமே ஆஸ்ட்ரியாவிலிருந்து வந்திடுவாங்கன்னு நினைக்கறேன். குரல்ல அத்தனை உற்சாகம்!"

இதெல்லாம் இன்று காலையில்தானா நடந்தது? தன் வாழ்வு புரட்டிப் போட்டாற் போலல்லவா மாறிப் போனது? மாளிகைப் போலுள்ள இந்த வீட்டைப் பார்க்கவும்தான் புரிகிறது. இங்கு தான் நைந்த உடையில் நசுங்கலாய் உலவ முடியாது!

தன் உடைகளுக்கான பணத்தைத் தன் சம்பளத்திலிருந்து கழிக்க சொல்ல வேணும்...

ஆனால் இத்தனை பாதுகாப்பான, ராஜ வாழ்க்கை வாழ அவர்களிடமிருந்து சம்பளம் வேறு தான் எதிர்பார்த்தால்... பெரும் பாவமல்லவா அது?

வீட்டின் வெளிப்புறம் நன்கு பராமரிக்கப்பட்டிருந்தாலும், உள்ளே அத்தனை நறுவிசாயில்லை. ஆக அதைச் செய்ய வேண்டியதுதான்.

'துர்நாற்றத்தைத் தொடர்ந்தால் சாக்கடைக்கும், வாசனையைத் தொடர்ந்தால் பூக்கடைக்கும் செல்லலாம்' என்பார்களே. அது எத்துணை சரி.

சிதம்பரத்தின் அழைப்பை ஏற்றிருந்தால் தன் வாழ்வு நாறிப் போயிருக்கும். பூக்கடைக்கு வந்தாகி விட்டது. இதை தன்னால் முடிந்த வரை அம்சமாக்க வேண்டும் என்று முடிவு செய்தவள்,

தன் உடைமைகளை அடுக்கி வைத்தபின் கீழே இறங்கினாள். படியிறங்கும் போதே கீழே பேச்சுக்குரல்...

யாரும் விருந்தாளி



வந்திருக்கிறார்களோ?

தயங்கி நிற்க, நாய்களின் சன்னக் குரைப்பும் கேட்டது. மேலும் இறங்கியவளை அக்காட்சி சித்திரம் போல ஈர்த்தது. உயரமும் வனப்புமான இரு உயர்ஜாதி நாய்கள், தங்கள் அடர்ந்த வால்களை சாமரமாய் ஆட்டியபடி, அமர்ந்திருந்த நிரஞ்சனைச் சுற்றிச் சுற்றி வந்தன. அவன் கைகளை கவ்வுவதும், முகத்தை எம்பி முகர்ந்து செல்லமாய் முணங்குவதுமாய்...

"இன்னும் எவ்வளவு நேரம் என்னையே கவனிக்கப் போறீங்க? காவல் வேலையை பிறகு யார் பார்க்கறது?'' நிரஞ்சன் அவற்றைப் போலியாய் அதட்டிக் கொஞ்ச, இவளுக்குத் தொண்டை இறுகியது.

குழந்தையாய் இருந்த போதும் தான் யார் மீதும் இப்படி விழுந்து மகிழ்ந்ததில்லை. யாரும் இவளை அள்ளிச் சீராட்டியதில்லை. இப்பிராணிகளுக்கான கவனிப்பு அவற்றைப் பார்க்கும் போதே தெரிந்தது. அவற்றைத் தொட்டுத் தடவும் ஆவலுடன் இவள் இறங்க, காலடிச் சத்தம் கேட்டு அவை விறைத்துத் திரும்பின.

நிரஞ்சன் அவற்றின் காலரைப் பற்றிக் கொண்டான்.

"கொயட் டிம்மி அண்ட் டானா."

அவன் உத்தரவிட, இவளை அமைதியாய் முறைத்தன.

ரோமம் அடர்ந்த ஜாதி நாய்கள். ஒன்று ஆழ்ந்த தேன் நிறத்தில் இருக்க, மற்றது பொன்னிறம். அதே நிற கோலிக் குண்டு கண்கள் இவளை அளவிட்டன.

இவள் ஆவலாய் நெருங்க, இரண்டுமே மேல் உதட்டை உயர்த்தி உறுமின. கூரிய பல்வரிசையில் மிரண்டு பின்வாங்கினாள்.



"நோ..." அவன் அதட்டலுக்கு கட்டுப்பட்டு வாயை மூடினாலும் முகத்தைத் திருப்பிக் கொண்டன.

"ஜாதி நாய்கள் புது ஆட்களிடம் வேசில் பழகாது."

நிரஞ்சன் சொல்ல, இவள் ஏக்கமாய் அவற்றைப் பார்த்தாள்.

## 8

இந்தியாவில் ஆயிரம் ஆண்களுக்கு தொள்ளாயிரத்து பதினான்கு பெண்களே இருப்பதாய் சொல்கிறது புள்ளி விவரம்.

பெண்ணென்று தெரிய, கருவையே கலைத்து விடும் பாதகத்தால் நேர்ந்த வித்தியாசம் இது.

பாதகத்திற்கான காரணம் பெண்ணிற்குத் தர வேண்டிய வரதட்சணை பற்றிய பயம்.

பீகாரின் தஹ்ரா எனும் கிராமம் இந்த விஷயத்தில் ஒரு முன்னோடி. அங்கு பெண் பிறக்க, உடனே அவள் பெயரில் பத்து மாமரக் கன்றுகள் நடப்பட்டு விடும். இருபது வருஷங்களில் அதன் பழங்களை விற்று சேர்த்த காசில் குறைவின்றி அப்பெண்ணின் திருமணம் சீர்செனத்தியோடு நடக்கும்.

அது நல்ல திட்டமென்று பட்டாலும் நட்டு வளர்க்க, கையகல நிலம் வேண்டுமே. அதுவும் இல்லாத பெண்களுக்குப் பெரும் பலம் கைத்தொழில் என்று புரிந்த நிமலா, தனக்குத் தெரிந்ததை பிற பெண்களுக்கு சிரத்தையுடனேயே கற்றுத் தந்தாள்.

முதலில் கைக்குக் கிடைத்த கந்தல் துணிகளை ஓரம் தைக்கவும், வெட்டவும் பழக்கியவள், ஐந்தாம் நாளே புதுத் துணிகளை எடுத்துப் போட்டாள்.

முதலில் வந்த நான்கு பெண்கள், ஆளுக்கு மேலும் இரண்டு பேரை கூட்டிவர, யாருக்கு எதைக் கற்றுத் தருவது என்பதில் திணறல் ஏற்பட்டது. முதல் செட் காலையிலும், புது செட் மாலையிலும் வந்து பயிலுவது என்று பிரித்தவள், மற்ற நேரத்தில் வீட்டு நிர்வாகத்தைக் கவனித்தாள்.

'பாட்டிம்மா இல்லாததால் சென்னையிலுள்ள என் தோழி வீட்டில் ரெண்டு நாள் இருந்து விட்டு வர்ரேன்' என்று பத்மா தகவல் அனுப்பியதும் நிமலாவிற்கு வசதியாகவேப் போனது.

பின்புற அறைகளில் கிடந்த தோதகத்தி நாற்காலிகளைத் துடைத்து வரவேற்பறையில் அம்சமாய் இட்டு, அதன் அமைப்பை மாற்றினாள். பத்மாவிற்குப் பிடித்த பலகாரங்கள் தயாராயின.

சற்று அலட்சியமாய் விடப்பட்டிருந்த தோட்டம் கண்ணைப் பறித்தது.

அன்று பத்மா வரப் போகிறாள்... என்ற பதற்றத்தில் நிமலாவிற்கு தூக்கம் கூட பிடிக்கவில்லை.

உயர்மட்டப் பெண்ணான அவளும்... டிம்மி, டானாவைப் போல தன்னிடம் பட்டும் படாமல்தான் நிற்பாளோ?

சாதாரண பண்ணைப் பெண்களைப் போல வந்து தன்னிடம் தையல் கற்றுக் கொள்வாள் என்று எதிர்பார்ப்பது பேராசை.

பார்க்க கவுரவமாய் இருக்க வேண்டி, ரஞ்சிதா வாங்கித் தந்திருந்த தளிர் பச்சை ஜார்ஜெட் புடவையை இன்று கட்டிக் கொண்டிருந்தாள். பொருத்தமான புது ரவிக்கை.

காலை வகுப்பிற்கு வந்த பெண்களின் பார்வையே பாராட்டியது. "ஜோராய் இருக்கீங்கம்மா. இதேபோல நாங்களும் சட்டை தைச்சு போட்டுக்குவோமா?"

"நிச்சயமாய். புதுக் கைக்குட்டைக்கான ஓரங்களை ஓரளவு கச்சிதமாய் போட்டிருக்கிங்க. இன்று அதில் பூ வேலை போடக் கற்றுத் தர போறேன்."

ஏற்கனவே இருந்த எம்பிராய்டரி நூல்களைப் பிரித்து, பூவேலையை ஆரம்பித்து விட்டபோது நாய்களின் உற்சாகக் குரல் கேட்டது. இந்தச் சில நாட்களிலேயே அவற்றின் பாஷை இவளுக்குப் புரிபட ஆரம்பித்திருந்தது.

ஆக பத்மாதான் வந்திருப்பாள். மதுரைக்கு விமானம் மூலம் வந்திறங்கியவள் இங்கு கார் மூலம் வந்து சேர்ந்திருக்கிறாள். கார் கதவுகள் திறக்கும் சத்தத்தில், ஜன்னல் வழியே பார்வையால் துழாவினாள்.

வந்து இறங்கிய இளம்பெண், நடுத்தர உயரத்தில் ஒடிசலாய் இருந்தாள். தன்னைச் சுற்றி வந்த நாய்களை வாஞ்சையுடன் தடவியவளின் சிரிப்பு, அவளது பாட்டி அஞ்சுகம்மாளை ஒத்திருந்ததோ?

ஆர்வத்துடன் வெளிவராந்தாவிற்கு நடந்தாள் நிமலா. கலையாத தன் கூந்தலை நீவிக் கொண்டவள், வரும் விருந்தாளி தன்னைப் பார்க்கும் இடமாய் தேடி, மரியாதையாய் நின்றாள்.

''வாங்க பட்டும்மா'' என்று பாசமாய் விளித்து, தன்னுடன் நடந்த வேலைக்காரர்கள் சூழ, வீட்டை நோக்கி

நடந்த பத்மாவின் கண்கள், தந்த நிற முரட்டு கட்டிடத்தின் முகப்பில், முளைத்த தளிர் செடிபோல பசுமையாய் நின்றவளை உறுத்தன.

''அவங்க நிமலா. பாட்டிம்மா சொல்லியிருப்பாங்களே?'' என்ற நிரஞ்சனின் அறிமுகத்தை ஒதுக்கி விட்டு வேகமாய் நடந்த பத்மாவின் குரல் உயர்ந்து கிறீச்சிட்டது.

"பாட்டிம்மா, என்னை ஏமாற்றிட்டாங்க நிருத்தான்."

அதுவரை தயங்கித் தளர்ந்திருந்த நிமலாவின் கால்கள், இப்போது தாழ்வாரத்தின் தூண்களில் ஒன்றுபோல இறுகின.

அசையக் கூடாத ஒரு சிலை போல நின்றிருந்தாள்!

மேலும் தீவிரமான பார்வையுடன் இவளை நெருங்கிய பத்மா, "உங்களை ரெயிலில் சந்திச்சது பற்றி நீட்டி முழக்கினாங்க. உங்க உதவும் குணம், பொறுமை பற்றியெல்லாம் சொன்னவங்க, நீங்க இத்தனை அழகுன்னு சொல்லலியே.. ச்சீட்டிங்!" உதட்டைச் சுழித்தாள்.

வந்தது பழியா, பாராட்டா என்பது புரியாததால் எவ்வித பாவனையும் காட்ட துணியாமல் இன்னும் சிலையாகவே இருந்தாள் நிமலா!

பல பிரச்சினைகளை தனக்குச் சேர்த்த அழகை இவள் எப்போதுமே கொண்டாடியதில்லை. இப்போது வந்த பத்மாவும் இந்த அழகில் எரிச்சலாகி ஒதுங்கி விடுவாளோ என்று புதுக் கலக்கமும் சேர, புன்னகைக்கக் கூட முடியாத நிலை!

''ரஜ்வின் அத்தானும் உங்களிடம் பொறுப்பற்று நடந்ததாய் பாட்டிம்மா திட்டினாங்க. ஆனா அத்தான் உங்களோட போனில் மட்டும் பேசியதால், உங்க அழகு அவங்கக் கண்ணில் பட்டிருக்காது. ஆனா வரும் வழியில் நிருத்தான் கூட எங்கிட்ட சொல்லலியே?"

"நான் எதைச் சொல்லலை?" காரைப் பூட்டிவிட்டு வந்த நிரஞ்சன் கேட்க, நிமலாவிற்கு மேலும் உதறியது!

"இந்த அக்கா இவ்வளவு அழகுன்றதை... நீங்களும் ஏன் எங்கிட்ட சொல்லலை?"

அழுத்தமாய் வந்த கேள்வியில் சற்று திகைத்தவன், பின் சமாளித்து சிரித்தான்!

அந்த அசட்டு சிரிப்பின் ஊடாக, நிமலா முதன்முதலில் வாய் திறந்தாள்.

"நீ கூடத்தான் அழகாய் இருக்கே பத்மா. அதை என்னிடம் யாரும் குறிப்பிட்டுச் சொல்லலியே?"

இதுவரை பதுமைப் போலிருந்தவள் வாய் திறந்து பேசிய முதல் வார்த்தையே தனக்குப் பாராட்டுப் படிக்க, பதினெட்டு வயதும் நிரம்பாத பத்மா குளிர்ந்து போனாள்!

இரு பெண்களும் வீட்டிற்குள் நுழைய, பின்தங்கிய நிரஞ்சனின் பார்வையில் புது வேறுபாடு தெரிந்தது இவளுக்கு.

பத்மாவின் பேச்சு, அவனுள் சலனத்தை

## ஆஸ்திரேலியாவில் நிறம் மாறும் கடற்கரைகள்!

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள பல கடற்கரையோரப் பகுதிகள் தொடர்ச்சியாக மூடப்பட்டு வருகின்றன. பாம், டுரிமெடா, பொந்தி, குலோவெலி என 10-க்கும் மேற்பட்ட கடற்கரைகள் இதுவரை மூடப்பட்டுள்ளன. இந்தக் கடற்கரையோரப் பகுதிகள் ஒருவகை பாசிகளால் சிவப்பு நிறமாக மாறி வருவதனாலேயே இந்தக் கடற்கரைகள் மூடப்பட்டு வருகின்றன.



நொக்டிலுகா எனப்படும் ஒருவகை பாசியினாலேயே கடல் சிவப்பாக மாறியுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக்கடலில்மனிதர்கள் குளிப்பார்களேயானால் அவர்களது தோலில் அரிப்பு முதலான நோய்கள் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தக் கடலில் யாரும் குளிக்கச் செல்வது இல்லை.

இதுதவிர நீரில் ஒட்சிசனின் அளவும் குறைவதால் மீன்களும் இறந்தவண்ணம் உள்ளன. கடல்நீரின் வெப்பம் திடீரென அதிகரித்ததே இதற்கான காரணம் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு மாற்று வழி என்னவென்று இப்போது ஆராயத் தொடங்கியுள்ளனர்.

ஏற்படுத்தி விட்டதோ?

தனக்குப் பரிமாறப்பட்ட குளிர்ந்த பாதாம் பாலைப் பருகியபடி பெரிய மனுஷியாய் பேசினாள் பத்மா.

"எவ்வளவு இக்கட்டான நிலைமையில் உங்க சந்திப்பு இருந்துச்சுன்னு பாட்டிம்மா சொன்னாங்க. அப்பமே எனக்கு அதற்கான காரணமும் புரிஞ்சிருக்கணும். பொம்மையாட்டம் இருக்கீங்க! எங்க வீட்டு ஹால் கூட 'பளிச்'சுனு ஆயிடுச்சே?"

"ம்ம்... உள்ளே கிடந்த சில அபூர்வப் பொருட்களை இங்கே கொண்டு வந்தேன். உனக்குப் பிடித்திருப்பதில் சந்தோஷம். பெரியம்மாட்ட கேட்டுட்டுத்தான் இதையெல்லாம் செய்திருக்கணும். ஆனா.. இங்க ஏறக்குறைய ஐந்தாறு நாட்கள் இருந்தேனா..."

"நல்லதை யார் செய்தா என்ன? நீங்க எனக்கு தையல், சமையல் எல்லாமும் சொல்லித் தருவீங்கன்னாங்க பாட்டிம்மா."

"தையல் சரி... ஆனா இரண்டாவது சொன்னதை நானும் உன்னோடு சேர்ந்து கற்றுக் கொள்ளும் அளவில்தான்."

"குட்! வெந்நீராவது வைக்கத் தெரியுமா?"

"ரசம், சாதம், கூட்டுனு எளிமையான சமையல் பழக்கம். ஆனால் தையல் போல அதில் தனி ஆர்வம், திறமை இல்லை."

"சேர்ந்தே கலக்குவோம், நிமலாக்கா" என்று சிரித்தவளை கட்டிக் கொள்ளலாம் போலிருந்தது.

பத்மா அவளது அறைக்குப் போக, சில சமையல் புத்தகங்களைத் தேடி எடுத்த நிமலா, அன்று மதியத்திற்கான ஒரு பதார்த்தத்தை தேர்ந்தெடுத்து, அதற்கான சாமான்களை எடுத்து வைத்ததும் தன் தையல் வகுப்பிற்குப் போனாள்.

அங்கு கூடுதலாய் பத்து புதுப் பெண்கள் வந்திருக்க, அவர்களுக்காய் மாலை வகுப்பில் சேர்த்துக் கொண்டாள்.

"முதல்ல வந்த ஏழு பேருக்கு இப்ப மெஷினில் கை பழகியிருச்சு. ஆக அவங்க முதல் செட்டாக இருக்கட்டும். மற்ற இரண்டாம் செட்டிற்கான நேரம் மதியம் மூன்றிலிருந்து ஐந்து வரை..."

"நாங்க அப்போதும் வரலாங்களா?" முதல் செட் பெண் ஒருத்தி கேட்க, நிமலா புன்னகைத்தாள்.

"கண்டிப்பாய். சீனியர் செட் கற்றுத் தந்தால், உங்களுக்கும் பாடம் சுலபமாகும், எனக்கும் அது வசதிதானே?"

ஆக நிமலாவின் நாளிற்கான அட்டவணை கச்சிதமாய் அமைந்து விட்டது. எழுந்ததும் தோட்ட வேலை, பிறகு வீட்டின் பராமரிப்பு, காலையிலும் மாலையிலுமாய் தையல் வகுப்புகள், நடுவே சமையல் என்று.

ஞாயிறன்று தங்களின் கணவன்மார் வீட்டிலிருப்பதால் தையலுக்காய் பெண்கள் அன்று வருவதில்லை. வந்த முதல் ஞாயிறன்று தனக்கான ரவிக்கைகளை தைத்துக் கொண்டவள், அடுத்தவாரம் பூட்டிக் கிடந்த சில அறைகளைத் திறந்து சுத்தப்படுத்த முனைந்தாள்.

பத்மாவிற்கும் பழகாத இந்த வேலை சுவாரஸ்யமாயிருக்க, உதவினாள்.

"பட்டும்மாக்கு தூசி ஆவாதுங்க" என்று வேலைக்காரர்கள் எச்சரிக்க, "நீ ஜம்முனு உட்கார்ந்து பூவேலை செய்வியாம்" என்று நிமலா, இளையவளை ஊசியும் நூலுமாய் இருத்தி வைத்தாள்.

"மாரி, என் ரூமிலுள்ள துணிகளை துவைக்க எடுத்துக்கோ" என்றபடி நிரஞ்சன் வெளியே போக, மெள்ள அவனது அறைக்குள் தலை நீட்டினாள் நிமலா.

வெகு களேபரமாய் இல்லாவிட்டாலும், அறை களையாகவும் இல்லை என்று தோன்ற வேலையில் இறங்கினாள்.

பயன்படுத்திய துணிகளை எடுத்துப் போக வந்த மாரியம்மாளிடம், "ஐயாவுடைய படுக்கையை நல்லபடி வைக்க வேண்டாமா?" என்று கடிந்து கொள்ள மாரி, "பெரியம்மா போனதிலேருந்து யாரும் இங்க வர்லீங்களே" என்று சமாளித்தாள்.

"அம்மா இல்லாத நேரம் நாமதான் கூடுதல் பொறுப்போடு நடந்துக்கணும்" என்றவள் பரபரவென கசங்கிய விரிப்புகளை அகற்றினாள்.

"இதையும் சலவை மெஷினில் போட்டுட்டு, டஸ்டர், பெருக்குமாறோடு வாங்க மாரி" என்று கலைந்து கிடந்த மற்ற பொருட்களை சீர்படுத்தினாள்.

படிந்திருந்த தூசைத் தட்டி, அறை பெருக்கித் துடைக்கப்பட, அதன் களை மீண்டிருந்தது.

"புது பெட்ஷீட்ஸ் எங்கேயிருக்கும்?"

"அது... பெரியம்மாதான் மாற்ற எடுத்துத் தருவாங்க"

"சரி. நான் பார்க்கறேன். மெஷினிலுள்ள துணிகளை உலர்த்திடுங்க" என்றபடி சில அலமாரிகளைத் திறந்தவளின் கைகள், சற்று நலுங்கியிருந்தவற்றை நேர்படுத்தாமல், கதவை மூடவில்லை. ஒரு சுவர் முழுக்க

அடைத்தாற் போலிருந்த அலமாரியில் பல கதவுகளைத் திறந்து மூடியவள், கடைசிக் கதவை திறக்க, அவளது விழிகள் மலர்ந்து விரிந்தன. இவள் தேடிய படுக்கை விரிப்புகளும், தலையணை உறைகளும் அங்கு இருந்ததோடு, கீழ்தட்டில் இருந்தபடி சிரித்த அப்பெண்ணின் முகம் நிமலாவை திகைக்க வைத்தது!

வெகு உயிர்ப்புள்ள ஓவியம் அது!

மாருதியின் பாணியில் கழுத்து வரை வரையப்பட்ட ஒரு கவர்ச்சியான குண்டு முகம்!

வளைந்த இமைகளும், சுருண்ட கூந்தலும், வாய்விட்டு சிரிக்கும் களிப்புமாய் கண்களை கட்டி ஈர்த்த அழகு!

படத்தின் கீழே எழுதப்பட்டிருந்தது என்ன...?

குனிந்து பார்த்தாள். பொடி எழுத்துக்கள். 'பிரியமுடன் – ஷியாம்' என்றன!

படத்தின் அருகே ஒரு கட்டு கடிதங்கள் சிகப்பு பட்டு ரிப்பனால் கட்டப்பட்டிருக்க, அதிலும் அதே பொடியான சரிந்த எழுத்து!

இப்படத்திலுள்ள பெண்தான் நிரஞ்சனின் மனைவியா?

அதாவது இறந்து விட்ட அவனது வாழ்க்கைத் துணை?

இவ்வளவு உற்சாகமும் கவர்ச்சியுமான ஒருத்தியை மணந்து, இளம் வயதிலேயே அவளை இழந்தது கொடுமைதான்.

இப்படத்தை வரைந்த, கட்டுக்கட்டாய் கடிதமெழுதிய ஷ்யாம் யார்? மனைவியுடைய படத்தின் அருகே வைக்கப்பட்டதால், இவையெல்லாம் அவளுக்கு எழுதப்பட்டவைதான் போலும்... இவ்வளவு நெருக்கமாய் ஒரு ஆண் இவளோடு பழகுவது என்றால்...?

'சட்'டென தன்னை உலுக்கிக் கொண்டவள், தேவையான விரிப்புகளை எடுத்துக் கொண்டு அலமாரியை மூடினாள்.

அனுமதியின்றி ஒருவர் அறையில் நுழைந்ததே தவறு. இதில் அவர்களுடைய அந்தரங்கத்தைக் குடைந்து, ஆராய்வது பாவம்... என்று தன்னையே கடிந்தபடி படுக்கையை போட்டாள்.

வாசலில் நிழலாட, திடுக்கிட்டு நிமிர்ந்தவள் தொண்டை உலர்ந்தது.

முகமெல்லாம் கோபம் வழிய நின்றது நிரஞ்சன்!

எவ்வளவு நேரமாய் அங்கேயிருந்தபடி தன்னைக் கவனித்திருக்கிறான்?

மன்னிப்பு கேட்கவும் கூடாத நடுக்கத்தில், அங்கிருந்து நழுவினாள் இவள்.

## 9

'பிறப்பு ஒரு விபத்தெனில்
இறப்பு ஒரு மர்மம்...
இடைப்பட்ட வாழ்வோ பெருங்குழப்பம்!

என்று ஒரு அனுபவஸ்தர் சொல்லிப் போனது சரிதான்!

பிறப்பும் இறப்பும் நம்மை மீறியவை என்று விட்டு விடலாம்.

ஆனால் வாழும் நாட்கள் எல்லாம் சீரும் தெளிவுமாய் போகின்றனவா என்ன? கடலின் அலைகளைப் போல சிறிதும் பெரிதுமான குழப்பங்கள் ஒவ்வொருவரையும் புரட்டித் தள்ளி சிரிக்கின்றனதான்.

பெரும் ஆபத்திலிருந்து தப்பின தன் நாட்கள் நிம்மதியாய் கழிகின்றனவே என்று திருப்திப்பட விடாமல் அவளை நிரஞ்சனின் கோபமுகம் உறுத்தியது.

வேலையாட்களிடம் கூட முகம் கோணாமல் பழகுபவன் அவன், என்பதைக் கவனித்திருந்தாள்.

ஏன், சொல்லாமல் வந்து நின்று அடைக்கலம் கோரிய தன்னிடம் கூட அவன் கடுமையாய் நடந்தவனில்லையே...

அவனது அறைவாசலில் நின்றவனின் முக இறுக்கமும், கண்களில் கொப்பளித்த கோபமும், இப்போது நினைத்தாலும் நடுங்கினாள்.

அனுமதியின்றி அவன் அறைக்குள் புகுந்து, வெகு உரிமையாய் தான் அங்கு நடமாடிக் கொண்டிருந்தது தப்புதான்.

அவன் வாய்திறந்து திட்டும் முன் ஓடியும் வந்துவிட்டாள்.

"நீங்க சொல்லித் தந்த 'லேஸி டெய்ஸி' பூவேலை எத்தனைக்கு எத்தனை போட சுலபமோ... அத்தனைக்கு பார்க்க சூப்பரில்லக்கா?"

தன் வேலையைத் தானே ரசித்துப் பாராட்டிய பட்டுவிடம் வெறுமே தலையாட்டினாள்.

"என்ன நிமலாக்கா.. ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?"

"நான் உன் அத்தான் அறையில் இருந்தப்போ... அவர் வந்துட்டார்..."

"வந்து பொண்களிடம் வழியற ஆசாமி இல்லையே அவர்?'' பட்டு சீண்ட,

## கின்னஸ் சாதனை படைத்த தொடக்கப்பள்ளி!

இந்தியாவில் உள்ள தொடக்கப்பள்ளி ஒன்று 45,000 மாணவர்களை உள்வாங்கி கின்னஸ் சாதனை புரிந்துள்ளது. இந்தப் பள்ளியில் 2,500 ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். மாணவர்களுக்காக 1,000 வகுப்பறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.



இந்த தொடக்கப் பள்ளி லக்னோ பகுதியில் நகர்ப்புறத்தில் இயங்கி வருகிறது. கடந்த 20-10-2011ம் ஆண்டு வரை இந்தப் பள்ளியில் 39,437 மாணவர்கள்தான் படித்து வந்தனர். இந்தத் தொகை இப்போது 45,000 ஆக உயர்ந்துள்ளது.

1959-ம் ஆண்டு ஜெகதீஷ் காந்தி மற்றும் அவரது மனைவி பாரதி இருவரும் சேர்ந்து வங்கியில் ரூ.300 கடன் வாங்கி இந்தப் பள்ளியை ஆரம்பித்தனர். தொடக்கத்தில் இந்தப் பள்ளி 5 மாணவர்களை மட்டுமே கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், தற்போது இப்பள்ளியின் கிளைகள் 20 நகரங்களில் உள்ளன. 3 வயதிலிருந்து 17 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு இந்தப் பள்ளிகளில் கல்வி கற்பிக்கப்படுகிறது.

மற்றவளின் முகம் சிவந்தது.

''சேச்சே... அந்த அர்த்தத்தில் சொல்லலை... ரொம்பக் கோபமாய் தெரிஞ் சார்."

''அவர் அறையை சுத்தம்தானே செய்திருப்பீங்க?"

"ஆமாம் பட்டு..."

''உங்க கை பட்டால் எல்லாம் பளிச்சிடுமே? வேற ஏதேனும் எரிச்சலில் வந்திருப்பாங்க... தவிர, குயிலிக்கா அது மாதிரி வேலை எல்லாம் செய்ததே இல்லையே.. அந்த நினைப்பாய் கூட இருக்கலாம்."

"யாரது... குயிலி?"

"நிருத்தான் மனைவி. ஓ... உங்களுக்குத் தெரியாதில்ல? பேர் குயில்னாலும் பார்க்க வெளுப்பா, அழகாத்தான் இருப்பாங்க."

நிமலாவின் மனக்கண்ணில் படத்தில் பார்த்த குதூகலமான குண்டு முகம் வந்து நின்றது.

பட்டு தொடர்ந்தாள். ''ஆனா குயிலிக்கா சதா புலம்புவாங்க. இங்கே போர் அடிக்குது... பொழுது போகலைன்னு. பாட்டிம்மா முதல்லயே சொன்னாங்க... 'நிரஞ்சனை கட்டிக்கப் போறவளுக்கு அழகு மட்டும் போதாது. அவன் நோக்கமறிஞ்சு துணை நிற்கும் பெண்ணாய் வரணும்'னு. ஆனா அத்தை, மாமா அப்பவே வெளிநாட்டில் இருந்ததால், அத்தான் தனியே இருப்பாரேன்னு அவசர அவசரமாய் கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்க."

''அதாவது நிரஞ்சன் சாரின் பெற்றவங்க...?"

''அந்த சார், மோரை எல்லாம் விட்டுருங்கக்கா... ஏன் இவ்வளவு சோகமாய் முழிக்கறீங்க?"

''ல்ல... அவங்க சேர்ந்திருந்த சில வருஷங்களும் சந்தோஷமாய் வாழலையேன்னு பட்டுது."

இதுவும் தான் மூக்கு நீட்டக் கூடாத விஷயம் என்று உறைக்க,

"சமையலைப் பார்ப்போமா?" என்று பேச்சை மாற்றினாள்.

ஆனாலும் கூட்டிய குழம்பில் பதியாமல் மனம் தன் சிந்தனைகளிலேயே கொதித்துக் கொண்டிருந்தது.

பத்மாவின் மனதும் குயிலி மேலேயே கட்டுண்டிருந்தது போலும். இவர்கள் இருவரும் தனியே இருந்த சமயம் பேச்சைத் தொடர்ந்தாள்.

"ஒரு தரம் பாட்டிம்மா, 'புருஷனுக்குப் பிரியமானதை சமைக்க, வீட்டைப் பராமரிக்கன்னு இருந்தால் பொழுது அழகாய் நகருமே குயிலி. வா, உனக்கு மீன் குழம்பு வைக்க கற்றுத் தர்றேன்'னு சொல்ல, அன்னைக்கு முழுக்க குயிலிக்கா அழுதாங்க..."

"ஐயய்யோ..." என்ற நிமலா, 'ஏன்?' என்று தொடர்ந்து எழும்பிய கேள்வியை உதட்டை அழுத்தி விழுங்கினாள்.

''எங்கம்மா என்னை எப்படி தூசு படாமல் வளர்த்தாங்க? நீங்க கரித்துணி பிடிக்கச் சொல்றீங்களேன்னு குயிலிக்கா புலம்பினது எனக்கு ஞாபகமிருக்குது.

அவங்களின் பல சண்டைகள் எனக்குப் புரியாதவை."

"பட்டணத்து வாழ்வு பழகினவங்களுக்கு இங்கே அலுப்பாய் தோன்றும்தான்" பழகி பேசினாள் நிமலா.

"நீங்க வேற. குயிலிக்கா குடும்பம் பக்கத்து பண்ணைக்காரங்கதான். எங்களுக்கு அவங்க சிறுவயசிலிருந்தே தெரியுமே..."

"ஓஹோ... உறவா?"

"இல்லையில்லை... ஆனா நல்ல பழக்கம்."

"குயிலிக்கு ஒரு குழந்தைப் பிறந்தால் எல்லாம் சரியாயிடும்னுவாங்க எல்லாரும். ஆனா அக்காக்கு அதிலும் நோக்கமில்லை."

முகம் சிவக்க சொன்னாள் பத்மா.

"எங்க குடும்பத்தில முதல் பிறப்பது ஆண்தான்... என்ன அப்படி பாக்கறீங்க? நான் எங்கம்மாக்கு முதல் குழந்தையில்லை. எனக்கு முன்னே ஒரு பையன் இறந்தே பிறந்தானாம். தனக்கு ஒரு வாரிசு வரணும்னு நிரூத்தானுக்கும் ஆசைதான் போல..."

"அதாவது ஆண் குழந்தை?" அவளையும் மீறி நிமலாவின் தொனியில் ஒரு கசப்பு.

தான் பெண்ணாய் பிறந்ததால்தான் பெற்றவர் ஓடிவிட்டாரோ என்ற எரிச்சல் இவளுக்கு உண்டு.

கடவுள்களுக்கும் ஆறுகளுக்கும் சகஜமாய் பெண் பெயர்களை வைத்து பூரிப்படையும் நம் சமூகம் ஏன் ஆண் பிறந்தால் மட்டுமே பெருமைப்படுகிறது?

"கடைசியில்... அதாவது கல்யாணமான மூணாம் வருஷம் குயிலிக்கா கர்ப்பமானாங்க"

"ஓ...?"

"ஆனால் மஞ்சள் காமாலை தாக்கி இறந்துட்டாங்க."

அவர்களிடையே ஒரு சங்கடமான மவுனம்.

சற்று முன் நிரஞ்சனை பயத்துடன் நினைத்தவள் இப்போது அவனுக்காய் பரிதவித்தாள்.

இரு வேறுபட்ட சூழலில் வளர்ந்து உருவானவர்கள் திருமணத்தில் இணைந்ததுமே மனம் ஒன்றி வாழ்வது சுலபமல்ல. ஒரு குழந்தை அவர்களிடையே அன்புப் பாலமாகும் முன்பே அவர்களது வாழ்வு முடிந்து விட்டது பெரும் சோகம்.

ஒரு ஆண் பிள்ளை பிறந்திருந்தால், தன் சொத்திற்கான வாரிசு உண்டென்ற தெம்புடன் நிரஞ்சன் நடமாடுவான்.

ச்சே... தானும் ஏன் மடத்தனமாய் வாரிசு என்றால் 'ஆண்' என்றே எண்ண வேண்டும். இந்த பண்ணையை நிர்வகிக்க ஒரு பெண் பிள்ளையால் கூடாதா என்ன?

ஜவஹர்லால் நேருவிற்கு பிறந்த ஒரே பெண்... இந்த நாட்டை ஆளவில்லையா?

சாயங்காலம் பெண்கள் இருவரும் காலார நடந்தார்கள்.

"ராத்திரிக்கு தோசை வார்க்கிறோம் பட்டு. தொட்டுக்க என்ன பிடிக்கும்?"

"உங்களுக்கு?"

"மதியம் நாம செய்த பூண்டு குழம்பே போதும்."

"எனக்கும். கூடவே கெட்டித் தயிர்."

"ஆனா நிரஞ்சன் சாருக்கு...? அவருக்கு என்ன பிடிக்கும்?" என்று சமையல் ஆளை விசாரித்தாள் நிமலா.

"மல்லிச் சட்னி இருந்தால் ஐயா கூட ஒரு தோசை எடுத்துக்குவாங்க."

"அப்ப அது செய்திடலாம்" என்றவள் அதன் செய்முறையையும் கவனித்துக் கொண்டாள்.

"வாங்க நிமலாக்கா. நாம பார்க்கணும்னு நினைச்ச இசை நிகழ்ச்சி டி.வி.யில் ஆரம்பமாகப் போகுது. டி.வி. பார்க்கவும் நேரம் குறிக்குமளவு நான் மாறப் போகிறேன்னு நான் யோசிச்சதில்லை. ஆனா நேரத்தையும் கணக்கு பார்த்து செலவழிக்க, ஒரு நாளில் நிறைய செய்ய முடியுது... கற்றுக்கலாம் கூட. இதை நான் பாட்டிம்மாட்ட சொல்ல ரொம்ப சந்தோஷப்பட்டாங்க..."

"நீ இங்கே வர்ரது வருஷத்துக்கு ஒரு தரம். அந்நேரம் தான் இங்க இருக்க முடியாதது பற்றி வருத்தமாத்தான் கிளம்பியிருப்பாங்க. இப்ப நிம்மதியாய் இருக்கும். நீ வந்தது எனக்கும் கூட தனி தெம்புதான் பட்டு."

"இல்லைன்னா போர் அடிச்சிருக்குமா?"

"ஒவ்வொரு நாளும் சுவாரஸ்யமாய்தான் கழியுது."

"ரஜ்வின் அத்தானுக்கு இங்கே முழுசாய் ரெண்டு நாள் கூட இருக்கப் பொறுக்காது. அப்படி இருந்த ரெண்டு நாளில்தான் உங்களோடு போனில் வேற பேசி சொதப்பிட்டாங்க இல்லையா?"

"அதான் மூத்தவர் வந்து காப்பாத்திட்டாரே!"

டி.வி. நிகழ்ச்சி முடிய, சாப்பிட்டும் முடித்தவர்கள், நிரஞ்சனைச் சாப்பிட அழைத்து தோசை வார்க்கலானார்கள்.

## உலகிலேயே மிக நீளமான சொகுசு கார்!

உலகிலேயே மிக நீளமான சொகுசு கார் ஒன்றை கலிபோர்னியாவில் உள்ள ஜே ஓபெர்க் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தக் காரின் நீளம் 100 அடி. 26 சக்கரங்களைக் கொண்டது.

ரெயில்களில் உள்ளதுபோன்று முன்பகுதியில் ஒரு டிரைவர் கேபினும், பின்பகுதியில் ஒரு டிரைவர் கேபினும் உள்ளது. குறுகியத் தெருக்களிலும் சுலபமாக திரும்பும் வகையில், காரின் நடுப்பகுதி வளைந்து, மடியும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. வெறும் கண்காட்சிகளில் வைக்கும் நோக்கத்தில் மட்டுமே இந்தக் கார் முதலில் தயாரிக்கப்பட்டது.

ஹாலிவுட்டில் உள்ள ஆடம்பர பங்களாவுக்கு இணையாக இந்தக் காரின் உள்ளே அனைத்து சொகுசு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. நீச்சல் குளம், பார், ஹெலிபேட், செயற்கைக்கோள் ஆன்டெனா உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய மினி அரண்மனைப்போல் உள்ளது இந்த

''நல்லா சாப்பிடுங்க நிருத்தான். அக்கா உங்களுக்கு ஸ்பெஷலாய் மல்லிச் சட்னியெல்லாம் செய்து வச்சிருக்காங்கல்ல?''

நிமலா மனதிற்குள் இளையவனை 'அதிகப்பிரசங்கி' என்று செல்லமாய் திட்டினாலும், ஏதோ ஒரு குறுகுறுப்பும் உள்ளோடியது.

ஒரு ஆப்பிளையும் வெட்டி அடுக்கியவள் அதை மேஜையின் மேல் வைக்கப் போக,

''தாங்க்ஸ் நிமலா. திருப்தியாய் சாப்பிட்டேன்'' என்றவன் சொல்ல, அவள் நெஞ்சம் மேலும் படபடத்தது.

## 10

சும்மா கிடந்த சங்கை தான் வீணாக எடுத்து ஊதி விட்டோமோ? என்றிருந்தது நிமலாவிற்கு.

நடந்தது இயல்பான நிகழ்வுதான்.

அசாதாரணமாய் ஏதுமில்லை.

பின்னே என்ன?

நிரஞ்சனின் பார்வை சற்று வேறுபட்டிருந்ததுதான் காரணம். இப்போது வெகு உன்னிப்பாய் இவளைக் கவனிக்கின்றன.

அவை தன்னிடம் எதையோ சொல்ல முயல்வது போலொரு பிரமை!

ஆக இனி அவன் முன்போய் நிற்பதை, நடமாடுவதை தவிர்க்க வேண்டும்!

அன்று மாலை ஆறு மணிக்கு அவிழ்த்து விடப்பட்ட நாய்கள் தோட்டத்தை நாலுகால் பாய்ச்சலில் சுற்றி வந்தன.

அவற்றோடான முதல் 'உறுமல்' அனுபவத்திற்குப் பிறகு இவள் அவற்றை நெருங்கத் துணியவில்லை. எட்டி நின்று ரசிப்பதோடு சரி.

ஆனால் திடும்மென அவை உறைந்து, காதுகளை உயர்த்த, யாரோ வருகிறார்கள் என்பது இவளுக்கும் புரிந்தது. எதிர்பார்த்தது போல மறுநிமிடம் சன்ன உறுமலுடன் வீட்டின் முன் வந்து நின்றது அந்த உயர்ரக கார்.

அதிலிருந்து இறங்கிய மனிதர் வெகு தோரணையாய் இருந்தார். வயது அறுபதிற்குள் இருக்கலாம். ஆனால் நடையும் உடையும் வெகு மிடுக்கு!

நாய்கள் அவரை நெருங்கி, முகர்ந்து, அளவாய் வாலாட்ட, அவர் இந்த வீட்டிற்கு ஏற்கனவே பரிச்சயமானவர் என்பது இவளுக்குப் புரிந்தது.

தோட்டத்து வேலையில் நின்ற தன் மீது அவரது பார்வை ஒரு கணம் அழுந்தி, அளந்து பின் நகர, நிமலாவிற்குள் வெலவெலத்தது!

பத்மாவிடம் போய் கேட்டாள்.

''அது... அவர்தான் குயிலியுடைய அப்பாவா?''

''நோ நோ. அவங்க தேசிகன் பெரியப்பா. சென்னையில் இருக்காங்க. இவங்க தனராஜ் அங்கிள்...''

'யார் இவர்?' என்று கேட்டறியும் ஆர்வம் இருந்தாலும், தன் எல்லை புரிந்து அடக்கிக் கொண்டாள் நிமலா.

தோட்ட வேலைக்கென இங்கிருந்த கனத்த கையுறைகளை உருவி, அவற்றைக் கழுவி விட்டு, கலைந்த கேசத்தைக் கோதியபடி நிமலா வீட்டினுள் நுழைய, வெளியேறிக் கொண்டிருந்த தனராஜுடன் இவள் ஏறக்குறைய மோதும் நிலைமை.

மன்னிப்புக் கோரலுடன் இவள் ஒதுங்க, அவர் கண்கள் முன்னிலும் உக்கிரமாய்



மெகா கார்.

இந்த சொகுசு கார் சாலைகளில் ஓடுவதற்கான அதிகாரப்பூர்வமான அனுமதியை இன்னும் பெறவில்லை. எனினும் சினிமா படப்பிடிப்பு, திருமண ஊர்வலம் போன்றவற்றுக்கு இந்தக் காரை வாடகைக்கு எடுக்க உலக கோட்டீஸ்வரர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

கின்னசில் இடம்பிடித்துள்ள இந்த சொகுசு காரின் ஒரு மணிநேர வாடகை பல லட்சம் ரூபாயாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இனி திரைக்கு வரவுள்ள ஆங்கிலப் படங்களில் இந்தக் கார் சூப்பர் ஸ்டார் தகுதியைப் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவளை வெறித்தன.

நிமலாவிற்குப் புரியவில்லை.

யாரென்றே அறியாத இவர் ஏன் தன்னை முறைக்கிறார்?

வீடு தேடி வந்தவருக்கு இங்கு வேண்டிய உபசரணை கிடைக்கவில்லையோ? தோட்ட வேலையை விட்டு விட்டு, தான் இவருக்குக் குடிக்க ஏதேனும் தந்திருக்க வேண்டும். அது மறந்து நின்றதை 'விட்டேறித்தனம்' என்று எண்ணிய கோபமா?

நிரஞ்சன் பணிக்க, சமையலறையின் ஆட்கள் நிச்சயம் வந்தவருக்கு ஏதேனும் பரிமாறியிருப்பார்கள். தான் முந்திரிக் கொட்டை போல உள்ளே போய் நின்றிருந்தால், பெரியவரின் கோபம் மேலும் பெரிதாகி இருக்கும்!

காரில் ஏற இருந்தவர், மறுபடி தன்னை வந்து முகர்ந்த நாய்களை அதட்டினார். அக்குரலின் எரிச்சல் தொனியில் அவை, சற்று விறைப்பாய் விலகின.

வந்து பேசியவர் கடும் எரிச்சலுடன் போகிறார்!

நிரஞ்சனுடன் ஏதோ வாக்குவாதம் நேர்ந்தது போலும்! பெரியவருக்கு அது ஆத்திரம் ஏற்றியது என்றால்... நிரஞ்சனின் நிலைமை என்ன?

அவனிடமிருந்து தான் சற்று எட்டியே நிற்பது என்ற முடிவை மறந்து, அவனது அலுவலக அறைக்கு முன் நின்றாள். தயக்கமாய் கதவைத் தட்டும் முன்பே, பாதி திறந்தே இருந்து அதை முழுவதுமாய் திறந்து கொண்டு வந்த நிரஞ்சனின் முகம்... இவள் அதுவரை பார்த்திராத கோபத்தில் சிவந்திருந்தது!

அவன் நடையில் அசைவில், உள்ளே கனன்ற ஆத்திரத்தின் அனலடிப்பு!

ஆனால் தயக்கமும் கரிசனையுமாய் எதிரே நின்றவளைக் கண்டவனின் கோபம் சற்று தணிந்ததோ?

ஆனால் முன்பைப் போல அதில் ஒரு விதமான புது பாவனையோடு கேள்வியும் ஏறி நிற்க, இவள் பம்மினாள்.

'என்ன யோசிக்கிறான்?'

தான் ஏதோ ஒரு விதத்தில் நிரஞ்சனை பாதிக்கிறேன்... ஆனால் அது என்ன... எதனால்?

அன்றிரவு படுத்தவளுக்குள் இக்கேள்வி மீண்டும் மீண்டுமாய் தோன்றியும் விடை ஏதும் கிடைக்கவில்லை.

பெண்மனம் ஆழமானது என்பதெல்லாம் சும்மா. ஆணோ பெண்ணோ எவருடைய மன ஓட்டத்தையும்தான் பிறரால் கணிக்க முடிவதில்லையே.

குழப்பத்துடன் அரைகுறையாய் உறங்கினாள்.

மறுநாள் காலை உணவிற்காய் பூரி மசாலா தயாராக, இவள் எலுமிச்சையோடு புதினாச் சாறு கலந்து ஒரு பழச்சாறை தயாரித்து மேஜையில் வைத்தாள். உதிர்த்த மாதுளை முத்துக்கள் சிறு கண்ணாடி குவளை நிறைய.

தட்டுக்களை துடைத்து இட்ட நேரம், நிரஞ்சன் வருவது தெரிய, அவசரமாய் அங்கிருந்து அகன்றவள், சமையலறையின் ஜன்னல் வழியே மெள்ள தலை நீட்ட, 'திக்'கென்றது!

நிரஞ்சனின் கண்கள் இவளுக்காய் காத்திருந்தது போல இவளதைச் சந்திக்க, 'சட்'டென பின்னடைந்தாள். படபடத்த நெஞ்சை அமைதிப்படுத்த, சமையலறையின் பின்வாசல் வழியே நழுவினாள்.

கொல்லைப்புறத்தில் நாய்களுக்கான உணவை வைத்து விட்டு, அவற்றைக்

கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தாள் பத்மா. ஏனோ அந்த காட்சியும் இவளுக்கு ரசிக்கவில்லை.

காரணத்தைத் தேடினால்... அது துளிப் பொறாமை என்றது!

தனக்கென்று ஒரு ஜீவன்.. இப்படி அமைந்தால் அது பெரும் ஆறுதல்... ஒரு பூனைக்குட்டியையேனும் தேடி அதைத் தனக்குத் துணை ஆக்கிக் கொள்ள விழைந்தது அவளது மனம்.

நிரஞ்சன் சாப்பிட்டு முடித்திருப்பான் என்ற கணிப்புடன் வீட்டினுள் வந்தவள், கிடைத்த காட்சியில் சற்று திகைத்து போனாள். நிரஞ்சன் செய்தித்தாளை புரட்டிக் கொண்டிருந்தான். வழக்கமாய் வாசிப்பு– வேலையும் அவன் அலுவலகத்தில்தானே நடக்கும்..?

ஒருவேளை தனக்காய் காத்திருக்கிறானோ?

மறுபடி பின்வழியே போய் தையல் வகுப்பிற்குப் போகும் முடிவுடன், இவள் நகர, அவனது குரல் அவளைத் தடுத்தது.

"உனக்காகத்தான் காத்திருந்தேன் நிமலா. ஆபீசுக்கு வா... உன்னோட பேசணும்."

எடுத்ததும் தன்னை ஒருமையில் அவன் கூப்பிடாதது அவளுக்குப் பிடித்திருந்ததைப் போலவே பிறகு இயல்பாய் அவன் மாறிக் கொண்டதும் நிமலாவிற்கு இதம்தான்.

பிடிக்காதது... இல்லையில்லை புரியாத மர்மம் அவனது சமீபத்தின் வினோதமான பார்வைதான். அதற்கான விடைதான் இப்போது கிடைக்கப் போகின்றதோ?

"அரை மணியில் தையல் கிளாஸ் போகணும்."

"போகலாம்..." என்றவன் எழுந்து நடக்க, மவுனமாய் பின்தொடர்ந்தாள்.

செய்தித்தாளை கவனமாய் மடித்து வைத்தவன்.

"உட்கார் நிமலா" என்றான்.

"இருக்கட்டும்..."

"ப்ளீஸ்" அவனது சிறு அதட்டலில் அவசரமாய் அமர்ந்தாள். காலையில் இருந்து அதுவரை நின்ற கால்களுக்கு அப்பருத்த பஞ்சு இருக்கை இதமாகவே இருந்தது.

"வீட்டை ரொம்ப பொறுப்பாய் பார்த்துக்கறே நிமலா... நன்றி."

அவன் இப்படி சொன்னதாய் அஞ்சுகத்தம்மாவும் போனில் இவளிடம் சொல்லியிருந்ததுதான்.

"அது என் கடமை. அதுவும் நீங்க எனக்கு செய்த பெரிய உதவிக்கு... பதிலுக்கு நான் என்ன செய்ய முடியும்னு தெரியலை."

"என் அறை இவ்வளவு ரசனையாய் சுத்தப்படுத்தப்பட்டதே இல்லை. அதற்கும் இன்னொரு நன்றி."

"பரவால்லைங்க... உங்க அனுமதி இல்லாமல் நான் அந்த வேலையில் இறங்கினது உங்களுக்குப் பிடிக்கலைன்னு தோணிச்சு..."

தொடரத் தெரியாமல் தடுமாறினாள்.

"ஓ... கோபம் உன் மேலில்லை. வேறு ஆத்திரத்தில், தனிமைக்காக என் அறைக்கு வந்தபோது, அங்கே தனிமை இல்லாததால் கொஞ்சம் சிடுசிடுப்பாய் இருந்திருக்கும் என் முகம்... அவ்வளவுதான்."

அந்த விளக்கம் இவளுக்கு பெரும் நிம்மதியாயிருந்தது. அந்த நிம்மதியுடன் அவள் முறுவலித்ததை கூர்ந்து கவனித்தான்.

"நன்றி சொல்லுவதாய் எண்ணி நீ அதிகப்படி வேலைகளை இழுத்துப் போட்டுக்கறேன்னும் படுது நிமலா. நீ சும்மா உட்கார்ந்து நான் பார்த்ததில்லை."

"இதை விட கடினமாய் உழைத்துப் பழக்கப்பட்டவ நான். இவ்வளவு வசதியான அறை, சாப்பாடுன்னு எனக்கு இங்கே எந்தக் குறைவுமில்லை."

"பட்டுவும் ரொம்ப நிறைவாய்தான் இருக்கறா. மற்றபடி வீடியோ கேம்ஸ், டி.வி.ன்னு மட்டுமே பொழுதுபோக்கறவ, அடிக்கடி திண்டுக்கல் அல்லது மதுரைக்குப் போகணும்னு என்னை தொல்லைப் பண்ணுவா. பாட்டிம்மாக்கும் இதில் நிம்மதி..."

இப்படி வரிசையாய் நன்றி நவிலவா தன்னைத் தனியே அழைத்து உட்கார வைத்தான்?

இவளது அசவுகர்யத்தை உணர்ந்தவன் செருமியபடி பேசினான்.

"பாட்டிம்மா நிறைய வாசிப்பாங்க. அதில் சுவாரஸ்ய தகவல், கவிதை வரிகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்வதுண்டு."

"ம்ம்... அவர்களோடு நேர்ந்த ரெயில் பயணத்தின் போதும் கூட எனக்கொரு கவிதையை வாசிச்சாங்க."

"இப்போ ஆஸ்ட்ரியாவிலிருந்து அவங்க எனக்குச் சொன்னது ஒரு ஜப்பானிய கவிதை."

இவள் ஆவலாய் அவனை ஏறிட்டாள்.

"மரங்கள் படைக்கப்பட்டதும் உலகிற்குப்

பூக்கள் கிடைத்தன

பறவைகள் படைக்கப்பட்டதும் உலகிற்கு சிறகுகள் கிடைத்தன

பெண் படைக்கப்பட்டதும் உலகிற்கு நாகரீகம் கிடைத்தது!"

நிதானமாய் சொன்னவன் தொடர்ந்தான்.

"உன்னைப் பற்றி பண்ணைப் பெண்களும் பட்டுவும் பிரமாதமாய் சொல்ல, பெண்ணின் பெருமையை என்னிடம் வலியுறுத்த இந்தக் கவிதையை பாட்டிம்மா பயன்படுத்தினாங்க."

சின்ன கூச்சத்துடன் அவன் சொல்ல, இவளது புன்னகை விரிந்தது. அது தொற்று நோய் போல அவனையும் பற்ற, சிரித்தவனை வியப்பாக பார்த்தாள் நிமலா.

"உங்களுக்கு நான் ரொம்பக் கடன் பட்டிருக்கேன்."

வயதிற்கு மீறிய முதிர்வோடு தெரியும் அவனது முகம் சிரிப்பில் மிக இளமையாகி இருந்தது!

முறுவலுடன் ஒருவரை மற்றவர் பார்த்திருந்த அந்த மாயச் சூழலை, தங்களுக்குள் விளையாடியபடி அறைக்குள் பாய்ந்து வந்த நாய்களின் உரத்த குரைப்பு நொறுக்கிக் கலைத்தது.

அன்றிரவும் வெகுநேரம் நிரஞ்சன் சொன்ன கவிதை வரிகளை, தங்களது சம்பாஷணையை, இருவரும் ஒரு அறையில் தனித்து பேசிய சூழலை அசைபோட்டபடி புரண்டிருந்தாள்.

இங்கே இருந்த இரு வாரங்களில் அப்படி ஒரு சந்தர்ப்பம் அமையவில்லை... அதை அமைத்தவன் தன்னிடம் ஏதோ சொல்ல வருகிறான் என்பதை யூகிக்க முடிந்தாலும், அது என்ன என்று அறிவதற்கு முன்னே... நாய்களின் குறுக்கீடு. அவற்றைத் தொடர்ந்த பத்மா, தன் கையிலிருந்த பலூனைத் தட்ட, அவை மேலும் எம்பிக் குரைத்தன.

வழக்கமாய் அப்பிராணிகளின் அசைவுகளை ஆர்வமாய் கவனிக்கும் தனக்கு அந்நேரம் ஏன் எரிச்சலாய் வந்தது?

அறைக்குள் நிமலா இருந்ததைக் கண்ட பத்மா சற்று ஆச்சரியம் காட்டினாலும்,

"உங்களிடம் சொல்ல ஒரு விஷயமிருக்கு நிமலாக்கா. வர்ர வாரம் டவுனில் களிமண் நகை செய்யக் கற்றுத் தரும் ஒரு கோர்ஸ் நடக்குதாம். போகலாமா? உங்க டெய்லரிங் ஸ்டூடன்ட்ஸில் ஆர்வமுள்ளவங்களும் வரட்டுமே."

"கண்டிப்பா... கேட்போம். இப்ப

## பேத்தியின் ஆடைகளை அணிந்து பார்வையாளர்களை கவர்ந்த தாத்தா!

சீனாவில் குவாங்சொயு நகரைச் சேர்ந்தவர் லியு கியென்பிங். இவருக்கு மடிககா என்ற செல்லப்பெயரும் உண்டு. இவருக்கு 75 வயதாகிறது. இவரது



பேத்தி லு ரிங்கும் (வயது 24). அவளது சிநேகிதிகளும் இணையதளம் மூலமாக தம்மால் நடத்தப்பட்டு வந்த நவநாகரீக ஆடைகளின் விற்பனையை ஊக்குவிக்க, அவற்றை மாடல் அழகிகளுக்கு அணிவித்து புகைப்படம் எடுத்து வெளியிட ஏற்பாடுகளை மேற்கொண்டனர். ஆனால், இறுதியில் அந்த நிகழ்ச்சி ரத்தாகிவிட்டது. இதனால் லியு கியென்பிங், தனது பேத்தியின் ஆடைகளை அணிந்து காட்சியளித்து பார்வையாளர்களை ஈர்க்க முடிவெடுத்தார்.

அவரது இந்த முயற்சிக்கு கைமேல் பலன் கிடைத்தது. ஏராளமான பார்வையாளர்களின் கவனத்தை அவர் ஈர்த்தார். இதனால் இவரையே மாடல் அழகிக்கு பதிலாக பயன்படுத்திக் கொள்ள அவருடைய பேத்தியும் முடிவெடுத்தார். பெண்கள் அணியும் நவநாகரீக ஆடைகளுக்கான விற்பனையை ஊக்குவிக்க அந்த ஆடைகளை அணிந்து புகைப்படங்களுக்கு மாடலாக காட்சியளித்து வருகிறார் லியு கியென்பிங். இதை கேள்விப்படும்போது விசித்திரமாகத்தான் இருக்கிறது.

கிளாஸ் ஆரம்பிக்கணும்" என்றபடி வெளியேறியவளை நிரஞ்சனும் தடுக்கவில்லை.

அன்று மாலை தாழ்வாரத்தின் அலங்காரச் செடிகளைச் சுற்றி வர்ண

கூழாங்கல்லை வைத்த இரு பெண்களின் பேச்சு தொடர்ந்தது.

"ஆக உங்களுக்குக் களிமண் நகை பற்றித் தெரியுமாக்கா? நனைஞ்சால் கரைஞ்சிடாதா?"

''களிமண் பானையில்தானே சமைக்கிறோம்? அதேபோல சுட வைத்த நகைகளை ஒரு மாசம் வரை காய விட்டு, நிறமேற்றுவாங்க."

"அவை ஐநூறு, அறநூறு வரை விலை போகுமாமே? தையலோடு இதுவும் ஒரு நல்ல கைத்தொழிலில்லையா?"

"ரொம்ப சூட்டிகையாயிட்டே, பட்டு."

"டவுனுக்குப் போனால் அப்படியே நாம கொஞ்சம் ஷாப்பிங்கும் செய்யலாமே?"

"ம்ம்... சில நிற நூல்கண்டு, பட்டன்ஸ், லேஸ், நாடாக்கள் தேவைதான்."

"நீங்க வேற. ஆடி தள்ளுபடியில் 'சிக்கனமாய் வாங்க' சொல்ற விளம்பரங்களை எல்லாம் நீங்க பார்க்கறதே இல்லையா?"

"ஏற்கனவே எனக்கு உங்க பாட்டிம்மா, ரஞ்சிதாக்காவின் மூலம் வேண்டியதற்கு மேலேயே வாங்கித் தந்துட்டாங்களே?"

"உங்களுக்கு சல்வார் போட்டால் நார்த் – இண்டியன் ஸ்டார் போலிருப்பீங்களே..." உதட்டைச் சுழித்தாள் இளையவள்.

"அதெல்லாம் எனக்குப் பழக்கமில்லை, பட்டு. எனக்குப் புடவைதான்."

"அப்ப அதையே வாங்கிடலாம்" என்ற கிண்டலுடன் பத்மா வீட்டினுள் ஓட, சன்ன உறுமலுடன் மறுபடி அந்த கார் வந்து நின்றது. அன்று தனராஜ் என்பவர் வந்த அதே வாகனம்.

விரல்களில் ஒட்டியிருந்த செடி மணலைத் துடைத்தபடி தயக்கமாய் நின்றிருந்தாள் நிமலா. தானும் வீட்டிற்குள் போய் விடுவதா, அல்லது நின்று வரவேற்பதா என்று குழம்பியவளின் முகம், அச்சத்தில் உறைந்தது!

## 11

அவள் அச்சத்திற்குக் காரணம்–

காரிலிருந்து இறங்கியது அன்று வந்த தனராஜ் அல்ல. ஒரு பெண்!

நிரஞ்சனின் அலமாரியின் கீழ் தட்டில் வைக்கப்பட்டிருந்த ஓவியத்தில் சிரித்த அதே பெண்!

கவர்ச்சியான குண்டு முகத்தில் சுருண்ட கூந்தல் கலைந்திருக்கவில்லை. ஆனால் அதே உற்சாகமான சிரிப்பு.

இறந்ததாய் சொல்லப்பட்ட குயிலி இல்லையா இவள்?

எப்படி உயிரோடு... இங்கே?

அல்லது குயிலியின் கூடப் பிறந்தவளோ?

எண்ணங்களில் திணறியவளை, நெருங்கிய புதுப்பெண் புருவம் உயர்த்தி சீண்டினாள்.

"நான் பார்க்க அவ்வளவு பயங்கரமாவா இருக்கேன்? ஏனிப்படி நடுங்கறே?"

"ல்ல... நீங்க?"

''ஷியாமளா. நிரஞ்சன் வீட்லதான இருக்கார்?'' பதிலை எதிர்பாராமல் உள்ளே நடந்தவளை விடாமல் வெறித்தன நிமலாவின் கண்கள்.

கார் சத்தம் கேட்டு, அலுவலக அறையிலிருந்து வெளியே வந்த நிரஞ்சனின் முகத்தில் வந்த விருந்தாளியை வரவேற்கும் வகையில் மரியாதையான ஒரு முறுவலும் கூட இல்லை.

ஆனால் வந்தவளின் முகமெங்கும் சந்தோஷம் பொங்கி வழிந்தது.

"ஹாய் நிரு... நியாயத்துக்கு நான்தான் 'உம்'முனு இருக்கணும். நான் வந்து இத்தனை நாளாகுது. நீங்க வந்து எட்டியும் பார்க்கலியே? தேடி வந்தால் இப்படியா...? வாசல்ல நின்ன புதுப்பெண் வேற, பேயைக் கண்டது போல அரண்டு நிற்கறா."

''ஞானிகள் பெண்ணைப் பேய் என்றுதானே சொல்றாங்க?''

"நான்சென்ஸ்... பையன்களை முரடன், போக்கிரின்னு சொல்றது போல? நீங்க முரடன் இல்லை... நானும் பேய் இல்லை நிரு" என்றவள் அவன் மூக்கை நிமிண்ட, அவன் முகம் மேலும் கடுத்தது.

''அப்பா சொன்னாங்கல்ல? நான் மும்பையிலிருந்து வந்துட்டதாய். ஏன் வீட்டுக்கு வரலை?''

"இங்கயே நீ செட்டிலாகப் போறதாய் சொன்னாங்க. பிறகென்ன? மெள்ள வரலாம்னு இருந்தேன்."

''இது நல்லூர் இல்ல நிரு. நல்ல காடு! இங்க நான் துணிஞ்சு வந்ததே நீ இங்க இருக்கறதாலத்தான? நீயும் பிகு பண்ணினால் எப்படி?''

"எனக்கு என் வேலை இருக்கும் ஷியாமா. நீ செய்யும் நகை டிசைனிங்கிற்கு இந்தக் காடு சரிப்படாதே?"

"ஏனாம்?" கொஞ்சலாய் கேட்டாள்.

"நீ உருவாக்கும் நகைகளை இங்க யார் வாங்குவா?"

முன்னறையில் இருந்தபடி அவர்கள் வார்த்தையாடியது தாழ்வாரத்தில் நின்ற நிமலாவிற்குத் தெளிவாகக் கேட்டது. ஆனாலும் நகர்ந்து விடும் எண்ணமின்றி இருந்தாள் அவள்.

"அடடா... எவ்வளவு புத்திசாலித்தனமான கேள்வி நிரு? அப்படி பார்த்தா, எல்லா எழுத்தாளர்களும் பத்திரிகை ஆபீஸில் போய் உட்கார்ந்தில்ல எழுதித் தள்ளணும்? துறி நெய்றவங்களும் புடவைக் கடையிலேயே நெய்து, சுடச்சுட புடவைகளை விற்க வேண்டியதுதான்!" சீண்டி சிரித்தாள்.

"பரவால்ல... பேசக் கத்துகிட்ட."

"என் கற்பனைக்கு இங்குள்ள அமைதி உதவும். கற்பனையில் உருவாகும் நகைகளின் விற்பனை நகரங்களில்... எப்படி?"

"நீ இங்க வந்து அஞ்சு நாளிருக்குமா?"

"அப்ப என்னைப் பற்றி யோசிச்சிட்டேதான் இருந்த... ம்ம்?"

"அதிக நாட்கள் உன்னால் இங்கு தாக்குப் பிடிக்க முடியாது ஷியாமா. கற்பனைக்கு சரி... ஆனால் உன் நவநாகரீக பிரண்ட்ஸ், லைப் ஸ்டைல் இல்லாமல் எப்படி சமாளிப்பே? அவர்களின் தேவை புரிந்தால்தானே அதற்கு ஏற்றபடி உன்னால சப்ளை செய்ய முடியும்?"

"இன்டர்நெட் இருக்கே? அதன் மூலம் அவங்க ரசனையை நாடி பிடிச்சுப் பார்த்திடுவேன்."

"ஆரம்ப ஜோர்... பிறகு போரடிக்கும்."

"நீ இருக்க, அதற்குச் சான்ஸே இல்லை."

"குயிலியும் இப்படித்தான் நினைச்சு என்னை ஒரு விளையாட்டுப் பொருளாய் வைத்து ஆடிட்டு போயிட்டா..."

"இப்ப நீ என்னோடு விளையாடலாம், நிரு."

"ஷியாமா. கிளம்பு நீ."

***

தொடர்ந்த ஞாயிறன்று, வழக்கமான வேலைகள் கிடையாதென்பதால் மற்ற வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்து, வியர்த்திருந்தாள் நிமலா. தலைக்குள் வியர்வை பிசுபிசுக்க, காய விட்டு, சிறிது புளித்த தயிரைத் தேய்த்து வைத்தவள், பின்பு ஷாம்பு போட்டு அலசினாள்.

நிதானமாய் கோதி, கூந்தலை உலர்த்தியவளுக்கு ஏனோ கண்கள் செருகின. ஒய்வெடுக்கக் கூடிய நாள் என்பதால் படுத்தும் விட்டாள்.

ஒரு மணி நேரம்கழித்து விழித்த போது, உலகம் மேலும் பிரகாசமாகி இருந்தது போலொரு பிரமை! முகம் கழுவி, தளர்வாய் பின்னலிட்டவளின் பிம்பம் கூட அழகு கூடியே தெரிந்தது.

வசதியை விட, இங்குள்ள மனநிம்மதிதான் அதற்கான காரணம் என்று முடிவு செய்தவளுக்குள் நேற்றிரவு அஞ்சுகம்மாவுடன் போனில் பேசிய ஞாபகம்.

"இப்ப உன்னோடு எடுத்த போட்டோவை பட்டு எனக்கு மெயில் செய்திருந்தாள்டா, நிமலா. உன் அழகு கூடிட்டே போறதாய் பட்டு சொல்றது உண்மைதான். பட்டும் ரொம்பத் தெளிவாய் தோணுறா..."

"அப்படியாம்மா? நல்லது."

"புத்திசாலிப் பெண்களின் அழகு குறைவதேயில்லடா... பொறுப்பாய் நீ செய்த வேலையெல்லாம் கேட்டதுமே உன் அறிவும் எனக்குத் தெரிஞ்சிடுச்சே..."

"ரொம்பப் புகழறீங்கம்மா... என் கடமையைச் செய்றேன்..."

"அக்பர், பீர்பால் பற்றி உனக்குத் தெரியும். ஆனா நான் சொல்லப் போகும் கதையை கேள்விப்பட்டிருக்க மாட்டே நிமலா."

"சொல்லுங்கம்மா."

"பொன்னைப் புடமிட, புடமிட அது மின்னுவது போல அக்பரின் சோதனைகள் பீர்பாலின் சாதுர்யத்தை வெளிப்படுத்தும். ஆனால் அன்று மன்னர் கேட்டது ஒரு படி காளை மாட்டுப் பால், அதுவும் ஒரு வாரத்திற்குள்!"

அது தான் கேள்விப்படாத குட்டிக் கதை என்பதால் ஆர்வமானாள் நிமலா.

"புருஷனின் வாடலைக் கண்டு, அதற்கான காரணத்தை அறிந்து கொண்ட பீர்பாலின் மனைவி, அவனுக்குத் தைரியம் சொன்னதோடு, காரியத்திலும் இறங்கி விட்டாள். மறுநாள் நன்கு உடுத்தியவள், அரண்மனை அருகே உள்ள படித்துறையில் துணி துவைக்க ஆரம்பிக்கிறாள்."

"அதாவது மன்னரின் பார்வையில் படுவது போல?"

"ஆம்... இதனை பார்த்த அக்பர், 'வசதியான நீ ஏனம்மா இவ்வளவு பெரிய மூட்டையைத் தனியே துவைக்கிறாய்?' என்று விசாரிக்கிறார். 'எதிர்பார்த்த நாளிற்கு முன்பே என் கணவர் பிரசவித்ததால், துணைக்கு யாருமில்லை அரசே. அதுதான்

மனைவியைப் பாராட்டிய அரசர், 'வீட்டில் இப்படி ஒரு புத்திசாலிப் பெண் இருப்பதால்தான் நீ இவ்வளவு அறிவும், திறனும், துடிப்புமுள்ளவனாய் இருக்கிறாய்' என்று பரிசுகளை அள்ளித் தந்தாராம்."

கதை சுவாரஸ்யம்தான் என்றாலும் அது எந்தத் தொடர்பில் தனக்குச் சொல்லப்பட்டது என்ற கேள்வி இவளுக்குள்.

"பானை பிடித்தவள் பாக்கியசாலின்னு நம் பக்கமும் சொல்வோமே? வர்ரவளின் சாமர்த்தியத்தைப் பொருத்துதான் ஒரு மனிதனின் சந்தோஷமும் வெற்றியும். கல்யாணத்தப்ப பெண்ணின் அழகை எடை போடறவங்க, அவ குணத்தை, திறமைகளையும் கவனிக்கணும். சந்தோஷ வாழ்விற்கு அதுதானே அடிப்படை?"

"ஆமாம், ரொம்ப சரிதான்" என்று அப்போது ஒத்து ஊதிய நிமலா, இப்போது மறுபடி அக்கதை தனக்கு ஏன் சொல்லப்பட்டது என்று யோசித்தாள்.

மதிய சமையலில் உதவ, கீழே இறங்கியவளிடம் நெருங்கத் தொடுத்த ஜாதிப்பூ சரத்தைத் தந்தாள் பத்மா.

"நானே தொடுத்தேன். எப்படி?"

"அழகான வேலை. தலைப் பின்னி உனக்கு வச்சு விடறேன் பட்டு."

"நோ நோ... இது பழமாட்டம் இருக்கற உங்களுக்கு!"

"அதென்னப் பழம்? ஞானப்பழமா?" கிழவி குரலில் பேசிக் கேட்டாள் நிமலா.

"உங்களுக்கு புத்தியும் உண்டுதான். ஆனால் இந்த கமலா ஆரஞ்சு கலர் புடவையில் இப்பதான் பறிச்ச பழமாட்டம் இருக்கீங்க'' என்றபடி இளையவள் பூச்சரத்தை அவள் கூந்தலில் செருக, நிமலாவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

பாட்டியும் பேத்தியுமாய் தன் தோற்றம், திறமைப் பற்றி அடிக்கடி பேசுவது ஏனோ இவளை நெருடியது.

"என்ன... சமையலறையில் இருந்து அபாரமான வாசனை கிளம்புது? பிரியாணிக்குக் கூட்டியாச்சு போல?'' நகர்ந்தாள்.

"செய்முறை குறிப்போடு, அத்தனை

### மடோனாவின் ஆடை ரூ.18 லட்சத்துக்கு ஏலம்!

அமெரிக்காவின் பிரபல கவர்ச்சி பாப் பாடகி மடோனா. இவர் பல இசை வீடியோ ஆல்பங்களை தயாரித்துள்ளார். உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து இசை நிகழ்ச்சிகளை நடத்தி வரும் இவர் பல விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் அணிந்த மார்பு கச்சை ஒன்று தென்மேற்கு லண்டனில் உள்ள கிறிஸ்டி மையத்தில் ரூ.18 லட்சத்துக்கு ஏலம் போனது. ஜீன்பால் கவுல்டியரால் வடிவமைக்கப்பட்ட இந்த ஆடை பச்சை நிறம் கொண்டது. பட்டுத் துணியால் தயாரிக்கப்பட்டது.



1990-ம் ஆண்டு ஹங்கி பங்கி இசை நிகழ்ச்சியின்போது இந்த ஆடையை மடோனா அணிந்திருந்தார். இந்த ஆடை ரூ.7 லட்சத்துக்கு ஏலம் போகும் என்றுதான் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதைவிடவும் அதிகமாக 2 பங்குக்கு மேலாக ஏலம் போய் உள்ளது. இதை ஏலம் எடுத்தவர் யார் என்ற விவரம் அறிவிக்கப்படவில்லை. இதுதவிர கருப்பு நிற நீச்சல் உடை போன்று வடிவமைக்கப்பட்ட விக்ரா உடையும் ஏலம் விடப்பட்டது. இது ரூ.9 லட்சத்துக்கு ஏலம் போனது. இந்த உடையை வோகூ என்ற இசை நிகழ்ச்சியின் போது மடோனா அணிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆடை மோகம் இருக்க வேண்டியதுதான். ஆனால், மடோனா அணிந்த ஆடை மோகம் தேவைதானா? இது ஏலம் எடுத்தவருக்கே வெளிச்சம்.

நானே வந்தேன்.' பாவமாய் பதிலளிக்கிறாள் பெண்.

'என்ன கதை இது?' கோபமானார் அக்பர்.

'காளை மாடு பால் தருமாயின், ஆண்கள் ஏன் பிரசவிக்கக் கூடாது?' துடுக்காய் வந்த பதில் கேள்வியில் மன்னருக்குப் புரிந்தது, இது பீர்பாலின் மனைவிதான் என்று!"

"சபாஷ்... சரியான ஜோடி!"

"மறுநாள் பீர்பாலிடம் அவனது

சாமானையும் அளந்து எடுத்து வச்சிருந்தீங்களே. ஆச்சி சொன்னது போல பொறுமையாய் வதக்கி தம் கட்டியாச்சு."

"பிரமாதமாய் இருக்கப் போகுது... வாசனையே சொல்லுதே. தொட்டுக்க, இஞ்சி இனிப்புச் சட்னி, முட்டை எல்லாம் ரெடி பண்ணுவோம் வா."

***

எல்லாரும் ரசித்து சாப்பிட்டு படுத்து விட, ஏற்கனவே உறங்கியிருந்தவள் வேறு வேலையில் இறங்கினாள். உள்பாவாடைகளின் விளிம்பில் பூ வேலை செய்ய கற்றுத் தந்திருந்ததால் பல உற்சாகக் கைகளின் முயற்சியில் பல பாவாடைகளும், பூவேலையுள்ள கைக்குட்டைகளும் தயாராகியிருந்தன.

ரவிக்கைகளை வெவ்வேறு அளவில் வெட்டி வைத்திருந்தவள் அவற்றுக்கான சில டிசைன்களை தனியே எடுத்தும், வரைந்தும் வைத்தாள்.

அடுத்தக் கட்டத்திற்குப் போவதற்குப் பெண்கள் தயார்.

தயாரான பொருட்களை விற்றுப் பணம் வந்தால், அதைக் கொண்டு மேலும் துணிகள் வாங்கலாம். அடுத்த 'லாட்'டில் அதை உருவாக்கியவர்களின் கைக்கு உதவிப் பணம் கூட போக வாய்ப்புண்டு.

அதற்குள் பெரியம்மாவும் இங்கே வந்து விடுவார்கள்...

இவளது அறைக் கதவு தட்டப்பட்டது. "யாரு?"

"வேற யார்? நான்தான்."

உள்ளே வந்த பத்மா, இவளது புது வேலைகளைப் பார்த்தபடி "எல்லாம் சரிதான். திறமையோடு திட்டமிட்ட உழைப்பும் உள்ள நீங்க ஏன் நிமலாக்கா தயங்கறீங்க?" என்று கேட்டாள்.

"என்னது?"

"துணிச்சலாய் வந்து நின்று பேச மாட்டேங்கறீங்க. நிருத்தான் முதல் ஷியாமாக்கா வரை என்ன பயம் உங்களுக்கு?"

நிரஞ்சனின் அறையிலிருந்த படத்தைப் பார்த்து அவள் நிரஞ்சனின் மனைவி என்று தான் அனுமானித்ததைச் சொல்லி, தன் 'ஞானப் பெண்' பட்டத்தை இழக்க விரும்பாதவள், "அவங்க பெரிய இடத்துப் பெண். அவங்களுக்குச் சமமாய் நிற்க முடியாதே நான்? ஒதுங்கி நின்றேன். அவ்வளவுதான்" என்றாள்.

"பணக்கார குடும்பத்தில் பிறந்து, வசதியாய் நீங்க வளரலைன்னாலும் உங்களுக்கு என்ன குறை?" என்றவளின் கைகளை பாசம்மிக நிமலா பற்றிக் கொள்ள, பத்மா கண்களை உருட்டினாள்.

"அச்சச்சோ மறந்துட்டேன்... இப்ப இங்க வந்தது எதுக்குத் தெரியுமா?"

"எனக்கு ஞானதிருஷ்டியெல்லாம் கிடையாதே?"

"ரைட். உங்களை நிருத்தான் பார்க்கணுமாம்."

அதுவரை இயல்பாய் சிரித்துப் பேசியவள் சட்டென இறுகினாள்.

"என்ன விஷயமாய்?"

"எனக்கும்தான் ஞானதிருஷ்டி வரமில்லை! நான் டி.வியில் ஒரு படம் பார்க்கலாம்னு இருக்கேன். ஆனா பிறகு... அத்தான் என்ன பேசினாங்கன்னு எங்கிட்ட சொல்வீங்கதான?"

தன் தோற்றத்தை சற்று திருத்தியவள், நிரஞ்சனின் அறைக்குப் போய், அவன் காட்டிய நாற்காலியில் 'பிகு' பண்ணாமல் அமர்ந்து கொண்டாலும், உள்ளே பதற்ற பந்துகள் உருண்டன!

அவனுக்குள்ளும் ஏதோ அவஸ்தை போலும்...

மவுனம் அவர்களுக்கிடையே தானும் நின்று முறைத்தது!

"உன்னிடம் ஒரு... பெரிய கோரிக்கையை வைக்கப் போறேன் நிமலா. அதிர்ச்சி அடையாமல் நிதானமாய் கேட்டு, முடிவெடு. என்ன?"

"சொல்லுங்க."

"நீ என்னை... நாம் கல்யாணம் செய்துக்கணும்."

போன முறை சுற்றி வளைத்தவன் இம்முறை நேரே சொல்லிவிட,

இவள் உறைந்து உட்கார்ந்திருந்தாள்!

## 12

இந்த எண்ணம்தான் கடந்த சில நாட்களாய் இவன் மனதில் ஓடினதோ?

அதுதான் அந்த விநோதமான பார்வையா?

அஞ்சுகம்மா 'புத்திசாலி மனைவி' பற்றி கதை சொன்னதெல்லாம் இதற்காகத்தானா?

பட்டுவும், பிற பெண்களும் தன்னிடம்

இதம் பதமாய் பழகுவது கூட இந்த நோக்கம் புரிந்துதானோ?

புத்தி பலதை கணக்கு போட்டாலும், வாய் விடையை உடனே சொல்லி விட்டது.

"ல்ல... அதெப்படி? நீங்க... என்னை... அப்படி யோசிக்கவும் முடியாதே..."

"தப்பாய் ஏதும் கற்பனை செய்ய வேண்டாம் நிமலா. அதாவது காதல் அப்படி இப்படின்னு. இப்ப நானிருக்கும் நிலைமையில்... என் நிலைமை மாற எனக்கு ஒரு மனைவி தேவை."

இவளது மனம் விதிர்க்க, உடம்பு வியர்த்தது!

'வேலைக்கு ஆள் தேவை' என்று கடை வாசலில் மாட்டும் பலகை போல இதென்ன ஒரு அறிவிப்பு?

"உங்க நிலையில் இருப்பவர் என்னிடம் இப்படி பேசறது முறையில்லை" துணிச்சலைத் திரட்டிச் சொல்லிவிட்டாலும் நிமிர்ந்து அவனை நோக்கும் துணிவில்லை.

"என் நிலை...? நான் மனைவியை இழந்தவன்னு சொல்றியா?"

"ல்ல... உயர்ந்த குடும்பமும் அந்தஸ்தும் உள்ளவர்னு..."

"நாம இருவருமே ஒரே நிலையில்தான் இருக்கோம், நிமலா."

அவளது மவுனம் 'எப்படி?' எனக் கேட்டது!

"உனக்குப் பாதுகாப்பாய் தங்க, வாழ ஒரு இடமில்லை இப்போது. உன்னை கல்யாணம் செய்துகிட்டால் நானும் பாதுகாப்பாய் இருப்பேன்."

"அதற்கு என்னை விடத் தகுதியான பல பெண்கள் இருப்பாங்க. கொஞ்சம் பொறுமையாய் இருந்தால், பெரியவங்க வந்ததும் நல்ல, பொருத்தமான பெண்ணாய் அவங்களே தேர்ந்தெடுப்பாங்க."

"எனக்கு யார் பொருத்தம்னு தேர்வு செய்யும் தகுதி எனக்கிருக்குது. தவிர, என் முதல் கல்யாணம் பெரியவர்களின் தப்பான தேர்வு. இப்ப அந்த உரிமையை நான் விட்டுத் தரப் போறதில்லை."

நிமலா மெள்ள நிமிர்ந்து, அவன் முகம் பார்த்து கேட்டாள். "அதே உரிமை எனக்கும் உண்டில்லையா?"

இவள்



எதிர்பார்த்தது போல அவன் பின்வாங்கவில்லை.

"ஆனால் அதற்கான சுதந்திரம் உனக்கில்லை, நிமலா."

இவளது அதிர்ச்சி விலகி, 'சுருக்'கென ஆத்திரம் முளைத்தது.

"அதாவது...?"

"நீ கல்யாணத்திற்கு மறுத்தால், தொடர்ந்து இங்கே இருக்க முடியாது!"

தன் கன்னங்கள் சூடாவதை உணர்ந்தாள்.

"இப்படி நீங்க என்னை மிரட்டுவது உங்க பாட்டிம்மாவுக்குத் தெரிந்தாலும்... பட்டு... ஏன் எல்லாரும் உங்களை உயர்வாய் நினைத்திருக்க, நீங்க..."

கடினமான வார்த்தைகள் அவளுக்குத் தெரியும்தான். ஆனால் பயன்படுத்தத் தயங்கினாள்.

ஆனால் அவனிடம் தயக்கமேயில்லை.

"போன தரம் நீ எனக்கு நன்றிக்கடன் பட்டிருப்பதாய் சொன்னதை மறந்துட்டியா நிமலா? அது என்னை, என் குடும்பத்தாரிடம் ஒரு வில்லனாய் சித்தரிப்பதில் தீர்ந்து விடுமானால், தாராளமாய் செய். தவிர, நான் உன்னைச் சிறைப்பிடித்துக் கூட்டி வரலை. ரஞ்சிதாவிடம் கூட நீ இங்கு வரவேண்டாம்னுதான் சொன்னேன். அவளது வற்புறுத்தலில், பாட்டிம்மாவின் சிபாரிசில் வந்த நீ, இங்கு இவ்வளவு நாளாய் ரொம்ப உபகாரமாய் இருந்தாலும், நீயும் நிம்மதியாய் பாதுகாப்பாய் உணர்ந்தாய்."

இவளுக்கு வெளியே ஓடிப் போய் தனிமையில் யோசிக்க வேண்டும்போல் இருந்தது.

அடைக்கலம் தேடி வந்த ஒரு அநாதைப் பெண்ணிடம் இப்படி ஒரு கோரிக்கை... அதுவும் நிரஞ்சனிடமிருந்து. ஏன்?

"உன் நிலையை பயன்படுத்தி உன்னை மடக்குவதாய் நீ அஞ்சலாம். ஆனால் அப்படியில்லை. எனக்குச் சரியாய் அதாவது இதமாய் கேட்கத் தெரியலை. ஆண்களுக்கும் நிராதரவான நிலை உண்டு. அப்படிப்பட்ட நிலையிலிருந்து நான் வைக்கும் கோரிக்கைதான் இது."

அவன் எழுந்து இவளை நெருங்க, இவளும் எழுந்தாள். அதிர்ச்சியில் நடுங்கிய இவளது மெல்லிய விரல்களை சேர்த்து பிடித்தான்.



அந்த வெப்பத்தில் அவை சமாதானமாகின. அசாதாரண கோரிக்கையைத் தொடர்ந்த அந்தத் தொடுதல், அவளை உலுக்கியது... அதே சமயம் மன உதறலை நீவி விட்டது!

"உத்தரவிடுவது போல கேட்டுட்டேனோ நிமலா? இதை ஒரு உதவியாய்த்தான் கேட்கறேன்."

"கல்யாணம்ங்கறது... உதவியா?"

"இந்த சந்தர்ப்பத்தில் அப்படித்தான். இந்த பாதுகாப்பான இடத்தில் நீ தொடர்ந்து தங்கலாம்... உரிமையோடு! நான்... உன்னிடம் வெறெந்த உரிமையும் எடுத்துக்க மாட்டேன்."

புரிந்தும் புரியாமல் தலை குனிந்திருந்தாள்.

"ஏதும் சொல்ல விரும்பறியா நிமலா?"

"இது ஒரு நாடகமாய்...?"

"பெயரளவில் நான் கணவனாய் இருந்தாலும் போதும். அதில் எனக்கு பாதுகாப்பு கிடைக்கும்."

திருமணம் என்ற புனித பந்தத்தை, புதிராய் அல்லவா காட்டுகிறான்?

"உங்களுக்கு ஏற்ற பெண்கள் பலர் இருப்பாங்க. அநாதையான என்னைப் போய்..."

"தோட்ட மூலிகையின் அருமை வீட்டுக்காரங்களுக்குத் தெரியாதுன்னுவாங்க. முதலில் நானும் உன்னை அந்த கோணத்தில் பார்க்கலை. இங்கே வந்த ஷியாமளாவின் அப்பா, உன்னை பார்த்து விட்டுப் பொறாமையால் காயவும்தான், என் கருத்தில் நீ பட்டாய். என் பிரச்சினைக்கு முடிவு நீதான்னு பட்டது."

"சிரமமில்லாமல் வேலை முடியும்னு நினைச்சீங்க?"

"அநாவசியமாய் ஏன் சிரமப்படணும்? தொட்டி மீனை விட்டுட்டு கட்டுமரமேறி கடலுக்குள் வலை வீசப் போவானேன்?"

"ஆனால் கடல்மீன் உங்களைத் தேடி வந்ததே?"

அவன் முகம் பாராட்டுடன் மலர்ந்தது.

"ஷியாமளா என்னைத் தேடி வந்த காரணத்தை யூகிச்சுட்டே... குட். ஆனா அவ சுறா மீன். சிக்கினவன் காலி. பாட்டி பாராட்டும் புத்திசாலிப் பெண்ணான உனக்கு அது ஏன் புரியலை?"

அஞ்சுகம்மா பேரனிடமும் பீர்பாலின் புத்திசாலி மனைவி கதையைச் சொல்லியிருப்பார் போலவே!

அதனால்தான் தான் பெரியவரிடம் சொல்லுவதாய் மிரட்டியதை இவன் கண்டு கொள்ளவேயில்லை!

"ஷியாமளா என் மனைவியாய் வருவது... ஒரு வியாபாரம் போல. அதை நான் விரும்பலை."

"அதை ஆசையாய் வந்த அவங்களிடமே நீங்க சொல்லலாமே?"

"அவ ஆசைக்கு எதிராய் பேசினால், அவளால் தாங்க முடியாது."

"என்னைத் திடீர் கல்யாணம் செய்து கொண்டால்... அதைத் தாங்கக் கூடுமா?"

திடீர் புளியோதரை, பிரியாணி போன்றவை வாழ்வை சுலபமாக்குவது போல திடீர் கல்யாணமும் செய்யும் என்பது அவன் முடிவா?

இந்த வேளையிலும் வேடிக்கையான ஒரு நினைப்பு அவளுக்குள்!

"என் இக்கட்டான நிலைமையை புரிஞ்சு... உன் சம்மதத்தைச் சொல்லு நிமலா... ப்ளீஸ்" என்றவன் இவளது மெல்லிய கைகளைப் பற்றிய அழுத்தத்தில் அவனது அவசரம் புரிந்தது.

அதன் வெதுவெதுப்பில் புது பாதுகாப்பை உணர்ந்தாள்!

மூன்று வாரங்களுக்கு முன்பு நிராதரவாய் அவனிடம் உதவிக்கு நின்ற தன்னிடம், இப்போது அவன் கெஞ்சுவது...

விதி வலியதுதான் போலும்!

இப்போது தான் சொல்லும் சம்மதம் நிரஞ்சனை இவளது சொந்தமாக்கி விடுமா...?

அந்த எண்ணம் ஒரு பேரலையாய் எழும்பி அவளைச் சாய்த்தது.

'ம்ம்...' என்றாள், அவனுக்கு மட்டுமே கேட்குமளவில்.

## 13

தன் அறைக்கு வந்து கதவை மூடிய பிறகே, உணர்வுப்பெருக்கில் தனக்கு மூச்சிரைப்பதை உணர்ந்தாள். தன் சம்மதம் எவ்வளவு பெரிய அசட்டுத்தனம் என்றும்! ஆனால் நிரஞ்சன் செய்தது அயோக்கியத்தனம் அல்லவா? வேறு ஒருத்தியிடம் இப்படி ஒரு கோரிக்கையை வைக்கக் கூடுமா?

'இந்த வாழ்வு ஒரு நாடகம். அதில் நீ என் மனைவி எனும் கதாபாத்திரத்தை ஏற்றுக் கொள்' என்று சில காலமே பழகிய

ஒரு கவுரவமான பெண்ணிடம் நின்று பேச முடியுமா?

'மிக இக்கட்டான நிலைமை' என்றான். சரி.

ஆக அந்த நிலை அவனுக்கு மாறியதும் தனது நிலை என்ன?

காதல் மணமும், பெரியவர்கள் சகல பொருத்தங்களும் பார்த்து இணைக்கும் இல்லறமுமே கிழிந்து போகும் இந்நாளில்... இரண்டும்கெட்டானான இந்த கல்யாணத்தின் நிலை என்னவாகும்?

நினைப்பு பயமுறுத்தியது.

கதவைத் தட்டி விட்டு, மெதுவே உள்ளே வந்த பட்டு, அங்கிருந்த சிறு மேஜையில் தான் எடுத்து வந்த உணவுத்தட்டை வைத்தாள்.

''தலைவலியாமே நிமலாக்கா? உங்களைத் தொந்தரவு செய்யாமல் வரணும்னாங்க அத்தான். சாப்பிட்டுட்டுப் படுங்க.''

இத்தனைப் பரிவான சூழலில் இருப்பது கொடுப்பினைதான்!

ஆனால் அடிப்படை சரியில்லையே!

எந்தச் சூழ்நிலை தன்னை இப்படியொரு முடிவு எடுக்கத் தூண்டியது என்பதை நிரஞ்சன் உடைத்துச் சொல்லவில்லையே?

அவனது கோரிக்கை தவறுதான்.

ஆனால் அதுபற்றி மனம் விட்டு விவாதிக்க, இவளுக்கு ஆலோசனைத் தர இவளுக்கென்று யாருமில்லையே...

அந்த நினைப்பில் அவளது கண்கள் கரித்துப் பொங்கின.

தனது பாட்டியிடம் அவன் கலந்து பேசியிருக்க வேண்டும். அனுதாபம் கொண்டு, தன்னை இங்கு வேலைக்கு அழைத்த அஞ்சுகம்மா, பேரனோடு சேர்ந்து தன்னை இவ்வகையில் பயன்படுத்த நினைப்பது துரோகமில்லையா?

இதில் தான் நன்றி மறக்கக் கூடாது என்று வேறு மிரட்டினானே! சிதம்பரத்திடம் சிக்கிக் கொண்டது போலத்தானோ இதுவும்?

அதில் இவளுக்கு ஆசைநாயகி வேடம்...

இப்போது வரவிருப்பது கவுரவமான பாத்திரம்... மனைவியாக!

ஆனால் 'வேறு எந்த உரிமையும் எடுத்துக் கொள்ள மாட்டேன்' என்றானே?

இனந்தெரியாத ஒரு பயங்கரம் தன்னைச் சூழ்வதை உணர்ந்தாள். அது தன்னைக் கவ்விக் குதறும் முன் தப்பி விடலாமா?

வேறு ஒரு கவுரவமான இடமும்

### உலகிலேயே உயரமான 220 அடுக்குமாடி கட்டிடம்!



உலகிலேயே மிக உயரமான கட்டிடம் சீனாவில் கட்டப்பட்டு வருகிறது. 220 அடுக்குமாடிகளுடன் இந்த கட்டிடம் கட்டப்படுகிறது. தற்போது உலகிலேயே மிக உயரமான புர்ஜ் கலீபா என்ற கட்டிடம் துபாயில் உள்ளது. இதன் உயரம் 828 மீட்டராகும். இந்த சாதனையை முறியடிக்கும் வகையில் சீனா சாங்ஷா நகரில் இந்த உயரமான கட்டிடத்தைக் கட்டி வருகிறது. இதன் உயரம் 838 மீட்டராகும். அதாவது 2,749 அடி உயரம் கொண்டதாக இந்த கட்டிடம் இருக்கும்.

220 அடுக்குமாடிகளைக் கொண்ட இக்கட்டிடம் முழுவதும் குளுகுளு வசதி செய்யப்பட்டுள்ளது. துபாயில் உள்ள புர்ஜ் கலீபா கட்டிடத்தைக் கட்ட 5 ஆண்டுகளானது. ஆனால், இந்த கட்டிடம் 90 நாட்களில் கட்டி முடிக்கப்படவுள்ளது. ஜனவரி தொடக்கத்தில் கட்டத் தொடங்கி மார்ச் மாதம் இறுதியில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு ஐந்து அடுக்கு மாடிகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. புர்ஜ் கலீபா கட்டிடத்தைக் கட்டிய கட்டுமான நிறுவனமே இதை கட்டி தனது சாதனையை முறியடிக்கிறது. இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் புர்ஜ் கலீபா கட்டிடத்தைக் கட்டிய கட்டுமான கலைஞர்களும், என்ஜினீயர்களும் இதில் ஈடுபடவுள்ளனர்.

ஏற்கனவே உலகில் உள்ள மிக உயரமான 20 கட்டிடங்களில் 9 கட்டிடங்கள் சீனாவில் உள்ளன. எல்லா துறைகளிலும் முன்னேறி வரும் சீன நாடு கட்டிடத்துறையிலும் முன்னேறி உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தி வருகிறது.

வேலையும் தேடுவது அத்தனை சுலபமா?

முன்பைப் போல தன் உடைமைகளை எடுத்துக் கொண்டு கிளம்பலாம் என்ற நினைப்பு கூட அவளுள் வராமல் முரண்டியது!

ஏன்?

இங்குள்ள சவுகர்யமா?... இல்லை இந்த வீட்டில் அனுபவித்த சந்தோஷத்தை பாதுகாப்பை இதுவரை வேறெங்கும் சுகித்ததில்லை. இங்கு தான் பயனுள்ளவளாய் இருப்பது... அது தனித் திருப்தி!

ஆனால் மனம் இங்கிருந்து கிளம்ப மறுப்பதற்கு வேறு ஒரு காரணமும் இருப்பதாய் தோன்ற... அதைத் தேடி துழாவினாள்.

தெளிவாய் புலப்படவில்லை.

நம் மூக்கினால் ஒரே சமயத்தில் இரு முரணான வாசனைகளை முகர முடியாது. ஆக அது மணத்தை நுகர, அந்நேரம் துர்நாற்றமும் இருந்தால் அதை உணர முடியாதாம்.

அதுபோல தான் நிரஞ்சனின் மனைவியாகப் போகும் எண்ணம் அவளில் வியாபித்து, மற்ற எதையும் ஆராயக் கூடாதபடி அவள் புத்தியை மழுங்கடித்திருந்ததோ?

அன்றிரவு முழுக்க அரைகுறை உறக்கத்தில் நீந்தியவளுக்கு விடிந்ததும் மனதில் எழுந்த முதல் எண்ணம்—

'நிரஞ்சன் தன்னைக் கல்யாணம் செய்யக் கேட்டது கனவா அல்லது தன் வெட்கம்கெட்ட கற்பனையா?' என்பதுதான்!

அது நிஜந்தான் என்பது உறைக்க அடுத்ததாய் கிளம்பியது,

'இனி, அவன் முன்பு எப்படி போய் நிற்பது' என்ற குழப்பம்!

வீட்டு வேலைக்காரர்களிடம் பத்மாவிடம், இச்செய்தி பரவி இருக்குமா? அவர்களை எப்படி சமாளிப்பது?

இவர்கள் இருவருக்கிடையே காதல் தோன்றிவிட்டதென அனுமானித்து அவர்கள் நமட்டாய் சிரித்து, சீண்டினால் தன்னால் அதைத் தாங்கக் கூடுமா?

குன்றி நிற்க நேருமே...

வழக்கமாய் தனக்கான காபியைக் கலந்து கொண்டு, தோட்டத்தை சுற்றி வந்து, பூப்பறித்து, காலை உணவோடு தன்னையும் தயார்படுத்துபவளுக்கு இன்று எதுவும் முடியவில்லை.

கால்கள் அறையை விட்டு வெளியேற மறுத்தன!

மாறாக, நிரஞ்சன் நேற்றைய சம்பாஷணையைப் பற்றி எவரிடமும் சொல்லவில்லை எனில்... தான்,

'எங்கப்பன் குதிரில் இல்லை' என்பது போல எதையும் உளறி வைக்கவும் கூடாது!

நேற்று மாலையிலிருந்து அறையிலேயே இருந்தால், அதுதான் கேள்விகளுக்கு இடம் தரும் என்று முடிவு செய்தவள் கீழிறங்க, வழக்கமான சிநேக பார்வையும் முறுவலும் இவளுக்குக் கிடைத்தன.

"தலவலி தேவலைங்களா? தலைக்கு ஊத்தினவங்க, முழுக்க உலர்த்தல போல..."

"ஆமாமா" அதையேப் பிடித்துக் கொண்டாள்!

"காபி எடுத்துட்டு வரலாம்னுதான் இருந்தேன். இன்னும் உறங்குறீங்களோனு..."

வந்த பத்மாவும் அதையே கேட்க, நிம்மதி பெருமூச்சுடன் நிமலா தன் அன்றாட வேலைகளில் இறங்கினாள்.

இவள் வெட்டிய ரவிக்கை மாடல்களை ஆதாரமாய் வைத்து, தாங்களும் வெட்டப் பழகியவர்களுக்கு அது சுலபமாகவே வர, தையல் வகுப்பு வெகு ஆர்ப்பாட்டமாய் போனது!

கற்றுக் கொண்ட உற்சாகத்தில் பெண்கள் திளைக்க, புரிவது போல கற்றுக் கொடுத்தப் பெருமிதத்துடன் இவள், அடுத்த வேலையான சமையலில் இறங்கினாள். சாம்பார் சாதம், சேனை வறுவல், பச்சடி என்று அதுவும் கச்சிதமாய் அமைந்துவிட, தன் அறைக்குப் போவதற்காய் ஹாலிற்கு நடந்தவளின் முகம் சிறுத்தது!

அத்தனைக்குக் காட்டமான முகத்துடன் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள் ஷியாமளா!

ஓவியத்தில் மலர்ந்த பூ போலிருந்த குண்டு முகம், இப்போது சிவந்து கிடந்தது. அவள் நடையின் வேகம், 'செய்தி' அவளை எட்டி விட்டதை நிமலாவிற்குச் சொன்னது!

ஷியாமளாவிடமிருந்து தப்புவதற்காய் முதலில் அவள் காதிற்கு விஷயத்தை நிரஞ்சன் அனுப்பியிருக்க வேண்டும்.

ஷியாமளாவும் அவளது தந்தையுமாய் தரும் ஏதோ ஒரு நெருக்கடியிலிருந்து தப்ப வேண்டி, நிரஞ்சன் தன் பின்னே ஒளிந்து கொண்டிருக்கிறான்.

அவனை நினைத்தாலும் பாவமாய்தான் இருக்கிறது.

நிமலா ஒளிந்தது போல வேகமாய் ஹாலின் வலதுபுறமிருந்த நிரஞ்சனின் அறைக்குள் நுழைந்த ஷியாமளா, அறைக்கதவை அறைந்து சாத்தினாள்.

இவளுக்கு மேலும் பரிதாபமானது.

மூடிய கதவை மீறிய ஷியாமளாவின் குரலைக் கேட்டபடி மாடிக்கு ஓடியவள், முகம் கழுவித் துடைத்தாள். துளி ஒப்பனையை முடித்து கண்ணாடி முன் நின்றவள், கட்டியிருந்த புடவையை உருவினாள்!

திண்டுக்கல்லில் ரஞ்சிதாக்கா தந்திருந்த வயலட் நிற மைசூர் ஜார்ஜெட்டைப் பிரித்தாள். பொடி தங்கக் கட்டங்களுடன் பளபளத்ததை ஒரே நிமிஷத்தில் சுற்றிக் கொள்ள, அது அவளுக்கு அமர்க்களமாய் பொருந்தியது! ஏற்கனவே போட்டிருந்த கருநீல ரவிக்கையும் கண்ணை உறுத்தவில்லை.

விறுவிறுவென இறங்கி மறுபடி நிரஞ்சனின் அறைக்கு முன்னே நிற்க, மூடிய கதவை மீறி ஷியாமளாவின் கூச்சல் கசிந்தது.

"என்னிடமிருந்து தப்புவதாய் நினைச்சு... எதில் சிக்கி... பாழுங்கிணற்றில் விழப் போறியா நிரு?"

ஆத்திரத்தில் அவன் குரலும் உயர்ந்திருந்தது.

"பாழும் கிணறா? நிமலாவை இங்கே நீ பார்த்ததும் பொறாமையில் பொசுங்கிக் கேட்கலை... 'மாடல் போலிருக்கும் இவ இந்த காட்டில் என்ன பண்றா?'ன்னு"

"பட், ஷி இஸ் எ நோபடி! பார்க்க கண்ணுக்குக் குளிர்ச்சி. ஆனா உயர்தர படிப்பு, கவுரவமான குடும்பம், அந்தஸ்து, பணம் ஷி ஹாஸ் நத்திங்."

"என் பட்டியலைக் கேளு. பொறுப்பான திறமை, அலட்டாத புத்திசாலித்தனம், குறையாத குணம், என் மீதும் என் குடும்பத்தின் மீதும் அளவில்லாத அன்பு, கடைசியாய் அலுக்காத அழகு... போதாது? எனக்குப் போதும்!"

அதற்கும் மேல் தாள முடியாத நிமலா, கதவைத் தள்ளி திறந்தாள்.

"பசிக்குதுன்னீங்களே நிரஞ்? சாப்பிட வாங்க... ஓ ஷியாமளா? நீங்களும் சாப்பிட்டுட்டு போகலாமே?"

உள்ளே நின்றவளின் கண்கள் இவளை அளந்து, பின் வெறித்தன. விலை உயர்ந்த உடையில் பொலிவும் அந்தஸ்துமாய் நின்ற நிமலா, வெகு இயல்பும் உரிமையுமாய் நிரஞ்சனை அழைத்தது, ஷியாமளாவிற்குள் எரிந்த பொறாமைக் கங்குகளை பலமாக விசிறி விட, அதன் வெக்கைத் தாளாமல் அங்கிருந்து கிளம்பினாள் அவள்.

## 14

சாப்பிட்டுக் கொண்டிருந்த நிரஞ்சனுக்குப் புரைக்கேறியது. அதற்குக் காரணமான தன் சிரிப்பை அடக்கிக் கொண்டவன் நீரெடுத்து பருகினான்.

"நீ இவ்வளவு பிரமாதமாய் நடிப்பேன்னு தெரியாது, நிமலா."

நேற்றிரவு வேதனையில் வதங்கியிருந்த அவன் முகத்தின் உற்சாகத்தை ஓரக்கண்ணால் ரசித்தவள் பதிலடித்தாள்.

"உங்களுக்கு இவ்வளவு சரளமாய் பொய் சொல்ல வர, எனக்கு நடிப்பு வராதா என்ன?"

அறியாத ஆர்வத்துடன் கேட்டான். "பொய்யா... என்ன பொய்?"

"பொய்ப் பட்டியல்! பொறுப்பான திறமை, அளவில்லாத அன்புன்னு..."

"அதெல்லாம் உண்மைதானே? ஏறக்குறைய ஒரு மாசமாய் உன்னைக் கணிச்சு இட்ட பட்டியலது. அதான் ஷியாமாக்கு அத்தனை எரிச்சல். சரியாய் அந்த நேரம் நீயும் ஜெகஜோதியாய் என் அறைக்குள் நுழைஞ்சு, கச்சிதமாய் விட்ட வசனம்... என் பட்டியலில் நான், 'எதையும் சமாளிக்கும் சாமர்த்தியத்தை' சேர்த்திருக்கணும்."

ரசித்து சிரித்தவன், உணவை அத்தனை ருசித்ததாய் தோன்றவில்லை.

"சரியாய் சாப்பிடலை நீங்க."

"போதும் நாடகத்தை ரொம்ப நீட்டாத! நேற்று என் கோரிக்கையை ஏற்றதற்கு என் நன்றி. தக்க சமயத்தில் வந்து என்னைக் காப்பாற்றினதற்கும் இன்னொரு பெரிய நன்றி! ஒரு வாரத்துக்கேனும் இதை நினைச்சு நினைச்சு சிரிப்பேன்னு தோணுது."

ஆக எல்லாம் நாடகம்தான். இவனை கட்டிக் கொள்ள சம்மதித்ததை விட, ஷியாமளாவிடமிருந்து காத்ததற்குத்தான் பெரிய நன்றியாம். உள்ளே எரிந்தது.

கை கழுவி வந்தவனிடம் சற்று விறைப்பாகவே விசாரித்தாள்.

"வீட்டில் உள்ளவங்களிடம் எப்ப சொல்றதாய் உத்தேசம்?"

"அடுத்த வாரம் பாட்டிம்மா வந்திடுவாங்களே... அதுவரை பொறுக்கலாம்னு நினைச்சேன். நாம் என்ன பேசினோம்னு துளைத்த பட்டுவிடம், உன் இல்லத்திலிருந்து உன்னை வரச் சொல்வதாய் ஏதோ சமாளித்தேன். சரிதானே?"

அதிமுக்கியமான முடிவை சர்வாதிகாரியாய் தானே எடுத்தவன், இப்போது பரமசாதுவாய் தன் கருத்தைக் கேட்பதில் இவளது எரிச்சல் எகிறியது.

"இன்று உன் மனம் மாறி, தந்த அரைகுறை சம்மதத்தை வாபஸ் வாங்கிடுவியோன்னு கொஞ்சம் பயம்தான்."

"அதற்கு வழியிருந்தால்.. நான் நேற்றே கிளம்பியிருப்பேனே? வேற போக்கிடம் இல்லாமல் மாட்டிக்கிட்டேன்."

"ஸாரி நிமலா... இவ்வளவு வெறுப்புடன் நீ சம்மதிச்சேன்றது... உன் வாழ்வை தியாகம் பண்றதாய் படுதா?"

"தியாகம்... ரொம்ப நாடகத்தனமான வார்த்தை! ஒரு புதுமாதிரியான உடன்படிக்கைன்னு வைக்கலாம். புடவையை மாற்றணும்... பட்டு பார்க்கும் முன்..." என்றவள் விலக, சற்று முன் அவனில் பொங்கி வழிந்த சிரிப்பு, வற்றி வரண்டிருந்தது.

***

குடை வடிவ உள்பாவாடைகள் உருவாகிய வேகத்தில் நிமலா மலைத்துப் போனாள்.

ஒரு பாவாடைக்கான ஏழு துண்டுகளை ஒருத்தி கணக்காய் வெட்டிப் போட, ஏழு பெண்கள் ஒவ்வொன்றிலும் கைவேலையாய் விளிம்பு வைக்க, மற்றொருத்தி அவற்றைக் கச்சிதமாகப் பொருத்தினாள்!

சி.டி.யில் பாடல்களை சுழல விட்டு விட்டு, அக்கம்பக்கம் திரும்பாமல், பேசி சளசளக்காமல் கருத்தாய் வேலை நடந்தது.

இவள் பாராட்ட, அவர்களும் உற்சாகமாய் விளக்கினார்கள்.

"நீங்கதானே சொன்னீங்க? சாதா பாவாடை நூறிலிருந்து கூட இருவது ரூபாய் வரை விற்கும்ன்னால், வேலைப்பாடானதின் விலை இருநூற்றைம்பதுன்னு? டவுனிலிருந்து ரஞ்சிதாம்மா ஆர்டரும் பிடிச்சுத் தந்திருக்காங்க. ஒரு நாளுக்கு நாலு தயாரானாலே ஆயிரம் ரூபாய். முடிந்தளவு செய்வோம்னு இறங்கிட்டோம். சில துணிகளைக் கையோடு எடுத்துட்டுப் போய், பிள்ளைக பாடம் படிக்கற வேலையில பக்கத்தில் இருந்தபடி முடிச்சிடறோம்."

"ரொம்ப நல்லது."

"வீட்டு நிலவரமும் நல்லாத்தாம்மா இருக்குது. வெட்டிப் பேச்சில்லாம வீண் விவகாரமும் இல்லைல்ல?!"

"இந்த வேகத்திற்கு இருக்கும் துணி தாக்குப் பிடிக்காதே?"

"வேண்டிய துணியோட ரஞ்சிதாம்மா வர்ராங்களாம்ல? நாம முடிச்ச உருப்படிகளைக் கையோட அவங்க எடுத்துட்டு போயிறட்டும்."

இவளுக்குள் ஆச்சரியமான ஆனந்தம் பரவியது.

சந்தித்த அன்றே தன்னிடம் வெகு பிரியம் காட்டிய ரஞ்சிதாவுடன் அவ்வப்போது போனில் பேசுவது உண்டென்றாலும் நேரில் பார்க்க ஆசைதான். அவள் வருவதை ஏன் யாரும்... அதாவது பட்டு தன்னிடம் சொல்லவில்லை?

"எனக்குத் தெரியாதே...?" என்றாள் சிறு குறையோடு.

"உங்களைக் குஷியில திகைக்க வைக்கணும்னு ரகசியமா வச்சிருப்பாங்க. எங்க ஓட்டை வாய் 'அவுட்' ஆக்கிருச்சே..."

"அப்ப களிமண்ணு நகை செய்றத கத்துத் தர டீச்சரம்மா வர்ரதும் தெரியாதுங்களா?" இன்னொரு அப்பாவி கேட்டு குட்டு வாங்கிக் கொண்டாள்!

முதலில் அந்த வகுப்புகளுக்கு டவுன் வரை போக வேண்டுமென்ற பட்டு, பிறகு அந்தப் பேச்சை எடுக்காதது இதனால்தானா?

ஆதங்கம் இவளது மன ஓரத்தை அரித்தது.

"வேலை முடிஞ்சதும் அறையைப் பூட்டி சாவியை என்னிடம் தந்திடு கோமளம்" என்றவள் தோட்டத்திற்குப் போனாள். பயன்படாத சில நீண்ட கற்களை நிரஞ்சன் இருக்கைகளாக்கி ஆங்காங்கே இட்டிருந்தான். அதில் உட்கார்ந்தவளை இரு கைகள் தோள் பற்றி அணைத்தன.

"என்ன வருத்தமா, கோவமா?" என்ற விசாரிப்புடன்.

திரும்ப, முகமெல்லாம் பல்லாய் நின்றிருந்தாள் பட்டு.

"அதெல்லாம் இல்லை..."

"ஆனா எனக்கு ரெண்டும் இருந்துச்சு. நீங்க ரொம்ப அழுத்தம்தான் திருமதி. நிரஞ்சன் அவர்களே!"

நிமலா புது பதற்றத்துடன் குனிந்து

கொண்டாள்.

"பாட்டியோடு, இந்தியா வரப்போறாங்கன்னதுமே எனக்கு சந்தேகம். அத்தையும் மாமாவும் வந்தாச்சே... இனி அவங்க போன வருஷம் வர்ர வழக்கம்னு. அடுத்த வருஷந்தானே குஷியோட பாட்டி அடிக்கடி எக்ஸ்ட்ரா பேச, கொஞ்சம் ஒட்டுக் கேட்டதில் உங்க கல்யாண 'ஸ்கூப்' கிடைச்சது! நிருத்தானிடம் இந்தப் பழிவாங்கும் படலம்." அதான்

"ரஞ்சிதாக்காவிற்கு?"

"அவங்களுக்கும் விவரம் ஓரளவு தெரிஞ்சிருந்தது. எல்லாரும் என்னை சின்னப் பொண்ணுன்னு ஒதுக்கியிருந்தாலும் நீங்க 'குட் நியூஸை' எங்கிட்ட சொல்லியிருக்கலாம்... நான் ரஞ்சிக்கா வர்ரதை உங்களிடம் தெரியப்படுத்தலைன்னதும் உங்க ஸ்ருதி எவ்வளவு இறங்கிடுச்சு?"

"ஸாரி பட்டு..." என்றவளுக்கு அதற்கு மேலே என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'இதெல்லாம் வெறும் நாடகம் என்றும், நிரஞ்சன் தப்புவதற்காய் தான் சிக்கிக் கொண்டதையும் எப்படி இச்சின்னப் பெண்ணிடம் சொல்வது?'

"நீ நினைக்கறது போலில்லை பட்டு..."

"பாட்டி நினைச்சால் அதை நடத்திடுவாங்க. 'என் வீட்டு மருமகளாய் வாம்மா'ன்னு சொன்னால் மிரண்டிடுவீங்கன்னு, 'வேலை தர்றேன்... வா'ன்னு உங்களை மடக்கிட்டாங்க!"

ஆக இந்தத் திட்டத்தில் குடும்பமே சம்பந்தப்பட்டிருக்கிறது. பாட்டிம்மாவோடு, நிரஞ்சனின் பெற்றோரும் வருகிறார்களாமே?

"அத்தை, மாமாவால் இங்கே அரை மாசத்திற்கு மேலே தங்க முடியாது. என் விடுமுறையும் முடிஞ்சிடுமே... ஆக, நாம ஓரளவு ஷாப்பிங் செய்து வைப்பது நல்லதுக்கா."

நிமலாவிற்கு அதிலெல்லாம் நாட்டமில்லை.

"இங்குள்ள மற்றவங்களுக்கு விவரம் தெரியுமா பட்டு?"

"நான் வாய் திறக்கப் போறதில்லை. அதெல்லாம் பெரியவங்க வந்ததும் சொல்லிக்கட்டும். அதுவரை விஷயம் நம்ப சீக்ரெட்" குதூகலித்தாள் இளையவள்.

மற்றவர்களுக்கும் இவர்கள் கல்யாண விவரம் தெரிய வரும்போது இந்த உற்சாகம் பரவும்தான். ஆனால் முடிவில் இது அத்தனையும் நாடகம் என்பது வெளியாக...

தலைமேலே தூக்கிக் கொண்டாடுபவர்கள் 'தொப்'பென விட்டுவிட, தனது வலி அதிகமாயிருக்குமே?

அப்போது யார் தோளில் சாய்ந்து ஆறுதல்பட?

பயமும் துக்கமும் நிமலாவை அழுத்தின.

அதை யாரிடமும் பகிர முடியாத தனிமை மிரட்டியது.

அவிழ்த்து விடப்பட்ட நாய்கள் கூட இவளை அதிகம் கண்டு கொள்ளாமல் போக, இவள் தனியே நடக்கலானாள்.

## 15

'எனக்குமே யாருமில்லை. நானும் பாவம்தான்' என்பதான செய்தியைத் தன் மணிக்கண்களில் தேக்கி, நிமலாவை ஏறிட்டது அந்தக் குட்டி நாய்.

நீரில் நனைந்து, மண்ணிலும் புரண்டிருந்தது போல... திரிதிரியாய் அதன் பழுப்பு ரோமம் விறைத்திருந்தது. விலா எலும்புகள் தெரிந்த மெலிந்த தேகத்தோடு அதன் சின்ன வால் தயக்கமாய் ஆடிக் கொண்டிருந்தது.

"அடடா... ஏன் தனியா இருக்க... உன் அம்மா எங்க?"

நிமலாவின் சிநேகக் கேள்வியில் அதன் வால் வேகமெடுத்தது! வயிறு ஒட்டிய அச்சிறு ஜீவனைத் தொட்டு வருட இவள் கை நீட்ட, அது பம்மவில்லை, உறுமவில்லை. மேலும் உற்சாகமாய் முனகி, இவள் கையை முகர்ந்து நக்கியது!

நிமலாவிற்கு கடவுளின் கருணையில் நம்பிக்கைப் பெருகியது. 'தனக்கென்று யாருண்டு?' என்று தான் மறுகிய சில நிமிடங்களிலேயே தன் முன் மாயமாய் இந்த குட்டி ஜீவனை அனுப்பி விட்டாரே

அதை அள்ளியெடுத்துக் கொண்டு வீடு வந்தவள், தோட்டத்திற்கா கொல்லைப்புறமிருந்த குழாய் நீரி குட்டியை இதமாய் கழுவி துடைத்தா சிறு கிண்ணத்து பாலை அது ஒரே மூச்சி குடித்தாலும் அந்நேரமும் அதன் ஒரு க நிமலாவின் மீதுதான்!

இவள் சற்று விலகினாலும், 'என்ன விட்டுப் போய் விடாதே' என்பது பே நிழலானது.

இது அன்பா அல்லது வெறும் நன்றி

நிமலாவினுள் இக்கேள்வி எழு இதைத் தன் நிலைமையோடும் ஒப்பிட்

கொண்டாள்.

"பாட்டியோடு, அத்தையும் மாமாவும் இந்தியா வரப்போறாங்கன்னதுமே எனக்கு சந்தேகம். அவங்க போன வருஷம் வந்தாச்சே... இனி அடுத்த வருஷந்தானே வர்ர வழக்கம்னு. பாட்டி எக்ஸ்ட்ரா குஷியோட அடிக்கடி நிருத்தானிடம் பேச, கொஞ்சம் ஒட்டுக் கேட்டதில் உங்க கல்யாண 'ஸ்கூப்' கிடைச்சது! அதான் இந்தப் பழிவாங்கும் படலம்."

"ரஞ்சிதாக்காவிற்கு?"

"அவங்களுக்கும் விவரம் ஓரளவு தெரிஞ்சிருந்தது. எல்லாரும் என்னை சின்னப் பொண்ணுன்னு ஒதுக்கியிருந்தாலும் நீங்க 'குட் நியூஸை' எங்கிட்ட சொல்லியிருக்கலாம்... நான் ரஞ்சிக்கா வர்ரதை உங்களிடம் தெரியப்படுத்தலைன்னதும் உங்க ஸ்ருதி எவ்வளவு இறங்கிடுச்சு?"

"ஸாரி பட்டு..." என்றவளுக்கு அதற்கு மேலே என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'இதெல்லாம் வெறும் நாடகம் என்றும், நிரஞ்சன் தப்புவதற்காய் தான் சிக்கிக் கொண்டதையும் எப்படி இச்சின்னப் பெண்ணிடம் சொல்வது?'

"நீ நினைக்கறது போலில்லை பட்டு..."

"பாட்டி நினைச்சால் அதை நடத்திடுவாங்க. 'என் வீட்டு மருமகளாய் வாம்மா'ன்னு சொன்னால் மிரண்டிடுவீங்கன்னு, 'வேலை தர்றேன்... வா'ன்னு உங்களை மடக்கிட்டாங்க!"

ஆக இந்தத் திட்டத்தில் குடும்பமே சம்பந்தப்பட்டிருக்கிறது. பாட்டிம்மாவோடு, நிரஞ்சனின் பெற்றோரும் வருகிறார்களாமே?

"அத்தை, மாமாவால் இங்கே அரை மாசத்திற்கு மேலே தங்க முடியாது. என் விடுமுறையும் முடிஞ்சிடுமே... ஆக, நாம ஓரளவு ஷாப்பிங் செய்து வைப்பது நல்லதுக்கா."

நிமலாவிற்கு அதிலெல்லாம் நாட்டமில்லை.

"இங்குள்ள மற்றவங்களுக்கு விவரம் தெரியுமா பட்டு?"

"நான் வாய் திறக்கப் போறதில்லை. அதெல்லாம் பெரியவங்க வந்ததும் சொல்லிக்கட்டும். அதுவரை விஷயம் நம்ப சீக்ரெட்" குதூகலித்தாள் இளையவள்.

மற்றவர்களுக்கும் இவர்கள் கல்யாண விவரம் தெரிய வரும்போது இந்த உற்சாகம் பரவும்தான். ஆனால் முடிவில் இது அத்தனையும் நாடகம் என்பது வெளியாக... தலைமேலே தூக்கிக் கொண்டாடுபவர்கள் 'தொப்'பென விட்டுவிட, தனது வலி அதிகமாயிருக்குமே?

அப்போது யார் தோளில் சாய்ந்து ஆறுதல்பட?

பயமும் துக்கமும் நிமலாவை அழுத்தின.

அதை யாரிடமும் பகிர முடியாத தனிமை மிரட்டியது.

அவிழ்த்து விடப்பட்ட நாய்கள் கூட இவளை அதிகம் கண்டு கொள்ளாமல் போக, இவள் தனியே நடக்கலானாள்.

## 15

'எனக்குமே யாருமில்லை. நானும் பாவம்தான்' என்பதான செய்தியைத் தன் மணிக்கண்களில் தேக்கி, நிமலாவை ஏறிட்டது அந்தக் குட்டி நாய்.

நீரில் நனைந்து, மண்ணிலும் புரண்டிருந்தது போல... திரிதிரியாய் அதன் பழுப்பு ரோமம் விறைத்திருந்தது. விலா எலும்புகள் தெரிந்த மெலிந்த தேகத்தோடு அதன் சின்ன வால் தயக்கமாய் ஆடிக் கொண்டிருந்தது.

"அடடா... ஏன் தனியா இருக்க... உன் அம்மா எங்க?"

நிமலாவின் சிநேகக் கேள்வியில் அதன் வால் வேகமெடுத்தது! வயிறு ஒட்டிய அச்சிறு ஜீவனைத் தொட்டு வருட இவள் கை நீட்ட, அது பம்மவில்லை, உறுமவில்லை. மேலும் உற்சாகமாய் முணகி, இவள் கையை முகர்ந்து நக்கியது!

நிமலாவிற்கு கடவுளின் கருணையில் நம்பிக்கைப் பெருகியது. 'தனக்கென்று யாருண்டு?' என்று தான் மறுகிய சில நிமிடங்களிலேயே தன் முன் மாயமாய் இந்த குட்டி ஜீவனை அனுப்பி விட்டாரே!

அதை அள்ளியெடுத்துக் கொண்டு வீடு வந்தவள், தோட்டத்திற்காய் கொல்லைப்புறமிருந்த குழாய் நீரில் குட்டியை இதமாய் கழுவி துடைத்தாள். சிறு கிண்ணத்து பாலை அது ஒரே மூச்சில் குடித்தாலும் அந்நேரமும் அதன் ஒரு கண் நிமலாவின் மீதுதான்!

இவள் சற்று விலகினாலும், 'என்னை விட்டுப் போய் விடாதே' என்பது போல நிழலானது.

இது அன்பா அல்லது வெறும் நன்றியா?

நிமலாவினுள் இக்கேள்வி எழும்பி, இதைத் தன் நிலைமையோடும் ஒப்பிட்டுப்

பார்த்தது.

நிரஞ்சனை மணக்க தான் சம்மதித்தது வெறும் நன்றியாலா?

இல்லை என்று பட்டது!

ஓரம் நைந்த ஒரு மூங்கில் கூடையினுள் மிருதுவான துணி பரத்தி குட்டியை இட்டவள், அதன் கழுத்திற்கு ஒரு சிவப்பு பட்டுக் கயிறையும் கட்டினாள்.

மறுநாள் காலை முதல் நினைப்பு – 'குட்டி'தான்.

அதுவும் இவளைக் கண்டதும் உடம்பை முறுக்கிப் பிழிந்தது. வால் இருக்கிறதா இல்லையா என்றே தெரியாதளவு வேகமாய் ஆடியது. பாலும் பன்னும் வைத்து அதனோடு சற்று நேரம் விளையாடியது நிமலாவை மிக ஆசுவாசப்படுத்தியது.

தையல் வகுப்பிற்கும் 'குட்டி' உடன் வந்தது.

சில நாட்களாய் அஞ்சுகம் அம்மாவிடமிருந்து அழைப்பு வராததும் கூட நெருடல்தான். ஒருவழியாய் தையல் வேலையில் மும்முரமாக, வெளியே கார் வந்து நின்ற ஓசை.

சற்று அச்சத்துடனேயே எட்டிப் பார்த்தவளின் முகம் மலர்ந்தது. வந்தது ஷியாமளாவோ அவளது கடுகடு தந்தையோ அல்ல, இவள் திண்டுக்கல் வந்திறங்கின அன்று வெகு ஆதரவு காட்டிய ரஞ்சிதா.

கைவேலையைப் போட்டு விட்டு நிமலா வெளியே பாய, 'குட்டி'யும் தடுமாற்றமாய் அவளைத் தொடர்ந்தது.

இவளுடையதை ஒத்த ஆர்வம் ரஞ்சிதாவிலும். இவளைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்தாள்.

அந்த நேசத்தில் நிமலாவின் கண்கள் பொங்கின.

"ரொம்ப சந்தோஷங்க்கா... உங்களைப் பார்க்கறது..."

"எனக்கும்தான்... வாழ்த்துகளும் கூட" காதோரம் கிசுகிசுத்தவள், சாதாரண குரலில் தொடர்ந்தாள்.

"இந்த இடமே களையாயிடுச்சே. நீ கடவுளின் வரம்தான்."

ஓட்டுனர் பெரிய துணி பண்டல்களை இறக்க, பெண்களின் தையல் வேலையைப் பார்த்த ரஞ்சிதா,

''அற்புதமாயிருக்குது. என் சிநேகிதி நடத்தும் 'ஸேல்'வில் நமக்கு ஒரு ஸ்டால் கேட்டிருக்கேன். மூட்டை கட்டி வைங்க. பிறகு நான் வாங்கி வந்ததை எல்லாம் பார்க்கலாம்'' என்றபடி வீட்டினுள் நுழைந்தாள்.

கொரிக்க, குடிக்க பரிமாறிய நிமலா தாளாமல் சொல்லி விட்டாள்.

''எல்லாம் சரிக்கா. ஆனா பெரியம்மாவிடமிருந்து போன் வரலை. ஏன்னு சஞ்சலமாயிருக்குது.''

"வேற ஒண்ணுமில்ல... பாட்டிம்மாக்கு உடம்புக்கு முடியல..."

"ஐய்யோ."

''வைரஸ் காய்ச்சல். பிறகு நிமோனியாவிற்குக் கொண்டு போயிடுச்சு. தவிர, நேரில் உன்னைப் பார்த்து வாழ்த்தணுங்கறது அவங்களுக்கு."

"உடம்பு சரியில்லாததை நிரஞ்சன் கூட என்னிடம் சொல்லலியே?"

"நீ கவலைப்படக் கூடாதுன்னுதான். மேலும் ஒரு வாரம் பிந்தி வருவாங்க. அவ்வளவுதான? சரி, உனக்கென்ன வாங்கிட்டு வந்திருக்கேன் பாரு. போன வாரம் சென்னை போயிருந்தேன்ல...?"

பரிசுப் பொருட்களைக் கடை பரப்பினாள் ரஞ்சிதம்.

அது உண்மையான அன்பும், உற்சாகமும்தான். ஆக இவர்களுக்கெல்லாம் இது பொம்மைக் கல்யாணம் என்பது தெரியாது போலும்.

இந்த உயர்ந்த குடும்பத்திற்குள் ஏன் இந்த அநாதைப் பெண் என்ற கேள்விக்கூடவா யாரிடமும் எழவில்லை?

குவிந்திருந்த ஆடை, அலங்காரப் பொருட்களை வெறித்திருந்தாள் நிமலா.

★★★

## உலகின் மிகப் பெரிய உட்புற கடற்கரை!

உலகின் மிகப் பெரிய உள்ளக கடற்கரை ஒன்று ஜெர்மனிய கிராமம்



மறுநாள் காலை 'குட்டி'யோடு விளையாடிய நிமலாவை, ரஞ்சிதத்தின் கேள்வி உலுக்கியது.

"நாயோடு இருக்கையில்தான் சிரிக்கிற... மற்றபடி ஏனிந்தவாட்டம் நிமலா?"

"அப்படியா?"

"கண்ணு நிரம்ப குழப்பம்."

குனிந்த நிமலாவின் மோவாயைப் பற்றி நிமிர்த்தியவள்,

"இது ஆனந்த கண்ணீராவும் தோணலை... என்னன்னு சொல்லும்மா" எனவும், நிமலா கொட்டி விட்டாள்.

"எங்களுக்குள்ளே... பிரியம்னு ஏதும் விசேஷமாய் இல்லைங்கக்கா. அவர் என்னை என்ன காரணத்திற்காய் கல்யாணம் செய்ய நினைக்கிறார்ன்றது புரியலை. எனக்குக் கனவாய் தோன்றுவதை நிரஞ்சன் ஒரு நாடகம்கறார். இதில நான் எப்படி சந்தோஷப்பட?"

"காதலைப் பற்றி உனக்கேதும் தெரியுமா நிமலா?"

கல் இருக்கையொன்றில் கை கட்டியபடி கேட்டாள் மற்றவள். நிமலாவின் முகத்தில் வெட்கம் பரவவில்லை. சிறு நிராசையுடன் பதில் வந்தது.

"அதற்கெல்லாம் சந்தர்ப்பமில்லைக்கா."

"காதலில் ஏற முடியாது; இறங்க, நிற்க, பறக்க முடியாது! விழத்தான் முடியும்'ன்னுவாங்க! கேள்விப்பட்டதில்லை?"

"இங்கிலிஷில் 'பாலிங் இன் லவ்' என்பது சரியான பதம்தான் போல?"

"நிரஞ்சன் ஏற்கனவே கல்யாணமானவன் என்றாலும் அப்போது அவன் காதலில் விழுந்தது போலத் தெரியவில்லை. ஆனால் இரு பெண்களுக்கு அவன் பேரில் ரொம்ப தடுமாற்றம். அதைக் காதல் எனலாமா, வயசுக் கோளாறா என்று தெளிவாய் சொல்ல முடியலை. ஒன்று ஷியாமளா."

"இவருக்காய் இங்க இருந்திடத் தயாராய் இருக்காங்களே... அப்படீன்னா அது காதல்தானே?"

"ஆசைப்பட்ட பொருள் அல்லது நபரை அடைந்த பிறகும் தொடர்ந்தால் அது நேசம்தான். நிரஞ்சனால் ஈர்க்கப்பட்ட மற்றொருத்தி குயிலி. முதலிலிருந்து சொன்னால்தான் உனக்குப் புரியும் நிமலா. உன் அறைக்குப் போயிடலாமா?"

அறைக் கதவைத் தாளிட்டு விட்டு அமர்ந்தனர்.

குட்டி இருவருக்குமிடையே ஓடி ஆடியது.

"குயிலியும் ஷியாமாவும் நிரஞ்சனுக்கு தூரத்து உறவுதான். பண்ணையை ஒட்டித்தான் அவர்களின் நிலமும் இருந்தது. ஆக விவரம் தெரிந்த காலத்திலிருந்தே பழக்கமானவர்கள். நிரஞ்சன் ஷியாமாவிற்கு நாலு வயதிற்கு மூத்தவன். குயிலி ஷியாமளாவை விட ஒரு வயசு கம்மி. எல்லோரும் சேர்ந்து ஒரே காரில்தான் திண்டுக்கல் பள்ளிக்கு போய் வந்தார்கள். படிப்பிலும் விளையாட்டிலும் நிரஞ்சன் டாப்பர். கோ–எஜுகேஷனுள்ள அப்பள்ளிப் பெண்களுக்கு அவன்தான் ஹீரோ. அந்த சாம்பியன் தன் உறவுப்பையன் என்பதில் ஷியாமளாவிற்கு ஏகப் பெருமை. மற்ற பெண்களின் பொறாமையும் கேலிப் பேச்சும் அவளுக்குப் பிடித்திருந்தது.

'நிரு என் முறைப்பையன். இன்னும் அஞ்சு வருஷத்தில் எங்க கல்யாணம்' என்று கதை திரித்திருக்கிறாள்.

ஹீரோவின் ஜோடி என்பதால் சுலபமாய் ஹீரோயின் ஆகிவிட்ட ஷியாமளாவின் மேல் குயிலிக்குக் காட்டம். வெளிக்காட்ட முடியாத ஒரு ரகசியக் காய்ச்சல். ஷியாமா போல அலட்டலாய் பேசத் தெரியாத அவள், வயதும் குறைச்சல் என்பதால் உள்ளுக்குள்ளேயே கற்பனைகளை வளர்த்து மறுகியிருக்கிறாள்."

இப்போது நிமலாவிற்கு, என்ன நடந்திருக்கும் என்பதை ஓரளவு யூகிக்க முடிந்தது.

"ஆடை, அணிகலன்களை உருவாக்கும் படிப்பிற்காய் மும்பை போன ஷியாமா இல்லாதது குயிலிக்கு நிம்மதியும் வசதியுமாய் போனது! நிரஞ்சன் கல்லூரிப் படிப்பை

ஒன்றின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடற்கரையில் 6,000 மக்கள் ஒரே நேரத்தில் சூரியஒளியை கண்டு அனுபவிக்க முடியும். கிடவுன்ஸ்னிக் பகுதியில் அமைந்துள்ள வெப்பவலய தீவின் சுற்றுலா மையமாக அமைந்துள்ளது. இதில் 50,000 மரங்களைக் கொண்ட காடும் உள்ளது. பெரிய பலூன் ஒன்றில் பறக்கக்கூடிய வகையிலான பரப்பளவுள்ள நிலப்பரப்பில் இந்தக் கடற்கரைச் சுற்றுலா மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த தீவில் மிகப்பெரிய நீச்சல் தடாகமும் அமைக்கப்பட்டிருக்கிறது. பழைய விமான கூடாரம் ஒன்று பின்நாளில் கடற்கரைச் சுற்றுலா மையமாக அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முடித்துக் கொண்டு நல்லூர் வந்தபோது குயிலி கல்லூரியில் அப்போதுதான் சேர்ந்திருந்தாள். தனக்குப் படிப்பில் ஆர்வமில்லை, நிரஞ்சனை திருமணம் செய்து கொள்வதுதான் வாழ்வின் நோக்கம் என்றவள் தன் பெற்றோரிடம் சொல்லி, அவர்கள் மாப்பிள்ளை வீட்டிலும் பேச, திருமணம் நிச்சயமாகி விட்டது."

"ஷியாமளா...?"

"அவள் தன் கதையை பள்ளியில் பரப்பினதோடு சரி. வீட்டில் மூச்சு விடலை. தன் காதலுக்கு இப்படி ஒரு எதிரி இருப்பதையும் அவள் உணர்ந்திருக்கலை. நிரஞ்சனின் தாத்தா அப்போ ரொம்ப சுகவீனமாய் இருந்தார். அவருக்கு தன் பேரனைக் கல்யாண கோலத்தில் பார்த்துவிட ஆசை. ஆனா பாட்டிம்மா சரியாய் சொன்னாங்க. 'நிரஞ்சனுக்கு வயசும் அனுபவமும் போதாது. அவனுக்கேற்ற பொறுப்பான பண்ணை மனைவியாய் குயிலி இருப்பது சந்தேகம்'னு."

"ஆனா யாரும் அதைக் கேட்டுக்கலை. ஏன்னா கல்யாணம் நடந்திருக்குதே?"

"இங்கேயே வளர்ந்த பெண் குயிலி, ஏற்ற மனைவியாய் இருப்பா. தவிர பண்ணை நிர்வாகம் தெரிஞ்ச மாமனார் இருப்பதும் ஒரு பலம்னு ஒரு எதிர்பார்ப்பு. சட்டுனு கல்யாணமாயிடுச்சு."

"ஷியாமளா ஏதும் சொல்ல... செய்யலியா?"

"ஜெம்மாலஜி பற்றிய ஒரு டூருக்காய் வெளிநாடு போய் திரும்பின மகளுக்கு, தனராஜ் சார் சாவகாசமாய் விவரத்தைச் சொல்ல, ஷியாமளாவால் தடுக்க முடியலை. ஆனா ரொம்ப கெட்டிக்காரத்தனமாய் தன் ஆசையை வெளிக்காட்டிக்காமல், குயிலியின் சிநேகிதியாகவே காட்டிக்கிட்டா..."

"ஓஹோ?" இதுவரை இயல்பாய் ஓடிய கதையில் கள்ளத்தனம் நுழைந்ததை நிமலா உணர்ந்தாள்.

"ஆக ஷியாமளா ஒரு நாடகத்தை ஆரம்பிச்சுட்டாங்க?"

"தான் ஒரு முக்கிய போட்டியில் ஜெயிச்சுட்டதாய் நினைச்சு பூரிப்பாய் இருந்த குயிலியின் மனசைக் கொஞ்ச கொஞ்சமாய் மாற்றினாள் ஷியாமா. மும்பையிலிருந்து ஒழுங்காய் கடிதங்கள், புகைப்படங்கள், பரிசுகள் குயிலிக்கு வரலாயின."

"குயிலி அவங்களை 'ஷியாம்'னு கூப்பிடுவாங்களா?"

"ஆமா. சிட்டி வாழ்க்கையின் வசீகரங்களை அவள் விவரிக்க, தன் நவநாகரீக வாழ்வுமுறையை விரித்துக் காட்ட, குயிலிக்கு இப்போது நாட்டம் இங்கில்லை. தான் ஒரு கிராமத்தில் மாட்டிக் கொண்டதாய், கல்யாணப் பந்தத்தில் சிக்கி வாழ்வை இழந்து விட்டதாய் மறுக ஆரம்பித்தாள்."

"அந்தக் கடிதங்களை குயிலி கைக்குக் கிடைக்காமல் தடுத்திருக்கலாமே?"

"இந்தக் கதையும், ஷியாமாவின் தந்திரங்களும் அப்போது எங்க யாருக்கும் தெரியாதே... 'சட்'டென நடந்த நிரஞ்சனின் கல்யாணத்தின் போது வர முடியாத அவனது சில நண்பர்கள், அதாவது பள்ளிக் கால சிநேகிதர்கள் ஏறக்குறைய ஒரு வருஷம் கழித்து இவனைப் பார்க்க வந்தபோது பேசிய கேலி, சீண்டலில்தான் விஷயம் மெல்லக் கசிந்தது.

'ஷியாமாட்ட இருந்து நிரஞ்சை தட்டிப் பறிச்சிட்டியே'ன்னு அவங்க சீண்ட, குயிலி வெடிச்சிட்டா. 'ஷியாமா புத்திசாலி. போரடிக்கும் இந்த கிராம வாழ்விலிருந்து தப்பிச்சுட்டா. அவளை ஜெயிக்கிற துடிப்பில் நான் தோத்துட்டேன். ஒரு விவசாயியின் மனைவியாய்... என் லைப்பே போச்சு. ஷியாமா ஒரு இளவரசியாட்டம் வாழ்க்கையைக் கொண்டாடறா'ன்னு பொறுமித் தள்ளிட்டா."

விக்கித்து போனாள் நிமலா.

நிரஞ்சனுக்கு எத்தனை சுடும் அவமானம் அது...

"வருஷத்திற்கு ஒரு தரம் பண்ணைக்கு வரும் ஷியாமா, குயிலியோடு சேர்ந்து மதுரை, திண்டுக்கல்னு போனாலும் வாய் ஓயாமல் அலுப்பாளாம். 'மும்பையில் செவன்-ஸ்டார் ஹோட்டெல்ஸ் உண்டு. அவற்றில் நுழைந்தால் சொர்க்கம் வந்துட்டது போலிருக்கும். ஒரு பகுதி தரை முழுக்க கண்ணாடி பாவி, அதற்குக் கீழே தண்ணீர் விட்டிருப்பாங்க. விளக்குகளால் வெள்ளியைக் கரைச்சு விட்டது போல ஜொலிக்கும் நீரில் தங்க மீன்கள் நீந்தும். அதைப் பார்த்தபடி நாம் கண்ணாடி மேல் நடக்கும் அனுபவம் அலாதி... நீ ஒரு தரம் அதெல்லாம் வந்து பார்க்கணும் குயிலி... ஆனா ஒண்ணு, பிறகு நீ இந்த கிராமத்திற்கு திரும்ப மாட்டே'ன்னு சொன்னதாய் குயிலியே எங்கிட்ட சொன்னா. எவ்வளவு சதி குயிலிக்குப் புரியலை... நிரஞ்சனோட முறுக்கிட்டு நின்னா..."

## 16

'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' என்றாராம் குமரகுருபரர்.

திருப்தி வந்துவிட்டால் வாழ்க்கை நிம்மதியாய் போகும்.

மற்றொருத்தி ஆசைப்பட்டதைத் தான் அடைந்து விடும் தகாத ஆசை குயிலிக்கு! ஆனால் அப்படி அடைந்ததைக் கொண்டு திருப்திப்பட்டிருந்தால் விவகாரமில்லை.

ஆனால் முதல் கோணல் முற்றிலும் கோணிப் போனது!

'ஒரே ஆண் அல்லது பெண்ணோடு வாழ்நாள் முழுக்க வாழறது அநாகரீகம்றதுதான் பெரிய இடங்களின் நாகரீகம், குயிலி. மும்பை... மாற்றமிருந்தால்தான் வாழ்வு மணக்கும்... இல்லை, தேங்கி நாறிடும்.' என்றெல்லாம் போதித்த ஷியாமளாவின் கடிதங்களால் குழம்பித் தடுமாறினாள் குயிலி.

தோழமையை, தன்னலமில்லாத பகிர்தலை இருவருமே கொச்சைப்படுத்தி விட்டார்கள். அதைப் போட்டியாக்கி அடுத்தவள் அழிந்தாலும் பரவாயில்லை என்ற வெறியோடு ஆடித் தீர்த்திருக்கிறார்கள்.

இந்த பலப்பரீட்சையில் சிக்கி நிம்மதி இழந்த நிரஞ்சனின் மீது இவளுக்குப் பரிவு பொங்கியது.

எத்தனை திமிர் இருந்தால் ஷியாமளா இன்னும் குற்றஉணர்வின்றி நிரஞ்சனை விரட்டி வருவாள்?

நினைக்க நினைக்க மனம் பொங்கி பொசுங்கியது.

நேற்றே ரஞ்சிதாவிடம் சில சந்தேகங்களையும் கேட்டாள்.

"ஆனால் ஷியாமாவின் ஒருதலை வெறி எப்படி நிரஞ்சனுக்குத் தெரியாமல் போனது?"

"அவன் பள்ளி நாள் கிண்டலை பெரிசாய் எடுத்துக்கலை. நாலு வயசுக்கு இளைய பெண்களின் விவரம், அதிகம் சீனியர் ஹீரோவான அவன் காதிற்கும் வரலை. வந்ததைச் சிறுபிள்ளைத்தனம் என்று ஒதுக்கியிருப்பான்."

"இதெல்லாம் தெரிந்த ஷியாமளாவோட அப்பாவேனும் மகளுக்கு புத்தி சொல்லக் கூடாதா?"

"ஒரே பொண்ணு. தான் பிடிச்ச பிடியில் நிற்பவன்றது அவருக்குத் தெரியும். தவிர நிரஞ்சன் நம்பகமான அருமையான பையன். தன் சொத்தையும் சேர்த்துக் கவனிப்பானென்றதும் கூட..."

"குயிலிக்குக் கூடப் பிறந்தவங்க..."

"ஒரு அண்ணன். அவன் நல்லபடி படிச்சு, சென்னையில் ஒரு வேலை தேடிகிட்டதோடு, கூட வேலைப் பார்த்த பொண்ணையும் கல்யாணம் செய்துகிட்டான். பண்ணைப் பராமரிப்பும் விவசாயமும் சுலபமில்லை. மழை பொய்த்தால் முழு நஷ்டம், வேலையாட்கள் கிடைப்பதில்லைன்னு திண்டாடிட்டிருந்த தேசிகன் ஐயாவும்... அதாவது..."

"தெரியும். குயிலியுடைய அப்பாதானே!"

"ம்ம். நிலத்தை விற்றுட்டு தன் மகனோடு சென்னையில் செட்டிலாயிட நினைச்சாங்க. மகளுக்கு நல்லபடி கல்யாணமான திருப்தியில் ஓரளவு நல்ல விலைக்குப் பண்ணையை விற்றுவிட்டு நவீன பிளாட் ரெண்டை வாங்கிட்டு சென்னை போயிட்டாங்க. ஐந்து வருஷங்களுக்கு முன்னே நீச்சல் குளமும், டென்னிஸ் கோர்ட், ஜிம்முனு உருவான அந்த குடியிருப்பைப் பார்த்து அங்கே ரெண்டு வாரம் இருந்துட்டு வந்த குயிலியின் அதிருப்தி அதிகமாச்சு.

'சுதந்திரம்னால் என்னன்னு இப்பதான் எனக்குப் புரியுது. அதை அனுபவிக்காமல் கிராமத்து சகதியில் சிக்கிட்டேன்'னு புலம்பியிருக்கா."

"நிரஞ்சனின் நிலைமை பாவம்தான்... ஆனால் எல்லாரும் விளைநிலத்தை விற்றுவிட்டால் உலகம் எதைச் சாப்பிடும்?"

"தேசிகன் ஐயாவிடமிருந்து நிலத்தை வாங்கினவங்களுக்கும் சமாளிக்க முடியலை. ஒரு தொழிற்சாலை கட்ட இந்த நிலத்தை மறுவிற்பனை செய்ய இருந்தபோது, நீ சொன்ன அதே கருத்தோடு நிரஞ்சன் அதை தானே அதிக விலை தந்து வாங்கிட்டான்."

"நல்ல விஷயம்தான்."

"ஆனா அதிக விலை தந்து வாங்கியதில் பணப் பிரச்சினை. கூடுதல் நிலத்தை சரிவர பண்படுத்தி, பயிரிட அவன் அதிகமாய் உழைக்க வேண்டியிருக்க, 'எனக்கு போரடிக்குது. அடைஞ்சு கிடந்து மூச்சே முட்டுது'ன்னு குயிலியின் புலம்பல் அதிகமாச்சு. இந்த அதிருப்தியான சூழலில் ஷியாமளா வந்து புகையை மேலும் விசிறி விட்டாள். மும்பை சினிமா ஸ்டார்சுடன் தான் எடுத்துக் கொண்ட படங்களை எல்லாம் குயிலியிடம் காட்ட, பொறாமை வலையில் இந்தப் பெண் முழுசாய் மாட்டிக்கிடுச்சு."

"பெரிய சிக்கல்தான்."

"வீட்டு வேலைகளை எடுத்துச் செய்யேன்மா'னு பாட்டிம்மா சொன்னால் குயிலி மேலும் கத்துவாளாம். 'சென்னையில போன் போட்டால், பத்தாம் நிமிஷம் சூடான பீட்ஸா நம் வாசலுக்கு வந்திடும். இங்க நான் அடுப்படியில் வேக வேண்டியிருக்கே'னு... முக்கியமான விஷயத்தை விட்டுட்டேனே, குயிலியின் நிலம் மறுவிற்பனைக்கு வந்தபோது அதன் விலை இருமடங்காயிடுச்சு. ஆக அதை வாங்க நிரஞ்சன் பாதிப் பணத்தை தனராஜ் சாரிடமிருந்து வாங்கினான்."

"ஓ... ஷியாமளாவின் அப்பாவிடமிருந்து. அதுதான் அவர் அவ்வளவு தோரணையும் உரிமையுமாய் இங்க வந்தாரா?"

பாதி தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள் நிமலா.

"ஆனால் விளையும் தானியத்தையோ, பழங்களையோ வெகுகாலம் விற்காமல் வைக்க முடியாது. விலை எப்படியிருந்தாலும் வித்துடணும்."

"விவசாயத்தின் பெரிய குறை... அதாவது விவசாயிகளின் குறை அது... இல்லையா?"

இருவரும் பேசப் பேச, பனி விலகுவது போல நிமலாவிற்கு மெள்ளத் தெளிவானது.

கடனாய் பணம் தந்த பெரிய மனிதர், 'நீ என் மகளைக் கல்யாணம் பண்ணினால்தான் ஆச்சு' என்று சின்னத்தனமாய் நெருக்குகிறார்.

"குயிலி இறந்தபோது அவங்க கர்ப்பமாயிருந்தாங்க போல... மஞ்சள் காமாலைன்னு..."

"வாயைக் கட்ட மறுத்துட்டா. மருந்து, பத்தியம் ஏதுமில்லாமல்... அது அவளை பலியாக்கிடுச்சு."

★★★

ரஞ்சிதாவுடன் பேசியதை எல்லாம் மனதுள் அசை போட்டவளுக்கு நிரஞ்சனின் மீது பரிவு பெருகியது.

ஒரு பிள்ளையைப் போல கட்டி தலைகோதி அவனைத் தேற்றும் பரிதவிப்பில் அலைக்கழிந்தாள்.

இரு பெண்களின் ஏட்டி போட்டியில் நடந்த கல்யாணம் அவனது. அதில் அவன் காதலின் ஈர்ப்பை, நிறைவை அனுபவித்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் மறுபடியும் ஏன் நிரஞ்சன் அதே தவறை செய்ய இருக்கிறான்?

ஷியாமளாவிடமிருந்து தப்ப, தன்னைக் கேடகமாய் நிறுத்துவது சரி. ஆனால் மறுபடி இந்த நாடகக் கல்யாணம்... அவனை நிறைவாக்குமா?

தனக்கு... தன் நிலை என்ன?

யோசித்தவளுக்குப் புதுப்புது விடைகள் கிடைத்தன!

தன் வேலைகளைச் செய்தபடி கிடைத்த விடைகளுடன் உருண்டாள்!

நிரஞ்சனின் மீது அனுதாபம், பரிதாபம் எல்லாம் சரி, அவனைக் கட்டி அணைத்துக் கொள்ளும் தாபம் தனக்கு ஏன்?

அவன் வாழ்வைக் குதறி எறிந்த பெண்களின் மீது தனக்கு இத்தனை கோபதாபம் எதனால்?

தனக்கே இத்தனை எரிய, நிரஞ்சன் இன்னும் தன் அறையில் ஷியாமாவின் ஓவியத்தை, அவள் தன் மனைவிக்கு எழுதிய வில்லத்தனமான கடிதங்களை ஏன் வைத்திருக்க வேண்டும்?

தீவிரமான யோசனையில் நிமலா வழக்கத்தைவிட அதிகம் நடந்திருந்தாள்.

கால் ஓயவும்தான் அதை உணர்ந்தவள் அங்கிருந்த மரநிழலில் உட்கார்ந்தாள்.

"தந்த பவனத்திற்குக் குறுக்கு வழியில் வந்தது போல இங்கேயும் நுழைஞ்சிட்டியா?" எகத்தாளமாய் வரவேற்ற குரல் இவளைத் தூக்கியடித்தது!

சற்று தூரத்தில் இருந்ததால் உரக்கப் பேசிய ஷியாமளாவின் கண்கள் இவளை உறுத்தன. ஓவியத்திலிருந்த உல்லாசச் சிரிப்பின் நிழலும் கூட இப்போது அந்த முகத்தில் இல்லை.

"ஸாரி... நடந்தே உங்க இடத்திற்கு வரக்கூடும்னு எனக்குத் தெரியாது."

"அதான் சொன்னேனே... இது குறுக்கு வழின்னு" ஷியாமளாவின் குவிந்த உதடுகள் சுழித்தன. அது இவளில் ஏதோ ஒரு பொறியை ஊதிவிட்டது போலானது.

கோப அனலின் வெப்பம் இவளுள் பரவியது.

நிரஞ்சனின் வாழ்வை ரகசியமாய் சிதறடித்து விட்டு 'குறுக்குப் புத்தி'யைப் பற்றி இவள் பேசுவதா என்ற வெறுப்பு...

ஆனால் வார்த்தைகளைக் கொட்டும் முன் சற்று நிதானிக்க, அவளுக்கு தங்கள் இருவரின் நிலைமையும் நிதர்சனமானது.

எத்தனையோ குயுக்தி, தகிடுதத்தங்கள் செய்தும், ஷியாமளாவினால் நிரஞ்சனைப் பிடிக்க முடியவில்லை... அதுதான் இந்தக் குரோதம்!

நிமலா வெறுமே அடைக்கலம் தேடி வந்த இடத்தில், இவளிடம் அடைக்கலமாய் நிரஞ்சன் வந்து விட்டான்!

பெரியவர்களின் ஆனந்தமான ஆசியோடு சீக்கிரத்தில் இவர்கள் தம்பதிகளாகப் போகிறார்கள்! பட்டு, பண்ணையின் பெண்களின் மத்தியில் தான் ஏற்கனவே ஒரு இளவரசி போலத்தான்... தவிர, இனி தான் தந்த பவனத்தின் ராணி!

புதிய பார்வையில் தன்னையே கண்டவளின் முகத்தில் வேற்று இடத்தில் புகுந்துவிட்ட தயக்கம் மறைந்தது. கொந்தளித்து நின்ற ஷியாமளாவைச் சற்று அனுதாபத்தோடு கூட பார்க்க முடிந்தது!

ஆனால் அதைத் தாங்க முடியாத ஷியாமா குமுறினாள்.

"அது... நான் வாழ வேண்டிய வீடு... நீ வரலைன்னா இப்ப அங்கே இருந்திருப்பேன். அந்த நிச்சயத்தில் போன தரமே நிரஞ்சன் அறையில் என்னுடைய சில பொருட்களை வைத்திருந்தேன். நான் அவர் வாழ்க்கையில் நுழையப் போறேன் என்பதின் அச்சாரமாய்.."

நிதானமாய் எழுந்து நின்ற நிமலா அதே நிதானத்தோடு கேட்டாள். "கடைசி அலமாரியின் கீழ்தட்டிலிருந்த உங்க ஓவியமும், குயிலிக்கு நீங்க எழுதின கடிதங்களும்தானே? அதை எல்லாம் சுத்தப்படுத்தியாச்சு... புரியும்னு நினைக்கறேன். வரட்டுமா?"

## 17

அஞ்சுகத்தம்மாளை வரவேற்க 'தந்த பவனம்' தயாராகிக் கொண்டிருந்தது. ஒரு சம்புடம் நிரம்ப கைசுற்று முறுக்கு!

"அம்மா இதைக் கருப்பட்டி காபியில் ஊற வச்சுச் சாப்பிடுவாங்க."

நிமலாவும் தன் பங்கிற்கு பெரியவரின் அறைக்கு புது திரைச்சிலைகளை தைத்துப் போட்டாள். அறை சுத்தத்தில் பளபளத்தது.

பெண்கள் தையல் வேலையில் மூழ்கிக் கிடந்தார்கள். தாங்கள் தைத்த துணிகள் அத்தனையும் நகரில் விற்று விட்டதாய் வந்த தகவலில், அவர்களது வேகம் கூடியிருந்தது. களிமண் நகைகளைச் செய்யக் கற்ற மற்றொரு 'செட்' பெண்கள் அதில் ஆர்வமாய் இறங்கியிருக்க, தேனீக்கள் போல ரீங்கரித்த பெண்களால் நல்லூர் மேலும் பொலிவாயிருந்தது.

பெரியவர் வருவதற்கு முதல் நாளே வந்து சேர்ந்த அவரது இளைய பேரன் ரஜ்வின், நிமலாவைக் கண்டதும் திகைத்து விட்டான்.

"மடப் பசங்க. இன்னுமா கேமரா வசதியுள்ள போனைக் கண்டுபிடிக்கலை! அன்னைக்கு... நீ கூப்பிட்ட அன்றே உன் முகத்தைப் பார்த்திருந்தால் மறந்திருக்க முடியுமா? 'டாண்'னு ஸ்டேஷனுக்கு உன்னைக் கூப்பிட வந்திருப்பேன்ல?" பெரிதாய் குறைபட்டான்!

நிமலா கூச்சத்துடன் ஒதுங்கி நிற்க, பட்டு அசரவில்லை.

"ரஜூத்தான் பேச்சு அதி தடபுடலாய் இருக்கும். ஆனா வெற்று புஸ்வாணந்தான்" என்றாள்.

"புஸ்வாணந்தானே எம்பி பிரமாதமாய் எரியும்?"

"எல்லாம் கால் நிமிஷந்தானே? பிறகு கரிஞ்சு நிற்கும்!"

"இப்படியெல்லாம் என்னை மட்டந்தட்டாதே பட்டு. உன்னை வேற யாரும் கல்யாணம் பண்ணிக்க மாட்டான். என்னை குஷிப்படுத்தறது உனக்கு நல்லது!"

"அதெல்லாம் அவசியமில்லை. இப்ப நான் ரொம்ப ஸ்மார்ட். எனக்குப் பொருத்தமான ஆளைத் தேடி கண்டு பிடிச்சுடற அளவு கெட்டி!"

புருவங்களை உயர்த்தி, கட்டை விரலை ஆட்டியபடி நகர்ந்து விட்டாள் பட்டு.

சற்று பரிதாபமாய் நின்ற ரஜ்வினைக் கண்டு நிமலாவிற்கும் சிரிப்புதான்.

"நீங்க எங்க வேலை பார்க்கறீங்க?"

"நிரஞ்சன் சொல்லலையா? எனக்கு ஒரே இடத்தில் அடைஞ்சு கிடக்க முடியாது. சவாலான வேலையாய் இருக்கணும்..."

"அதற்கு சரியான இடம் இந்த பண்ணைதான்" அவனுக்கு பரிமாறியபடி சொன்னாள் நிமலா.

"இங்கயா? இங்கே என்ன சவாலு சுவாரஸ்யமும்?"

"ஒரே மாதிரியோ, நா எதிர்பார்க்கிறபடியோ இங்கே எதுவு நடப்பதில்லை. இயற்கையை எதிர்த் இல்லை அனுசரிச்சு சாமர்த்தியமா போகணும். மண்ணைப் புரிஞ்சு நடந்துகிட் பொன்னாகும். ராஜாவாட்டம் வாழலா ஒவ்வொரு முறையும் வெவ்வேறு பயிர்ச வித்தியாச அனுபவங்கள், ஜெயிக் போது ஒரு பூரிப்பு... இல்லைன்னா உலகத்துக்கு உணவை உற்பத்தி செய் நிறைவு..."

நிமலா வெறுமே அடைக்கலம் தேடி வந்த இடத்தில், இவனிடம் அடைக்கலம் தேடி நிரஞ்சன் வந்து விட்டான்!

பெரியவர்களின் ஆனந்தமான ஆசியோடு சீக்கிரத்தில் இவர்கள் தம்பதிகளாகப் போகிறார்கள்! பட்டு, பண்ணையின் பெண்களின் மத்தியில் தான் ஒரு இளவரசி போலத்தான்... தவிர, இனி தான் தந்த பவனத்தின் ராணி!

புதிய பார்வையில் தன்னையே கண்டவளின் முகத்தில் வேற்று இடத்தில் புகுந்துவிட்ட தயக்கம் மறைந்தது. கொந்தளித்து நின்ற ஷியாமளாவைச் சற்று அனுதாபத்தோடு கூட பார்க்க முடிந்தது!

ஆனால் அதைத் தாங்க முடியாத ஷியாமா குமுறினாள்.

"அது... நான் வாழ வேண்டிய வீடு... நீ வரலைன்னா இப்ப அங்கே இருந்திருப்பேன். அந்த நிச்சயத்தில் போன தரமே நிரஞ்சன் அறையில் என்னுடைய சில பொருட்களை வைத்திருந்தேன். நான் அவர் வாழ்க்கையில் நுழையப் போறேன் என்பதின் அச்சாரமாய்.."

நிதானமாய் எழுந்து நின்ற நிமலா அதே நிதானத்தோடு கேட்டாள். "கடைசி அலமாரியின் இழ்தட்டிலிருந்த உங்க ஓவியமும், குயிலிக்கு நீங்க எழுதின கடிதங்களும்தானே? அதை எல்லாம் சுத்தப்படுத்தியாச்சு... புரியும்னு நினைக்கறேன். வரட்டுமா?"

# 17

அஞ்சுகத்தம்மாளை வரவேற்க 'தந்த பவனம்' தயாராகிக் கொண்டிருந்தது. ஒரு சம்புடம் நிரம்ப கைசுற்று முறுக்கு!

"அம்மா இதைக் கருப்பட்டி காபியில் ஊற வச்சுச் சாப்பிடுவாங்க."

நிமலாவும் தன் பங்கிற்கு பெரியவரின் அறைக்கு புது திரைச்சீலைகளை தைத்துப் போட்டாள். அறை சுத்தத்தில் பளபளத்தது.

பெண்கள் தையல் வேலையில் மூழ்கிக் கிடந்தார்கள். தாங்கள் தைத்த துணிகள் அத்தனையும் நகரில் விற்று விட்டதாய் வந்த தகவலில், அவர்களது வேகம் கூடியிருந்தது. களிமண் நகைகளைச் செய்யக் கற்ற மற்றொரு 'செட்' பெண்கள் அதில் ஆர்வமாய் இறங்கியிருக்க, தேனீக்கள் போல ரீங்கரித்த பெண்களால் நல்லூர் மேலும் பொலிவாயிருந்தது.

பெரியவர் வருவதற்கு முதல் நாளே வந்து சேர்ந்த அவரது இளைய பேரன் ரஜ்வின், நிமலாவைக் கண்டதும் திகைத்து விட்டான்.

"மடப் பசங்க. இன்னுமா கேமரா வசதியுள்ள போனைக் கண்டுபிடிக்கலை? அன்னைக்கு... நீ கூப்பிட்ட அன்றே உன் முகத்தைப் பார்த்திருந்தால் மறந்திருக்க முடியுமா? 'டான்'னு ஸ்டேஷனுக்கு உன்னைக் கூப்பிட வந்திருப்பேன்ல?" பெரிதாய் குறைபட்டான்!

நிமலா கூச்சத்துடன் ஒதுங்கி நிற்க, பட்டு அசரவில்லை.

"ரஜூத்தான் பேச்சு அதி தடபுடலாய் இருக்கும். ஆனா வெற்று புஸ்வாணந்தான்" என்றாள்.

"புஸ்வாணந்தானே எம்பி பிரமாதமாய் எரியும்?"

"எல்லாம் கால் நிமிஷந்தான? பிறகு கரிஞ்சு நிற்கும்!"

"இப்படியெல்லாம் என்னை மட்டந்தட்டாதே பட்டு. உன்னை வேற யாரும் கல்யாணம் பண்ணிக்க மாட்டான். என்னை குஷிப்படுத்தறது உனக்கு நல்லது!"

"அதெல்லாம் அவசியமில்லை. இப்ப நான் ரொம்ப ஸ்மார்ட். எனக்குப் பொருத்தமான ஆளைத் தேடி கண்டு பிடிச்சுடற அளவு கெட்டி!"

புருவங்களை உயர்த்தி, சுட்டை விரலை ஆட்டியபடி நகர்ந்து விட்டாள் பட்டு.

சற்று பரிதாபமாய் நின்ற ரஜ்வினைக் கண்டு நிமலாவிற்கும் சிரிப்புதான்.

"நீங்க எங்க வேலை பார்க்கறீங்க?"

"நிரஞ்சன் சொல்லலையா? எனக்கு ஒரே இடத்தில் அடைஞ்சு கிடக்க முடியாது. சவாலான வேலையாய் இருக்கணும்..."

"அதற்கு சரியான இடம் இந்த பண்ணைதான்" அவனுக்கு பரிமாறியபடி சொன்னாள் நிமலா.

"இங்கயா? இங்கே என்ன சவாலும் சுவாரஸ்யமும்?"

"ஒரே மாதிரியோ, நாம எதிர்பார்க்கிறபடியோ இங்கே எதுவும் நடப்பதில்லை. இயற்கையை எதிர்த்து, இல்லை அனுசரிச்சு சாமர்த்தியமாய் போகணும். மண்ணைப் புரிஞ்சு நடந்துகிட்டா பொன்னாகும். ராஜாவாட்டம் வாழலாம். ஒவ்வொரு முறையும் வெவ்வேறு பயிர்கள், வித்தியாச அனுபவங்கள், ஜெயிக்கும் போது ஒரு பூரிப்பு... இல்லைன்னாலும் உலகத்துக்கு உணவை உற்பத்தி செய்யும் நிறைவு..."

"போதும் போதும்... கண்டிப்பாய் இங்க வேலை செய்றது பற்றி யோசிக்கணும் போல... அண்ணன் கொடுத்து வச்சவர்தான்."

"தாங்க்ஸ்"

"இவ்வளவு அழகான பெண்ணிடம் தெளிவான மூளையுமிருக்கறது அரிது... அபூர்வம். பாட்டி உங்களைப் போல எனக்கும் இப்படி ஒரு குட்டிகையான ப்யூட்டியை பார்த்து தந்தால், எனக்கு இங்கே மண் கிளறிட்டுக் கிடக்க ஆட்சேபணையே இல்லை."

"ரொம்ப தாங்க்ஸ் தம்பி..."

"என்ன... எதுக்கு?"

"வந்ததும் ஆர்ப்பாட்டமாய் என்னை ஒருமையில் பேசினவங்க, இப்ப மரியாதை தர்ரதுக்கு?"

இப்போது ரஜ்வினும் பட்டுவைப் போலவே புருவம் உயர்த்தி கட்டைவிரலைக் காட்டினான்!

வந்ததும் அஞ்சுகத்தம்மாவின் கண்கள் தேடி எடுத்து, ஆவலாய் சுட்டிக் கொண்டது நிமலாவைத்தான்.

"யம்மாடி யம்மா, இந்த வீடு உன்னைத் தந்தப் பதுமையாக்கிடுச்சே. அன்னைக்கு ரெயிலில் நாம சந்திச்சது பெரும் கொடுப்பினைதான். கடவுளுக்கு நன்றி" என்ற பெரியவர் சற்று மெலிந்திருந்தார்.

அதுபற்றி குறிப்பிட,

"முடியுதோ இல்லையோ, வெளிநாடுகளில் எல்லா வேலையும் நாமேதான் பார்த்துக்கணும். மருமகளால் அதிகம் முடியலையே... தவிர காய்ச்சலும் வந்து என்னை கொஞ்சம் அசத்திடுச்சு. நீ சந்தோஷமா இருக்கியாடா?" இவளது கைகளைப் பற்றி, வாஞ்சையாய் வந்த விசாரிப்பில், நிமலாவிற்கு நெஞ்சடைத்தது.

அஞ்சுகத்தம்மாள் கடைபரப்பிய பரிசு பொருட்களைப் பார்த்தவளுக்குள் மேலும் பாரம்.

இதெல்லாம் தான் ஏற்கப்போகும் நாடகப் பாத்திரத்திற்கான அணி மணிகளா? ஆனால் பெரியவரின் பாசத்தில், பரிசுகளில் எந்த வேஷமும் இருப்பதாய் தெரியவில்லையே...?

"புது ரவிக்கைகளை எல்லாம் உடனே தைத்துக்கோடா. என் கண் குளிர, தினம் உன்னை புதுசு புதுசாய் உடுத்திப் பார்க்கணும். அதை விட எம்பேரன் மனசு குளிரணும்.."

கவிழ்ந்த நிமலாவின் மோவாய் பற்றி நிமிர்த்தியவரின் வெளிறிய கண்கள், தடுமாறிய திராட்சைக் கண்களை ஊடுருவின.

"உனக்கும் சந்தோஷம்தானே நிமலா?"

தொண்டையடைக்க, இவள் தலையை மட்டும் ஆட்டினாள்.

அதற்குள் 'குட்டி' வெளியே போவதற்கான முனங்கலோடு கதவைப் பிராண்ட, இவர்களது பேச்சுத் தொடரவில்லை. இயற்கை அழைப்புகள் எல்லாம் வெளியேதான் என்பதை 'குட்டி' சீக்கிரமே கற்றுக் கொண்டது. பெரிய, ஜாதி நாய்கள் குட்டியோடு ஓடியாடவில்லை என்றாலும் பெருந்தன்மையாகவே நடந்து கொண்டன!

அவை 'குட்டி'யின் சேஷ்டைகளை ஓரக்கண்ணால் கண்டு ரசிப்பது தனி அழகு!

நிமலா, நிரஞ்சனின் மனைவியாகப் போகும் செய்தி பரவி, பண்ணையை மேலும் பசுமையாக்கியது. அங்குள்ள பெண்கள் அத்தனைபேரும் இவளை வருடி முத்தமிட்டார்கள், வழித்து திருஷ்டி கழித்தார்கள். வாயார வாழ்த்தினார்கள். வேலையில் இவள் அமிழ முடியாதளவு உபசரிப்பு. மணிக்கொரு தரம் பண்டம், பழரசம் இவளைத் தேடி வந்தது.

ஆனால் இவளுக்கோ தன்னை எல்லோரும் பலியாடு போலக் கொண்டாடுவதான மிரட்சி!

நெருக்கமும் நம்பகமுமாய் பட்ட ஒரே ஜீவன் 'குட்டி'தான். ஆக அதைத் தன்னுடனேயே வைத்துக் கொள்ள, அதற்கும் அதில் வெகுதிருப்தி. இயற்கை நிர்ப்பந்தங்களுக்காய் வெளியே போகும் 'குட்டி' போன வேகத்திலேயே இவளிடம் திரும்பியும் விடும்.

தன் அறையைத் துடைத்துக் கொண்டிருந்தவளை கீழே கேட்ட உரத்தப் பேச்சு நிறுத்தி எட்டிப் பார்க்க வைத்தது.

"இதை இனி வீட்டுக்குள்ள விட வேணாம். வெளியே கட்டி வைங்க" நிரஞ்சன் சீறுவது கேட்டது... ஆனால் அந்தளவிற்கு குட்டி என்ன செய்ததாம்?

விறுவிறுவென இறங்கி வந்தாள்.

"சதா இது வீட்டுக்குள்ள திரிஞ்சு... பாட்டிம்மா காலுக்குள்ள புகுந்து.. அவங்க ஏறக்குறைய விழ... பக்கத்தில் நானிருந்ததால் சரியாப் போச்சு. இனி இந்தக் குட்டி வீட்டுக்குள்ள வரக் கூடாது..."

நிமலா விக்கித்து நிற்க, நிரஞ்சன் தன் அலுவலக அறைக்குள் நுழைந்து கொண்டான்.

"ஏம்மா, ஊறுகாய்க்கு இவ்வளவு வெந்தயம் சரியாயிருக்குமா?" என்று கேட்ட வேலைக்காரி பின்னே அஞ்சுகத்தம்மா போய்விட, இவள் நிரஞ்சனிடம் போனாள்.

"குட்டியை ஏன்... திட்டினீங்க?"

"அசம்பாவிதம் நேரக் கூடாதுன்னுதான். துரத்தச் சொல்லலியே... வெளியே இருக்கட்டும்னு..."

"அனாதை என்னை ஏத்துக்கிட்ட உங்களுக்கு 'குட்டி'மேல ஏன் வெறுப்பு?"

"உளறாதே நிமலா. அதுவும் நீயும் ஒன்னா? நீ சிரிக்கிறது அதைக் கொஞ்சும் போது மட்டும்தான். வரப் போற எங்கப்பா, அம்மா அதைப் பார்த்தால்... எனக்காக ரொம்ப பரிதாபப்படுவாங்க."

கேலி போல பேச முயன்றாலும் நிரஞ்சன் குரலில் அழுத்தமிருந்தது.

இவளிடம் போனில் மிகப் பாசமாகப் பேசியிருந்தனர் அவனது பெற்றோர்.

நிரஞ்சனின் அப்பா கலகலப்பாய் கிண்டலடித்தார்.

"என்னம்மா மொட்டையாய் பேசற? 'மாமா'ன்னு ஒரு வார்த்தை சேர்த்துக்கக் கூடாதா? அது கர்நாடகமாய் பட்டால் என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடு. பெயர் நித்தியானந்தம்... தெரியுமில்லியா?"

மற்றவர்களின் அன்பில் நனைந்தவள், உரியவனை நிமிர்ந்தும் பார்க்க அஞ்சித்தான் இப்படி நாய்க்குட்டி பின்னேத் திரிவது.

## 18

கல்யாண தேதி குறித்த பின்பு, கட்டிக்கப் போகும் பெண்ணோடு ஒரே வீட்டில் இருப்பவன் அவளிடம் எப்படிக் கொஞ்சி இழைய வேண்டும்...?

தன் முன் கடுகடுப்பாய் நின்றவனை அச்சத்துடன் ஏறிட்டாள் நிமலா.

"சதா பின்னால் அந்த நாய்க்குட்டியோட போய் உட்கார்ந்துக்கற. என்ன இது...? பழைய சிரிப்பு, பேச்சு ஏதுமில்லை உங்கிட்ட. எதனால இப்படி?"

"குட்டியின் அன்பில் எந்த எதிர்பார்ப்புமில்லை... அதான் அது கூட."

"நான்சென்ஸ். நாங்க வேறென்ன எதிர்பார்க்கிறோம்... உன் சந்தோஷத்தைத் தவிர? எத்தனை பரிசுகள், பாராட்டுப் பேச்சு, பிரியம்.. உன்னை எதுதான் திருப்திப்படுத்தும்? பாட்டி என்னைக் கிளறுறாங்க. 'கல்யாணப் பொண்ணு முகத்துல களை இல்லையேடா?'ன்னு."

பிறரது பாராட்டு, பரிசுகள் இவளை எப்படி, ஏன் திருப்திப்படுத்த வேண்டும்? இவனது அன்பான பார்வை, ஒரு ஸ்பரிசம்... ம்ஹூம்... கிடைக்கவில்லையே?

இவள் அவற்றைத் தேடி இங்கு தஞ்சமடையவில்லை. முடவன், கொம்புத் தேன் எனும் நிலைதான் தன்னது.

தேடாமல் வந்த உறவை சமாளிக்கத் தெரியாமல் தத்தளிப்பவளை ஏன் இப்படி மேலும் மூழ்கடிக்கிறான் இவன்?

நிரஞ்சன் கண் நிறைந்தவன்தான்... ஆனால் மனம் நிரம்பவில்லையே?

'இந்த இக்கட்டிலிருந்து கை கொடு' என்று கேட்டவன் இனிமேலேனும், 'என் வாழ்வு நீ வந்ததும் இனிமையாகி விட்டது' என்று சொல்லியிருந்தால் இவளில் கல்யாணக் களை வழிந்திருக்கும்... இந்த திரிசங்கு சொர்க்கத்தில் சந்தோஷம் ஏது?

பட்டு எட்டிப் பார்த்தாள் தயக்கமாய்.

"நிருத்தான் ஷியாமளாக்கா வந்திருக்காங்க. உங்களைப் பார்க்கத்தான் போல..."

நிரஞ்சன் வாசல்புறம் போக,

"குட்டிக்கு ஒரு பந்து தந்திருக்கேன்... அதுக்கு ஒரே குஷி... மின்னலாட்டம் பந்தைத் துரத்துதுக்கா."

"பாவம்... அதை உள்ளே வரக் கூடாதுன்னு..."

"அதுவா? நிருத்தானுக்குப் பொறாமை! நீங்களும் குட்டியையேக் கொஞ்சிட்டிருந்தா எப்படி? அதோ, என்னைக் கூப்பிடுது பாருங்க... பந்தை வீசணுமாம்" என்றபடி பட்டுவும் போக, நிமலா தன் அறைக்குள் புகுந்து கொண்டாள். முன்பு செய்தது போல, அவர்களிருவரும் பேசும் அறையில் பிரத்தியட்சமாகி, நிரஞ்சனை ஷியாமளாவின் பிடியிலிருந்து காப்பாற்றும் எண்ணம் கூட இப்போது அவளில் இல்லை.

உள்ளத்தோடு உடம்பும் அயர்ந்து போயிருக்க, படுத்தவளின் கண்கள் காரணமின்றிப் பெருகின.

ஏன்... எதற்கு என்று புள்ளி குத்த முடியாத துக்கம்...

கிறே கார் கிளம்பி வேகமெடுப்பது கேட்டது.

அதைத் தொடர்ந்து 'குட்டி'யின் வீறிடல்!

உலுக்கப்பட்டது போல எழும்பி ஓடினாள்.

இவளுக்கு முன்பாகவே சத்தம் கேட்டு வாசலுக்குப் போயிருந்த நிரஞ்சன், ஓடி வந்தவளைத் தடுத்து கட்டிக் கொண்டான்.

"ஐயோ... என்னாச்சு?"

பட்டுவும் வேலைக்காரர்களும் ஷியாமாவின் காரைத் தட்ட, அது மறுபடி சீறலாய் கிளம்பி... மறைந்தது.

"இந்த வேகத்துல எதுக்குப் பறக்கணும்? 'குட்டி' போச்சே"

கேட்டவளின் உடல் விறைத்து, பின் ஒரேயடியாய் தளர்ந்தது.

"இந்த மாத்திரையைப் போட்டுட்டு, பாலை குடிச்சுடுடா" என்றபடி தன்னோடு இருந்த பாட்டியிடமிருந்து இவளுக்கான ஆறுதல் கிடைத்தது. ஆனால் படுக்கையின் மறுபக்கம் நிரஞ்சனும் இருந்து இவளது தலையைக் கோதி விட்டபடி இருந்தது அதிகப்படியாய் பட்டது. அவனிடமிருந்து நகர்ந்து கொண்டாள்.

தரப்பட்ட மருந்து தன்னை அமைதிப்படுத்தியிருந்தது புரிந்தது. யாருமின்றி வாழ்வில் இத்தனை தூரம் வந்த தனக்கு இந்த இழப்பும் பழகிப் போகும் என்று தன்னையே தேற்றிக் கொண்டாள்.

ஆனால் நடந்தது விபத்தா... அல்லது ஷியாமளா வேண்டுமென்றே 'குட்டி' மீது காரேற்றி கொன்றாளா?

கார் தனக்கான பாதையில்தான் இருந்தது. வேகம் அதிகமென்றாலும்... ஆக குட்டிதான் பந்து மீதான ஈர்ப்பில் போய் சிக்கி விட்டது...

இவளுக்கு அதுவும் கூட கொடுத்து வைக்கவில்லை... அவ்வளவுதான். மாத்திரையின் தயவில் துக்கம் மறந்து தூங்க முடிந்தது... தன் கையைப் பற்றிய நிரஞ்சனின் கையை இவள் விடவேயில்லை.

★★★

காலையில் கண் விழித்தபோது மனதில் ஒரு விதமான மரமரப்பு... ஆனால் வெறுமையை உணர முடிந்தது.

முகம் கழுவி முடி கோதியவளை அந்த சத்தம் சொடுக்கியது!

அதென்ன முண கல்...?

குனிந்து பார்த் தவளின் கண்கள் விரிந்தன...

மனித வாசனையை முகர்ந்து முடிந்தளவு வேகமாய் இவளை நெருங்கிக் கொண்டிருந்தது அந்தக் குட்டி. இவளது 'குட்டி'யின் அதே நிறம், அமைப்பு... நாற்பது நாள்தான் இருக்கும்.

குனிந்து அள்ளி எடுத்தவளை, வெகு ஆசையாய் பார்த்து, நக்க முயன்றது அது.

மிருதுவான அதன் உருண்டை உடலைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

சன்னமான தட்டலுடன் ஒருக்களித்திருந்த கதவைத் திறந்து கொண்டு வந்த நிரஞ்சன் கையில் சூடான தேநீர்





கோப்பை, மற்றதில் சிறு கிண்ணத்துப் பால்.

இவன் கண்களைச் சந்தித்தவனின் பார்வையை இவன் நழுவ விடவில்லை. இவள் இழப்பின் போது, அணைத்தும் தட்டியும் உடனிருந்த அவன் நேசத்தில் இவள் உருகிப் போயிருந்தாள்.

''ஸாரி நிமி... குட்டி வீட்டினுள்ளேயே இருந்திருந்தால்..''

''அது விபத்து... குட்டி சதா வீட்டில் அடைஞ்சு கிடக்கறது சாத்தியமில்லை.''

''இந்த 'குட்டி'யை ரொம்ப கவனமாய் பார்த்துக்கலாம்.''

இரண்டு பிஞ்சு முன்னங்கால்களையும் கிண்ணத்தில் பதித்து பாலை 'மொசக்கி'க் கொண்டிருந்த சிறு ஜீவனை இருவர் கைகளும் தடவின. பசியாறிய அது இருவரையும் முகர்ந்து விட்டு, நிமலாவின் மடியைத் தேர்ந்தெடுத்து சுருண்டு கொண்டது.

இவளது கண்கள் நிரம்பின.

"நீ ஷியாமளாவிடமிருந்து என்னைக் காப்பாற்றினது போல, 'குட்டி'யை அவளிடமிருந்து காப்பாத்த முடியலை நிமி. 'இனி அவ என் கண்ணில் படவேக் கூடாது'ன்னு விரட்டிய ஆத்திரத்தில்தான் அத்தனை வேகமாய் போனாள்... போய்..."

"என்ன விஷயமாய் வந்தாங்க?"

"என் அறையில் அவளது படம் இருந்துச்சுன்னா... ரொம்ப உரிமையாய் உள்ளேப் போனவள் கடும் கோபத்தில் வெளியே வந்தா. அவ படம் எப்படி அங்கே இருக்கக் கூடும்னு..."

"ஏதோ ஒரு நம்பிக்கையில் வச்சிருந்திருக்காங்க. ஆனா நான் அதை அங்கிருந்து அப்புறப்படுத்திட்டேன். உடனே அவங்களிடம் அனுப்பி வச்சிருந்திருக்கணும்."

"அவங்கப்பாவிற்கு வர வேண்டிய லட்சங்கள் உடனடியாய் வேணும்னா."

"ஐயோ... உங்களை நிரந்தரமாய் அவங்களிடமிருந்து காப்பாற்ற பணம் வேணுமே..."

"அதுவும் கிடைச்சாச்சு நிமி."

ஆவலுடன் ஏறிட்டாள்.

அவள் மடியில் சுருண்டிருந்த குட்டியைக் கவனமாய் அள்ளி, அதற்கான கூடையில் விட்டவன், பேராவலுடன் இவளை எழுப்பி தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

இதுவரை அவன் சொல்லாததை எல்லாம் அந்த இறுக்கம் அவளுக்குத் தெரிவித்தது. நிம்மதியாய் ஒண்டிக் கொண்டாள்.

"பாட்டிம்மாவிற்கு சென்னையின் புறநகரில் நிலமிருந்தது. இதுவரை பொருட்படுத்தாத அந்த நிலத்தை யாரோ அரை கோடிக்கு விலை பேச, சந்தோஷமாய் விற்றுட்டாங்க. ஆக இந்த வாரமே எங்கடன் தீர்ந்திடும்."

"அப்ப... நம்ப கல்யாணம்...?"

இவளைச் சற்று எட்ட நிறுத்தி முறைத்தான்.

"சொல்லி முடி."

"எந்த நிர்ப்பந்தமுமில்லாததால்..."

"அதான் இப்படி சந்தோஷமாய் ஒட்டிட்டிருக்கோம்."

"நிஜத்தை... தெளிவாய் சொல்லுங்க நிரஞ்... ப்ளீஸ்"

"நம்ப கல்யாணம் எந்த நிர்ப்பந்தமும் இல்லாம, நிறைவாய் நடக்கும்."

"ஏன்...?"

"ஏன்னா நான் ரொம்ப அதிர்ஷ்டக்காரன். 'தந்த பவனத்திற்கு' இப்படி ஒரு அழகும், குணமும், பண்பும், திறமையுமான ஒரு ராணி வருவான்னு நான் நினைக்கலை... ஆக தேடவும் இல்லை. ஆனா அவ தானே என்னைத் தேடி வந்துட்டா... இனியும் அவளை விடலாமா என்ன?"

"நானும்தான் தேடலை..." என்றாள் சற்று பிகுவுடன்.

"ரெயில்வே ஸ்டேஷன்ல அலமலந்து தேடும் ஒரு குழந்தைபோல நின்னியே. 'அடடா இது ரொம்ப அழகான ஆபத்து'ன்னு உன்னை கழட்டி விடப் பார்த்தேன்... நடக்கலை."

ஆர்வமாய் இவள் நெற்றியில் முத்தமிட்டான்.

இவள் கண் செருக முணுமுணுத்தாள்.

"நான் கனவிலும் கூட நினைக்காத வாழ்விது... பிறகெப்படி தேடறது."

"ஆக நாம ரெண்டுபேருமே தேடலை... அப்படி வர்ர காதல்தான் அற்புதமானது. தெரியுமா?"

"ஓஹோ?"

"தேடிப் பெறுகின்ற காதல் சிறப்பானதுதான். அதைவிட சிறந்தது, தேடாமல் தட்டுப்படும் காதல்."

அவளது பெரிய கண்கள் காதலால் தளும்பின...

"அப்படி ரொம்ப பாராட்டாய் பார்க்காத நிமி. இது நான் சொன்னதில்லை. ஷேக்ஸ்பியரின் வரிகள்..."

"அழகாயிருக்கு..."

"இனி நம்ப வாழ்வும் அருமையாய் இருக்கும் நிமி" என்றவன் சொல்ல, ஆமோதிப்பாய் அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள் நிமலா!

**[முற்றும்]**

திருமணத் திருக்கோவில்கள்:

# கல்யாணத் தடை நீக்கும்

# காருகுடி கைலாசநாதர்



தமிழ்நாட்டின் பழமையான சிவாலயங்களில் ஒன்று காருகுடி கைலாசநாதர் கோவில்.

1800 ஆண்டுகளுக்கும் முன்னர் சங்ககாலத்தில் புகழ் பெற்று விளங்கிய கடையேழு வள்ளல்களில் ஒருவரும், முடியுடை மூவேந்தர்களின் திரையரசர்களில் ஒருவருமான கொல்லி வல்வில் ஓரி கட்டிய கோவில் இது என்று கருதப்படும் கோவில்.

கி.பி.1266–ல் இன்றைக்கு 750 ஆண்டுகளுக்கு முன்னர் ஹொய்சாள மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் ஊற்றங்கரையை இக்கோவிலுக்கு நிலதானம் வழங்கியதாகக் கல்வெட்டு கூறுகிறது. 1297–ல் பாண்டியர்களும் சோழர்களும் நிலக்கொடை வழங்கியதாகவும் அறிகிறோம்.

இத்திருக்கோவில் ரேவதி நட்சத்திரத்தில் தோன்றிய கோவில் என்பர்.

'க' என்பது தமிழின் மெய் எழுத்துக்களில் முதலாவது உயிர்மெய் எழுத்து. இந்த 'க' எனும் எழுத்தின் 9 நவாம்சம் அடங்கிய கோவில் எனவும் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

'க' என்பது காருகுடி, கயிலாசநாதர், கருணாகரவள்ளி, கற்பக விநாயகர், காசி விசுவநாதர், காலபைரவர், கபால பைரவர், கற்பக நதி முதலிய 9 நவாம்சம் அடங்கியது என்பர்.

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், ரேவதி பெயர் உடையவர்கள், காருகுடி கருணாகரவள்ளி சமேத கயிலாதநாதர் திருக்கோவில் சென்று கருணாகரவள்ளி அம்மனை வழிபட்டால் குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு குழந்தைப் பேறு வாய்க்கும், சகல தோஷ நிவர்த்தியும் ஆகும் என்பர்.

கைலாசநாதர் 16 பேறுகளையும் அளிக்கும் ஆற்றலுடைய அருட்கடவுள். பஞ்சமா பாதகம் செய்தவர்களையும் திருத்தி வாழ வைப்பார்.

குலம், நிலம், செல்வம், அறிவு, அழகு, கொடை, புகழ், நல்லொழுக்கம், வளம் ஆகிய ஒன்பது பேறுகளை அளிக்கவல்ல திருக்கோவில் என்றும் கூறுவர்.

காருகுடிக் கோவிலின் சிறப்புகளில் ஒன்று, பிரம்மன் வழிபட்ட கோவில்கள் என மூன்று கோவில்களைக் கூறுவர். அவை கொடுமுடி, திருப்பட்டூர், காருகுடி ஆகியனவாகும். இம்மூன்றில் மூன்றாவது தலம் இது.

காருகுடியின் தல விருட்சம் வில்வம். தெற்குக் கோபுர வாயிலின் முகப்பில் இடதுபுறம் விநாயகர். உள்ளே நுழைந்தால் வலதுபுறம் ரேவதி நட்சத்திரக் கல்வெட்டு உள்ளது.

இத்தலத்தின் வரலாறு இவ்வாறு கூறப்படுகிறது. சந்திரபகவான் கடைசி நட்சத்திர தேவியான ரேவதியை மணந்தார். அவர்கள் சிவனையும், பார்வதியையும் தரிசிக்க விரும்பினர். இதையறிந்த அம்பிகை கருணை கொண்டு இத்தலத்தில் சிவனுடன் காட்சி கொடுத்தார். சிவனுக்குக் கைலாசநாதர் என்றும், அம்பாளுக்கு கருணாகர வள்ளி என்றும் பெயர் ஏற்பட்டது.

கார் எனப்படும் ஏழு வகை மேகங்களும் ரேவதி நட்சத்திர நாளில் இங்கு வழிபாடு செய்கின்றன. எனவே ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் திருவாதிரையன்றும்,

—ராஜம் மங்களமுருகேசன்

ரேவதி நட்சத்திரத்தன்றும் இங்கு வருணபகவானுக்கு ஹோமம் செய்தால் மழை பெய்யும்.

தட்டுப்பாடின்றி வேளாண்மைக்கும், குடிநீர் தேவைக்கும் தண்ணீர் கிடைக்குமென்று நம்புகின்றனர். உழவர் பெருங்குடி மக்களுடைய கோவிலாகவும் இது விளங்குகிறது.

சிறப்பம்சமாக விளங்குவது சந்திரனுக்கும், ரேவதிக்கும் சிவன் - பார்வதி திருக்காட்சி அருளியதால் இது ரேவதி நட்சத்திரத் தலமாக விளங்குகிறது. ரேவதி தினமும் அருப வடிவில் மற்றவர்களுக்கு தெரியாமல் வருவதால் இங்கு வந்து 27 எண்ணிக்கை வரும்படியாக (27 திருமாங்கல்யச் சரடு, 27 ரவிக்கைத் துணிகள், 27 உணவுப் பொட்டலங்கள்) சிவனுக்கும், அம்பாளுக்கும் பொருட்களைப் படைத்து ஆலயம் வரும் அன்பர்களுக்குக் கொடுத்தால், தடைபட்ட அனைத்து காரியங்களும் சிறப்பாக நடக்கும்.

ரேவதி நட்சத்திரம் அந்நாளில் முடிந்து அசுவினி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்பாக உள்ள 12 நிமிடங்களின் போது சிவனுக்குப் பால் அபிஷேகம் செய்து வழிபட்டால் நினைத்த காரியம் நிறைவேறும் என்பதும் அடியவர் நம்பிக்கை.

'காசிக்கு அடுத்தது காருகுடி' என்பது அப்பக்கத்தில் உள்ள மக்களின் வாக்காக விளங்குகிறது. இத்தலத்தின் கீழே அசோக நட்சத்திரம் சுற்றுகிறது. எந்த நட்சத்திரக்காரர்கள் வேண்டுமானாலும் இத்தல இறைவனை வணங்கிக் கோவில் பிரதட்சணம் செய்தால் பாவங்கள் விலகும். நீர், கண் தொடர்புள்ள நோய், நாள்பட்ட நோய்கள் விலகவும் இங்குச் சிறப்பு அர்ச்சனை செய்யப்படுகிறது.

இக்கோவில் திருச்சுற்றில் விநாயகர், முருகன், காசி விசாலாட்சி, குங்குமவல்லி, அகோர வீரபத்திரர், கால பைரவர், கபால பைரவர், சூரியன், சந்திரன், நவக்கிரகம், நந்தி, தட்சிணாமூர்த்தி, பிரம்மா, விஷ்ணு, கோமுதுர்க்கை, சண்டிகேசுவரர் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன.

கைலாச நாதர் கிழக்கு வாயில் எதிரே பெருமாள்.

நந்தியின் பின் தொட்டியப்பர் குழந்தையுடன் காட்சி அளிக்கிறார்.

தெற்குத் திருச்சுற்றில் அப்பர், சுந்தரர், மணிவாசகர், திருஞான சம்பந்தர் அருகில் ற்பக விநாயகர். கிழக்கு நோக்கி ஆறுமுகர் 2 கைகளுடன் மயில் மீது அமர்ந்து ருக்கிறார்.

திருச்சியில் இருந்து முசிறி 40 கி.மீ. தூரம் ஆகும். முசிறி சென்று அங்கிருந்து வேறு பேருந்துகளில் ஏறி 5 கி.மீ. தொலைவில் உள்ள காருகுடிக்கு ஆட்டோவில் செல்ல வேண்டும்.

இக்கோவில் ஒதுக்குப்புறத்தில் இருப்பதால் குருக்களுக்குத் தொலைபேசியில் (67518 94339, 94423 58148) பேசிவிட்டு ஏற்பாடு செய்வது நல்லது.

* * *

**<u>திருமணத் தடை நீக்கும்</u>**

## திருவாசி மாற்றுரை வரதீஸ்வரர் கோவில்

திருவாசி என இன்று வழங்கும் கோவில் பாச்சிலாச்சிரமம் என்று வழங்கப் பெற்றது. பாச்சில் கூற்றத்து ஆச்சிராமம் ஆதலின் பாச்சிலாச்சிரமம் ஆயிற்று. திருவச்சிராமம் என்பது மருவி இன்று திருவாசி என்று வழங்குகிறது.

முதலாம் ராஜராஜன், சுந்தரபாண்டியன், முதற்குலோத்துங்கன், கிருஷ்ணதேவராயர்



ஆகியோர் திருப்பணி செய்துள்ள பழமையான கோவில். கி.பி.1253-ல் சமயபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய ஹொய்சாள மன்னன் வீரசோமேசுவரன் காலத்தில் இக்கோவிலுக்குப் பதினாயிரம் கலம் நெல் கிடைத்து வந்ததாகக் கல்வெட்டு வாயிலாக அறிகிறோம்.

சாப விமோசனம் ஒன்றினால் மண்ணுலகம் வந்த படைப்புக் கடவுள் பிரம்மா, பல தலங்களில் சிவபிரானை



வழிபட்டார். ஓரிடத்தில் அவர் பொருட்டு சிவன் சுயம்புவாக எழுந்தருளி காட்சி அளித்தார். பிரம்மா வழிபட்டதால் பிரம்மபுரீசுவரர் என்று பெயர் பெற்றார்.

சோழமன்னன் கொல்லிமழவன் மகள் தீராத வயிற்று வலியால் பாதிக்கப்பட்டாள். அவ்வேளையில் திருஞான சம்பந்தர் இங்கு வந்தார். இதையறிந்த மன்னன், கோவிலுக்கு வந்து அவரிடம் தம் மகளின் நிலையைக் கூறினான். சம்பந்தர் சிவனை வேண்டிப் பதிகம் பாடினார். சிவன் அவளுடைய நோயை ஒரு பாம்பாக மாற்றி அதன் மீது நின்று ஆடினார். மன்னன் மகள் நலம் பெற்றாள்.

இதனடிப்படையில் இங்குள்ள நடராசர் காலுக்குக் கீழே முயலகன் இல்லாமல் சர்ப்பத்துடன் காட்சி தருகிறார். தீராத வயிற்று வலி, வாதம், ஆஸ்துமா முதலிய நோய் உள்ளவர்கள் நடராசருக்கு வன்னி இலை அர்ச்சனை செய்து வழிபடுகிறார்கள்.

இத்திருக்கோவிலில் முதற்கோபுரத்திற்கும் இரண்டாம் பிரகாரத்திற்கும் இடையிலுள்ள மண்டபம் 'ஆவுடையாப்பிள்ளை மண்டபம்' எனப்படுகிறது. இம்மண்டபத் தூணில் சம்பந்தர், கொல்லிமழவன் புதல்வியின் நோயைத் தீர்த்த சிற்பங்கள் உள்ளன.

இத்தல இறைவன் சுந்தரர் பெற்ற பொன்னை மாற்றுக் குறைவதாக உரைத்துக் காட்ட அறிந்த பிரான் 'மாற்றறி வரதர்' எனவும், வன்னி சூழ்ந்த வனத்தில் உள்ள வராதலின் 'சமீவனேஸ்வரர்' எனவும், பிரம்மன் வழிபட்டவராதலின்

**எதிரொலி கேட்கும் கோவில்**

வைணவப் பெருந்தலமான ஸ்ரீவில்லிபுத்தூர் எனும் திருவில்லிபுத்தூரில் சிவன் கோவிலான மடவார் வளாகம் வைத்தியநாதர் உடனுறை சிவகாமியம்மன் திருக்கோவில் உள்ளது.

இக்கோவிலில் நீண்ட நெடிதுயர்ந்த மதிலின் வெளித் திருச்சுற்றில மேற்குப் பக்கம் நாம் ''அன்னை சிவகாமித் தாயே'' என்று ஓங்கிக் குரல் எழுப்பினால், சில விநாடி நேரம் கழித்து எதிர்முனையில் அப்படியே நமது குரல் எதிரொலிக்கிறது. இவ்வாறான ஓசை வேறு எத்தலத்திலும் இல்லாத கட்டிடக்கலையின் தனிச்சிறப்பு என்று கூறப்படுகிறது. தமிழரின் நுட்பமான கலை உணர்வுக்குச் சான்று இது.

'பிரம்மபுரீசுவரர்' எனவும் விளங்குகிறார்.

இத்திருத்தலத்திற்கு வந்த சுந்தரர், சிவனிடம் பொன் கேட்டுப் பதிகம் பாடினார். அவரை சோதிப்பதற்காக சிவன் பொன் தரவில்லை. கோபம் கொண்ட சுந்தரர், சிவன் இருக்கிறாரா இல்லையா? என்னும் பொருளில் இகழ்ந்து பதிகம் பாடினார்.

சிறிது கழித்து சுந்தரருக்கு காட்சி தந்த சிவன் பொன் முடிப்பு தரவே, அந்தப் பொன் தரமானதுதானா என்ற சந்தேகம் ஏற்படவே, அங்கு வந்த இரண்டு வணிகர்கள்' தங்கத்தைச் சோதித்துத் தருவதாகச் சொல்லி வாங்கிக் கொண்டனர்.

ஒருவர் பொன்னை உரைத்துப் பார்த்து பொன் தரமானதுதான் என்றார். உடன் வந்தவரும் ஆமோதித்தார். பின் இருவரும் மறைந்து விட்டனர். சுந்தரர் வியந்து நின்ற போது சிவனே வணிகர் வடிவில் வந்து உரைத்துக் காட்டியதையும், திருமால் அவருடன் வந்ததையும் உணர்த்தினார். இதனால் தங்கத்தை உரைத்துக் காட்டியதால் சிவனுக்கு 'மாற்றுரை வரதர்' என்னும் பெயர் ஏற்பட்டது.

சுவாமி சந்நிதியில் சுந்தரருக்குப் பொற்கிழி தந்த ஸ்தாபன மண்டபம் உள்ளது. இவ்விடத்தை கல்வெட்டு 'கிழி கொடுத்தருளிய திருவாசல்' என்ற பெயரால் குறிக்கின்றன.

இங்குள்ள சுந்தரர் திருஉரு, இரு கைகளிலும் தாளம் ஏந்திப் பாடும் அமைப்பில் உள்ளது. இந்தக் கல்வெட்டில் 'பாச்சில் திருவாச சிராமத்துப் பெருமானடிகள்' என்று இறைவனின் திருப்பெயர் உள்ளது.

சுவாமி ருத்ராட்ச பந்தலின் கீழ் சுயம்பு



லிங்கமாக அருள்கிறார். ராஜகோபுரத்தின் கீழே அதிகார நந்தி மனைவியுடன் இருக்கிறார். இங்குதான் நவக்கிரகத்தில் சூரியன் தன் மனைவியர் உஷா, பிரத்யுஷாவுடன் இருக்க மற்ற கிரகங்கள் அனைத்தும் அவரை பார்த்தபடி உள்ளன.

திருவாசியில் வசித்த கமலன் என்னும் வணிகனுக்கு மகளாகப் பிறந்த அம்பிகை, சிவனை வேண்டித் தவமிருந்து அவரை மணந்தாள். இவள் பாலாம்பிகை என்ற பெயரில் அருள்கிறாள். அர்த்தசாமத்தில் இவளுக்கே முதல் பூஜை நடைபெறும். அம்பாள் சந்நிதி எதிரே செல்வ விநாயகர் இருக்கிறார். அருகில் பொய்கை தீர்த்தம் உள்ளது.

அம்பாள் சந்நிதி முகப்பில் இரண்டு துவார பாலகியர் உள்ளனர். திருமணமாகாத பெண்கள் நல்ல வரன் அமையவும், திருமணத்தடை உள்ளவர்கள் தடை நீங்கவும் இவர்களுக்கு மஞ்சள் கயிறு கட்டி வழிபடுகின்றனர்.

மகப்பேறில்லாத பெண்களும் இவர்கள் முன் தொட்டில் கட்டுகின்றனர். துவார பாலகியர் வாயிலாகப் பக்தர்களின் கோரிக்கைகள், வேண்டுகோள்களை அன்னை பராசக்தி ஏற்றுக் கொள்கிறாள் என்பது நம்பிக்கை.

குழந்தைகளுக்கு ஏற்படும் பாலாரிஷ்ட தோஷம் நீங்க அம்பிகைக்குப் பால் அபிஷேகம் செய்து வழிபடுகின்றனர்.

இறைவியின் பெயர் பாலாம்பிகை, பாலசுந்தரி. தல விருட்சம் வன்னிமரம். சிலம்பாறு எனப்படும் பஃறுளி, அமலையாறு தீர்த்தமாகும்.

இத்தலம் திருச்சி – சேலம் பேருந்துச் சாலையில் 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

## தேசிய சின்னங்கள்

ஸ்காட்லாந்து நாட்டின் தேசிய மலர் 'நெருஞ்சி மலர்'.



இலங்கையின் தேசியப் பறவை மைனா.

நியூசிலாந்து நாட்டின் தேசியப் பறவை 'சிபி' பறவையாகும்.

நெதர்லாந்து நாட்டின் தேசிய மலர் 'டுலிப்'.

சீனாவின் தேசிய மலர் 'திராட்சை மலர்'.

மலேசியாவின் தேசிய மலர் 'செம்பருத்தி'.



இத்தாலி நாட்டின் தேசிய மலர் 'வெள்ளை அல்லி'.

இஸ்ரேல் நாட்டு தேசியக் கொடியில் 'தாவீதின் நட்சத்திரம்' என்று பொறிக்கப்பட்டுள்ளது.

நேட்டா நாட்டின் தேசியப் பறவை 'நெருப்புக்கோழி'.

பிரான்சின் தேசிய மலர் 'லில்லி' ஆகும்.

ருமேனியா நாட்டின் தேசிய மலர் 'பூவரச மலர்'.

எகிப்து நாட்டின் தேசிய மலர் 'தாமரை'.

போலந்து நாட்டின் தேசிய மலர் 'சோளப்பூ'.

இங்கிலாந்து நாட்டின் தேசிய மலர் 'ரோஜா'.

வங்காளதேசத்தின் தேசிய மலர் 'வெள்ளை அல்லி'.

கி.பி.1924-ல் சுதந்திரதேவி சிலை அமெரிக்காவின் நினைவுச் சின்னமானது.

எகிப்தியர்களின் தேசிய வார விடுமுறை வியாழக்கிழமை ஆகும்.

அமெரிக்க தேசியக் கீதத்தில் ஐந்து பாடல் பகுதிகள் (பாரா) உள்ளன.

–எஸ்.ராஜேந்திரன்,
மணிக்கிராமம்.

# எலும்பு வலி

## மூட்டுவீக்கம் நோய்க்கு அறுவை சிகிச்சையில்லாத சிகிச்சை



சீன அக்குபஞ்சர் சிகிச்சை



ZHENJIUOLOGY & MOXIBUSTION



அரபுநாட்டு கப்பிங் சிகிச்சை



அட்டை பூச்சி சிகிச்சை

- எலும்பு தேய்மானம் - (CERVICAL SPONDYLITIS )
- எலும்பு தேய்மானம் - (LUMBAR SPONDYLITIS)
- ...ண்டு தேய்மானம் - (SACROLIATHISIS)
- ...ம் மூட்டு தேய்மானம் - (OSTEO ARTHRITIS)
- ...ம்பு மூட்டு வீக்கம் - (GOUT)
- ...தம், முடக்குவாதம் - (RHEUMATOID ARTHRITIS)
- ...ட்டை எலும்பு தேய்மானம் - (SHOULDER PERI ARTHRITIS)
- ...நாட்டு யுனானி வைத்தியம்-கப்பிங்-
- ...டைபூச்சி சிகிச்சை
- ...நாட்டு ZHENJIUOLOGY, அக்குபஞ்சர்,
- ...XIBUSTION சிகிச்சை
- ...ல் தெராபி மற்றும் ஒத்தடம் சிகிச்சை

...சை அளிக்கும் முறை :

- ...துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் வசதிகள் உண்டு.
- ...யம் இல்லை.
- ...ல் மூலமும் மருந்துகள் பெறலாம்.





...ல் தெராபி



...ர்கை ...ம் சிகிச்சை





உத்திரப்பிரதேச மாநில அமைச்சர் மாண்புமிகு ஆஜம்கான் அவர்கள் ராம்பூரில் நடைபெற்ற விழாவில் டாக்டர் தமீம், டாக்டர் ஆயிஷாவுக்கு விருது வழங்கி கவுரவித்த போது எடுத்த படம்.








## DR. THAMEEM DR. AYESHA NAAZ
## CHENNAI KASINI HOSPITAL

No.135, Jani Jahan Khan Road, (Opp)
Zambazaar Police Station, Royapettah,
Chennai - 600 014. Cell: 09840384898
Phone: 044-28486695 Fax: 044-45566364
e-mail: drthameem@yahoo.com


வாணியம்பாடி டாக்...
அக்பர் கவுனரின் சர்...
நோய்க்கு - காசினி ...
மற்றும் காசினி கேப்...
செக்ஸ் பிரச்சனைகளு...
காசினி ஹீரோ கேப்...
தலைமுடி பிரச்சனை...
மற்றும் மூட்டுவலி...
அரேபியன் ஆயில் ...
உடல் வலிக்கு - ...
பெயின் கிளீன் பாம் ...
கிடைக்கும். மாதந்...



# விதவிதமான பொங்கல்

பொங்கல் திருநாள் என்றாலே நெய் மணக்கும் சர்க்கரைப் பொங்கல் நினைவுதான் பலருக்கும் வரும். முந்திரியும் திராட்சையும் முறுமுறுக்கும் நெய்யும் சேர்த்து செய்த சர்க்கரைப் பொங்கலின் ருசியே தனிதான். ஆனாலும் மாறிவரும் இக்காலத்தில் சர்க்கரைப் பொங்கலோடு வேறு வகைப் பொங்கலும் செய்து ருசித்துப் பார்க்கலாமே. சில சத்தான பொங்கல் வகைகளை இங்கே அளித்துள்ளோம்.

## வாழைப்பழ பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி -1 கப், பாசிப்பருப்பு - ½ கப், வாழைப்பழம் - 4, வெல்லம் - 1½ கப், ஏலப்பொடி - ¼ ஸ்பூன், முந்திரிப்பருப்பு - 4, நெய் - தேவையான அளவு, பால் - ½ லிட்டர்.

**செய்முறை:**

பாலைக் காய்ச்சி ஆற வைத்து அதனுடன் வாழைப்பழத்தை நன்கு மசித்து கலக்கவும். வெல்லத்தை தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து வடிகட்டவும். அரிசி, பருப்பை வேக வைக்கவும்.





அடிகனமான வாணலியில் வாழைப்பழம் கலந்த பாலை விட்டு கிளறவும். கொதி வந்ததும் அரிசி பருப்பு கலவை, ஏலப்பொடி, வெல்லப்பாகு ஆகியவற்றை சேர்த்து கிளறவும். நெய்யில் வறுத்த முந்திரி, நெய்யையும் கலந்து இறக்கவும். இந்தப் பொங்கல் நல்ல வாசனையாக இருக்கும்.



## ...ர் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

பால் – ½ லிட்டர், பச்சரிசி –1 கப், பாசிப்பருப்பு – ¼ கப், சர்க்கரை – 1½ கப், முந்திரிப்பருப்பு – 4, ஏலக்காய் பொடி – ½ ஸ்பூன், நெய் – தேவையான அளவு.

**செய்முறை:**

பனீரைக் கழுவி சிறு துண்டுகளாக்கவும். பாலைக் காய்ச்சி அதனுடன் பனீரைச் சேர்த்து நன்கு கொதிக்கவிட்டு கண்டக் காய்ச்சவும்.





பச்சரிசி, பாசிப்பருப்பை தனித்தனியே வறுக்கவும். முந்திரிப்பருப்பை சிறிது நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.

குக்கரில் நெய் விட்டு பால் பனீர் கலவை, அரிசி, பருப்பு, ஏலக்காய் பொடி, சர்க்கரையுடன் தேவையான அளவு தண்ணீரையும் சேர்த்து நன்கு குழைய வேகவைத்து இறக்கி முந்திரிப்பருப்பை மேலே தூவி பரிமாறவும்.

## காராமணிப் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி – 1 கப், காராமணி – ½ கப், வெல்லம் – 1½ கப், ஏலப்பொடி – ½ ஸ்பூன், முந்திரிப்பருப்பு – 4, நெய் – தேவையான அளவு.

**செய்முறை:**

காராமணியை வறுத்து ஆறவைத்து மிக்ஸியில் போட்டு ஒன்றிரண்டாக பொடிக்கவும். பச்சரிசியை தனியாக வறுக்கவும். வெல்லத்தை கரைத்து வடிகட்டவும். குக்கரில் அரிசி, காராமணியை போட்டு தேவையான அளவு தண்ணீர் விட்டு மூடி இரண்டு விசில் வந்ததும் இறக்கவும். பின் அதனுடன் வெல்லக்கரைசலை ஊற்றி நன்றாக கிளறி வெந்ததும் ஏலப்பொடி, வறுத்த முந்திரி, நெய்யை சேர்த்து இறக்கவும்.

தேவையானால் தேங்காய்ப்பூ சேர்க்கலாம்.

## பைனாப்பிள் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

பாசுமதி அரிசி – 2 கப், பைனாப்பிள் –1, சர்க்கரை – ½ கப், பைனாப்பிள் எசென்ஸ் – 1 ஸ்பூன், மஞ்சள் கலர் – ½ ஸ்பூன், நெய் – 4 டேபிள் ஸ்பூன், முந்திரிப்பருப்பு – 6.

**செய்முறை:**

பைனாப்பிளை தோல் சீவி பாதிப்பழத்தை ஜூசாகவும், பாதியை சிறிய துண்டுகளாகவும் நறுக்கி வைக்கவும். அரிசியை அரைமணி நேரம் ஊறவிட்டு நான்கு கப் தண்ணீர் சேர்த்து வேக விடவும். பாதி வெந்ததும் பைனாப்பிள் சாறு சேர்க்கவும். நன்றாக வெந்தபின் கலர், எசென்ஸ் சேர்த்து அதனுடன் சர்க்கரை, நெய்யில் வறுத்த முந்திரி சேர்த்து கிளறவும். அடுப்பை சிறுதீயில் வைத்து வெந்தவுடன் இறக்கி நறுக்கிய பழத் துண்டுகளை சேர்க்கவும்.

இந்த பொங்கல் சுவையாகவும் மணமாகவும் இருக்கும்.

## பதநீர் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி – 1 ஆழாக்கு, பதநீர் – ஆழாக்கு, தேங்காய் –1 மூடி, நெய் – ஸ்பூன், முந்திரிப்பருப்பு – 6.

**செய்முறை:**

அடிகனமான பாத்திரத்தில் பதநீரை ஊற்றி காய்ந்ததும் அரிசியை களைந்து அதில் போட்டு சிறுதீயில் வேகவிடவும். குழைய வெந்தவுடன் கரண்டியால் நன்கு மசித்துக் கொள்ளவும். (பதநீரில் சாதம் வேக நேரமாகும். தேவையானால் சிறிது தண்ணீர் சேர்த்துக் கொள்ளவும்.) பொங்கலில் நெய், முந்திரிப்பருப்பு, தேங்காய்த்துருவலை சேர்த்து கிளறி இறக்கவும். இனிப்பு தேவைப்பட்டால் சர்க்கரைப் பொடி அல்லது பனங்கற்கண்டு சேர்த்துக் கொள்ளவும்.

பதநீர் நல்ல இனிப்பாக இருந்தால்தான் பொங்கலும் இனிப்பாக இருக்கும்.

## பலாப்பழ பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி - 1 டம்ளர், பலாச்சுளை - 15, பாகு வெல்லம் - 200 கிராம், நெய் - 5 ஸ்பூன், முந்திரிப்பருப்பு - 5, ஏலப்பொடி - ½ ஸ்பூன், தண்ணீர் - 5 டம்ளர்.

**செய்முறை:**

பலாச்சுளையை சிறுசிறு துண்டுகளாக்கி குக்கரில் இரண்டு விசில் வரும் வரை வேகவைக்கவும். ஆறியதும் அதை மிக்ஸியில் ஒரு சுற்று சுற்றி எடுக்கவும். குக்கரில் அரிசியை களைந்து போட்டு தண்ணீர் விட்டு மூடி, நான்கு விசில் வந்ததும்

## சுவைக்கு பொட்டுக்கடலைப் பொடி!

பொட்டுக்கடலையைப் பொடி செய்து கைவசம் வைத்திருங்கள். அதனால் பயன் அதிகம்.



* இட்லி, தோசைக்குச் சட்னி அரைக்கும் போது சட்னியில் உப்பு அதிகமாகி விட்டால் அதில் பொட்டுக்கடலை மாவைச் சேர்த்து விட்டால் அதிகமான உப்பு குறைந்து விடும்.

* உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு ரோஸ்ட் செய்கையில் இரண்டு கரண்டி பொட்டுக்கடலை மாவில் உப்பு, மிளகாய் தூள் கலந்து தூவி வதக்கினால் நல்ல மொறுமொறுப்பாகவும் சுவையாகவும் இருக்கும்.

* குடமிளகாய், கத்தரிக்காய், கோவைக்காய்களில் பொடி அடைத்துக் கறி செய்யும்போது நான்கு கரண்டி பொட்டுக்கடலை மாவு திணித்துச் செய்தால் கறி மொறு மொறுவென்று சுவையாக இருக்கும்.

* தட்டை, கோடுவளை முதலியன செய்கையில் கொஞ்சம் பொட்டுக்கடலை மாவையும் சேர்த்தால் கரகரப்பாக இருக்கும்.

* பீன்ஸ், கேரட், வெண்டைக்காய், கோவைக்காய் கறியில் காரம் அதிகமாகி விட்டால் கொஞ்சம் பொட்டுக்கடலை மாவு தூவினால் போதும். காரம் குறைந்து விடும்.

* பொட்டுக்கடலை, மிளகாய் வற்றல், ரண்டு பல் பூண்டு, தேங்காய் ஒரு துண்டு, றிது உப்புச் சேர்த்து மிக்ஸியில் பொடித்து வத்துச் சோற்றில் பிசைந்து நெய் ஊற்றி சாப்பிடச் சுவை அற்புதமாகும்.

* உசிலி செய்கையில் காய்களை வேக விட்டு அதில் பொட்டுக்கடலை மாவைத் தாராளமாகப் பிசிறி விட்டால் கடலைப்பருப்பு உசிலியை விட ருசியாக இருக்கும்.

* குருமா, கிரேவி, பச்சைப்பருப்பு கூட்டு ஆகியவற்றில் தண்ணீர் அதிகமாகி விட்டால் இரண்டு கரண்டி பொட்டுக்கடலை மாவைக் கலந்து விட்டால் கெட்டியாகி பக்குவமாகி விடும்.

* இட்லி மிளகாய்ப் பொடி, சோற்றில் பிசைந்து சாப்பிடும் உளுந்தம்பருப்புப் பொடி, கொத்தமல்லிப் பொடி ஆகியவற்றில் பொட்டுக்கடலை மாவைச் சேர்த்தால் காரம் குறைந்து சுவையாக இருக்கும்.

* வெங்காய பக்கோடாவிற்குக் கடலை மாவு போட்டு பிசைவதற்குப் பதில் பொட்டுக்கடலை மாவில் பக்கோடா செய்து பாருங்கள். சூப்பர் ருசி.

* சூப்பில் சோளமாவிற்குப் பதில் பொட்டுக்கடலை மாவைச் சேர்த்தால் சூப் திக்காகவும் சுவையாகவும் இருக்கும்.

* பொட்டுக்கடலை மாவு இனிப்பு உருண்டை சத்தானது. வெல்லம் சேர்ப்பதால் இரும்புச் சத்தும், புரதச் சத்தும் கிடைக்கும். பாலில் பொடித்த வெல்லத்தை சேர்த்து மிக்ஸியில் அரைத்து பொட்டுக்கடலை மாவு, ஏலக்காய் பொடி, வறுத்த முந்திரி கலந்து உருண்டை பிடித்து திடீர் இனிப்புச் செய்யலாம்.

-ரமணி புனிதகுமாரி.



இறக்கி பலாப்பழ விழுது, வடிகட்டிய வெல்லப்பாகு, நெய்யில் வறுத்த முந்திரி, ஏலப்பொடி அனைத்தையும் சேர்க்கவும்.

பலாப்பழ பொங்கல் நல்ல வாசனையாகவும் ருசியாகவும் இருக்கும். தேவையென்றால் தண்ணீர் ஒரு டம்ளர் குறைத்து ஒரு டம்ளர் பால் சேர்த்துக் கொள்ளலாம்.

## பறங்கிப் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி – 1கப், பாசிப்பருப்பு ½ கப், பறங்கிக்காய் – ¼ கிலோ, வெல்லம் – 2 கப், நெய்–தேவையான அளவு, முந்திரிப்பருப்பு – 4, ஏலக்காய் பொடி – ½ ஸ்பூன்.

**செய்முறை:**

பறங்கிக்காயைத் தோல் சீவி, துருவிக் கொள்ளவும். முந்திரிப்பருப்பை சிறிது நெய்யில் வறுக்கவும். குக்கரில் அரிசி, பருப்பை சேர்த்து வேகவைக்கவும். வெல்லத்தை லேசாக பாகு காய்ச்சி வடிகட்டவும்.

அடிகனமான பாத்திரம் ஒன்றில் சிறிது நெய்விட்டு துருவிய பறங்கிக்காயை போட்டு நன்கு வதக்கவும். இதனுடன் வெல்லப் பாகு, வேகவைத்த அரிசி பருப்பு சேர்த்து குழைய வெந்ததும் வறுத்த முந்திரி, ஏலப்பொடியை சேர்த்து இறக்கி சுடச்சுட சாப்பிடவும்.

## அவல் காரப் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

அவல் – 1 கப், பாசிப்பருப்பு – ¼ கப், பெருங்காயம் – சிறிது, முந்திரிப்பருப்பு –4, இஞ்சி, மிளகு, சீரகம், பச்சை மிளகாய், உப்பு, கருவேப்பிலை, கொத்தமல்லித்தழை– தேவையான அளவு.

**செய்முறை:**

அவலைக் களைந்து ஊறவிட்டு தண்ணீரை வடிய விடவும். பாசிப்பருப்பை குழைய வேகவைக்கவும்.

வெண்பொங்கல் செய்தபின் ஒரு கைப்பிடியளவு காராபூந்தி, 200 கிராம் உருளைக்கிழங்கை தோலுரித்து உதிர்த்துப் போட்டு நெய் விட்டு கிளறி சாப்பிட சுவை அதிகமாக இருக்கும்.

-கே.விஜயலட்சுமி, வேளாந்தாங்கல்.

அடிகனமான பாத்திரத்தில் நெய்விட்டு மிளகு, சீரகப்பொடி, நறுக்கிய பச்சைமிளகாய், பெருங்காயம் தாளித்து அதில் அவலை கொட்டி நன்றாக கிளறி தேவையான அளவு தண்ணீர் விட்டு, உப்பு, துருவிய இஞ்சி, கருவேப்பிலை சேர்த்து கிளறி, மல்லித்தழை தூவி இறக்கி சட்னி, சாம்பாருடன் பரிமாற சுவையில் அசத்தும்.

## தக்காளிப் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி – 1 கப், பாசிப்பருப்பு – ½ கப், தக்காளிப்பழம் – 4, மிளகுப்பொடி,



சீரகப்பொடி – தலா 1 ஸ்பூன், துருவிய இஞ்சி, பெருங்காயம், கருவேப்பிலை, கொத்தமல்லித்தழை – சிறிது, பச்சை மிளகாய் – 2, உப்பு, நெய் – தேவையான அளவு, முந்திரிப்பருப்பு – 5.

**செய்முறை:**

தக்காளியை நன்றாக கழுவி துண்டுகளாக்கி மிக்ஸியில் போட்டு அரைக்கவும். குக்கரில் அரிசி, பருப்புடன் தக்காளி விழுது, உப்பு, பெருங்காயம், நறுக்கிய பச்சைமிளகாய் அனைத்தையும் சேர்த்து தேவையான அளவு தண்ணீர் விட்டு மூடி இரண்டு விசில் வந்ததும் இறக்கவும்.

வாணலியில் நெய் விட்டு இஞ்சி, மிளகு, சீரகப்பொடி, கருவேப்பிலை சேர்த்து தாளித்து, வேகவைத்த பொங்கலுடன் கலந்து நெய்யில் முந்திரியை வறுத்து போட்டு நறுக்கிய மல்லித்தழையை தூவி சட்னி, தயிர் பச்சடி அல்லது மல்லித்துவையலுடன் சூடாக சாப்பிடவும்.

-சாந்தா கண்ணப்பன், சென்னை.

# கோலங்கள்



17 புள்ளி 3 வரிசை, 3-ல்
நிறுத்தவும் (நேர்புள்ளி)
**- எஸ்.ராமேஷ்வரி, அருப்புக்கோட்டை.**




15 புள்ளி 8-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)
**- பிரேமலதா ராணி, மதுரை.**




19 புள்ளி 10-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)
**- உஷா முத்துராமன், திருநகர்.**



13 புள்ளி 1 முடிய (நேர்புள்ளி)
**-சுபாஷினி சுதர்சன், கரைசுத்துபுதூர்**




17 புள்ளி 15 வரிசை (நேர்புள்ளி)

- எஸ்.தனலட்சுமி, பெங்களூரு.



15 புள்ளி 15 வரிசை (நேர்புள்ளி)




15 புள்ளி 1 முடிய (நேர்புள்ளி)

- தேவி இந்திராணி, சிதம்பரம்.



10 புள்ளி 10 வரிசை (நேர்புள்ளி)

- சுஜாதா ராஜ்கோபால், நவிமும்பை.



22 புள்ளி 2 வரிசை, 2-ல் நிறுத்தவும் (நேர்புள்ளி)

# முகத்தின் சுருக்கங்களை நீக்கும்

# பாதாம் எண்ணெய் கிரீம்

இளமையில் முதுமை தோன்றினால் அது பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கும். அவர்களின் தோற்றம், அழகு, உடலமைப்பு எல்லாமே மாறி விடும். முகத்தில் சுருக்கங்கள் தோன்றினால், வயதானவர் போல் தோற்றம் அளிக்கும். பார்ப்பவர்கள் அவருக்கு உடல்நிலை சரியில்லை, மனநிலை சரியில்லை, ஏதோ கொடுமையான நோய் வந்து உருக்கிக் கொண்டிருக்கின்றது என்றெல்லாம் நினைப்பார்கள்.





சுடுமையான வெயிலில் பணி செய்பவர்கள் அல்லது உடலில் அதிகமான உஷ்ணம், வறட்சி கொண்டவர்களின் முகத்தில் சுருக்கங்கள் காணப்படும். இவர்களை பார்த்தால் கிழட்டுத்தன்மை வந்துவிட்டது போல் தோற்றமளிக்கும். உண்மையில் அவர்கள் கிழவர், கிழவியல்ல. வாலிப இளம்பருவ வயதாகத்தான் இருக்கும்.

மனித உடலுக்கு கொழுப்பு தேவைப்படுகிறது. அந்த கொழுப்பு எண்ணெய் வித்துக்கள், மாமிசம், மீன், முட்டை போன்ற அசைவ உணவு வகைகள் மற்றும் எண்ணெய் சத்துமிக்க தாவரங்கள் மூலம் அதை சாப்பிடுவதால் நமக்கு கிடைக்கின்றது.



இந்த கொழுப்புச்சத்துதான் மனிதனின் உடல் ஆரோக்கியத்தை பேணிக் காக்கிறது. பசியும் பட்டினியுமாக, ஊட்டச் சத்து உணவு சாப்பிடாமல் இருப்பவர்களுக்கு உடலுக்குத் தேவையான கொழுப்புச்சத்து கிடைப்பதில்லை.

முகத்திற்கு தேவையான கொழுப்புச்சத்து கிடைக்காததால் நம் உடலுக்குள் இருக்கும் கொழுப்புச்சத்து சிறிதளவு அங்கு சென்று செலவழிக்கும். இதனால் உடலுக்கு போதிய கொழுப்புச் சத்து கிடைக்காமல் சதை, ஜவ்வு, பட்டை எல்லாம் வலுவிழந்து எலும்பும் தோலுமாக காட்சித் தர தோன்றும். நாளடைவில் முகத்திலும் சுருக்கங்கள் தோன்றி விடும். முகம் மாட்டுத்தோல் போல் சொர சொரப்பாகவும், கடினமாகவும் காட்சி தரும்.

முகத்தின் சுருக்கம், வறட்சி நீங்க நமக்கு நன்கு அறிமுகமான இனிப்பு பாதாமில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பாதாம் ஸ்வீட் ஆல்மோடாயின் ஆயில் மிகச் சிறந்த மருந்தாகவும், விருந்தாகவும்,



டாக்டர் தமீம் - டாக்டர் ஆயிஷா நாஜ்

எண்ணெயாகவும், பசையாகவும் பயனளிக்கிறது. பாதாம் பால், பாதாம் வேபியம், பாதாம் ஓர், பாதாம் கோத்த, பாதாம் எண்ணெய் சாப்பிடுவதால் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து கிடைக்கின்றது.

வெள்ளை மெழுகு 30 கிராம் அளவில் எடுத்து அதனுடன் 60 மில்லி பாதாம் எண்ணெய் சேர்த்து லேசாக சூடேற்ற வேண்டும். அப்போது மெழுகு உருகி எண்ணெயுடன் கலக்கும் சமயத்தில் 60 மில்லி பன்னீர், சிறிதளவு பென்சாயின் டிங்சர் சேர்த்து ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த கிரீமை வெகு நாட்களுக்கு பயன்படுத்தலாம். இரவில் படுக்கப் போகும் முன் உடலில் பூசிக் கொண்டு காலையில் வெதுவெதுப்பான நீரில் குளிக்கலாம். இது தோல் கவர்ச்சியை அதிகரிக்கும்.

முகம், கை, கால்களை அழகுடனும், கவர்ச்சியாகவும், மினுமினுப்பாகவும் வைத்துக் கொள்ள பாதாம் எண்ணெய் கொண்டு ஒரு விதமான கிரீம் தயாரித்து பயன்படுத்துகின்றார்கள். பாதாம் பால், பாதாம் எண்ணெய், தேன் ஆகியவைகளை சரி சம அளவில் எடுத்து கலந்து லேசாக கொதிக்க வைத்து பின் வடிகட்டி பாட்டிலில் நிரப்பி வைத்துக் கொள்வார்கள்.

இதை முகம், கை, கால்களின் மீது பூசி வந்தால் கவர்ச்சியாகவும், மினுமினுப்பாகவும் இருக்கும். மேலும், இந்த கிரீம் இறந்த தோல் செதில்களை வெளியேற்றி புத்தம் புதிய மிருதுவான, மினுமினுப்பான தோலை உற்பத்தி செய்கிறது. தோலுக்கு நல்ல சத்துணவாகவும் விளங்குகிறது.

250 கிராம் பாதாம் பருப்பை மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். இதில் சிறிதளவு பால் சேர்த்து பசை போல் செய்து முகம், கழுத்துப் பகுதியில் பூசி அரைமணி நேரம் அப்படியே விட்டு பின் சூடான தண்ணீர் கொண்டு கழுவி வந்தால் மென்மையான தோல் அழகைப் பெறலாம். தோலின் நிறமும் அதிகரித்து பொன்னிறமாகும் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் இன்று பாதாம் பருப்பு அழகுக் கலைக்கு மட்டுமல்லாமல் ஏராளமான மருந்துகள் தயாரிப்பிலும் பயன்படுகின்றன. சித்தா, ஆயுர்வேதா, யுனானி மூலிகை மருத்துவத் துறைகளில் பாதாம் பருப்பு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

எங்கள் மருத்துவமனையில் சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட தலைமுடி கருமையாகவும், முடி நன்கு வளர்ச்சி பெறவும் எண்ணெய்களும், முகத்தை அழகுபடுத்தும் மூலிகை கிரீம்களும் மூலிகை மருந்துகளும் கிடைக்கும். அதை நேரிலோ, தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

டாக்டர் தமீம் – டாக்டர் ஆயிஷா நாஜ்,
சென்னை காசினி மருத்துவமனை,
135, ஜானி ஜஹான்கான் ரோடு,
ஜாம்பஜார் போலீஸ் ஸ்டேஷன் எதிரில்,
ராயப்பேட்டை,
சென்னை – 600 014.
தொலைபேசி: 98403 84898,
96770 04898, 044–28486695
e-mail: drthameem@yahoo.com
drayeshanaaz@yahoo.com


## பாதாம் பருப்பின் மருத்துவ குணங்கள்

பாதாம் பருப்பு 2,3 எண்ணிக்கை அளவில் தினசரி சாப்பிட்டு வந்தால் ஜீரண மண்டலம் சம்பந்தப்பட்ட எந்த பிரச்சினையும் வராது என்று கூறப்படுகிறது.

பாதாம் எண்ணெயை கீழ் முதுகுப் பகுதியில் பூசி வந்தால் சிறுநீரக வலியிலிருந்து மீளலாம்.

தலைமுடி வளர்ச்சிக்கு தினசரி பாதாம் எண்ணெயை தலைக்கு பூசி வந்தால் நல்ல நிவாரணம் கிடைக்கும். பொடுகுத் தொல்லையும் விலகும். தலைவலியும் குணம் பெறும்.

இரவில் தூங்கும் முன் ஒரு ஸ்பூன் பாதாம் எண்ணெய் குடித்து படுத்தால் நல்ல தூக்கம் வரும்.

பாதாம் பருப்பை நேரடியாக சாப்பிட்டால் சளி கட்டிக் கொள்ளும். உப்புத்தூள் தூவி பாதாம் பருப்பை லேசாக ஈரப்படுத்தி வறுத்து வைத்துக் கொள்ள வேண்டும். மூன்று பாதாம் பருப்பை ஒரு தம்ளர் பால் மற்றும் சிறிதளவு கற்கண்டுடன் தினசரி காலை வேளையில் சாப்பிட்டு வந்தால் உடல் புஷ்டி அடையும். உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். சோர்வு, சோம்பல், அசதி நீங்கி உடல் உற்சாகம் பெறும். ஞாபக சக்தியும் அதிகரிக்கும்.

சிறுவர் முதல் முதியவர் வரை அனைவருக்கும் பாதாம் பருப்பு மிகச் சிறந்த ஊட்டச்சத்து உணவாக விளங்குகிறது.




ஒரு முந்தைய ஆண்டு முடிந்து புது ஆண்டு துவங்குகிறது. இது ஒரு சாதாரண நிகழ்ச்சி என்றே நினைக்கலாம். ஆனாலும் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்று சொல்வதைப் போல சென்ற ஆண்டுகளில் நடந்த துன்பமான நிகழ்ச்சிகளை மறந்து இன்று முதல் புதிதாக வாழ்வோம் என்பதற்கான இனிய துவக்கமாகத்தான் ஒவ்வொரு புது வருடத்தையும் கருதுகிறோம்.

இந்த புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இன்று நேற்றல்ல, பல நூறாண்டு காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பல்வேறு நாடுகள் அவர்களின் பாரம்பரிய முறையில் புத்தாண்டை வரவேற்று கொண்டாடுகிறார்கள்.

பாபிலோனியாவில் வேறுமாதிரியான ஆண்டுக் குறிப்பு பழக்கத்தில் இருந்ததால் மார்ச் மாதத்தில் வசந்த கால ஆரம்பத்திற்குப் பிறகு வரும் முதல் அமாவாசை தினம் புது வருடமாக அனுசரிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் புது வருட ஆரம்பம் 11 நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது. ஒவ்வொருநாளும் ஒரு புதுமாதிரியான கொண்டாட்டம்.

புத்தாண்டு ஒரு புதுவரவை, ஒரு புது மலர்ச்சியை, பயிர்கள் செழித்து வளரும் பருவத்தை குறிப்பதாகக் கருதப்பட்டு விழாக்கள் எடுக்கப்பட்டன. இங்கு பொதுவான புத்தாண்டுத் தீர்மானம் அடுத்தவர்களிடம் இருந்து கடன் வாங்கியதைத் திருப்பிக் கொடுப்பது.

ரோமன் ஆண்டுக் குறிப்புக்கள் ஒவ்வொரு அரசர் மாறும்போது மாறிக் கொண்டே இருக்கும். புத்தாண்டு தினமும் வருடத்திற்கு வருடம் வேறுபடும். அதற்குப் பிறகு ரோமன் மக்கள் சபை ஜனவரி 1-ம் தேதிதான் ஆண்டின் துவக்கம் என்று சட்டம் இயற்றியது.

கத்தோலிக்கர்கள் புதுவருடம் கொண்டாடுவதை அது பாகன் நாகரிகத்தைச் சேர்ந்தது என்பதால் எதிர்த்தார்கள். ஆனால் கிறிஸ்தவ மதம் உலகத்தில் எல்லா இடத்திலும் பரவ ஆரம்பித்த பிறகு புதுவருட கொண்டாட்டத்தை கிறிஸ்துவின் விருந்து என்ற பெயரில் அவர்களும் ஜனவரி 1-ம் தேதியை கொண்டாடத் துவங்கினார்கள்.

இரவு பன்னிரெண்டு மணிக்கு புது வருடம் பிறந்த பிறகு நாம் பார்க்கும் முதல் நபர்தான் வரும் ஆண்டில் அதிருஷ்டத்தையோ துரதிர்ஷ்டத்தையோ கொண்டு வருவார் என்று நம்பப்பட்டது. புது வருடத்தின் ஆரம்பத்தில் சந்திக்கும் நபர் உயரமானவராகவும், கருப்பு முடி கொண்டவராகவும் இருந்தால் அந்த வருடம் அதிர்ஷ்டமாக இருக்குமாம். அது மகிழ்ச்சியின் முழு வட்டத்தைக் குறிக்கிறது என்று சொல்லப்பட்டது.

நல்ல அதிருஷ்டமான வருடமாக புது வருடம் இருக்கும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள, டச் இனத்தவர்கள் நம்மூர் பாதுஷா போல் இருக்கும் டோனட்ஸையே சாப்பிடுவார்களாம். கருப்புக் கலரில் இருக்கும் பட்டாணியை அமெரிக்காவில் வசிக்கும் சில பகுதியினர் புது வருடத்தன்று உணவில் சேர்த்துக் கொள்கின்றனர்.

இது அமெரிக்காவிற்கு மட்டுமல்லாமல் உலக முழுவதிலும் அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும் என்று நம்புகிறார்கள். முட்டைக்கோசும் அதன் இலைகளும் சகல சவுபாக்கியத்தையும் கொடுக்கும் என்று நம்பி உணவில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

ஆசியநாடுகளில் அரிசி நல்வாழ்வையும் நலத்தையும் கொடுக்கும் என்று அரிசியினால் செய்யப்பட்ட உணவை புதுவருட ஆரம்பத்தில் சாப்பிடுகிறார்கள்.

புது வருடம் ஒரு பெரிய மகிழ்ச்சி மிக்க தருணம். தனது அன்புக்குரியவர்களுடன் நேரத்தை செலவிட்டு அவர்களை முத்தமிட, புதுப் புதுத் தீர்மானங்கள் போட, நல்ல அதிருஷ்டத்தைக் கொண்டு வரும் என்று நம்பும் உணவுப் பொருட்கள் சாப்பிட என்று பல காரணங்கள். யார்தான் வரும் அதிர்ஷ்டத்தை வேண்டாம் என்று உதறித் தள்ளுவார்கள்?

- டி.எஸ்.பத்மநாபன்.

'பெண்மணி', முரசு பப்ளிகேசன்ஸ் நிறுவனத்துக்காக, சன் பிரஸ் அச்சகத்தில் அச்சிட்டு 246, அண்ணா சாலை, ஆயிரம்விளக்கு, சென்னை-600 006-ல் இருந்து வெளியிடப்